# வேட்டுவர் சமூக ஆவணங்கள்



செ. இராசு

# வேட்டுவர் சமூக ஆவணங்கள்

ஆசிரியர்

புலவர் **செ. இராசு** எம்.ஏ., பிஎச்.டி.,

முன்னாள் தலைவர்

கல்வெட்டு - தொல்லியல் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

வெளியீடு

**ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை**

34, மின்ன வேட்டுவபாளையம் ரோடு

சலங்கபாளையம் (அ.நி), கவுந்தப்பாடி - 638 455

பவானி வட்டம், ஈரோடு மாவட்டம்.

தொடர்புக்கு : 0424-2261875

# நூற்குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வேட்டுவர் சமூக ஆவணங்கள் |
| நூல் பொருள் | : | வரலாறு |
| ஆசிரியர் | : | புலவர் செ. இராசு எம்.ஏ., பிஎச்.டி.,<br>64/5 டி.பி.ஜி. காம்ப்ளக்ஸ்<br>புதிய ஆசிரியர் குடியிருப்பு அருகில்<br>ஈரோடு-638 011. போன் : 0424 2262664<br>செல் : 99942 77711 |
| மொழி | : | தமிழ் |
| நூல் உரிமை | : | ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை |
| பதிப்பு ஆண்டு | : | 2008 |
| நூலின் அளவு | : | 14 செ.மீ. X 21 செ.மீ. |
| பக்கங்கள் | : | 272+2 |
| அச்சு எழுத்து | : | 11 புள்ளி |
| விலை | : | ரூ. 135/- |
| நூல் கிடைக்குமிடம் | : | ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை |
| நூல் & அட்டை வடிவமைப்பு | : | காயத்திரி ஆப்செட்<br>29 நாச்சியப்பா வீதி II<br>ஈரோடு - 638 001.<br>போன் : 0424-2250164 |

# முன்னுரை

கொங்கு நாட்டில் பன்னெடுங்காலமாகப் பல்கிப் பெருகிச் சிறப்புடன் வாழ்ந்து வரும் சமுதாயம் வேட்டுவர் சமுதாயம் ஆகும். கொங்கு நாட்டு ஆவணங்கள் பலவும் வேட்டுவர் சமூகத்தினரைப் ''பூர்வ குடிகள்'' என்று குறிக்கின்றன. வேட்டுவர் சமூகத்தினரைக் ''கொங்கர்'' என்றும், அவர்கள் தலைவரைக் ''கொங்குராயன்'' என்றும் இலக்கியங்கள், ஆவணங்கள் கூறுகின்றன.

''குருகுல வம்சம்'' என்று கூறிக் கொள்ளும் வேட்டுவர் இலக்கியம் 'குருகுல காவியம்'. 'பஞ்சவர்ண ராஜ காவியம்' மற்றொரு காவியம் 'அப்பிச்சிமார் காவியம்'. அப்பிச்சிமார் பேரில் குறவஞ்சி போன்ற இலக்கியங்களும் இருந்துள்ளன. வேட்டுவர் சமூகத்தில் ஏறக்குறைய 200க்கும் மேற்பட்ட குலப்பிரிவுகள் உள்ளன. அண்மையில் கிடைத்த ''வேட்டுவர் கலிவெண்பா'' சுவடி இவற்றைச் சிறப்புடன் தொகுத்தளிக்கிறது.

வேளாளர் சபை, வெள்ளா நாட்டார்; வேட்டுவர் சபை, பூலுவ நாட்டார்; இரு சமூகச் சபைகளும் தனித்தனியாக அறச்செயல்கள் ஆற்றி இருப்பதுடன் இரு சமூகச் சபைகளும் இணைந்து பற்பல அறச் செயல்களை ஆற்றியுள்ளன.

வேட்டுவர் சமூகத்தினரை ''வாளரசர்'' ''வாளரசமணவாளர்'' என்று சிறப்பாக அழைத்ததுடன் ''பாதிப் பங்காளிகள்'' என்று வேளாளர்கள் அழைத்துள்ளனர். கொங்கு வேளாளர் சமுதாய ஒப்பந்தங்கள் பலவற்றில் வேட்டுவர் குலப் பெருமக்கள் முன்னிலை வகித்து சாட்சிக் கையொப்பமிட்டுள்ளனர். கொங்கு நாட்டின் பல பகுதிகளில் வேளாளர்கள் குடியேறும் முன் பல ஊர்ப்பகுதிகளும், பல நிலங்களும் வேட்டுவர் சமுதாயத்தினருக்கு உரிமையுடையதாக இருந்துள்ளன. இரு சமுதாயத்திற்கும் நடைபெற்றதாக ஆவணங்கள்

கூறும் போராட்டங்கள் தொழில் பற்றிய விவகாரங்களால் ஏற்பட்ட நிகழ்வுகளே தவிர இனம் சாதிப் போராட்டங்கள் அல்ல. கொங்கு வேளாளர் ஆவணங்களில் 'கொங்கு வேட்டுவர்' என்று வேட்டுவர் சமுதாயத்தினர் குறிக்கப்பட்டுள்ளனர். 'கும்பிட்டாரை வெட்டாத குருகுல வங்கிசம்' என்ற தொடர் அண்ணன்மார் காவியத்தில் காணப் படுகிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க கொங்குநாட்டு வேட்டுவர் சமுதாயச் செய்திகள் வரலாற்றில் போதுமான அளவு இடம்பெறவில்லை. கரூர்ப் பேராசிரியர் இராசசேகரத் தங்கமணி (கொங்குச் சமுதாயம் - வேட்டுவர்), நாமக்கல் 'நந்தர்' தங்கம் விசுவநாதன் (அரையநாட்டு வரலாறு - ஆய்வு நூல்) ஆகியோர் நூல்கள் ஓரளவு இக்குறையைப் போக்குகிறது. சில ஆய்வுக் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. இந்நூலில் தொகுத்து அளிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் எதிர் காலத்தில் விரிவான ஆய்வுகளுக்கு வழி வகுக்கும் என நம்புகிறேன். முதல் முறையாக இவை தொகுக்கப்பட்டுள்ளன.

இந்த ஆவண நூலைத் தொடர்ந்து வேட்டுவர் சமூக இலக் கியங்கள் அனைத்தும் வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

என் ஆய்வுத் தொடக்க காலத்தில் என் முயற்சிகளைப் பாராட்டிய அறச்சலூர் கொட்டாரத்தோட்டம் திரு. ஓ.எஸ். துரைசாமிக் கவுண்டர், தென்னிலை திரு. எம்.ஏ. பகவதிக்கவுண்டர், ஈரோட்டின் மூத்த வழக்கறிஞர் திரு. எம்.பி. சின்னராஜ், அவர் திருமகனார் டாக்டர். சி. மயிலேறு ரவீந்திரன் ஆகியோர் ஊக்குவிப்பும் இம்முயற்சிக்குக் காரணமாக இருந்தன என்பதை நன்றியுடன் நினைக்கிறேன்.

வேட்டுவர் சமுதாயம் பற்றிய சில ஓலைச்சுவடிகளையும் ஒளிப்படங்களையும் அளித்த கரூர் ஓவியர், தொல்லியல் ஆர்வலர் திரு. பரணன் அவர்கட்கும், என் பணிகளைப் பாராட்டி மகிழும் சமூகஇயல் ஆய்வறிஞர் திரு. நெல்லை நெடுமாறன் அவர்கட்கும், சென்னை, மனிதநேய அறக்கட்டளை நிறுவனர் திரு. சைதை சா. துரைசாமி அவர்கட்கும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வி.கே. சின்னசாமி அவர்கட்கும் என் நன்றி உரியதாகுக.

அரிய கண்ணப்பர் ஒளிப்படங்களை உதவிய சென்னை முனைவர் சு.இராசகோபால் அவர்கட்கும் என் நன்றி உரியது.

இத்தொகுப்பு நூலைப் பார்வையிட்டு, என் முயற்சியைப் பாராட்டி, என் பணிகளை ஊக்குவிக்கு முகமாக இந்நூலை வெளியிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக் கட்டளைப் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி உரியதாகுக.

இந்நூலுக்கு மிகச் சிறந்த ஆய்வுரையாக அணிந்துரை வழங்கிய குன்னூர் பிராவிடென்சு மகளிர் கல்லூரி முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் திருமதி. தெ. சகுந்தலா அவர்கட்கு என் மனமார்ந்த நன்றி உரியதாகுக.

எப்பொழுதும் என் பணிகட்கு முழு ஒத்துழைப்புத் தந்து ஊக்குவிக்கும் என் குடும்பத்தினருக்கும், இந்நூலைச் சிறந்த முறையில் வடிவமைத்து அச்சிட்ட ஈரோடு, 'காயத்திரி ஆப்செட்' நிர்வாகிகளுக்கும் என் மனமார்ந்த நன்றி.

வேட்டுவர் சமுதாயத்தினர் மட்டும் அல்ல அனைத்துச் சமுதாய மக்களும், வரலாறு, சமூகவியல் ஆய்வு அறிஞர்களும் ஆர்வலர்களும் இப்பணியை வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

ஈரோடு
1.12.2008

அன்பன்,
**செ. இராசு.**

டாக்டர். திருமதி. **தெ. சகுந்தலா** எம்.ஏ., எம்.ஃபில், பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர் (ஓய்வு)
பிராவிடென்சு மகளிர் கல்லூரி
குன்னூர் - 4. நீலகிரி மாவட்டம்.

# அணிந்துரை

மதிப்பிற்குரிய புலவர் செ. இராசு அவர்கள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில், 'கல்வெட்டு-தொல்லியல் துறைத் தலைவராகப் பணியாற்றியவர். இத்துறையில் மிகுந்த ஈடுபாடும் தேர்ச்சியும் பெற்ற அனுபவமிக்க வரலாற்று ஆய்வாளராவார். இவர் தம் அரிய படைப்பான 'வேட்டுவர் சமூக ஆவணங்கள்' எனும் நூல் வேட்டுவர் சமுதாயத்திற்குக் கிடைத்த 'அரும் பெரும் புதையல்' எனில் மிகையாகாது. ஆசிரியரது ஆர்வம், முயற்சி, விருப்பு வெறுப்பற்ற ஆய்வு மனம் ஆகியவற்றை இந்நூல் பிரதிபலித்துக் காட்டுகிறது.

இவர் வேட்டுவர் சமூக ஆவணங்களைக் கல்வெட்டு, செப்பேடு, இலக்கியம் எனும் முப்பிரிவுகளில் உள்ளடக்கிக் கூறியுள்ளார். இந்நூல் எதிர்காலத்தில் பற்பல வரலாற்று ஆய்வாளர்களுக்கு ஆய்வுக் களமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

வேட்டுவர்கள், 'பூர்வ குடிகள்' எனவும், வேட்டுவ சமூகத்தினர் 'கொங்கர்' எனவும், வேட்டுவத் தலைவர்கள் 'கொங்குராயன்' எனவும் அழைக்கப்பட்டதாக ஆவணங்கள் கூறுகின்றன. 'ஊராளி', 'நாடாழ்வான்', 'கொங்காள்வான்' போன்ற ஆவணச் சொற்கள், வேட்டுவர் ஆட்சிப் பொறுப்பிலும் இருந்தனர் என்பதைக் காட்டுகின்றன.

கூத்துக் கலையில் தேர்ந்த வேட்டுவர்கள் கொடை, வீரம், பக்தி எனும் முப்பெரு நிலைகளிலும் சிறப்புற்றிருந்தனர். வேட்டுவர், 'காவலியர், மாவலியர், பூவலியர், வேடர், வேட்டுவர்' என ஐவகையாகப் பிரிக்கப்பட்டிருந்ததையும் ஆவணங்கள் குறிக்கின்றன.

வேட்டுவர் அளித்துள்ள கொடை பற்றிய செய்திகளை அர்த்த மண்டபம், மகாமண்டபம் கட்டித் திருப்பணி செய்தமை, சிவராத்திரி பூசைக் கொடை வழங்கியமை, இறையிலி நிலம் அளித்தமை, சந்தியா

தீபம் கொடுத்தமை, நெற்கொடை, கறவைப்பசு, குதிரைச் சிலை வழங்கியமை போன்ற ஆவணக் குறிப்புகளால் அறியலாம்.

வீரத்திலும், வேட்டுவர் சிறந்திருந்தனர் என்பதனை மன்னர் களுக்குப் படையுதவி அளித்தல், ஆநிரை மீட்டல், கள்ளர்களை அடக்குதல், நாட்டிற்காக வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு நடுகல் நட்டு வழிபடுதல் போன்ற பலவகை வீரதீரச் செயல்களில் ஈடுபட்டி ருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

பக்திச் சிறப்புடைய கண்ணப்பரையே தம் குல முதல்வராக வேட்டுவர் கொண்டுள்ளனர். இவர்கள் சத்திரிய சாதியினர். காளத்தி மலைக்கு உரியவர்கள். கண்ணப்பரின் பக்தியைப் பற்றிக் கேள்விப் பட்ட சேரமான் பெருமாள் நாயனார் வேட்டுவரின் சிறப்பறிந்து 164000 வேட்டுவரைச் சேர நாட்டிற்கு அழைத்து வந்து பல்வேறு பணிகளில் ஈடுபடுத்திய செய்தியையும் இந்நூல் விளக்கியுள்ளது. கண்ணப் பரைப் பற்றிய வேறுபல அரிய செய்திகளையும் இந்த ஆவணங் களின் வாயிலாக அறியலாம்.

செப்பேடுகள் பல்வேறு உலோகங்களால் உருப்பெற்றிருப் பினும் பெரும்பாலும் செம்பே பயன்பாட்டில் இருந்ததாகத் தெரிகிறது. கொங்கு வரலாற்று ஆவணங்களில் வேட்டுவர் சமூகம் பற்றிய செப் பேட்டுச் செய்திகள் குறிக்கப்பட்டுள்ளன. ''தீர்த்தகிரிச் சர்க்கரைப் பட்டயத்தில்'', ''தீரன் சின்னமலையின் தந்தை இரத்தினச் சர்க்கரைக்கு நிலம் அளித்தவர், குமாரவலசு வேட்டுவர் குமார சின்னய கவுண்டர்'', எனும் செய்தி இடம்பெற்றுள்ளது.

இலக்கியங்களும், வேட்டுவர் பற்றிய செய்திகளை விளக்கியுள் ளன. 'திங்களூர் அருள்மலை முருகன்' மீது அவிநாசிப் புலவர், திங்களூர் நொண்டிச் சிந்து எனும் நூலைப் பாடியுள்ளார். இந்நூலைப் பாடியமைக்காக 'வேட்டுவர் சமூகத் தலைவர் ஆண்டமுத்துக் கவுண்டர் அப்புலவருக்குப் 'பொன்பரிசு' கொடுத்துப் பாராட்டிய செய்தி அந்நூலிலேயே குறிக்கப்பட்டுள்ளது.

அப்பச்சிமாரயன் குறவஞ்சியில் திங்களூர் பற்றி எழுதப்பட்ட முதல்பாட்டு மட்டுமே கிடைத்துள்ளது. வேட்டுவர் கலிவெண்பாவில்

வேட்டுவர் குலங்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. இவை நீங்கலாக அப்பச்சிமார் காவியம், கபிலமலைக் கோவை, கோப் பண்ணன் கோவை, காணிப்பாடல்கள் ஆகிய இலக்கியங்களிலும் வேட்டுவர் பற்றிய பல குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

வேட்டுவ மகளிர் கல்வியறிவு உடையவர்களாகவும், பொருளா தார சுதந்திரம் பெற்றவராகவும், கோயில் கட்டித் தருமளவிற்குப் பக்தியும் செல்வமும் உடையவர்களாகத் திகழ்ந்தனர் எனும் இனிய செய்தியும் இந்நூலில் குறிக்கப்பட்டுள்ளது.

அரும்பாடுபட்டுக் கல்வெட்டுகளையும், செப்பேடுகளையும் இலக்கியச் சான்றுகளையும் சேகரித்ததோடு அவற்றை அனைவரும் அறிந்து மகிழும் வகையில் நூலாக வெளியிட்டுள்ளமை பாராட்டிற் குரியது. புலவர் செ. இராசு அவர்கள் பேருழைப்புடன் மேற்கொள்ளும் அரும்பெரும் சாதனைகளான ஆய்வுப் பணிகள் மேன்மேலும் சிறக்க எல்லாம்வல்ல இறைவன் அருள்வாராக! இந்த நூலின் மூலம் வேட்டுவர் சமுதாயத்திற்கு அளப்பரிய பெருந்தொண்டாற்றிய மைக்காக அவருக்கு எனது நன்றி கலந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை வெளியிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளையினர் பணி போற்றுதற்கு உரியது.

பொறுப்புணர்வுடனும், மேலார்வத்துடனும் இந்நூல் வெளியிட மூலகாரணமாக நின்றும் மனமுவந்த ஒத்துழைப்பை ஈந்தும் உதவிய டாக்டர். சி.மயிலேறு இரவீந்திரன் அவர்கள் அனைத்து வேட்டுவ சமுதாயத்தினரின் நன்றி கலந்த பாராட்டிற்குரியவர்!

வாழ்க நீடூழி!
தொடர்க நற்பணிகள்!

குன்னூர் **தெ. சகுந்தலா**

11.12.2008

"கலை மலிந்த சீர்நம்பி கண்ணப்பர்"



செப்புப் படிமம்

நன்றி : கலைக்கூடம், தஞ்சை

## சிற்பமும் ஓவியமும்



சிற்பம் - நன்றி : varalaaru.com இணையதளம்



ஓவியம் - கரூர் - கோடங்கிப்பட்டி முத்தாலம்மன் கோவில்



ஓவியம் - நன்றி : சைவம் டாட் ஆர்ச் இணையதளம்

# கல்வெட்டுகள்

பண்டைய வரலாற்றைத் தெரிந்து கொள்ள உதவும் பல்வேறு சான்றுகளில் கல்வெட்டுகள் மிக முக்கியமானவை. கல்லில் வெட்டப் பட்ட எழுத்துக்களைக் கல்வெட்டுகள் என்று கூறுகிறோம். கல்லில் எழுத்துக்களைப் பொறித்தால் அவை நீண்டகாலம் அழியாமல் நிலைத்து நிற்கும் என்பதை முன்னோர் கண்டனர்.

''நல்லார் ஒருவர்க்குச் செய்த உபதேசம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே''

''இளமையில் கல்வி சிலையில் எழுத்து''

என்ற தொடர்கள் இதனை விளக்கும்.

கோயிலுக்குக் கொடுத்த கொடைகளையும், கோயிலில் செய்த திருப்பணிகளையும், சபையார் - ஊரார் - கோயில் நிர்வாகிகள் எடுத்த முடிவுகளையும், அரசனது ஆணைகளையும் கோயிலில் கல்வெட்டு களாகப் பொறித்து வைத்தனர். மறு உலகின் புண்ணியத்தின் பொருட்டும், இவ்வுலகில் புகழ் பெறுவதன் பொருட்டும் வெட்டி வைத்த கல்வெட்டுகளே நமக்கு அக்கால வரலாற்றைக் கூறுகின்றன.

பெரும்பாலும் கொங்கு நாட்டிலும், கொங்கு நாட்டை ஒட்டிய பகுதிகளிலும் வேட்டுவர் சமுதாயக் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. நடுகற்களும், நடுகற் கல்வெட்டுகளும் வேட்டுவர் சமுதாயத்தில் மிகுதியாக உள்ளன. இவை வீரத்தின் விளைநிலமாக இவர்கள் இருந்ததைக் காட்டுகிறது.

மாற்றார் படையெடுப்பின்போது போரிட்டு வீரமரணம் அடைந்த புகழ்மங்கலம் (இன்றைய பழமங்கலம்) கரைய வேட்டுவர் சமூகச் சொக்கனேந்தல் நடுகல்லில் அவரது பெருமையும் புகழும் வெண்பா வடிவில் பொறிக்கப்பட்டிருப்பது மிகவும் சிறப்புக்குரியது. தென்னிந்தியாவில் பாடல் பொறித்த நடுகல் இது ஒன்றேயாகும்.

ஏறக்குறைய வேட்டுவர் சமூகத்தின் ஆயிரம் ஆண்டு கால வரலாற்றுச் செய்திகளை இக்கல்வெட்டுகள் நமக்குக் காட்டுகின்றன. இக்கல்வெட்டுகளில் காணப்படும் சில சிறப்புச் செய்திகள் இங்கே தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

## ஆளும் தலைவர்கள்

வேட்டுவர் சமூகப் பெருமக்கள் பலர் ஆளும் தலைவர்களாகச் சிறப்புடன் விளங்கியுள்ளனர். அவர்கட்கு ''ஊராளி'', ''நாடாழ்வான்'', ''கொங்காள்வான்'', ''கொங்குராயன்'' போன்ற அடைமொழிகள் காணப்படுவது அதனை விளக்கும். சிலர் ''அதிகாரன்'' என்று அழைக்கப்பட்டுள்ளனர். ''மன்றாடி'' பட்டம் பெற்றவர் பலர்.

''கொடிவேரி குளவாற்றூர் ஊராளி செம்ப வேட்டுவரில்
தொண்டைமான் பிள்ளன்ஆன செயங்கொண்ட சோழக்
கொங்காள்வான்''

''நாமக்கல் புல்லை வேட்டுவரில் நற்காவிரி நாடாழ்வான்
தேசி ஆளப்பிறந்தான் மும்முடிச் சோழச் சக்கரவர்த்தி
அரங்கராயன்''

''வடகரையாற்றூர் புல்லை வேட்டுவரில் வளர்ந்த அம்மத
திருவ நாடாழ்வான் வீரசிங்கன்''

''துக்காச்சி ஊராளி வேட்டுவன் அழகன் காளி''

''கீரனூர் காவலன் மேலைக்கரையரில் சொக்கன் ஊராளி''

''பருத்திப்பள்ளி ஊராளி பாண்டிய வேட்டுவரில் அதியமான்
நடுவில் நங்கன்''

''பெரியவிலங்கி ஊராளியாகிய சுண்டை வேட்டுவன் சிலம்பன்
சிறியர் ஆன எழுகரை நாட்டு அக்கசாலைகள் மாத்த
ஆராத பிள்ளை''

''பட்டில் ஊராளிகளில் கொடும்பூர் வேட்டுவர் பெரியதேவன்''

''உலகவிடங்கம் கள்ளை வேட்டுவரில் ஊராளிகளில்
கருஞ்சொக்கன் வலிய சொக்கன்''

போன்ற பலர் ஊர், நாடு ஆட்சி செய்த அரசு அலுவலர்களாக இருந்ததை கல்வெட்டுகள் கூறுகின்றன. வேட்டுவகுலப் பெருமக்கள் பலர் மூவேந்தர்களால் ''மன்றாடி'' பட்டம் பெற்று ஊர் அதிகாரம் செய்ததை ''சோழன் பூர்வ பட்டயம்'' விளக்குகிறது.

## *பேரரசர்களால் பெற்ற பெரும் சிறப்பு*

வேட்டுவர் சமூகப் பெருமக்கள் பலர் அரசு, அரையர், மந்திரி, நாடாழ்வான் என்ற சிறப்புப் பெற்றும் அதியமான், சேனாவரையன், காலிங்கராயன், தொண்டைமான் என்ற சிறப்புப் பெயர் அளிக்கப் பட்டும் பெரும் சிறப்புப் பெற்றுள்ளனர். பலருக்கு அரசர்கள் தங்கள் பெயர்களையே வைத்துக் கொள்ளும் உரிமையையும் கொடுத்துள் ளனர். 12-14ஆம் நூற்றாண்டுகளில் கொங்கு நாட்டுச் சமுதாய வாழ்வில் உயர்நிலையில் அவர்கள் இருந்துள்ளனர் என்பது இதனால் தெளிவாகத் தெரிகிறது. பெயர் அமைப்பே அதனை விளக்குகிறது.

''வெங்கம்பூர் புல்லை வேட்டுவரில் வானவதரையன் வலங்கை வாழவந்தான் ஆன சுந்தரபாண்டிய வீரசிங்கதேவன்''

''காங்கயம் காவலன் வெண்கொற்றரில் செய்யாழ்வி சூரியதேவன் ஆன தொண்டைமான்''

''கீரனூர் வேட்டுவர் கீழைக்கரையரில் பெரிய அரசு அழகிய பிள்ளை''

''திங்களூர் வேட்டுவர் செய்யர்களில் போத்தன் கோன் ஆன சேனாவரையன்''

''முளையூர் மணலூர் கிழவன் சோழகோன் நல்வாளை வேட்டுவர்''

''பொழில்வாய்ச்சி பூலுவர் சிலம்பன் பிள்ளையான அதியன் காலிங்கராயன்''

''பருத்திப்பள்ளி ஊராளி வேட்டுவரில் அதியமான் நடுவில் நங்கன்''

''பூலுவ வேட்டுவரில் மேற்சேரி வெள்ளைகளில் இராசன் நிறையுடையான் ஆன தொண்டைமான்''

''வேட்டமங்கலம் பூலுவரில் சோழன்''

என்பன அவற்றைக் குறிக்கும் கல்வெட்டுத் தொடர்களாகும்.

## *பல்லவராயன் பட்டம்*

அரசர்கள் தங்கள் உயர் அலுவலர்கட்கு விருது கொடுக்கும் வகையில் பல்வேறு பட்டப் பெயர்களை அளிப்பது வழக்கம். அப்படிப் பட்ட பட்டப் பெயர்களில் ''பல்லவராயன்'' என்பதும் ஒன்று. கொங்கு வேளாளர்களில் செங்கண்ண குலத்து லிங்கையனுக்குச் சோழ மன்னன் ''பல்லவராயன்'' என்ற பட்டப் பெயரை அளித்துக் கௌரவித்தான்.

''போரிட்ட பல்லவன் தேகத்தை வெட்டியே
பொன்மகுடம் நீ பறித்தாய்
செங்கதிர்ப் பரிதிகுல மகராச ராசனாம்
திரிபுவனச் சக்கரவர்த்தி
சித்தமகிழ் தளகர்த்தர் லிங்கயப் பல்லவன்''

என்பது ஒரு தனிப்பாடல் பகுதியாகும். அவர்கள் வழிவழியாக அப்பெயரை வைத்துக் கொண்டதைப் பல இலக்கியங்களும் ஆவணங்களும் எடுத்துரைக்கின்றன.

வேட்டுவர் சமுதாயத்தில் பலர் அச்சிறப்புமிகு பல்லவராயன் பட்டத்தைப் பெற்றுள்ளதைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

''அறச்சலூரில் கரைய வேட்டுவரில் செய்யான்
பல்லவராயன்''

''பட்டாலியில் காவலன் வெண்கொற்றரில் சோணாப்
பல்லவரையன்''

''முத்தூர் காவலன் வளவரில் உத்தமசோழப்
பல்லவரையன்''

''ஈங்கையூரில் காவலன் குறும்பிள்ளரில் போத்தன் செய்யான் ஆன
குலோத்துங்க சோழப் பல்லவரையன்''

''கரூரில் கரடி வேட்டுவரில் மானாபரணப் பல்லவராயன்''

''கவையன்புத்தூர் பூலுவர் முட்டைகளில் அடையன் போத்தன்
ஆன உத்தமசோழப் பல்லவரையன்''

இவர்கள் அனைவரும் அரசர்களால் சிறப்பிக்கப்பட்டு உயர் அலுவலர் களாக இருந்தவர்கள் ஆவர்.

## *நீர்வளம் பெருக்கிய நேயர்*

நீரை நிலத்தோடு சேர்ப்பார் புகழே உலகில் நிலைத்து நிற்கும் என்று குடபுலவியனார் என்ற சங்கப் புலவர் பாடினார். அதற்கேற்ப நீர்வளம் பெருக்கிய வேட்டுவர் சமூகத்தார் பலர் இலக்கியங்களிலும் செப்பேடுகளிலும் புகழப்படுகின்றனர்.

மதுரைத் திருமலை நாயக்கர் காலத்தில் வடகரை ஆற்றூரில் அல்லாளன் இளையா நாயக்கர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் வேட்டுவர் சமுதாயத்தில் பரமத்திச் சீமை முளை கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்று செப்பேடு கூறுகிறது. நாயக்கர் என்பது மதுரை நாயக்கர் அளித்த பட்டப்பெயர்.

காவிரியாறு கொங்கு நாட்டின் வழியாகச் சென்றாலும் அந்த ஆறால் கொங்கு நாட்டுக்கு ஒரு பயனும் இல்லை. கொங்கு நாட்டில் காவிரி பள்ளத்தில் ஓடுகிறது. நிலம் மேடாக உள்ளது. யார் முயன்றும் காவிரி நீரைக் கொங்கு நாட்டில் பாசனத்திற்குப் பயன்படுத்த முடிய வில்லை.

ஆனால் அல்லாளன் இளையா நாயக்கர் காவிரியின் கிழக்குக் கரையில் சேடர்பாளையம் என்னும் இடத்தில் காவிரி நீரைப் பாய்ச்சும் வகையில் அணை கட்டி வாய்க்கால் வெட்டி ஏற்பாடு செய்தார். அந்த வாய்க்கால் ராசவாய்க்கால் என்னும் பெயரில் இன்றும் நல்ல பயன் பாட்டில் உள்ளது. ராசாவாக ஆட்சியுரிமை பெற்று ஆட்சி செய்த அல்லாளன் இளையா நாயக்கர் பணி காரணமாக இன்றும் அவ் வாய்க்கால் ராச வாய்க்கால் என்ற பெயரோடு விளங்குகிறது.

அவர் செய்த பெரும் பணியைக் கொங்கு மண்டல சதகம்

''வடமுக நின்றும் வருகா விரியின் வளத்தைஎன்றும்
திடமுறு கொங்கினும் பாசன மாகச் செலப்பிரித்த

அடல்கொள் அல்லாளன் இளையான் பெருக்கம் அமைந்துவளர்
வடகரை ஆற்றூர் திகழ்வது வும்கொங்கு மண்டலமே''

என்று புகழுகிறது (78)

மற்றொரு தனிப்பாடலும் அல்லாளன் இளையா நாயக்கர் புகழைப் பலபடப் பாராட்டிக் கூறுகிறது.

''மூவருக்கும் அகத்தியமா முனிவருக்கும் அரசிருந்த
முன்னையோர்க்கும்
தேவருக்கும் திரும்பாத காவிரியைக் கொங்கேற்றித்
திறைகொண்டாயே
பூவிருக்கும் உரமாயன் கடலடைத்தான் அவன்வேடம்
புனைந்தவாறோ
யாவருக்கும் இளையானே அல்லாளன் திருமலையா
ஈகையோனே''

என்பது அப்பாடலாகும். திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலையும் இவர் புகழ் பாடுகிறது.

அல்லாளன் இளையா நாயக்கருக்கு முன்னரே கொங்கு நாட்டில் பல வேட்டுவர் சமுதாயப் பெரியவர்கள் மக்கள் நலம் பேண நீர்நிலை ஏற்படுத்தியுள்ளனர்.

மோடமங்கலம் பூச்சந்தை வேட்டுவர் பெரிய பெருமாள் முத்தாண்டான் என்பவர் வடபரிசார நாட்டுக் கப்பலன் கிடாரன் என்னும் ஊரில் குளம் ஒன்றை வெட்டி அதற்குத் ''தாமரைக்குளம்'' என்று பெயரிட்டார்.

குளவாற்றூர் ஊராளி செம்ப வேட்டுவரில் தொண்டயன் பிள்ளான் ஆன செயங்கொண்ட சோழக் கொங்காள்வான் குளம் ஒன்றை வெட்டி நீர்ப்பாசனம் செய்ய வாய்க்கால்களும் அமைத்தார்.

முளையூரான அஞ்சாதகண்டன் நல்லூரில் மணலூர் கிழவன் சோழகோன் நல்வாளை வேட்டுவர் கிணறு ஒன்றை வெட்டி வைத்தார்.

பெரிய விலங்கி ஊராளியாகிய சுண்டை வேட்டுவர் சிலம்பன் ஒரு குளம் வெட்டி அதற்கு ''அக்கசாலை கங்கை'' என்று பெயரிட்டார்.

வாழவந்தி இரும்புளை வேட்டுவரில் வடசேரி ஆறங்காடி குளம் ஒன்றை வெட்டினார்.

இவ்வாறு நீர் நிலை தந்த வேட்டுவர் சமுதாயப் பெருமக்கள் பலராவர்.

## உழவுத் தொழில்

உழவுத் தொழிலுக்கு முற்பட்டது வேட்டையாடும் தொழில். வேட்டைத் தொழிலில் ஈடுபட்ட வேட்டுவர் குலப் பெருமக்கள் பலர் உழவுத் தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர். அதனால் அவர்கள் வேள்- வேளான் என்ற பெயர்களையும் பெற்றுள்ளனர். இதனைக் கல்வெட்டுகள் மூலம் அறிகின்றோம். வேட்டுவர் சமூகச் செப்பேடுகள் மூலம் அவர்கள் ''மேழிக்கொடி'' பெற்ற உரிமையுடையவர்கள் என்பதையும் அறிகின்றோம்.

உழவுத் தொழிலுக்கு உதவியாகப் பலர் அணை, ஏரி, குளம், வாய்க்கால்கள் அமைத்துள்ளனர். பலர் கோயிலுக்கு நிலக்கொடை அளித்துள்ளனர். சிலர் பொன் கொடுத்து நிலம் வாங்கிக் கொடை கொடுத்துள்ளனர்.

> ''பட்டாலி காவலன் குறும்பிள்ளரில் செயங்கொண்ட வேளான்''
>
> ''புன்னத்துப் பூவாணி வேட்டுவரில் வேளான் கரியான்
> ஆன மருதங்க வேளான்''
>
> ''கவையன்புத்தூர் வேட்டுவர் பூலுவர் மயிலரில் வேளான்
> வேள் பெரிய பிள்ளை''
>
> ''திருவகழிமங்கலத்து கரைய வேட்டுவரில் காளிப்
> பிடாரன் ஆன கரைய வேளான்''

என்பன வேளான் பட்டம் பெற்ற சில வேட்டுவர் சமுதாயப் பெருமக்கள் ஆவர்.

## ஆலயத் திருப்பணிகள்

பண்டைய அரசர்கள் காடுகளை அழித்து மக்கள் வாழும் நாட்டுப் பகுதியாக்கி, நீர்நிலைகளை ஏற்படுத்தி, கோயில்களைக் கட்டியபின்னரே மக்களைக் குடியமர்த்தினர்.

''காடு கொன்று நாடு ஆக்கி
குளம் தொட்டு வளம் பெருக்கி
கோயிலொடு குடி நிறுவி''

என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

திருக்கோயில் இல்லாத ஊர்களைத் திரு இல்லாத ஊர் என்று தேவாரப் பாடல் கூறும். ''கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது பழமொழி. எனவே எல்லாச் சமுதாயத்தினரும் கோயில் திருப்பணிகளில் பங்கு கொண்டது போல் வேட்டுவர் சமுதாயத்து ஆண்களும் பெண்களும் கோயில் திருப்பணிகளில் பங்கு கொண்டதைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

சிலர் கோயில் முழுவதையும் திருப்பணி செய்துள்ளனர். சிலர் கோயில் திருப்பணி நடைபெறும்போது பெருந்திருவாசல், நிலைகால், தூண், போதிகை, முகவணை, நிர்மாலியத் தொட்டி, அர்த்தமண்டபம், மகாமண்டபம், பாவுகல், மண்டபம் ஆகியவற்றைக் கொடையாகக் கொடுத்துள்ளனர். இவ்விதக் கொடைகள் தனியாகவும் பலர் சேர்ந்தும் கொடுக்கப்பட்டன. சிலர் குதிரை போன்ற வாகனங்கள் செய்தளித்துள்ளனர். சிலர் இறைபடிமங்களையும் எழுந்தருளச் செய்துள்ளனர். இவ்வாறு திருப்பணிகளில் பங்கு கொண்ட,

''ஆறுதொழு காவலன் புன்னகரில் கரியான்வீரன்''

''கீரனூர் கீழைக்கரையரில் பெரிய அரசு அழகியபிள்ளை''

''பிரமியம் காவலன் காச்சரில் சிலம்பன் அடைக்கலவன்''

''ஒலகடம் கள்ளை வேட்டுவரில் கருஞ்சொக்கன் வலிய் சொக்கன்''

''திங்களூர் கரைய வேட்டுவரில் சமயமந்திரி''

''பெரும்பழனம் பூலுவ வேட்டுவரில் மேற்சேரி வெள்ளைகளில்
இராசன் நிறையுடையான் தொண்டைமான்''

ஆகிய பெயர்களைக் கல்வெட்டில் காணுகின்றோம்.

புதிய கோயில்கள் கட்டுவதைக் காட்டிலும், அல்லது அதில் பங்கு பெறுவதைக் காட்டிலும் பழைய கோயில்களைப் பழுது பார்த்துத்

திருப்பணி செய்வது நான்கு மடங்கு புண்ணியம் தரும் செயல் என்று நூல்கள் கூறுவதை

''முரிந்து வீழ்ந்தன வெடித்தன உடைந்தன முதிய
நெரிந்த வாகிய கோபுர நெடுமதிள் பிறவும்
தெரிந்து முன்னையில் சீர்பெறப் பதுக்குவோர் பண்டு
புரிந்து ளோர்பெறும் புண்ணியம் நான்மடங் குறுவர்''

என்ற பாடல் மூலம் உணர்ந்து பழைய கோயில்களைப் பலர் பழுது பார்த்துள்ளனர்.

''அர்த்தமண்டபமும் மகாமண்டபமும் அழிவு சோர்ந்து
தூபி பரியந்தமாக சாந்தும் பண்ணி எழுவித்து
நிர்மாலியத் தொட்டியும் சமைப்பித்தேன்''

என்று பவானி வட்டம் பட்டிலூர் வாகீசுவரர் கோயிலில் 1337ஆம் ஆண்டு தான் செய்த பணிகள் பற்றி வேட்டுவர் சமூகப் பெரியவர் பிள்ளை என்பவர் கல்வெட்டில் பொறித்துள்ளார்.

கொடுமணல் கணபதிபாளையத்தில் செல்லாண்டியம்மன் கோயிலைப் பழுது பார்த்ததை ஒட்டப்பாளையம் வேட்டுவக் கவுண்டர்கள் பின்வருமாறு குறிக்கின்றனர்.

''ருத்ரோத்காரி வருஷம் ஆவணி மாதம் 6ஆம் தேதி
வேட்டுவ ராஜகுல வம்சம் ஒட்டபாளையம்
வேட்டுவக் கவுண்டர் அவர்களால் செல்லாண்டியம்மன்
கோயில் ஜீர்ணோத்தாரம் செய்யப்பட்டது''

## விளக்குக் கொடையளித்தோர்

விளக்கு இருளை நீக்கித் தன் சுடரால் சுற்றுப்புறத்தை, பொருள்களை விளக்கம் செய்கின்ற காரணத்தால் ''விளக்கு'' என்று பெயர் பெற்றது. இயற்கையைப் பல்வேறு முனைகளில் வென்ற மனிதன் விளக்கைக் கண்டுபிடித்தது மனித வாழ்வியல் வரலாற்றின் திருப்பு முனைகளில் ஒன்று.

இருளைக் கண்டு பயந்த மனிதன் ஒளி கொடுத்த விளக்கை வணங்கினான். இறைவனையே ''ஒளிவளர் விளக்கு'' என்றனர்.

அருளாளர்கள் விளக்கின் ஒளியில் தீப சோதியில் இறைவனைக் காணலாம் என்றனர். திருக்கோயில்களில் விளக்கு வைப்பது மிகப் பெரும் புண்ணியமாகக் கருதப்பட்டது. கோயில்களில் எப்பொழுதும் எரியும் தீபம் நந்தா தீபம் என்றும், சில குறிப்பிட்ட பூசை நேரங்களில் எரியும் தீபம் சந்தியா தீபம் என்றும் கூறப்பட்டது.

விளக்கெரிக்கக் கொடையாக நிலம், நெல், பொன், காசு, ஆடு, மாடு, எருமைகள் ஆகியவை மூலப்பொருள்களாகக் கொடுக்கப் பட்டன. திருவிளக்குகள் ஏற்றும் பணியைச் செய்யத் ''திருவிளக்குக் குடிகள்'' என்போர் இருந்தனர். விளக்கேற்றுவது புண்ணியம் என்றும், விளக்கை அணைப்பது மிகப் பெரிய பாவம் என்றும் கருதப்பட்டது.

வேட்டுவர் சமுதாய ஆண்களும், பெண்களும் பலர் கோயில்களில் விளக்குகள் எரியக் கொடை கொடுத்துள்ளனர்.

''கொடிவேரி சிறுத்தலை வேட்டுவரில் தாமன் தாமனான இருங்கோளன்''

''பட்டாலி காவலன் புன்னாடியரில் காளி காளி''

''திங்களூர் கொடுகத்தாளி வேட்டுவரில் மதவபிள்ளை சேனன்''

''முத்தூர் காவலன் வளவரில் சிங்கனான அங்கராயன்''

''துடுமல் காட்டு வேட்டுவரில் முத்தன் சக்கயன்''

''நடுவச்சேரி கரடி வேட்டுவர் செய்ய பிள்ளை''

''தென்சேரி பூலுவ வேட்டுவரில் சிலம்பன் செஞ்சிறுபிள்ளை'' முதலியோர் விளக்கேற்றியோருள் சிலராவர்.

### கூத்துக்கலை வல்லவர்கள்

இயல், இசை, நாடகம் என்பன முத்தமிழின் மூன்று பிரிவுகள். நாடகம் என்பதைக் ''கூத்து'' என்றும் கூறுவர். சங்க இலக்கியங்களில் கூத்துக் கலைவல்ல கூத்தர் குறிக்கப் பெறுகின்றனர். கொங்கு நாட்டில் மக்கள் ஆதரவு பெற்ற ஐந்துவகைத் தமிழ்வாணர்களில் கூத்தாடி என்பவர் ஒருவர்.

வேட்டுவர் சமூகத்தில் பலர் ''கூத்தன்'' என்று பெயர் பெற்றுள்ளனர். கூத்தன் என்பது தில்லையில் நடனம் ஆடுகின்ற

நடராசப் பெருமானையும் குறிப்பதாகக் கொள்வர். ஆனால் கூத்தன் கூத்தன் (கூத்தாடுகின்ற கூத்தன்) ஆனந்தக் கூத்தன் என்பன போன்ற தொடர்களால் இவர்கள் கூத்துக்கலை வல்லவர்களாகவே இருக்க வேண்டும்.

> ''பட்டாலி காவலர் குறும்பிள்ளரில் கூத்தன் கூத்தனான
> வாழவந்தான்''
>
> ''பட்டாலி காவலன் குறும்பிள்ளரில் கூத்தன் கூத்தனான
> அதியமான்''
>
> ''பட்டாலி கூத்தன் கூத்தன் ஆன அகளங்க நாடாழ்வான்''
>
> ''பந்தரத்தை பூவாணி வேட்டுவரில் பெரும்பற்றார்
> கூத்தன் உடையார் ஆன ஆனந்தக் கூத்தர்''
>
> ''வடகரையாற்றூர் புல்லை வேட்டுவரில் கூத்தாடும்தேவன்
> இருங்கோளனான வலங்கை மீகாமன்''

என்பன கல்வெட்டுகளில் காணப்படும் சில கூத்தர்கள் ஆவர். பட்டாலிக் கல்வெட்டு ஒன்றில் ''யாழ்வல்லான்'' என்று ஒருவர் குறிக்கப்பட்டுள்ளார். அக்காலத்தில் பட்டாலி வேட்டுவ குலப் பெரு மக்கள் கலைப்பயிற்சி உடையவர்களாகவும், கலையார்வம் மிக்கவர் களாகவும் இருந்துள்ளனர்.

### *மகளிர் மாண்பு*

வேட்டுவர் சமூகப் பெண்கள் ஆண்களுக்கு நிகராகக் கோயில் திருப்பணிகள் பலவற்றில் பங்குபெற்றதுடன், கோயில்களில் எப்பொழுதும் எரியும் நந்தா விளக்கும், குறிப்பிட்ட பூசை வேளை களில் எரியும் சந்தி விளக்கும் ஏற்றப் பொன்னும், பொருளும் பெரும் கொடையாக அளித்துள்ளனர்.

பட்டாலியில் காவலர் குறும்பிள்ளரில் காவன் அரையன் என்ற தன் கணவனுக்காக நாயக விச்சி நாயன் சிலம்பி என்ற வேட்டுவர் சமூகப் பெண் தன் கணவன் நினைவாகப் பிடாரி கோயிலையே கட்டியுள்ளாள்.

''காங்கயம் காவலன் குறும்பிள்ளரில் செங்காளி மனைக்கிழத்தி புளியம்மை''

''ஆறுதொழு வேட்டுவர் குலப் பெண் பல்லாண்டி''

''பட்டாலி காவலன் வளவர் மனைக்கிழத்தி சோழாண்டி''

''பட்டாலி காவலன் குறும்பிள்ளரில் போடன் மனைக்கிழத்தி கோவி''

''பட்டாலி காவலன் வெண்கொற்றர் சோணாப் பல்லவரையன் மனைக்கிழத்தி செங்கூத்தாண்டி''

''கொற்றனூர் காவலன் கள்ளிப்பிள்ளரில் செய்யான் வையான் மனைக்கிழத்தி உடையபிராட்டி''

''ஒலகடம் புன்னம் ஊராளி வேட்டுவர் மனைக்கிழத்தி பாண்டாண்டி''

''பட்டாலி வேட்டுவரில் காவலன் குறும்பிள்ளரில் அதியமான் மனைக்கிழத்தி வீரி''

''காவலன் குறும்பிள்ளரில் கூத்தன் கூத்தனான அகளங்க நாடாழ்வான் மனைக்கிழத்தி அவினாசியாண்டி''

ஆகியோர் கோயில் திருப்பணி செய்தவர்களில் சிலராவர்.

வேட்டுவர் சமுதாயப் பெண்கள் செல்வ வளத்துடன் தாங்கள் விருப்பம்போல் செலவுகள் செய்யும் பொருளாதார சுதந்திரத்துடன் வாழ்ந்துள்ளனர். தமிழகப் பெண்கள் வரலாற்றில் இது அரிய செய்தி ஆகும். மனைக்கிழத்தி என்பது உயர் மதிப்புடைய சொல்லாகும்.

இவ்வாறு பல்வேறு செய்திகள் இக்கல்வெட்டுகளில் காணக் கிடைக்கின்றன.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | |
| 1. அந்துவ வேட்டுவர் | 24 |
| 2. அண்ட வேட்டுவர் | 72 |
| 3. இரும்புளை வேட்டுவர் | 111 |
| 4. ஊராளி வேட்டுவர் | 27 |
| 5. கதுகால வேட்டுவர் | 26 |
| 6. கரடி வேட்டுவர் | 71, 74, 78 |
| 7. கள்ளை வேட்டுவர் | 99 |
| 8. கரைய வேட்டுவர் | 23, 28, 66, 113 |
| 9. காட்டு வேட்டுவர் | 76 |
| 10. காரை வேட்டுவர் | 50 |
| 11. கிழங்க வேட்டுவர் | 25 |
| 12. குன்ன வேட்டுவர் | 112 |
| 13. குருகுல வேட்டுவர் | 64, 83 |
| 14. கொடும்பூர் வேட்டுவர் | 60, 61 |
| 15. கொடுகத்தாளி வேட்டுவர் | 65 |
| 16. சிறுத்தலை வேட்டுவர் | 49, 51, 103 |
| 17. சுண்டை வேட்டுவர் | 104 |
| 18. செம்ப வேட்டுவர் | 53 |
| 19. நச்சுழி வேட்டுவர் | 24 |
| 20. நல்வாளை வேட்டுவர் | 100 |
| 21. பட்டாலி வேட்டுவர் | 67 |

22. பாசறை வேட்டுவர் 56

23. பாண்டிய வேட்டுவர் 58, 68, 114

24. பாத வேட்டுவர் 101

25. புல்லை வேட்டுவர் 29, 115, 116

26. பூச்சந்தை வேட்டுவர் 48

27. பூவாணி வேட்டுவர் 69

28. மலைய வேட்டுவர் 24

29. ம.. வாய் வேட்டுவர் 62

30. முளை வேட்டுவர் 98, 117

31. முன்னை வேட்டுவர் 54

32. வெங்கச்சி வேட்டுவர் 102

33. வெங்கை வேட்டுவர் 119

34. காவலர் கள்ளிப்பிள்ளர் 32, 46

35. காவலர் காச்சர் 55

36. காவலர் கீழைக்கரையர் 35

37. காவலர் குறும்பிள்ளர் 30, 36, 38, 39, 40, 41, 42, 43, 68

38. காவலர் புன்னகர் 33

39. காவலர் புன்னாடியர் 65

40. காவலர் மேலைக்கரையர் 34

41. காவலர் முட்டை 87

42. காவலர் வளவர் 37, 49

43. காவலர் வெண்கொற்றர் 31, 44

44. பூலுவர் 79, 80, 81, 90, 95

உத்திரர், குடதியர், செய்யர், சோழர், பெரும்பற்றார், மயிலர், முட்டை, வெள்ளை. } 77, 84, 85, 86, 87, 88, 92, 93, 94,96, 97, 106, 107

45. வேட்டுவர் 105, 108, 109, 110, 118, 120, 121

# 1. கரைய வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், அறச்சலூர் புற்றிடங் கொண்டீசுவரர் கோயில்.

காலம் : போசள மன்னன் மூன்றாம் வீரவல்லாளன் காலம், யுவ, தை; கி.பி. 1335.

செய்தி : அறச்சலூர் கரைய வேட்டுவரில் செய்யான் பல்லவரையன் புற்றிடங் கொண்டீசுவரர் கோயில் திருப்பணியின்போது திருநிலைகாலும், படியும் அமைத்தார். செய்யான் பல்லவ ரையன் கரைய வேட்டுவர் காளியப்ப கவுண்டர் மகன் என்று ஊசிப்பாளையம் செப்பேடு மூலம் தெரிகிறது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ ஒய்சள புஜபல வீரவல்லாள
2. தேவர் பிருத்திராஜ்யம் பண்ணி அருளா
3. நின்ற யுவ சம்வத்சரத்துத் தை
4. மாதத் தொருநாள் மேல்கரைப்
5. பூந்துறை நாட்டு அறைச்சலூரில்
6. கரைய வேட்டுவரில் செய்யான்
7. பல்லவரையனேன் இவ்வூர் உடையார் புற்றிடங்
8. கொண்ட நாயனார் கோயிலில்
9. திருக்கட்டளையில் திருநிலைகாலும்
10. படியும் செய்வித்தேன்.

# 2. அந்துவ வேட்டுவர்

(மலைய வேட்டுவர், நச்சுழி வேட்டுவர்)

இடம் : ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், ஊஞ்சலூர் நாகீசுவரர் கோயில்.

காலம் : திருமலை நாயக்கர் காலம்; கி.பி.1538; ஏவிளம்பி ஐப்பசி 15.

செய்தி : கொடுமுடி சிவன், பெருமாள் கோயில் பணிகட்காக மலைய வேட்டுவர், அந்துவ வேட்டுவர், நச்சுழிவேட்டுவர் முதலிய வேட்டுவர் குலப் பெருமக்களுக்கும், வெள்ளாளர் தனஞ்செய குலத்தார்க்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு மா நிலம் வழங்கப் பட்டது. நிலம் திருக்கைவழக்கமாக அளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீர அச்சுதராய மகாராயர் காரியத்துக்குக் கடவதான திருமலை நாயக்கர் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற கலியுக சகாப்தம் 4639 மேல் செல்லாநின்ற ஏவிளம்பி வருஷம் அற்பசி மாதம் 15 ஸ்ரீமன் மகாதேவ தேவோர்த்தமன் கொடுமுடி லிங்கன் வீரநாராயணப் பெருமாள் திருமுகப்படிக்கு ஸ்ரீமது தேவர் திருமலை நாயக்கர் காரியத்துக்குக் கடவதான அதிகாரி மெய்க்கும் பெருமாள் பிள்ளை அவர்களும் தானத்தார்களும் திருப்பதியார்களும் திருவம்படியாரும் ஊஞ்சலூர்க்கும் ஊரவர்க்கும் மலைய வேட்டுவரில் நல்லண்ணன் கரை ஒன்றுக்கும் இப்படி சோழியன் கரை ஒன்றுக்கும் அந்துவ வேட்டுவரில் சிறுவன் கரை ஒன்றுக்கும் மேற்படி... நச்சுழி வேட்டுவரில் சின்னான் கரை ஒன்றுக்கும் வெள்ளாளர் தனிஞ்சிகளில் தாயாண்டார் கரை ஒன்றுக்கும் ஆக.....

# 3. கிழங்க வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், சிவகிரி கவுண்டம் பாளையம், நத்தக்காடு.

காலம் : கி.பி. 10ஆம் நூற்றாண்டு

செய்தி : தலைய நல்லூரில் இருந்த கிழங்க வேட்டுவரில் பெரிய கிழங்கன் போரில் வீரமரணம் அடைந்தார். அவருக்கு எடுக்கப்பட்ட நடுகல் (இப்போது இந்நடுகல் ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்தில் உள்ளது).

## கல்வெட்டு

1. தலை நல்லூ
2. ரில் கிழங்
3. க வேட்டு
4. வரில் கிழ
5. ங்கன்
6. பெரிய கி
7. ழங்கன்.

(கொங்கு 24 நாடுகளில் ஒன்றான கிழங்க நாடு
கிழங்க வேட்டுவர் பெயரால் ஏற்பட்டதாக இருக்கலாம்)

# 4. கதுகாலகுல வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், சிவகிரி மோளப் பாளையம், பண்டிதகாரன் குழி என்னும் குட்டை.

காலம் : 18ஆம் நூற்றாண்டு; கி.பி. 1756; ஸ்ரீமுக தை 20.

செய்தி : விளக்கேத்திக் காணியாளர் கதுகாலகுல வேட்டுவர் தேவண கவுண்டன் மகன் ஆவுடைக் கவுண்டன் செய்த ஒரு கொடை குறிக்கப்படுகிறது. இவர் அதிகாரம் பெற்ற அதிகாரியாக இருந்துள்ளார்.

## கல்வெட்டு

1. உ ஸ்ரீமுக
2. வருஷம் தை
3. மீ 20 உ புத
4. ன் வாரமும் பூ
5. ச நட்செத்திரமும்
6. பெற்ற னாளில்
7. காகம் விளக்கே
8. த்திக் காணியா
9. ளரில் கதுகால
10. குல வேட்டுவரில்
11. விறுமாண்டக் க
12. வுண்டன் மகன் தே
13. வண கவுண்ட
14. ன் மகன்
15. ஆவுடைக்
16. கவுண்டன்
17. அதிகாரத்தில்
18. ஆகடம் ப
19. ண்ணினவ
20. ன் காராம் பசு
21. வை கொண்ண
22. தோசத்தில்
23. போவான்.

# 5. ஊராளி வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், துக்காச்சி வேட்டுவன் காடு.

காலம் : கி.பி. 11ஆம் நூற்றாண்டு; முதல் இராசேந்திரன் காலம்.

செய்தி : நடைபெற்ற போரில் ஊராளி அழகன் காளி வீரமரணம் அடைந்ததால் அவருக்கு நடுகல் நாட்டப்பட்டது. நடுகல் இல் எடுத்தல் முறையில் கோயில் போல அமைக்கப் பட்டுள்ளது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ பூர்வ தேசமும் கங்கையும்
2. கடாரமும் கொண்ட ஸ்ரீ இராசேந்திர
3. சோழர்க்குச் செல்லாநின்ற யாண்டு
4. .............. ஊராளி வேட்டுவன் அழகன்
5. காளி அவன் இதில் பட்டான்.

(முதலாம் இராசேந்திர சோழனின் சேரநாட்டுப் படையெடுப்பின் போது அழகன் காளி வீரமரணம் அடைந்திருக்கலாம்)

# 6. கரைய வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், பழமங்கலம் நத்தக்காடு வேடன்கல்.

காலம் : கி.பி. 10ஆம் நூற்றாண்டு

செய்தி : எதிர்த்த பகைவர்களைக் கொன்று வென்ற கரையகுலச் சொக்கன் வீரமரணம் அடைந்தான். அவனுக்கு நடுகல் எடுத்துப் பீடும், பெயரும் எழுதப்பட்டுள்ளது. செய்தி வெண்பா வடிவில் எழுதப்பட்டிருப்பது வேறு எங்கும் இல்லாத சிறப்பாகும். இந் நடுகல்லும் இல் எடுத்தல் அமைப்பில் கோயில் போல அமைக்கப்பட்டுள்ளது.

## கல்வெட்டு

வாய்த்தபுகழ் மங்கலத்து வந்தெதிர்த்த மாற்றலரைச்
சாய்த்தமருள் வென்ற சயம்பெருக - சீர்த்தபுகழ்
நிக்குவணம் கற்பொறிக்கப் பட்டான் கரையகுலச்
சொக்கனேந்த லேஉலகில் தான்
இக்கற்பொறி இரக்ஷிப்பான் ஸ்ரீபாதம் எந்தலைமேலே*.

★ இக்கல்வெட்டு பி.லிட்., முதுகலைப் பாடத்திற்குப் பாடமாகப் பல ஆண்டுகள் வைக்கப்பட்டிருந்தது.

# 7. புல்லை வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், வெங்கம்பூர் சோழீசுவரர் கோயில் முன்பு கிடக்கும் கல்.

காலம் : வீரபாண்டியனின் இரண்டாம் ஆட்சியாண்டு; கி.பி. 1267

செய்தி : புல்லை வேட்டுவர் வானவதரையன் வலங்கை வாழ வந்தானான சுந்தரபாண்டிய வீரசிங்க தேவனுக்கு வெங்கம்பூர் கொடையாக அளிக்கப்பட்டது. அவர் வெங்கம்பூரில் வசூலாகும் தரகுப் பணத்தை சிவன்கோயில் அமுதுபடிக்குத் தந்தார். இவர் வரி (தரகு) வசூலிக்கும் அலுவலராக இருந்துள்ளார்.

## கல்வெட்டு

1. (ஸ்வஸ்தி) ஸ்ரீ கோவிரா
2. சகேசரி பன்மரான திரிபு
3. வனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ வீ
4. ர பாண்டிய தேவற்கு யாண்டு
5. 2வது மேல்கரை யரைய நாட்
6. டு வெண்கம்பூரில் புல்லை வே
7. ட்டுவரில் வானவதரையன்
8. வலங்கை வாழவந்தானான
9. சுந்தரபாண்டிய வீரசிங்
10. க தேவனேன் நாயனார் வீ
11. ரபாண்டிய தேவ
12. ரெனக்கிவ் வெண்
13. கம்பூரைத் தருகையில் இவ்
14. வூர் தரகை இவ்வூர் நாயனா
15. ர் வீரசெயங்கொண்ட சோ
16. ழீச்சுரமுடையார்க்கும் சிவ
17. காமி அம்மைக்கும் சந்தி
18. க்கு அமுது படித்தரம்
19. குடுத்தேன் சுந்தர பாண்
20. டிய வீரசிங்க தேவனே
21. ன்.

# 8. காவலர் குறும்பிள்ளர்

இடம் : ஈரோடு மாவட்டம்,காங்கயம் வட்டம், அகிலாண்டபுரம் அகத்தீசுவரர் கோயில்.

காலம் : சுந்தரபாண்டியனின் எட்டாம் ஆட்சியாண்டு; கி.பி. 1293

செய்தி : வேட்டுவர் காவலர் குறும்பிள்ளரில் பட்டாலி செங்காளி என்பவர் மனைவி புளியம்மை கோயில் திருப்பணியின் போது அர்த்தமண்டப முகவணை (முகப்பு) அமைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு எட்டாவது
   ஆனிமாதம் இக்கோவில் அத்த மண்டபத்தில்
   முகவணை செய்வித்தேன்

2. பட்டாலியில் காவலர் குறும்பிள்ளரில் செங்காளி
   மனைக்கிழத்தி புளியம்மையேன்.

# 9. காவலர் வெண்கொற்றர்

இடம் : ஈரோடு மாவட்டம்,காங்கயம் வட்டம், அகிலாண்டபுரம் அகத்தீசுவரர் கோயில்.

காலம் : கி.பி. 13ஆம் நூற்றாண்டு

செய்தி : காங்கயம் வேட்டுவர் காவலர் வெண்கொற்றரில் செய்யாழ்வி சூரிய தேவன் ஆன தொண்டைமான் என்பவர் கோயில் திருப்பணியின்போது கருவறைத் திருநிலைகால்களை அமைத்தார்.

## *கல்வெட்டு*

1. ஸ்வஸ்தி ஸ்ரீ காங்கயத்தில் நாயனார் திருவகத்தீசுவரமுடையார் கோயில் கெர்ப்பக்கிரகத் திருநிலைகால் இவ்வூரி
2. ல் காவலன் வெண்கொற்றரில் செய்யாழ்வியேன் சூரிய தேவனான தொண்டைமானேன் தர்மம் பன்மாகேசுவரர் ரெக்ஷை

# 10. காவலர் கள்ளிப்பிள்ளர்

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், ஆறுதொழு நக்கீசுவரமுடையார் கோயில்.

காலம் : வீரபாண்டியனின் 4ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1269

செய்தி : வேட்டுவர் காவலர் கள்ளிப்பிள்ளர் பிரிவைச் சேர்ந்த ஒருவர் மனைவி பல்லாண்டி என்பவர் கோயில் திருப்பணியின் போது திருநிலைகால்கள் கொடையாகக் கொடுத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ
2. வீரபாண்
3. டியதே
4. வற்கு யா
5. ண்டு 4வது
6. காங்க
7. ய நாட்
8. டு ஆற
9. தொழுவில்
10. காவலன்
11. கள்ளிபி
12. ள்ளரில்
13. கெற
14. க........ா
15. ளமாள்
16. பல்லாண்
17. டியேன்
18. ஆளுடை
19. யார் திரு
20. நக்கீசுரமு
21. டையார்
22. கோயிலில்
23. அத்தமண்
24. டபத்தி
25. ல் திரு
26. வாசலில்
27. நாட்டி
28. ய திருநி
29. லைகால்
30. பல்லாண்
31. டியேன்
32. செய்வித்
33. தேன்.

# 11. காவலர் புன்னகர்

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், ஆறுதொழு நக்கீசுவரமுடையார் கோயில்.

காலம் : வீரபாண்டியனின் 10ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1275

செய்தி : வேட்டுவர் காவலர் புன்னகரில் கரியான் வீரன் கோயில் திருப்பணியின் போது கருவறையில் திருநிலைகால் இரண்டையும் கொடையாக அளித்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்டு 10வது காங்கைய நாட்டு ஆறத்தொழுவில் கா
2. வலன் புன்னகரில் கரியான் வீரனேன் நாயனார் ஆளுடையார் திருநக்கீசுரமுடையார் கோயில்.
3. கெற்பக்கிரகத்தில் திருநிலைகால் இரண்டும் கரியான் வீரனேன் தன்மம் நக்கீஸ்வரமுடையார்க்கு.

(சிவபெருமான் முப்புரத்தை நகை செய்து எரித்ததால் நக்கீசுவரர் எனப்பட்டார். இப்போது நாகீசுவரர் என அழைக்கப்படுகிறார்.)

# 12. காவலர் மேலைக்கரையர்

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், கீரனூர் ஆதீசுவரர் கோயில்.

காலம் : சேர மன்னர் குலசேகரதேவரின் 4ஆம் ஆட்சியாண்டு; கி.பி.13ஆம் நூற்றாண்டு.

செய்தி : கீரனூர் வேட்டுவரில் காவலர் மேலைக்கரையரில் சொக்கவூராளிகளில் ஊராளி என்பவர் திருப்பணியின் போது திருநிலைகால் அளித்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ குலசேகர
2. தேவற்கு யாண்
3. டு 4வது காங்
4. கைய நாட்டு
5. க் கீரனூர் உடை
6. யார் ஆதினா
7. தீஸ்வரமுடையா
8. ர் கோயில் திருநி
9. லைகால் செய்வித்தே
10. ன் இவ்வூர் காவலன்
11. மேலைக் கரையரி
12. ல் சொக்கவூராளி
13. யரில் யூராளி
14. யேன்.

# 13. காவலர் கீழைக்கரையர்

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், கீரனூர் ஆதீசுவரர் கோயில்.

காலம் : வீரபாண்டியனின் 16ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1281

செய்தி : கீரனூர் வேட்டுவரில் கீழைக்கரையரில் பெரிய அரசு அழகிய பிள்ளை என்பவர் திருப்பணியின்போது திருநிலை கால் கொடையளித்தார்

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரபா
2. ண்டிய தேவ
3. ற்கு யாண்டு 15
4. வதற்கெதிரா
5. வது காங்
6. கையனாட்டு
7. க் கீரனூர் ஆ
8. ளுடையார்
9. ஆதி நாதீஸ்வ
10. ரமுடையார்
11. கோயில் திரு
12. நிலைகால் செய்
13. வித்தேன்
14. இவ்வூர் காவல
15. ன் கீழைக்க
16. ரையரில் பெ
17. ரிய அரசு அ
18. ழகிய பிள்ளை
19. யேன்.

# 14. காவலர் குறும்பிள்ளர்

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், (பட்டாலி) இராயவலசு, புங்கந்தோட்டம், பிடாரியம்மன் கோயில் (கரியகாளியம்மன்).

காலம் : அபிமான சோழ ராசாதிராசதேவரின் பத்தாம் ஆட்சியாண்டு; கி.பி. 1095

செய்தி : நாயகவிச்சி நாயன்சிலம்பி என்பவர் தன் கணவன் வேட்டுவர் குறும்பிள்ளரில் காவன் அரையனுக்காகப் பிடாரி கோயில் கட்டினார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. கோ அபி
3. மான சோ
4. ழ ஸ்ரீ ராஜா
5. திராஜ தே
6. வற்கு திரு
7. வெழுத்திட்டு
8. ச் செல்லா
9. நின்ற திரு
10. நல்லியாண்
11. டு பத்தாவ
12. து நாயக
13. விச்சி நாய
14. ன் சிலம்பி
15. யேந் குறும்
16. புள்ளரில் எ
17. ந் மணவா
18. ளன் காவந் அ
19. ரையனைச்
20. சாத்தி எடுப்
21. பிச்ச பிடாரி
22. கோயில் இ
23. து ரக்ஷிப்பா
24. ந் காலிற்பொடி
25. எந் தலை மேலின.

# 15. காவலர் வளவர்

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், பட்டாலி பால்வெண்ணீசுவரர் கோயில்.

காலம் : வீரராசேந்திர சோழனின் எட்டாம் ஆட்சியாண்டு; கி.பி. 1215

செய்தி : வேட்டுவர் காவலர் வளவரில் ஒருவருடைய மனைவி சோழாண்டி என்பவர் கோயிலில் சந்தியா தீபம் ஒன்று வைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு நாலாவதற்கெதிர் நாலாவது காங்கையனாட்டிற் காடவூரி
2. ற் காவலன் வளவரில் ............... மனைக்கிழத்தி சோழாண்டியேந் பட்டாலியிற் பால்வெண்ணீசுரமுடை
3. யார் கோயிலுக்குச் சந்தியா தீபம் ஒன்றுக்கு நான் குடுத்த பொந் கழஞ்சு இப்பொன் கழஞ்சும் இக்கோயில் கா
4. ணி உடைய சிவப்பிராமணரில் கூத்தன் ஆரம்பூண்டியும் கூத்தன் கூத்தனும் இவ்விருவர் செம்பாதியும் திரும
5. ழபாடி உடையான் கடைக் ............. செம்பாதியும் கைக் கொண்டு ஒரு விளக்கு சந்திராதித்தவரை நிதப்படி செலு
6. த்துவோமாகவும் இது பன்மாஹேஸ்வரரக்ஷை

# 16. காவலர் குறும்பிள்ளர்

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், பட்டாலி பால்வெண்ணீசுவரர் கோயில்.

காலம் : வீரராசேந்திர சோழனின் 13ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1220

செய்தி : வேட்டுவர் காவலர் குறும்பிள்ளரில் கூத்தன் கூத்தனான வாழவந்தான் என்பவர் கோயிலில் சிவராத்திரி பூசைக்காக ஒரு அச்சுப் பொன் கொடை கொடுத்தார். அதைப் பெற்ற வலிப்புக்கா நாட்டு அமரபுயங்கரச் சதுர்வேதி மங்கலத்து ஊரார் கோயிலுக்கு நெல் கொடுப்பதாக ஒப்புக் கொண்டனர்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு 13 ஆனி
2. த் திங்கள் வலிப்புக்காநாட்டு நல்லூரான அமரபுயங்
3. கரச்சதுவேதி மங்கலத்தூரோம் காங்கைய நாட்டிற் ப
4. ட்டாலியிற் காவலன் குறும்பிள்ளரில் கூத்தன் கூத்தநா
5. ந வாழவந்தானேன் நாயனார் பால்வெண்ணீசுரமுடையார்
6. க்கு சிவராத்திரைக்குப் பண்டாரத்தில் ஒடுக்கின அச்சு
7. ஊரோம் கொண்டு ஆண்டு வரை அச்சிவயக்காணத்தாற் தூணி
8. ப்பதக்கு நெல் உபையமளந்து வருவோமாகவும் அளவாத நெல் இ
9. ரட்டிப்பதாகவும் இந்நெற் தண்டிவந்த ஆளுக்கு நாங்க
10. ளே தண்டுகூலியும் பதக்கு நாநாழி நெல் குடுத்துச் சோறு குடுத்துக்
11. காட்டுவோமாகவும் இப்படி சந்திராதித்தவரை செல்வதாக.

# 17. காவலர் குறும்பிள்ளர்

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், பட்டாலி பால் வெண்ணீசுவரர் கோயில்.

காலம் : குலோத்துங்க சோழனின் 9ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1282

செய்தி : வேட்டுவர் காவலர் குறும்பிள்ளரில் கூத்தன் கூத்தனான அதியமான என்பவர் மண்டபம் ஒன்றை அமைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கு
2. லோத்துங்க சோ
2. ழ தேவர்க்கு யா
4. ண்டு ஒன்ப
5. தாவது இத்
6. திருமண்டப
7. ஞ் செய்வித்
8. தேன் பட்டா
9. லியிலிரு
10. க்குங் காவல
11. ன் குறும்பிள்
12. ளரில் கூத்தன்
13. கூத்தனான அ
14. தியமானே
15. ன் பால்வெ
16. ண்ணீசுர
17. முடையாற்கு.

# 18. காவலர் குறும்பிள்ளர்

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், பட்டாலி பால் வெண்ணீசுவரர் கோயில்.

காலம் : விக்கிரம சோழனின் 12ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1285

செய்தி : வேட்டுவர் காவலர் குறும்பிள்ளரில் போடன் என்பவர் மனைவி கோவி என்பவர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழதேவற்கு யாண்டு பன்னிரண்டாவது காங்கய நாட்டு பட்டாலியிற் காவலன் குறும்பிள்ளரில் போடன் மனைக்கிழத்தி கோவி............ நாயனார் பால்வெண்ணீசுர முடையாற்குச் சந்தியா தீபமொன்று

2. க்கு ஒடுக்கின பொன் கழஞ்சுக்கும் கோயிற் காணியுடைய சிவப் பிராமணரில் கடைக்குறிச்சி பால்வணத்தானுடையான் ஆண்டவன் உள்ளிட்டாரும் கூத்தன் நல்லானுள்ளிட்டாரும் இவ்விருவோம் சந்தியாதீபம் சந்திராதித்தவரை செலுத்தக் கட

3. வோமாகவும் இது பன்மாஹேஸ்வர ரக்ஷை.

# 19. காவலர் குறும்பிள்ளர்

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், பட்டாலி பால்வெண்ணீசுவரர் கோயில்.

காலம் : விக்கிரம சோழனின் 19ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1292

செய்தி : வேட்டுவர் காவலர் குறும்பிள்ளரில் கூத்தன் கூத்தனான அகளங்க நாடாழ்வான் மனைவி அவினாசியாண்டி என்பவர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ விக்கிரம சோழதேவற்கு யாண்டு பத்தொன்பதாவது பட்டாலியிற் காவலன் குறும்பிள்ளரில்

2. கூத்தன் கூத்தனான அகளங்க நாடாழ்வாந் மனைக்கிழத்தி அவினாசியாண்டியேன் பட்டாலியிற் பால்வெண

3. ணீசுரமுடையாற்குச் சந்தியாதீபம் ஒன்றுக்குக் குடுத்த கழஞ்சு இக்கோயிற் காணியுடைய

4. சிவப்பிராமணன் கூத்தன் கூத்தனும் திருமழபாடி உடையான் கடைக்குறிச்சியும் இவ்விருவோம்

5. பொன் கழஞ்சுங் கொண்டு நித்தபடி சந்திராதிச்சமும் செலுத்துவோமாக. இச்சந்தியாதீபம் குடமுங்... குச்சியுங் கொண்டு கோயில்

6. உள்புகுவானே ரட்சிக்க.

# 20. காவலர் குறும்பிள்ளர்

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், பட்டாலி பால் வெண்ணீசுவரர் கோயில்.

காலம் : விக்கிரம சோழனின் 19ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1292

செய்தி : கோயில் மண்டபம் கட்டிய காவலர் குறும்பிள்ளரில் கூத்தன் கூத்தன் ஆன அதியமான் மனைவியும், மகன் வீராந்தப் பல்லவரையனும், மகளும் செய்த கொடை குறிக்கப் படுகிறது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழதேவற்கு யாண்டு பத்தொன்பதாவது பட்டாலியிற் காவலன் குறும்பிள்ளரில் உடையார் பால்வெ
2. ண்ணீசுரமுடையாற்கு இத்திருமண்டபம் கண்ட அதியமான் மனைக்கிழத்தியும் மகன் வீராந்தப் பல்லவரையனும் மகள் வீர......

# 21. காவலர் குறும்பிள்ளர்

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், பட்டாலி பால் வெண்ணீசுவரர் கோயில்.

காலம் : விக்கிரமசோழனின் 20ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1293

செய்தி : வேட்டுவர் காவலர் குறும்பிள்ளரில் செயங்கொண்ட வேளானும், அவன் மகன் பறையனும் கோயிலில் இரண்டு சந்தியா தீபம் வைத்தனர்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஶ்ரீ விக்கிரம சோழதேவற்கு யாண்டு இருபதாவது பட்டாலியிற் காவலன் குறும்பிள்ளரில்
2. செயங்கொண்ட வேளானும் செயங்கொண்ட வேளாந் மகன் பறையனும் இவ்விருவரும் பட்டாலியிற் பால்
3. வெண்ணீஸ்வரமுடையாற்குச் சந்தியாதீபம் இரண்டுக்கும் குடுத்த பொந் இருகழஞ்சும் இக்கோயி
4. ற் காணியுடைய சிவப்பிராமணர் கூத்தன் கூத்தனும் திருமழபாடி யுடையாநான கடைக்குறிச்சியும் இருவோம் இப்
5. பொந் இருகழஞ்சுங்கொண்டு நித்தல்படி சந்திராதிச்சம் செலுத்துவோமாக இச்சந்தியாதீபம் கு
6. டமுங் குச்சியும் கொண்டு இக்கோயில் புக்காந் இவ்விளக்கிடுவானாக பந்மாஹேஸ்வர ரக்ஷை.

# 22. காவலர் வெண்கொற்றர்

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், பட்டாலி வெண்ணீசுவரர் கோயில்.

காலம் : விக்கிரமசோழனின் 19ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1292

செய்தி : வேட்டுவர் காவலர் வெண்கொற்றரில் சோணாப் பல்லவரையன் மனைவி செங்கூத்தாண்டி கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழதேவற்கு யாண்டு பத்தொன்பதாவது வீரகேரளத்து காவலன் வெண்கொற்ற
2. ரில் சோணாப்பல்லவரையந் மனைக்கிழத்தி செங்கூத்தாண்டி பட்டாலியிற் பால்வெண்ணீ
3. சுரமுடையாற்குச் சந்தியாதீபம் ஒன்றுக்கும் குடுத்த பொன்.... இக்கோயில் காணி
4. உடைய சிவப்பிராமணர் கூத்தன் கூத்தனும் திருமழபாடியும் இவ்விருவோம்... சந்திராதித்தர் வரை நடத்தக் கடவோமாக.

# 23. காவலர் புன்னாடியர்

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், பட்டாலி பால் வெண்ணீசுவரர் கோயில்.

காலம் : விக்கிரம சோழனின் 21ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1294

செய்தி : வேட்டுவர் காவலர் புன்னாடியரில் காளிகாளி என்பவர் கோயிலில் சந்தியா தீபம் ஒன்று வைத்தார்

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழதேவற்கு இருபத்தொன்றாவதில் இரவி நல்லூரிருக்குங் காவலன்
2. புன்னாடிகளில் காளிகாளியேந் பட்டாலியில் ஆளுடையார் பால்வெண்ணீஸ்வர முடையா
3. ர்க்குச் சன்தியாதீபம் ஒன்றுக்குக் குடுத்தபொன் கழைஞ்சும் இக்கோயில் காணியுடைய சிவப்பிரா
4. மணரில் திருமழபாடியுடையானான கடைக்குறிச்சி செம்பாதியும் கூத்தன் ஆரம்பூண்டானும் கூத்தன் கூத்தனும்
5. இவ்விருவருஞ் செம்பாதி இப்பொன் கழைஞ்சுங்கொண்டு நித்தல்படி சந்திராதித்தவற் செல்வதாக இச்சந்தி.
6. யாதீபம் குடமுங் குச்சியுங்கொண்டு இக்கோயில் புகுவான் இவ்விளக்கிடுவானாக பந்மாஹேஸ்வர ரக்ஷை.

# 24. காவலர் கள்ளிப்பிள்ளர்

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், முத்தூர் சோழீசுவரர் கோயில்.

காலம் : வீரராசேந்திர சோழனின் 4ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1211.

செய்தி : தென்கரை நாட்டுக் கொற்றனூர் வேட்டுவர் காவலர் கள்ளிப்பிள்ளரில் செய்யான் வைய்யான் என்பவர் மனைவி உடையபிராட்டி முத்தூர்ச் சிவாலயத்தில் விளக்கு வைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர
2. தேவர்க்கு யாண்டு நாலா
3. வது தென்கரை நாட்டுக் கொற்ற
4. னூர்க் காவலன் கள்ளிபி
5. ள்ளரில் செய்யான் வைய்யா
6. ன் மனைக்கிழத்தி உடையபி
7. ராட்டியேன் முத்தூர் ஆளுடை
8. யார்க்குச் சந்தியா தீபம் ஒன்று.

# 25. காவலர் வளவர்

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், முத்தூர் சோழீசுவரர் கோயில்.

காலம் : வீரராசேந்திர சோழனின் 4ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1211

செய்தி : முத்தூர் வேட்டுவர் காவலர் வளவரில் உத்தமசோழப் பல்லவரையன் மகன் சிங்கனான அங்கராயன் பெரிய நாச்சியார் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்
2. திர தேவர்க்கு யாண்டு நா
3. லாவது முத்தூர் காவலன் வ
4. ளவரில் உத்தம சோழப் பல்ல
5. வரையன் மகன் சிங்கனான அ
6. ங்கராயனேன் முத்தூர் பெரிய
7. நாச்சியார்க்கு சந்தியா தீபம் ஒன்றுக்
8. கும் அச்சு ஒன்றில் கைக்கொண்டு பெ
9. ரிய நாச்சியார் கோயிலில் காணி
10. யுடைய சிவப்பிராமணன் காசுவன்
11. பட்டன் உடையானான குலதீப
12. பட்டனேன் இவ்விளக்கொன்றும் எ
13. ந் மக்கள் மக்கள் சந்திராதித்தவரை
14. செல்வதாகவும்.

# 26. பூச்சந்தை வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், கிடாரம் என்ற ஊரில் சாலை ஓரம் கிடக்கும் கல்.

காலம் : உம்மத்தூர்த் தலைவர் வீரநஞ்சண உடையார் காலம்; நள ஆண்டு சித்திரை 13ஆம் தேதி; கி.பி. 1496

செய்தி : மோடமங்கலம் பூச்சந்தை வேட்டுவர் பெரிய பெருமாள் முத்தாண்டான் என்பவர் நவிரை ஆன கப்பலன் கிடாரன் என்ற ஊரில் குளம் வெட்டி வைத்துத் 'தாமரைக் குளம்' என்று பெயரிட்டார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ மன்
2. மகாமண்ட
3. லேஸ்வரன் ஸ்ரீ
4. வீர நஞ்சண்
5. ண உடையாற்கு
6. ச் செல்லா நின்
7. ற நள வருஷ
8. த்து சித்திரை ப
9. தினொன்றாம்
10. தியதி கீழ்க
11. ரைப் பூந்துறை நா
12. ட்டு மோடமங்
13. கலத்துப் பூச்சன்
14. தை வேட்டுவரி
15. ல் பெரிய பெரு
16. மாள் முத்தா
17. ண்டானேன் வ
18. டபரிசார நாட்டு ந
19. விரையான கப்பலன்
20. கிடாரன் தாம
21. ரைக் குளம் முத்
22. தாண்டாருடைய
23. உபையம்.

# 27. சிறுத்தலை வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், கொடிவேரி முன்னையீசுவரர் கோயில்.

காலம் : குலோத்துங்க சோழனின் 14ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1162

செய்தி : தென்கரைக் கொடிவேரி சிறுத்தலை வேட்டுவரில் தாமன் தாமனான இருங்கோளன் கோயிலில் இரண்டு சந்தியா தீபம் வைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ
2. நன்மங்கலஞ் சிறக்
3. கஸ்ரீ குலோத்துங்க
4. சோழதேவற்கு யாண
5. டு பதினாலாவது வட
6. பரிசார நாட்டில் தெந்க
7. ரை கொடுவேலியிருக்
8. கும் சிறுத்தலை வேட்டு
9. வரில் தாமந்தாமநாந இருங்
10. கோளனேன் ஆளுடையார் திரு
11. முன்னை ஆண்டாற்கு வச்ச சந்தி
12. யா தீப விளக்கு இரண்டுக்கு
13. ஸ்ரீ பண்டாரத் தொடுக்கிந ஆ
14. னை அச்சு ஸ்ரீ அக்கி புதுச்சலாகை
15. ஒந்றும் ஒடுக்கிநேன் இத்தருமம்
16. குடங்கொண்டு கோயில் புகுவாந் ச
17. ந்திராதித்தவரை நடத்தக் கடவாராக.

# 28. காரை வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், கொடிவேரி பவானியாற்றங்கரை.

காலம் : வீரராசேந்திர சோழனின் 4ஆம் ஆட்சியாண்டு; கி.பி.1211

செய்தி : வடகரை நாட்டுப் பட்டில் காரை வேட்டுவர் தநாவெயன் கொடிவேரி சிவன்கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ வீரரா
2. ஜேந்திர தேவற்கு
3. யாண்டு நாலாவது வடக
4. ரை நாட்டில் பட்டிலிருக்கு
5. ம் காரை வேட்டுவரில் தநா
6. வெயனேன் வடபரிசார நாட்டு
7. கொடுவேலி திருமுன்னை
8. ஆளுடையாற்கு சந்தியா தீ
9. பம் ஒன்றுக்குக் காணியுடைய
10. சிவபிராமணன் ஆத்ரேய
11. கோத்ரம் ஆளவந்த
12. பட்டனேன் சந்தி
13. யா தீபம் ஒன்றுக்கு
14. ம் ஸ்ரீயக்கி பழஞ்சலாகை
15. யொன்றும் கொண்
16. டேன்.

# 29. சிறுத்தலை வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், கொடிவேரி முன்னையீசுவரர் கோயில்.

காலம் : வீரராசேந்திர சோழனின் 9ஆம் ஆட்சியாண்டு; கி.பி.1216

செய்தி : தென்கரைக் கொடிவேரி சிறுத்தலை வேட்டுவர் இருங் கோளன் கந்தமன் முன்னையீசுவரர்க்குச் சந்தியா தீபம் வைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்தி
2. ஸ்ரீ வீரரஜே
3. ந்திர தேவற்கு யாண்
4. டு நாலாவதற்கெதிரஞ்
5. சாவது வடபரிசார நாட்
6. டில் தெந்கறை கொடுவே
7. லியிலிருக்கும் சிறுத்தலை வே
8. ட்டுவரில் இருங்கோளன் கந்த
9. மநேன் ஆளுடையார் திருமுந்
10. நையாளுடையாற்குச் சந்தியா தீப
11. த்துக்கு தென்கரை காணியுடைய சி
12. வ பிராமணன் ஆத்திரேய கோத்திரம் உடை
13. யாந் ஆளவந்தபட்டனேன் இவ்வச்சு....

# 30. சிறுத்தலை வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், கொடிவேரி முன்னையீசுவரர் கோயில்.

காலம் : வீரராசேந்திர சோழனின் 22ஆம் ஆட்சியாண்டு; கி.பி.1229

செய்தி : தென்கரைக் கொடிவேரி சிறுத்தலை வேட்டுவர் இருங்கோளன் கந்தமன் முன்னையீசுவரர்க்குச் சந்தியா தீபம் வைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ வீரரா
2. சேந்திர தேவற்கு யாண்
3. டு பதினேழாவதிற் கெதிரஞ்
4. சாவது வடபரிசார நாட்
5. டில் தேவநாங்குறிச்
6. சியிலிருக்கும் சிறுத்தலை வேட்
7. டுவரில் இருங்கோளன் கந்த
8. மனேன் ஆளுடையார் முந்நை
9. நயாளுடையாற்குச் சந்தியா தீப
10. த்துக்கு தெந்கரை காணியுடைய சி
11. வப் பிராமணன் ஆத்திரேய கோத்திரனடி
12. யாந் ஆளவந்தபட்டனேன் இவ்வச்சு
13. பதினஞ்சும்.....
14. க்கு செலுத்து
15. வோம் ஆக ச
16. ந்திராதித்தவ
17. ரை செலுத்துவே
18. வாம் ஆக குடங்கொ
19. டு கோயில் புகுவார்
20. இத்தம்மங் குடங்
21. கொண்டு புகுந்து செலு
22. த்துவதாக.

# 31. செம்ப வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், கொடிவேரி பவானியாற்றங்கரை.

காலம் : குலோத்துங்க சோழனின் 55ஆம் ஆண்டு, 12ஆம் நூற்றாண்டு

செய்தி : குளவாற்றூர் ஊராளி செம்ப வேட்டுவர் தொண்டயன் பிள்ளான் ஆன செயங்கொண்ட சோழக் கொங்காள்வான் குளம் கட்டி வாய்க்காலும் வெட்டிவைத்த செய்தி கூறப் படுகிறது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ குலோத்
2. துங்க சோழதேவற்
3. கு யாண்டு ஐம்பத்து அ
4. ஞ்சாவது வடகரை நாட்டு
5. க் குளவாற்றூரிலிருக்கும்
6. ஊராளி செம்ப வேட்டுவ
7. ன் தொண்டயன் பிள்ளா
8. நான சயங்கொண்ட சோழ
9. க் கொங்காள்வானேன் இக்குள
10. ம் அட்டிக்
11. காலும் வெட்டி
12. விச்சேன் இது
13. ஆக்குவான் பா
14. தம் எந்தலைமேல்
15. இது அழிப்பான் வழி
16. அறுவான்.

# 32. முன்னை வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், கோசணத்தில் உள்ள குத்துக்கல்.

காலம் : ஏவிளம்பி வருடம் தை மாதம் 10ஆம் நாள், கி.பி. 1597

செய்தி : கோசணம் காணியாளர் முன்னை வேட்டுவர் பெருமாள் என்பவர் பருவாச்சி அய்யருக்குக் கறவைப்பசு கொடுத்தமை கூறப்படுகிறது.

## கல்வெட்டு

1. ஏவிளம்பி வருச
2. ம் தை மாதம் 10
3. தேதி இராசராசபுரத்து
4. ராசாக்கள் காரியத்
5. துக்குக் கடவரான சித
6. ம்பர ராயன் அதிகா
7. ரத்தில் வடபரிசார
8. நாட்டு கோசணத்தில்
9. காணியாளரில் முன்
10. னை வேட்டுவன் பெரு
11. மாளேன் பருவாச்சி
12. அய்யருக்கு ஒரு தர பசு
13. வும் சேர கல்வெட்டிக்
14. குடுத்தோம்.

# 33. காவலர் காச்சர்

இடம் : ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், பிரமியம் திருவலஞ்சுழி நாதர் கோயில்.

காலம் : அபிமானசோழ ராசாதி ராசதேவரின் 10ஆம் ஆட்சியாண்டு; கி.பி.11ஆம் நூற்றாண்டு; கி.பி. 1095

செய்தி : பிரமியம் வேட்டுவர் காவலர் காச்சரில் சிலம்பன் அடைக் கலவன் என்பவர், எடுப்பன் நீலன் சிலம்பன் என்பவர் நினைவாக முகமண்டபத்தில் நடுவில் பத்தியில் கல் பாவச் செய்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோ அபிமானசோழ ஸ்ரீராசாதிராச தேவற்
2. குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு பத்தா
3. வது தென்கரை நாட்டுப் பிரம்மதேயம் ஸ்ரீ வீரசங்காத
4. சதுர்வேதி மங்கலத்து இருந்து வாழுங் காவலன் கா
5. ச்சரில் சிலம்பன் அடைக்கலவனேன் எடுப்பன் நீலந் சிலம்ப
6. னைச்சாத்தி திருவலஞ்சுழி மகாதேவர் முகமண்
7. டபத்தில் நடுவிற்பத்தி கல் பாவுவித்தேன் சிலம்பன்
8. அடைக்கலவனேன் இது புதுக்குவான் ஸ்ரீ பாதமென்
9. தலைமேலிந.

# 34. பாசறை வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், அந்தியூர் செல்லீசுவரர் கோயில்.

காலம் : உம்மத்தூர்த் தலைவர் நஞ்சராய உடையார் காலம், இரவுத்திரி, வைகாசி 10; கி.பி. 1500

செய்தி : பொன்னாங்கட்டியார்க்கு இடம் பெற்றுச் சமாதி அமைத்தவர்களில் ஒருவர் பாசறை வேட்டுவரில் குறும்பன் கொங்கன். பொன்னாங்கட்டியார் துறவியாக இருக்கலாம்.

## கல்வெட்டு

1. இரவுத்திரி வருஷம் வைகாசி மாதம்
2. 10 தேதி ஸ்ரீமன் மகாமண்டலேசுவரன்
3. சகவீர நஞ்சராய உடையார் பிருத்வி
4. ராஜ்யம் பண்ணியருளாநின்ற காலத்து
5. காரியத்துக்குக் கடவ
6. தானவரில் மகா நஞ்சையன் முதலி
7. யார் வேந்தரும் காளியார் உச்
8. சனனும் பாசறை வேட்டுவரில்
9. குறும்பன் கொங்கனும் ஆக அய்வரும்
10. பொன்னாங்கட்டியார் வேங்கடநாதற்கு
11. அணைக்குக் கீழ்பால்.... தவதோட்டம்
12. பொன்னாங்கட்டியார் யோகம்
13. ஆகையில் இவரைச் சமாதியிட

14. கல்லு மேற்கு அன்பது முழமும்

15. பள்ளத்துக்குத் தெக்கு நாற்பது முழமும்

16. இதுக்கு விலையாக தோட்டம் விற்ற

17. பணம் 20 இந்த இருபது பணமும்

18. பற்றிக் கொண்டு அவரைச் சமாதியிட்டு

19. ............ இந்த நிலம் செல்லீசுவரமுடை

20. யார்க்குத் தாரை வார்த்துக் குடுத்தார்

21. நாங்களும் இந்த நஞ்சை.........

# 35. பாண்டிய வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், ஒலகடம், ஒலகீசுவரர் கோயில்.

காலம் : வீரராசேந்திர சோழனின் 23ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1230

செய்தி : வடகரை நாட்டுப் புன்னம் ஊராளி பாண்டிய வேட்டுவர் மகள் பாண்டாண்டி கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஶ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு இருபத்து மூன்றாவது
2. வடகரை நாட்டில் புன்னத்திருக்கும் பாண்டியவேட்டுவரில் புன்னத்தூராளி மகள் பாண்டாண்டியேன்
3. உடையார்க்குக் குடுத்த அச்சுக்கொண்டு அன்றாடு குடங்கொடு கோயில் புகுவான் சந்தியாதீப விளக்கும்
4. இட்டுப் பூசிப்பான் சந்திராதித்த பலம் உள்ளவதனையும் செல்வதாக இத்தன்மம் பன்மாகேஸ்வர ரக்ஷை.

# 36. கள்ளை வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், ஒலகடம், ஒலகீசுவரர் கோயில்.

காலம் : வீரராசேந்திர சோழனின் இருபத்தி நாலாவது ஆட்சியாண்டு; கி.பி.1231

செய்தி : உலகவிடங்கம் கள்ளை வேட்டுவ ஊராளிகளில் கருஞ் சொக்கன் வலிய சொக்கன் ஒலகீசுவரர் கோயிலில் முருகன் கோயில் கட்டி முருகனையும் எழுந்தருளச் செய்தார். முருகன் குன்றமெறிந்தபிள்ளையார் எனக் குறிக்கப்படுகிறார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ ந
2. ந் மங்கலஞ் சி
3. றக்க ஸ்ரீ வீரராஜே
4. ந்திர தேவற்கு யா
5. ண்டு இருபத்து
6. நாலாவதில் ஆ
7. நி மாதங் குந்ற
8. மெறிந்த பிள்
9. ளையாருங் கோ
10. யிலுஞ் செய்வி
11. ச்சேந் வடகரை
12. ர நாட்டு உலக
13. விடங்கத்தில்
14. கள்ளை வேட்டு
15. வந் ஊராளிகளில்
16. கருஞ்சொக்கந்
17. வலிய சொக்
18. கநேந் இத்த
19. ந்மம் செய்வி
20. த்தேன் இத்த
21. ந்மம் அழியாமே
22. ம காத்தவந்
23. ஸ்ரீ பாத மெந்ற
23. லை மேற்கொ
24. ண்டேன்.

# 37. கொடும்பூர் வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பட்டிலூர் வாகீசுவரம் உடையார் கோயில்.

காலம் : வீரராசேந்திர சோழனின் 34ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1241

செய்தி : பட்டில் கொடும்பூர் வேட்டுவரில் பிள்ளை வாகீசுவரருக்கு மூன்று விளக்குகள் வைத்தார்.

## கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ்சிறக்க ஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவதிற்கெதிர் அஞ்சாவது மார்கழி மாத முதலாக வடகரை நாட்டில் பட்டிலிருக்கும் கொடும்பூர் வேட்டுவரில் பிள்ளையேன் வாகேச்வரம் உடையார்க்கு சந்திராதித்ய பலமும் ........ மூன்று விளக்கு ஏற்றுவோமாகவும் குடமும் குச்சியும் கொண்டு கோயில் புகுவார் யாதொருவர் திருவிளக்கு வச்சு .......... பெற்று வருவார்களாகவும் இவ்விளக்குப் ........... இது தப்புகில் மண்ணும் கண்ணுமிழக்கக் கடவார்களாகவும் வாகேச்வர முடையார் இரட்சிக்க.

# 38. கொடும்பூர் வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பட்டிலூர் வாகீசுவரம் உடையார் கோயில்.

காலம் : வீரராசேந்திர சோழனின் 38ஆவது ஆட்சியாண்டு; கி.பி. 1245

செய்தி : பட்டில் ஊராளிகளில் ஒருவரான கொடும்பூர் வேட்டுவரில் பெரிய பிள்ளையான பெரிய தேவன் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ்சிறக்க ஸ்ரீ வீரராஜேந்திர தேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவதின் எதிர் ஒன்பதாவது வடகரை நாட்டில் பட்டிலிருக்கும் ஊராளிகளில் கொடும்பூர் வே

2. டுவரில் பெரியதேவன் மகன் பெரிய பிள்ளையான பெரிய தேவனேன் நாயனார் வாகீசுரமுடையாற்கு சந்தியா தீபம் மூன்று விளக்கெரிப்பதாக கோயில் செய்கிற பிராமணர் கைக்கொண்ட அச்சு

3. ஸ்ரீயக்கி பழஞ்சலாகை ஒன்றுங் குடுத்தோம் இது குடங்கொடு கோயில் புகுவாந் நயந்தொருவர் மூன்று விளக்கெரிப்போமாக இது பன்மாகேசுவர ரக்ஷை.

# 39. ம...வாய் வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பட்டிலூர் வாகீசுவரர் கோயில்.

காலம் : போசளமன்னன் வீரவல்லாளன் காலம்; ஈசுவர வருடம் தை மாதம்; கி.பி. 1337

செய்தி : வாகீசுவரர் கோயிலில் அர்த்த மண்டபத்தையும், மகா மண்படத்தையும் புதுப்பித்து, தேவையான இடங்களில் காறை பூசி, நிர்மாலியத் தொட்டியும் அமைத்தவர் ஒரு வேட்டுவர்குலப் பெரியவர்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரவல்லாள தேவற்குப்
2. பிருத்வி ராஜ்யம் பண்ணி அருளாநின்ற
3. ஈஸ்வர வருஷத்துத் தை மாதம் வடகரை
4. நாட்டுப் பட்டில் ம.......... வாய் வேட்டுவரில்
5. பிள்ளை ...............................................
6. ...............................................................
7. அர்த்தமண்டபமும் மகாமண்டபமும் அழிவு
8. சோர்ந்து தூபி பரியந்தமாக சாந்தும்
9. பண்ணி எழுவித்து நிர்மாலியத்
10. தொட்டியும் சமைப்பித்தேன்
11. உ

# 40. காவலர் குறும்பிள்ளர்

இடம் : ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஈங்கூர் குட்டைத் தோட்டம்.

காலம் : குலோத்துங்க சோழனின் ஏழாவது ஆட்சியாண்டு; கி.பி. 1203

செய்தி : வேட்டுவர் காவலர் குறும்பிள்ளரில் போத்தன் செய்யான் ஆன குலோத்துங்கப் பல்லவரையன் அய்யநார் படிமத்தை அமைத்தார். (இப்போது கல்வெட்டும் அய்யனார் படிமமும் ஈரோடு கலைமகள் பள்ளி அருங்காட்சியகத்தில் உள்ளது)

## கல்வெட்டு

1. ஸ்ரீ நன்மங்
2. கலஞ்சிறக்க
3. ஸ்ரீ கொலோத்
4. துங்க சோழதே
5. வர்க்குத் திருவெ
6. ழுத்திட்டுச் செல்
7. லாநின்ற திருநல்லி
8. யாண்டு ஏழாவது
9. மேல்கரைப் பூந்து
10. றை நாட்டு ஈங்கை
11. யூரிலிருக்கும் காவ
12. லன் கும்பில்லரில்
13. போத்தன் செய்யானான
14. குலோத்துங்கப் பல்லவரையனேன்
15. அய்யநாரை எழுந்தருளு
    வித்த தன்மம்.

# 41. குருகுல வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கொடுமணல் கணபதிபாளையம், செல்லாண்டியம்மன் கோயில்.

காலம் : ருத்ரோத்காரி வருடம் ஆவணி 6 ; கி.பி. 1803.

செய்தி : குருகுலவம்சம் ஒட்டப்பாளையம் வேட்டுவக்கவுண்டர்கள் செல்லாண்டியம்மன் கோயில் திருப்பணி செய்தனர்.

## கல்வெட்டு

1. ருத்ரோத்காரி வருஷம் ஆவணி மாதம் 6ந் தேதி வே
2. ட்டுவ ராஜகுல குருகுல வம்சம் ஒட்டபாளைய
3. ம் வேட்டுவக் கவுண்டர் அவர்களால்
4. செல்லாண்டியம்மன் கோயில் ஜீர்ணோ
5. த்தாரம் செய்யப்பட்டது.

# 42. கொழுகத்தாளி வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், திங்களூர் சந்திரபுரீசுவரர் கோயில்.

காலம் : வீரராசேந்திர சோழனின் 41ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1248

செய்தி : திங்களூர் கொழுகத்தாளி வேட்டுவர் மதவ பிள்ளை சேனன் என்பவர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு நாற்பத்தொன்றாவது தைத்திங்கள் முதலாகக் குறுப்பு
2. நாட்டுத் திங்களூரிலிருக்கும் கொழுகத்தாளி வேட்டுவரில் மதவபிள்ளை கு........... ர............. சேனநேன் திங்களூரி
3. ல் ஆளுடையார் சந்திரபுரீசுவரமுடையாற்கு சந்தியா தீபம் ஒன்றும் திங்களூரில் காணியுடை
4. ய சிவப்பிராமணர் பாரத்வாஜ கோத்திரத்தில் தேவன் தேவனுக்கு நான் குடுத்த பழஞ்சலாகை
5. அச்சொன்றுக்கு சந்தியா தீபம் ஒன்றும் சந்திராதித்தவரை செலுத்துவோமாக.

# 43. கரைய வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், திங்களூர் சந்திர புரீசுவரர் கோயில்.

காலம் : விக்கிரமசோழனின் இரண்டாம் ஆட்சியாண்டு; கி.பி. 1275

செய்தி : திங்களூர் கரையவேட்டுவர் சமையமந்திரி சிறுபிள்ளை விநாயகருக்குப் பீடம் செய்தளித்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கே
2. ாப்பரகேசரி பந்மரா
3. ன திரிபுவன ச
4. க்ரவத்திகள் விக்ர
5. ம சோழ தேவற்
6. கு யாண்டு 2 வ
7. து குறுப்பு நாட்டுத் திங்களூரிற் க
8. றைய வேட்டுவ
9. ந் சமையமந்திரி
10. சிறுப்பிள்ளையே
11. ன் உடையார் ச
12. ந்திரபுரமுடைய
13. ார் திருநடைமாளிகையில் வினா
14. யகப் பிள்ளையார்
15. ஸ்ரீ பீடஞ்
16. செ(ய்)வித்தேன்
17. சகரை யாண்டு
18. ஆயிரத்தொரு
19. நூற்றுத் தொண்
20. ணூற்
21. றேழில்
22. பங்கு
23. னி மாத
24. ம்.

# 44. பட்டாலி வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் நாகேசுவர சுவாமி கோயில்.

காலம் : விக்கிரம சோழனின் ஏழாவது ஆட்சியாண்டு; சகரயாண்டு 1185; கி.பி. 1263

செய்தி : வீரராசேந்திரன் காலத்தில் 1210ஆம் ஆண்டு வெட்டப்பட்ட கல்வெட்டு மீண்டும் படி எடுத்து வெட்டப்பட்டுள்ளது. பட்டாலி வேட்டுவர் சொக்கன் ஞானசம்பந்தன் சந்தியா தீபம் வைத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ தேவற்கு யாண்டு ஏழாவது சகரையாண்டு ஆயிரத்தொரு நூ
2. ற்றெண்பத்தஞ்சு குறுப்பு நாட்டு விசையமங்கலத்து ஆளுடையார் திருநாகீஸ்வரமு
3. டையார் கோயில் முதல் பிரகார மண்டமிறக்கித் திருப்பணி செய்யக்கொண்
4. டபடியால் மண்டபஞ்செய்து முன்னாள் வைத்த சந்தியா தீபங்கள் வெட்டி
5. ன படியெடுத்து இம்மண்டபத்தில் வெட்டினபடியாவது
6. வீரராசேந்திர தேவற்கு யாண்டு
7. இரண்டாவதுக் கெதிராவது விசயமங்கலத்துப் பட்டாலி வேட்டுவன் சொக்கன் ஞானசம்பந்தன்
8. ஆளுடையார் திருநாகீஸ்வரமுடையார்க்கு வைத்த சந்தியா தீபம் ஒன்றுக்கு ஒடுக்கின பழஞ்சலாகை அச்சொன்று.

# 45. பாண்டிய வேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளோடு அண்ணன்மார் கோயில்.

காலம் : 20ஆம் நூற்றாண்டு

செய்தி : அண்ணன்மார் கோயில் 2 குதிரைகள் மாதுபட்டி, குட்டி மேக்கிப்பட்டி, புள்ளிபாளையம் பாண்டிய வேட்டுவர் அமைத்தது கூறப்படுகிறது.

## கல்வெட்டு

1. அண்ணன்மார் சுவாமி துணை
2. மாதுபட்டி குட்டிமேக்கி
3. பட்டி புள்ளிபாளையம்
4. பாண்டிய வேட்டுவர்
5. இரண்டு குதிரை உபயம்

# 46. பூவாணி வேட்டுவர்

இடம் : கரூர் மாவட்டம், கரூர் பசுபதீசுவரர் கோயில், இரண்டாம் பிரகாரம் நுழைவாயில் இடப்புறம்.

காலம் : மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியாண்டு 25; கி.பி. 1203

செய்தி : புன்னத்துப் பூவாணி வேட்டுவரில் வேளான் கரியான் ஆன மருதங்க வேளான் கரூர் சிவாலயத்துக்கு 3 கழஞ்சு பொன் கொடை கொடுத்தார். தேவணப்பள்ளி ஊர்ச் சபையார் அப்பொன்னைப் பெற்றுச் சில நிலங்களை விலைக்கு வாங்கிக் கோயிலுக்கு அளித்தனர்.

## கல்வெட்டு

1. திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஈழமும் மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கருவூரும் கொண்டருளிய ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு இருபத்தஞ்சாவது சோழ கேரள மண்டலத்து வெங்கால
2. நாட்டு கருவூரான முடிவழங்கு சோழபுரத்து உடையார் திரு ஆநிலை ஆளுடையார்க்கு இம்மண்டலத்து இந்நாட்டு புன்னத்து பூவாணிய வேட்டுவரில் வேளான் கரியானான மருதங்க வேளான் இந்நாயனார் ஸ்ரீபன்
3. டாரத்துக்கு ஒடுக்கின பொன் காசுகல்லால் துளைநிறை செம்பொன் முக்கழஞ்சு இப்பொன் முக்கழஞ்சும் இம்மண்டலத்துத் தட்டையூர் நாட்டு தேவணப்பள்ளி ஊரோம் வினியோகத் துக்குக் கொண்ட பொன் முக்
4. கழஞ்சும் மூலபிருத்தியரான ஸ்ரீ சண்டேஸ்வரதேவர் ஸ்ரீ ஹஸ்தத்தால் இப்பொன் முக்கழஞ்சும் கைக்கொண்டு

தேவதானம் திருநாமத்துக்காணியாக விற்றுக் குடுத்த நிலம் மேல்ப்புலத்து ஆலோடு போயிலால் நீர் பாயும்.

5. நிலம் பாடிகாப்பான்செய் என்னும் பேருடை நிலம் பெரும்படி அரைமாவும் இதுக்கெல்லை கீழ்ப்பாற்கெல்லை நொம்பலூர் நத்தத்துக்கு மேற்கும் வடபாற்கெல்லை விருத்திக்குத் தெற்கும் மேல்பாற

6. கெல்லை தெக்கு நோக்கி நீர் பாய்கிற கவருக்குக் கிழக்கும் தென்பாற்கெல்லை அணுக்க நம்பி செய்க்கு வடக்கும் இப்பெருநான்கெல்லைக் குள்பட்ட இவ்வரைமா நிலமும் இறையிலி

7. முற்றூட்டாக இந்நாயனார்க்கு தேவதானமாவதாகவும் இந்நிலத்தால் வந்த இறை வரி சிற்றாயம் எற்ச்சோறு கூற்றரிசி எப்பேர்ப்பட்டனவும் ஊரோமே ஏறிட்டுக் கொண்டு இந்நிலம் அரைமாவும் இறையிலி

8. தேவதானமாகக் குடுத்து செந்நீர் வட்டி செய்யக் கடவதில்லை யாகவும் புந்நீர் விட்டுப் பாய்ச்சிக் கொள்வதாகவும் இப்படி சம்மதித்து இறையிலி தேவதானமாகக் கல்வெட்டிக் குடுத்தோம் தேவணப்பள்ளி ஊரோம்

9. இந்நாயனார்.....

# 47. கரடி வேட்டுவர்

இடம் : கரூர் மாவட்டம், வெஞ்சமாங்கூடல் விகிர்தேசுவரர் கோயில்.

காலம் : வீரராசேந்திரசோழனின் 41ஆம் ஆட்சியாண்டு; கி.பி.1248

செய்தி : கரடி வேட்டுவரில் மானாபரணப் பல்லவரையர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவி ராசகேசரி பந்மரான
2. திரிபுவனச் சக்கரவத்திக
3. ள் சிரீ வீரராசேந்திர தேவ
4. ற்கு யாண்டு 41வது வீரசோழ மண்
5. டலத்து வெங்கல நாட்டு திருவெ
6. ஞ்சமாக்கூடல் கறடி வேட்டுவரி
7. ல் மானாபரணப் பல்லவரையன் பிள்
8. ளைத் திருவெண் உடையார் வெஞ்சமாக்
9. கூடல் ஆளுடையார் விகிர்தர்க்கு நான் வை
10. த்த சந்தியாதீபம் ஒன்றுக்குக் கு
11. டுத்த பொன் கழஞ்சு இப்பொன் க
12. ழஞ்சுங் கைக்கொண்டோங் காணி
13. யுடைய சிவப்பிராமணன் நாயகன் திருவாளனான எதிரிலி சோழ பட்டன் உள்ளி
14. ட்டாரும் வடுகன் ஆண்டானான திருஞானசம்பந்த பட்டனும் இ(வ்)வனைவோமுஞ் சந்திராதித்தவரை குடங்கோறி குச்சிகொண்டு புகுவான் ஒரு விளக்கெ
15. ரிப்பதாக சம்மதித்து கல்வெட்டிக் குடுத்தோம் இ(வ்)வனைவோமும் பிள்ளைத் திருவுக்கு.

# 48. அண்ட வேட்டுவர்

இடம் : கரூர் மாவட்டம், வெஞ்சமாங்கூடல், விகிர்தேசுவரர் கோயில் உள்பிரகாரம் தென்புறச்சுவர்.

காலம் : சடையவர்மன் சுந்தரபாண்டியனின் 14ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1299

செய்தி : திருவெஞ்சமாங்கூடல் காணி, நெடுங்குளியான முனிவறத்தப் பெருமாள் நல்லூர்க் காணியாளரில் கரூர் அண்டவேட்டுவர் அரியானான சிவந்தகால் பெருமாளுக்கு அளிக்கப்பட்டதை இக்கல்வெட்டுக் கூறுகிறது.

## கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடையபன்மரான திருபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு 14வது வீரசோழமண்டலத்து வெங்கால நாட்டு உடையார் வெஞ்சமாங்கூடல் ஆளுடைய நாயனார் கோயில் ஆதிசண்டேசுவர தேவகன்மி கோயில் கணக்கு ஸ்ரீ காரியம் செய்வார்களோம் இன்னாயனார் தேவதானம் திருவெஞ்சமாங் கூடலுள்க்கிடை நெடுங்குளியான முனிவறத்தப் பெருமாள் நல்லூர் காணியாளரில் கரூர் அண்டவேட்டுவரில் அரியானான சிவந்தகால்ப் பெருமாளுக்கு முன்னாள் பல காணியாளருள் சண்டேச்வர நாயனார் திருமுகம் பெற்று காணியாண்டு போதுகயில் இவனுக்கும் காணியான பட்டியை தனியே கோயிலிலே எழுத்து வெட்டித் தரவேணுமென்று இவன் சொல்லுகையில் இவ்வாட்டை கார்த்திகை மாதம் முதல் இக்காணி விழுக்காடு இவனுக்கு விலை ஏத்தி சீதனத்துக்கு உரித்தாவ தாகவும் இக்கரையால் வந்த சுவந்திரியங்களும் பெற்று சந்திராதித்த வரை அனுபவிப்பானாக இந்தப்படி சம்மதித்து பிரமாணம் பண்ணிக்

குடுத்தோம் சிவந்தகால்ப் பெருமாளுக்கு ஆதிசண்டேசுர தேவகன்மி கோயில் கணக்கு ஸ்ரீ கார்யம் செய்வார்களோம் இப்படிக்கு தானம் பண்ணியாலிடவை இக்கோயில் காணியுடைய ஸ்தல பெரும் புலியூருடைய திருவாலந்துறை உடையான் தனிமை நீக்கினான் ஆன...... ஒப்பம். ஸ்ரீ மாகேசுவரப் பிரியன் எழுத்து.

(வெஞ்சமாங்கூடல் கொங்கேழு தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் ஒன்று. சுந்தரர் திருப்பதிகம் பெற்ற ஊர்)

# 49. கரடி வேட்டுவர்

இடம் : கரூர் மாவட்டம், கரூர் வட்டம், வெஞ்சமாங்கூடல் விகிர்தேசுவரர் கோயில்.

காலம் : கி.பி. 13ஆம் நூற்றாண்டு

செய்தி : அரசன் வெஞ்சமாங்கூடல் ஊரைக் கோயிலுக்குக் கொடுத்த கொடை ஆவணத்தில் வேட்டுவர்குலப் பெருமக்கள் அலுவலராகக் கையெழுத்திட்டுள்ளனர்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோநேரின்மை கொண்டான் ஆளுடையார் திருவெஞ்சமாங்கூடல்
2. ஆளுடையார் தேவகன்மிகளுக்கு நம் ஓலை குடுத்த பரிசாவது திருவெஞ்சமாங்கூடல் ஆளுடையார்
3. க்குத் திருவெஞ்சமாங்கூடலைக் குடுத்தோம் இவ்வூர்க்குளக் கட்டுகளும் ...................... செட்டிக்குளம் ம
4. டை அடைச்சு வாய்க்கால் பாஞ்சு விளையக் கடவதும் மேல்கரையில் நெடுங்குழியிலணையுள்
5. பட்ட விளைவதுவும் தெலப்பாடி கிழக்கும் நாகபள்ளி இலந்தை மடையும் கல்லா
6. டத்துக்குத் தெற்கும் வீரபாண்டியன் கிணற்றுக்கு மேற்கும் பறப்புத்துறைக்கு வடக்கும்
7. இன்னான்கெல்லைக்குட்பட்ட புற்றும் தெற்றியும் உடும்போடி ஆமை தவழியும் மேனோக்கிய

8. மரமும் கீணோக்கிய கிணறும் ஆளுடையார் திருவெஞ்சமாங் கூடல் உடையார்க்கு

9. குடுத்தோம் இவ்வூராலுள்ள இறைபுரவு சிற்றாயம் எலவை உகவை மற்றும் எப்பேற்

10. பட்டதுவும் மன்றுபாடு தெண்டங்குற்றம் கற்றுப்புற்போகா முற்றூட்டும் ஆளுடையா

11. ர் திருவெஞ்சமாங்கூடல் உடையார்க்குக் குடுத்தோம் நந்தமரானார் பாற்படுத்திக்

12. குடுக்க இப்படிக்கு ஓலையில் நம் எழுத்திட்டுக் குடுத்தோம் இப்படி சந்திரா

13. தித்தவல் செல்வதாக செம்பிலும் சிலையிலும் வெட்டிக்கொள்க

14. இப்படிக்கு இவை விலாடத்தரையன் எழுத்து இப்படிக்குக் காடு வெட்டி எழுத்து

15. வேட்டுவரில் கரடி குல சிறுவந் சிறுவனான மேனாட்டரையனும் வெளி கொச்சந் பெரியான்

16. கூடல்............ வேட்டுவரில் செங்காலன்.

# 50. காட்டு வேட்டுவர்

இடம் : கரூர் மாவட்டம், கரூர் வட்டம், வேட்டமங்கலம், புட்புவன ஈசுவரர் கோயில் தென்புறக் குமுதவரி.

காலம் : வீரராசேந்திர சோழனின் 20ஆம் ஆட்சியாண்டு; கி.பி.1227

செய்தி : அரைய நாட்டுத் துடுமல் காட்டு வேட்டுவரில் முத்தன் சக்கை கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர
2. தேவர்க்கு யாண்டு 20ஆவது அரைய நாட்டுத் துடுமலில் இருக்கும் காட்டு
3. வேட்டுவரில் முத்தன் சக்கையேன் புட்பவனமுடையார் கோயிலுக்கு சந்தியாதீப விளக்கு ஒ
4. ன்றுக்குப் பழஞ்சலாகை அச்சு ஒன்றுங் கொண்டு ஊர் பிராமணர் குடங்கொடு கோயில்
5. புக்கான் இடக்கடவதாக இது பன்மாகேசுவரர் ரட்சை.

# 51. பூலுவர் சோழர்

இடம் : கரூர் மாவட்டம், கரூர் வட்டம், வேட்டமங்கலம், புட்புவன முடையார் கோயில்.

காலம் : வீரபாண்டியனின் 6ஆம் ஆட்சியாண்டு; கி.பி.1271

செய்தி : ஊர்ச்சபையார், அரையர்கள், இளமாடம் கொடுத்த நிலக் கொடை. நிலத்துக்கு எல்லையாக பூலுவன் சோழன் மனை குறிக்கப்படுகிறது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்டு 6வது கிழங்க னாட்டு
2. வேட்டமங்கலத்து ஊரும் அரையர்களும் இளமாடமும் எங்
3. களூர் நாயனார் புற்பவனமுடையார்க்கு நாங்கள் நீர்வார்த்துக் குடுத்த நிலமா
4. வது கீழ்பாற்கெல்லை தண்ணீர்க்கிணற்று இட்டேறிக்கு தென்னிட்டேரிக்கு மேற்கு
5. தென்பாற்கெல்லை பூலுவன் சோழன் மனைக்கு வடக்கு மேற்பாற்கெல்
6. லை குடுமிசிறுவன் தறைக்கு கிழக்கு வடபாற்கெல்லை கழுப்பகன் தோட்
7. டத்துக்கு தெற்கு யின்னான்கெல்லைக்குட்பட்ட நிலமும் கிணறும் நீர்வார்
8. த்துக் குடுத்தோம் வேட்டமங்கலத்திற் புற்பவனமுடையார்க்கு வேட்டமங்கலத்து ஊரோம்.

# 52. கரடி வேட்டுவர்

இடம் : கரூர் மாவட்டம், கரூர் வட்டம், வேட்டமங்கலம், புட்பவன முடையார் கோயில் முன்மண்டப மேல்புறச்சுவர்.

காலம் : விக்கிரம சோழதேவனின் 14ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1287

செய்தி : வேட்டமங்கலம் கோயிலில் நடுவிற்சேரிக் கரடி வேட்டுவர் செய்யபிள்ளை சந்தியா தீபம் வைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஶ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு யா
2. ண்டு 14வது கிழங்கநாட்டு வேட்
3. டமங்கலத்து நடுவிற்சேரிக் கறடி வேட்டு
4. வரில் செய்யபிள்ளை செய்யபிள்ளையேன்
5. வேட்டமங்கலத்தில் நாயனார் புட்பவனமுடை
6. யார்க்குச் சந்தியாதீப விளக்கொன்றுக்கு நா
7. ன் இக்கோயிலில் பிராமணர்க்குக் குடுத்த பழ
8. ஞ்சலாகை அச்சு ஒன்றுக்கும் சந்திராதி
9. த்தவரை குடங்கொடு கோயில் புகுவான் எரிக்
10. கக் கடவான் இது பன்மாகேசுவரர் ரட்சை.

# 53. பூலுவ வேட்டுவர்

இடம் : கரூர் மாவட்டம், கரூர் வட்டம், வேட்டமங்கலம், புட்பவன முடையார் கோயில் முன்மண்டப மேல்புறச் சுவர்

காலம் : விக்கிரம சோழதேவனின் 14ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1287

செய்தி : தென்சேரிப் பூலுவ வேட்டுவர் சிலம்பன் செஞ்சிறுபிள்ளை என்பவர் வேட்டமங்கலம் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு யா
2. ண்டு 14வது கிழங்க நாட்டு வேட்டமங்கலத்
3. து தென்சேரிப் பூலுவ வேட்டுவரில் சிலம்பன் செஞ்
4. சிறுபிள்ளையேன் வேட்டமங்கலத்தில் நாயனார் புட்
5. பவனமுடையார்க்கு சந்தியாதீப விளக்கொன்றுக்
6. கு நான் இக்கோயிலில் பிராமணர்க்குக் குடுத்த ப
7. ழஞ்சலாகை அச்சு ஒன்றுக்குச் சந்திராதித்தவ
8. ரை குடங்கொடு கோயில் புகுவான் எரிக்கக் கட
9. வான் இது பன்மாகேசுவரர் ரட்சை.

# 54. பூலுவ நாட்டார்

இடம் : கோவை மாவட்டம், அவிநாசி வட்டம், அவிநாசியப்பர் கோயில் அர்த்தமண்டப வடக்குச்சுவர்

காலம் : விக்கிரம சோழதேவனின் 12ஆம் ஆட்சியாண்டு; கி.பி.1285

செய்தி : திருவேகம்பமுடையான் மகாதேவ ஆண்டார்க்கு வடபரிசார நாட்டு வேட்டுவர் சமூக அமைப்பான பூலுவ நாட்டார் கொடுத்த கொடை குறிக்கப்படுகிறது.

## கல்வெட்டு

1. கோப்பரகேசரிபன்மரான திரிபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீ விக்கிரமசோ
2. ழ தேவர்க்கு திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற திருநல்லியாண்டு 12ஆவது
3. வடபரிசார நாட்டில் பூலுவ நாட்டோம் திருவேகம்ப முடையாரான
4. மாதேவராண்டார்க்கு அமைஞ்சுகுடுத்த பரிசாவது ஆலத்தூரில் பூலுவகுடிக்கு நாட்
5. டில் வரி பெருமாள்பேறு வேண்டுகோள் சாமந்தப்பேறு கொண்டு எங்கள் நாட்டைத் தேடுபேறு....
6. து குடிவிழுக்காடும் புடவைமுதந்து அமைஞ்சு
7. குடுத்தோம் பூலுவ நாட்டோம்......
8. ச்சு போதுவார் இது செம்பிலும் சிலையிலும்
9. விலங்கல் சொல்லுவார் நம்மில் ஒருவன் அல்லவாகவும்
10. வழி ஏழெச்சமறுவான்.

# 55. பூலுவ ஊரார்

இடம் : கோவை மாவட்டம், அவிநாசி வட்டம், அன்னூர் மன்னீசுவரர் கோயில் கிழக்குச் சுவர்.

காலம் : வீரராசேந்திர சோழனின் 30ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1237

செய்தி : அன்னூர் வேட்டுவர் சமூக அமைப்பான பூலுவ ஊரார் இறைவன், இறைவி எண்ணெய்க் காப்புக்காக கொடை கொடுத்த விபரம் கூறப்படுகிறது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு இருபத்தொன்ப தாவதுக் கெ
2. திராவது வடபரிசார நாட்டில் மன்னியூர் பூலுவ ஊரோம் ஆளுடையார்
3. மன்னியூர் ஆளுடையார்க்கு சனியெண்ணைக் காப்புக்கு சனி ஒன்றுக்கு
4. நாயனார்க்கு எண்ணை முப்பிடியும் நாச்சியார்க்கு என்ணை ஒரு பிடியும்
5. ஆக காணத்தால் எண்ணை உழக்காக மாதம் ஒன்றுக்கு எண்ணை நாழி
6. ஆண்டொன்றுக்கு காணத்தால் எண்ணை குறுணி நாழிக்கு.......
7. .............. புரவரியாரில் சுற்றில் ஆளவந்தான் அவிநாசியான கச்சிராயர்
8. பக்கல் நாங்கள் வாங்கின சிரியக்கி பழஞ்சலாகை அச்சு நாலு

9. இவ்வச்சு நாலுக்கு வடக்குச் சேரியில் எங்கள் ஒபாதி நிலத்தில் நாங்கள் விற்ற

10. நிலத்துக் கெல்லையாவது வடபார்க்கெல்லை வெள்ளாள முனிநாட்டுப் பட்டி

11. க்கு தெற்கும் கீழ்பாற்கெல்லை பட்டலுக்கு மேற்கும் தென்பாற்கெல்லை குப்பா

12. ................ண்மைப் பட்டிக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை இலுப்பை வழி

13. இதுக்குக் கிழக்கும் இந்நான்கெல்லைக்குட்பட்ட நிலமும் இந்நாயகற் குளத்து

14. ளாக்கி இருநாழி விதையும் இவை தேவகன்மிகள் அனுசந்தானமாய் இத்தன்மம்

15. ........................................

16. மையில் இக்கச்சியராயர் தன்மமா

17. கச் செல்லக்கடவதாக கல்வெ

18. ட்டிக் குடுத்தோம் இது பன்

19. மாகேசுவரர் ரட்சை.

# 56. குருகுலராயன்

இடம் : கோயமுத்தூர் மாவட்டம், உடுமலைப் பேட்டை வட்டம், கடத்தூர் மருதீசுவரர் கோயில் கருவறை வலது நிலை.

காலம் : வீரசோழனின் 19ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1187

செய்தி : கோயில் அதிகாரம் செய்வார்களில் பெருங்குடி உடையானான திருநீற்றுப் பெற்றான் சுந்தரவானந்தக் கூத்தரான வீரசோழக் குருகுலராயன் நிலைகால் கொடை.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீவீ
2. ர சோழ தேவர்க்கு
3. யாண்டு பத்
4. தொன்பதாவ
5. து கோயில்
6. அதியாரஞ் செ
7. ய்வார்களில் பெ
8. ருங்குடி உடை
9. யானான திரு
10. நீற்றுப் பெற்றா
11. ன் சுந்தரவானந்
12. தக் கூத்தனான
13. வீரசோழக் குரு
14. குலராயன் இட்
15. ட திருநிலைகால்.

# 57. பூலுவர் முட்டை

இடம் : கோவை மாவட்டம், கோவை வட்டம், கோயில்பாளையம் காலகாலேசுவரர் கோயில் சுவர்

காலம் : வீரராசேந்திர சோழனின் 21ஆம் ஆட்சியாண்டு; கி.பி.1228

செய்தி : கவையன்புத்தூர் வேட்டுவர் பூலுவர் முட்டைகளில் அடையன் போத்தனான உத்தம பாண்டியப் பல்லவரையன் தன் தந்தை அணுக்கப் பல்லவரையர் நினைவாகச் சிவாலயத்தில் சந்தியா தீபவிளக்கு வைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு இருபத்தொன்றாவது வடபரிசார நாட்டில் கவையன்புத்தூரிலிருக்கும்
2. பூலுவன் முட்டைகளில் அடையன் போத்தனான உத்தமபாண்டியப் பல்லவரையனேன் எங்கள் தம
3. ப்பன் அணுக்கப் பல்லவரையனைச் சாத்தி நாயனார் ஆளுடையார் காலகால தேவர்க்குச் சந்தியொன்றுக்கு ஒரு
4. விளக்காகச் சந்தி மூன்றுக்கு மூன்று விளக்குக்கும் இக்கோயில் செய்கிற சிவப்பிராமணன் வசம் கழஞ்சே
5. ஆறு மஞ்சாடியும் கைக்கொண்டு கோயில் உள் புக்கார் விளக்கெரிப்பார் சந்திராதித்தவரை இவ்விளக்கு...

# 58. பூலுவர் மயிலர்

இடம் : கோவை மாவட்டம், கோவை வட்டம், கோயில்பாளையம் காலகாலேசுவரர் கோயில் சுவர்

காலம் : வீரராசேந்திர சோழனின் 21ஆம் ஆட்சியாண்டு; கி.பி.1228

செய்தி : கவையன்புத்தூர் வேட்டுவர் பூலுவர் மயிலரில் வேளான்வேள் பெரியபிள்ளை என்பவர் கோயிலில் மூன்று விளக்குகள் வைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு இருபத்தொன்றாவது கவையன்புத்தூரிலிருக்கும் பூலுவன் மயிலரில் வேளான்வேள்
2. பெரியபிள்ளையேன் ஆளுடையார் காலகாலதேவர்க்கு மூன்று சந்திக்கும் மூன்று விளக்கெரிப்பதாக இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் பாரதாய கோத்திரத்து தில்லைநாயக
3. ஆழ்வான் ஆன சந்திரசேன பட்டன் உள்ளிட்டோர் வசம் குடுத்த பொன் கழஞ்சே ஆறுமஞ்சாடியும் கைக்கொண்டோம் இவ்விளக்கு மூன்றும் குடமும் குச்சி கைக்கொண்டு புக்கார்
4. சந்திராதித்தவரை செல்வதாக இது பன்மாகேசுவரர் ரட்சை.

# 59. பூலுவர் முட்டை

இடம் : கோவை மாவட்டம், கோவை வட்டம், கோயில்பாளையம் காலகாலேசுவரர் கோயில் சுவர்

காலம் : விக்கிரம சோழனின் 25ஆம் ஆட்சியாண்டு; கி.பி.1298

செய்தி : கவையன்புத்தூர் வேட்டுவர் பூலுவர் முட்டைகளில் பியங்கன் இராமனான வங்களன் இடையான் அடியான் சிறியான் கோயிலில் திருவிளக்கு வைத்தார். இக்கல்வெட்டு இரண்டு இடங்களில் இரு அமைப்பில் வெட்டப்பட்டுள்ளது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவர்க்கு யாண்டு இருபத்தஞ்சாவது வடபரிசாரநாட்டுக் கவையன்புத்தூரிலிருக்கும்
2. பூலுவன் முட்டைகளில் பியங்கன் இராமனான வங்களன் இடையான் அடியான் சிறியான் கவையன்புத்தூர்
3. ஆளுடையார் காலகாலதேவர்க்கு வைத்த விளக்கு ஒன்றுக்கு இக்கோயில் செய்கிற சிவபிராமணன்
4. வசம் பழஞ்சலாகை அச்சொன்றுங் குடுத்து கல்வெட்டுவிச்சேன் சிறியானேன்.

# 60. காவலர் முட்டை

இடம் : கோவை மாவட்டம், கோவை வட்டம், கோயில்பாளையம் காலகாலேசுவரர் கோயில்

காலம் : விக்கிரமசோழனின் 25ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1298

செய்தி : வேட்டுவர் காவலர் முட்டைகளில் பியங்கன் இராமன் ஆன வங்களன் இடையான் அடியான் சிறியான் கோயிலில் திருவிளக்கு வைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவர்க்கு யாண்டு இருபத்தஞ்சாவது வடபரிசாரநாட்டு கவையந்
2. புத்தூர் காவுலவன் முட்டைகளில் பியங்கத் இராமனான வங்களன் இடையாந் அடியான் சிறியானேன் எங்
3. களூர் ஆளுடையார் காலகாலதேவற்கு வைத்த விளக்கொன்றுக்கு இக்கோயில் செயிகிற சிவப்பிராமணன்
4. வசம் பழஞ்சலாகை அச்சொன்றுங் குடுத்து கல்லில் வெட்டுவிச்சேன் சிறியானேன் இக்கோயில் குடங்கொடு கோயில் புகுவார்
5. சந்திராதித்தவரை செலுத்துவாரைப் பன்மாகேஸ்வரர் ரட்சை.

# 61. பூலுவர் பெரும்பற்றார்

இடம் : கோவை மாவட்டம், பேரூர், கோயில் முன்மண்டபத் தெற்குச்சுவர்.

காலம் : மாறவர்மன் வீரபாண்டியனின் ஆட்சியாண்டு 4; கி.பி. 1269

செய்தி : பேரூர் நாட்டுப் பேரூரில் ஊர்ச்சபையார் பந்தரந்தை பூலுவ வேட்டுவர் பெரும்பற்றாரில் கூத்தன் உடையான் ஆன ஆனந்தக் கூத்தரிடம் 200 பணம் கொண்டு அதற்குரிய நிலத்தைக் கோயிலுக்குக் கொடையாக அளித்தனர்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன்மரான திரிபுவனசக்கரவர்த்
2. திகள் ஸ்ரீவீரபாண்டிய தேவர்க்கு யாண்டு 4வது ஐப்பதி மாத
3. முதல் ........................டு பந்தரந்தையில் மன்றத் திருந்
4. து மன்றறியச் செய்த காரியமாவது பேரூர் நாட்டுப் பே
5. ரூரில் ஊர்............ திரத்தோமும் பந்தரந்தையில் பூலுவன் பெரும்
6. பற்றாரில் கூத்தன் உடையானான ஆனந்தக்கூத்தர்க்கு தீட்டுக் குடுத்த பரி
7. சாவது நாயனார் பார்வதீசுரம் உடைய நாயனார்க்கு தேவதான
8. ம் ஆக எங்களூரில்....... ரொருபூத் தாழம்புக்காலில் நிலம் இரண்டு
9. மா......... இறையிலியாக முற்றூட்டும் இட்டுக் குடுத்து இவர் பக்க
10. ல் நாங்கள் வாங்கின பணம் 200 இப்பணம் இருநூறுங் கொண்டு இந்நிலம் இரண்டு மாவும் இன்னாயனார்க்கு

11. அறுதியாகச் சந்திராதித்தர்வரை செம்பிலும் சிலையிலும் வெட்டிக்கொள்ள இட்டுக் கொடுத்தோம் இன்னிலத்தால்

12. வரும் கடமை குடிமை மற்றும் எப்பேர்ப்பட்டனவும் தங்களுக்கே பரமாவதாவும் இந்நிலத்தே

13. பண்டாரத்தான்பட்டி ஆவுடையார் கோயில் தானத்தார் எங்கள் தந்தை தமையன்மார் எங்களுள்ளிட்டார்

14. ஊரார் மற்றும் எப்பேர்ப்பட்டவையும் விலங்கினார் உண்டாகில் ஆ........ மாபடுவர்களாகவும் ஆணை

15. மாறுபட்டும் ........ நீக்கி ஆட்சி செ............

16. த்தக் குடுப்போமாகவும் இப்படிச் செய்யாதபோது இன்னிலத்தால் மாத்தால் இருபத்திரு கல

17. மாகவும் நெல் நாங்கள் குடுப்போமாகவும் இப்படி சம்மதித்து இக்கல்வெட்டிக் குடுத்தோம் பேரூர்

18. ஊரும் நகரத்தோமும் பந்தரந்தையில் நாயனார் பார்வதீசுவரமுடையார்க்கு இப்படிக்கு

19. ஊர்க்கரணத்தார் எழுத்து இது பன்மாகேசுவரர் ரட்சை.

# 62. பூலுவர்

இடம் : கோவை மாவட்டம், கோவை வட்டம், பேரூர், பட்டீசுவரர் கோயில் மகாமண்டப வடக்குச்சுவர்

காலம் : கோனேரின்மை கொண்டானின் 17ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 13ஆம் நூற்றாண்டு

செய்தி : புகலிடங்கொடுத்த சோழச் சதுர்வேதிமங்கலத்தில் நீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. பழைய கோளூர் அணைக்குப் பாதிப்பு இல்லாமல் ''தேவிசிறை'' என்ற அணை கட்ட அரசன் அனுமதி கொடுத்து ஊர் எல்லையில் மாளிகைப் பழநத்தம் என்ற பகுதியில் ''புகலிடங் கொடுத்த சோழ நல்லூர்'' என்ற ஊர் ஏற்படுத்தி மக்களைக் குடியேற்றவும் அனுமதி அளிக்கப்பட்டது. குடியமர்த்தப்பட்ட மக்களில் பூலுவ வேட்டுவர்களும் இருந்தனர். அவர்கட்கு ஊரில் மூன்றில் ஒரு பகுதி இறையிலியாகத் தரப்பட்டது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் கோனேரின்மை
2. கொண்டான் பேரூர் நாட்டுப் புகலிடங்கொடுத்த சோ
3. ழச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார்க்கும்
4. பேரூர் ஊரார்க்கும் நம்மோலை குடுத்தபடியா
5. வது இவர்கள் தங்களுக்கு நீர் தட்டப் பெறவே என
6. க்கு வந்து அறிவித்தமையில் இவர்கள் தங்களூர் எல்
7. லையில் தேவிசிறை என்கிற அணையடைத்து வாய்க்காலும்
8. வெட்டிக் கோளூர் அணைக்குச் சேதம் வாராதபடி அவ்வணைக்கு
9. பின்பாக நீர் விட்டுக்கொள்ளப் பெறுபவராகவும் இவர்கள் தங்

10. கள் ஊர் எல்லையில் மாளிகைப் பழநத்தம் என்கிற நத்தத்திலே
11. புகலிடங்கொடுத்த சோழநல்லூர் என்று ஊரேற்றிக் கொள்வார்
12. களாகவும் இவ்வூர்க்கு மன்றாட்டு பேரூர் மன்றாடிகளும்
13. இவ்வூரில் ஆறில் ஒன்று .........கில் குணியன் புத்தூர்
14. மன்றாடிகளும் மன்றாட்டாவதாகவும் இப்படிக் கீழ்வேண
15. டும் குடியிட்டுக்கொள்வார்களாகவும் இவ்வூர்க்கு இ
16. றையாவது குடி ஒன்றுக்கு கொங்கு கலக் கண்பாகவும் குடி
17. ஒன்றுக்குப் பொன் காலாகவும் ஆண்டுவரையும் இறுத்து
18. வருவார்களாகவும் இறுக்குமிடத்து இவ்வூர் மன்றாடிகளும்
19. புகலிடங்கொடுத்த சோழச் சதுர்வேதி மங்கலத்துச் சபையா
20. ர் .........................
21. ன்று இவ்வூர் குடியேற்றின ஆண்டுமுதல் மூவாண்டு கழிந்தால்
22. நாலாமாண்டு முதல் ஆண்டு வரையிலும் இறுப்பார்களாகவும் இவ்வொட்டின
23. கண்பும் இப்பொன்னுமல்லது எலவை உகவை நம் கன்மிகள்
24. பேறு சாமந்தப்பேறு மற்றும் எப்பேர்ப்பட்ட அந்தராயங்
25. களும் இவ்வூர்க்கு இறுக்கக்கடவன அல்லவாகவும் இவ்வூர்க்கும் இவ்வணைக்கும்
26. காவலாக இரண்டு ஊர்கள் ......... வேண்டும் பூலுவன்
27. ................ பூலுவற்குக்கா ................ற்கு
28. இவ்வூரில் மூன்றத்தொரு புன்செய் பூலுவர் இறையிலி..... மு
29. டிவாலேவாகவும் இப்படி செம்பிலும் சிலையிலும் வெ
30. ட்டிக் கொள்ளப் பெறுவார்களாக யாண்டு பதினேழாவது
31. முதல் நம் ஓலை குடுத்தோம் இவை இராசேந்திர
32. சோழப் பிரமராயன் எழுத்து யாண்டு 17 நாள் 55
33. இவை சீபாதப் பிரியன் எழுத்து.

# 63. பூலுவர் பெரும்பற்றார்

இடம் : கோவை மாவட்டம், கோவை வட்டம், பேரூர் பட்டீசுவரர் கோயில் கருவறை வடக்குச்சுவர்

காலம் : கி.பி.1633

செய்தி : புரவிபாளையம் சமீன்தார் பூலுவர் பெரும்பற்றார் சந்திர குமாரக் கோப்பண மன்றாடியார் பேரூர்க் கோயிலில் கருவறை கட்டினார்

## கல்வெட்டு

கலியுக சகாப்தம் 4734க்கு மேல் வாயறைக்கா நாட்டில் களந்தைக் காணிப் பூலுவர் பெரும்பற்றார் சந்திர குமாரக் கோப்பண மன்றாடியார் கந்தசாமிக் கவுண்டர் கட்டிவித்த கெர்ப்க்கிரகம் முகிந்தது சித்தாத்திரி வருஷம்.

# 64. பூலுவர் வெள்ளை

இடம் : கோவை மாவட்டம், திருப்பூர் வட்டம், பெருமாநல்லூர் உத்தம சோழீசுவரமுடையார் கோயில் அர்த்தமண்டபத் தென்சுவர்

காலம் : வீரராசேந்திர சோழனின் 9ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1216

செய்தி : ஒத்தனூரான பெரும்பழனம் ஊரில் இருக்கும் பூலுவ வேட்டுவரில் மேற்சேரி வெள்ளைகளில் இராசன் நிறையுடையானான தொண்டைமான் ஈசுவரன், விநாயகர் கோயில் திருப்பணி செய்து சந்தியா தீபமும் வைத்தார்.

## கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு நாலாவதுக்கெதிர் அஞ்சாவது ஒத்தனூரான பெரும்பழனில் இருக்கும் பூலுவன் மேற்சேறி வெள்ளைகளில் இராசன் நிறையுடையானான தொண்டைமானேன் பெரும்பழன ஆளுடையார் உத்தமசோழீசுரமுடையார்க்கும் விநாயகப் பிள்ளையாருக்கும் என் தர்மமாகச் செய்வித்தேன் பின் சந்தியா தீபம் ஒன்றுக்கு ஒடுக்கின பழஞ்சலாகை அச்சு ஒன்றும் ஆளுடையார் உத்தம சோழீசுரமுடையார் கோயில் காணியுடைய சிவப்பிராமணன் காசியப கோத்திரத்தில் பெரியான் அவிநாசியான திருவீதிப் பிள்ளையேன் இவ்வச்சு ஒன்றும் கைக்கொண்டு சந்திரா தித்தவரை குடங்கொண்டு கோயில் புகுவான் செலுத்தக் கடவராகவும் இது பன்மாகேசுவரர் ரட்சை.

# 65. பூலுவர் குடதியர்

இடம் : கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், குள்ளிசெட்டி பாளையம் ஊருக்குள் உள்ள தனிக்கல்

காலம் : வீரபாண்டிய தேவரின் எட்டாம் ஆட்சியாண்டு; கி.பி. 1273

செய்தி : கோயில் திருப்பணியின்போது வீரசோழநல்லூர் வேட்டுவர் பூலுவர் குடதியரில் வீரன் செய்யான் அபத்தியான் இரண்டு திருநிலைகால்கள் கொடுத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. வீரபாண்
3. டிய தேவர்க்கு
4. யாண்டு 8 வ
5. து காவடி
6. க்கா நாட்டு
7. தேவன்பாடி
8. யான வீர
9. சோழ நல்லூர்
10. பூலுவன் குட
11. தியரில் வீ
12. ரன் செய்யா
13. ன் அபத்
14. தியான் இட்ட
15. திருநிலை
16. கால் இரண்டு.

# 66. பூலுவர்

இடம் : கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், குள்ளிசெட்டி பாளையம் சுப்பிரமணிய சுவாமி கோயில் வடக்குச் சுவர்

காலம் : சுந்தரபாண்டியனின் 5ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1290

செய்தி : பொழில்வாய்ச்சியான முடித்தலைச் சோழநல்லூர் வேட்டுவர் பூலுவன் சிலம்பன் பிள்ளையான அதியன் காலிங்கராயன் கொடுத்த கொடை குறிக்கப்படுகிறது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு 5 ஆ
2. வது காவடிக்கா நாட்டு எறிச்சில் பொழில்வாய்ச்சியான
3. முடித்தலைச் சோழநல்லூர் பூலுவன் சிலம்பன் பிள்ளையான அ
4. தியன் காலிங்கராயன் இட்ட தானம்.

(பொழில் வாய்ச்சி - பொள்ளாச்சியின் பழம் பெயர்)

# 67. பூலுவர் உத்திரர்

இடம் : கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பெரிய களந்தை ஆதீசுவரர் கோயில் அம்மன் சன்னதி வெளிமண்டப தெற்குத் தூண்

காலம் : விக்கிரம சோழதேவரின் எட்டாம் ஆட்சியாண்டு; கி.பி. 1281

செய்தி : கோயில் திருப்பணியின்போது வேட்டுவர் பூலுவர் உத்திரரில் தொட்டன் கருமாணி என்பவர் ஒரு தூண் கொடையாகக் கொடுத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ
2. தேவர்க்கு யாண்டு ஏழாவ
3. து களந்தையிலிருக்கும்
4. பூலுவன் உத்திரரில் தொட்
5. டன் கருமாணி தன்மம் இத்தூண்
6. இது பன்மாகேசுவரர் ரட்சை.

# 68. பூலுவர் பெரும்பற்றார்

இடம் : கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பெரிய களந்தை ஆதீசுவரர் கோயில் அம்மன் சன்னதி நிலைகால்

காலம் : சுந்தரபாண்டியனின் 15ஆவது ஆட்சியாண்டு; கி.பி. 1300

செய்தி : களந்தை வேட்டுவரில் பூலுவர் பெரும்பற்றார் வாணன் நிலையுடையான் கோயில் திருப்பணியின்போது ஒரு தூண் கொடை கொடுத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. சுந்தரபா
3. ண்டியதே
4. வற்கு யா
5. ண்டு 15
6. வது வாய
7. றைக்கா
8. நாட்டுக் க
9. ளந்தையி
10. ல் பூலுவன்
11. பெரும்
12. பற்றாரில்
13. வாணன்
14. நிலையுடையான்
15. இத்தூண்
16. தன்மம்.

# 69. முளை வேட்டுவர்

இடம் : சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், ஆறகளூர் திருக்காமீசுவரம் உடையார் கோயில்

காலம் : இம்முடி நரசண நாயக்கர் காலம்; கி.பி.1505

செய்தி : ஆத்தூர் முளைவேட்டுவர் அல்லாளன் இளையா நாயக்கரும், ஆற்றூர் நாட்டவரும், முலைப்பாடி நாட்டவரும் எறமாஞ்சி துலுக்கண நாயக்கர் நன்மைக்காக கோயிலில் விளக்கு வைத்தனர்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலேசுவரன் அரியராய விபாடன் பாஷைக்குத் தப்புவராய கண்டன் மூவராய கண்டன்.
2. கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு குடாதான் பூர்வ தக்ஷிண பச்சிம உத்தர சது சமுத்திராதிபதி கஜவேட்டை கண்டருளிய ஸ்ரீ
3. வீரப்பிரதாப தேவ மகாராயர் மேதினி மீசுரகண்டன் கட்டாரி சாளுவராயன் இம்மடி நரசண நாயக்கர் பிறுதி
4. விராச்சியம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் 1427 இதன்மேல் செல்லாநின்ற குரோதன சம்வத்சர
5. த்து மகர நாயற்று பூர்வபக்ஷத்து திரிதியையும் ஆதித்தவாரமும் பெற்ற அவிட்டத்து நாள் மலாடாகிய ஜந
6. நாத மண்டலத்து மகதை மண்டலத்து ஆற்றூர் கூற்றத்து ஆறகளூர் நயினார் திருக்காமீசுவரம் உடைய நாயனார் திருக்கோயிலுக்கு திருநந்தாவிளக்கு சந்தியா விளக்

7. குக்கும் நரலோககண்டன் வயிர.... நாராயணன் மறைபுக்கார் காவலன் சாடிக்காரர் கண்டன் ஸ்ரீமது எறமாஞ்சி துலுக்கண நாயக்கர் திருமேனிக்கு சகல பாக்கியமும்

8. உண்டாகவேணும் என்று துட்டர்கண்டன் துட்டநெட்டூரன் ஆற்றூர் காணியுடைய முளைவேட்டுவர் அல்லாளன் இளையா நாயக்கரும் ஆற்றூர் நாட்டவரும் வெண்பார் நாட்டில் வேறுபிரிந்த முலைப்பாடி நாட்டவரும்

9. ஆறகளூர் திருக்காமீசுரம் உடைய நாயனார் சன்னதியிலே குறைவறக்கூடி இருந்து மகாசங்கராந்தி புண்ணிய காலத்திலே எங்கள் நாட்டு ஊர் வதியிலே ஏற்கு நாழி கோட்டை ஆக திருவிளக்கு எண்ணைக்கு கட்டளை பண்ணிக் குடுத்தோம்

10. இந்தத் தன்மம் சந்திராதித்தர்வரை நடத்தக் கடவோம் ஆக இந்த தருமத்திற்கு யாதொருத்தர் அகிதம் பண்ணினவர்கள் கங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற பாவத்திலே போவார்கள்.

11. ஆகவும் இவை நாட்டவர் பணியில் நாட்டுக் கணக்கு ஆற்றூர் நாட்டு வேளாளர் எழுத்து.

# 70. நல்வாளை வேட்டுவர்

இடம் : சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், பிள்ளைமதில் ஆற்றோரப் பாதையில் உள்ள கல்.

காலம் : 13ஆம் நூற்றாண்டு

செய்தி : முளையூரான அஞ்சாதகண்டன் நல்லூரில் மணலூர் கிழவன் சோழகோன் நல்வாளை வேட்டுவர் நாயன் என்பவர் கிணறு வெட்டிக் கொடுத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ முளைஊ
2. ரான அஞ்சாத க
3. ண்ட நல்ஊர்
4. கிணறு மண
5. லூர் கிழவன் சோ
6. ழகோன் நல்
7. வாளை வேட்டு
8. வந் நாயன்
9. தன்மம்.

# 71. பாத வேட்டுவர்

இடம் : சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் அருகில் பூலாம்பட்டி வரந்தரும் பெருமாள் கோயில்.

காலம் : சுந்தரபாண்டியனின் ஏழாவது ஆட்சியாண்டு; கி.பி. 1292

செய்தி : குளக்குறிச்சி ஊராளிகளில் ஒருவராகிய பாதவேட்டுவரில் பிள்ளப்பன் உடையான் தன் ஏரிப் பாசனத்தில் ஒரு தடி நிலம் வரந்தரும் பெருமாளுக்குக் கொடையாகக் கொடுத்தது கூறப்படுகிறது.

## கல்வெட்டு

1. ........................ பன்மரான திருபுவனச்ச
2. (க்கர) வத்திகள் சிறி சுந்தரபாண்டி
3. ய தேவற்கு யாண்டு ஏழாவது தெ
4. ன் பூவாணிய நாட்டில் குளக்குறிச்சி
5. யில் ஊராளிகளில் பாதவேட்டுவரில்
6. பிள்ளப்பன் உடையாநேன் என் ஏரியில்
7. வயலில் ஒரு தடி நிலம் வரந்தரும் பெரும
8. ாளுக்கு குடிநீங்கா திருவிடையாட்ட
9. மாக குடுத்தேன்.

# 72. வெங்கச்சி வேட்டுவர்

இடம் : சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், மருதூரில் உள்ள கல்.

காலம் : கி.பி. 12ஆம் நூற்றாண்டு

செய்தி : பல ஊர்களில் காணியுரிமையுடைய வெங்கச்சி வேட்டுவரில் காணியுடைய காடுவெட்டி திருவாளப் பிள்ளை அனைவரும் சேர்ந்து எழுந்தருளுவித்த தெய்வப் படிமம் பற்றிக் கூறப் படுகிறது.

## கல்வெட்டு

1. சிற்றூர் குளக்குறி
2. ச்சி படலோடு குறி
3. ச்சி அஞ்ஞூற்று ம
4. ங்கல மழபாடி
5. வடகரை நாட்டில்
6. இருப்புலி தெண்
7. ணிலி இந்த ஊர்க
8. ளில் காணி உடை
9. ய வெங்கச்சி வே
10. ட்டுவரில் காடு வெ
11. ட்டி திருவாள
12. பிள்ளை காளி
13. மருதூ
14. ரில் எ
15. ழுந்த
16. ருளப்ப
17. ண்ணி
18. னார்.

# 73. சிறுத்தலை வேட்டுவர்

இடம் : சேலம் மாவட்டம், சேலம் வட்டம், பொய்மான் கரடு பாறையில் உள்ள குழி அருகில்

காலம் : கி.பி. 12ஆம் நூற்றாண்டு

செய்தி : சிறுத்தலை வேட்டுவரில் கோடாலி மண்ணுக்கு மீண்டான் செய்த கொடை குறிக்கப்பட்டுள்ளது.

## கல்வெட்டு

1. கீழ்க்கரைப் பூந்துறை நாட்டு
2. பெருநரில் சிறுத்தலை வேட்டு
3. வன் கோடாலி மண்ணுக்
4. கு மீண்டான் தன்மம்.

# 74. சுண்டை வேட்டுவர்

இடம் : சேலம் மாவட்டம், சேலம் வட்டம், மல்லூர் அருகே மூக்குத்திபாளையம் மோழப்பாறை

காலம் : கி.பி. 13ஆம் நூற்றாண்டு

செய்தி : பெரிய விலங்கி சுண்டை வேட்டுவர் சிலம்பன் சிறியர் ஆன எழுகரை நாட்டு அக்கசாலைகள் மாத்த ஆராதபிள்ளை என்பவர் ''அக்கைசாலை கங்கை'' என்ற பெயரில் குளம் அமைத்தது கூறப்படுகிறது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ எழுகரை நாட்டு அக்கை
2. சாலை கங்கை என்று பேரிட்டு இக்கு
3. ளம் அட்டினேன் பெரியவிலங்கி
4. ஊராளியாகிய சுண்டை வேட்டுவன்
5. சிலம்பன் சிறியர் ஆன எழுக
6. ரை நாட்டு அக்கசாலைகள் மாத்
7. த ஆராத பிள்ளையேன் பெருமலை
8. க்கு எல்லை....

(அக்கசாலை - நாணயம் தயாரிக்கும் இடம்)

# 75. வேட்டுவ இளவரசர்

இடம் : தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், சின்னான்குப்பம் வேடியப்பன் நடுகல்

காலம் : கி.பி. 8ஆம் நூற்றாண்டு

செய்தி : வீர சேனாதிபதியார் என்பவர் வேட்டுவ இளவரசன் சேனையோடு போரிட்டு வீர மரணம் அடைந்தார்

## கல்வெட்டு

1. ............... விசையன் கங்க
2. ற் ........... ன்றரு மக்க
3. ள் வீரச்சேனாபதியாரு
4. பருவான வேட்டுவ இளவரைசர்
5. சேனை எறிந்து பட்டார்
6. கல்.

# 76. பூலுவர் செய்யர்

இடம் : திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், கீரனூர் வாகீசுர முடையார் கோயில் வடக்குச் சுவர்.

காலம் : வீரராசேந்திரசோழனின் பதினொன்றாவது ஆட்சியாண்டு; கி.பி. 1218

செய்தி : கீரனூர் வேட்டுவர் பூலுவர் செய்யர்களில் போத்தன் கோன் ஆன சேனாவரையன் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரரா
2. சேந்திர தேவர்க்கு யாண்டு பதினொன்றாவது
3. பொங்கலூர்க்கா நாட்டு கீரனூர் ஆளுடையார் திரு
4. வாகீசுரமுடையார்க்கு சந்தியா தீபம் ஒன்
5. றுக்கு துளை கழஞ்சு பொன் ஸ்ரீ பண்டாரத்து
6. க்கு ஒடுக்கினேன் இவ்வூர் பூலுவன் செய்யகளில்
7. போத்தன் கோனான சேனாவரையனேன் இப்
8. பொன் கைக்கொண்டேன் இக்காணியுடைய
9. சிவப்பிராமணன் கவுசிகன் ஆண்டபிள்ளை அரி
10. யவனான சைவகலாலயச் சக்கரவர்த்தி
11. யேன் குடங்கொடு கோயில் புகுவார் இவ்விளக்கு எரிப்பாராக
12. சந்திராதித்தவல் இது பன்மாகேசுவரர் ரட்சை.

# 77. பூலுவர் செய்யர்

இடம் : திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், கீரனூர் போலீஸ் நிலையம் அருகில் உள்ள கல்

காலம் : வீரராசேந்திர சோழனின் 14ஆம் ஆட்சியாண்டு; கி.பி.1221

செய்தி : கீரனூர் வேட்டுவர் பூலுவர் செய்யர்களில் வீமன் வீமனான அணுக்கப் பல்லவரையன் குறிக்கப் பெறுகிறார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. வீர ராசேந்திர தே
3. வர்க்கு யாண்டு பதி
4. னாலாவது பொங்க
5. லூர்க்கால் நாட்டில் கீர
6. னூரில் இருக்கும் பூலு
7. வரில் செய்யகளில் வீ
8. மன் வீமனான அணுக்
9. கப் பல்லவரையன்
10. செயகுலு தலைவர்
11. இரட்சை.

# 78. வேட்டுவ அதியரையர்

இடம் : திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், அய்த்தாம்பாளையம் வேடியப்பன் கோயில்

காலம் : பரகேசரியின் நான்காம் ஆட்சியாண்டு; கி.பி. 911

செய்தி : வேட்டுவ அதியரையர் ஆளும் மேற்கோவலூர் நாட்டைச் சேர்ந்த அளவிப்பாடியில் வாழும் ஆந்தை பொன்னி என்பானின் மகன் மோடையன் பகைவர் கவர்ந்த ஆநிரைகளை மீட்டு வீரமரணம் அடைந்தான். அவனுக்கு நடுகல் நடப்பட்டுள்ளது.

## கல்வெட்டு

1. கோப்பரகேசரி பன்மர்க்
2. கு யாண்டு நான்காவது வாண
3. கோரையர் வேட்டுவதியரை
4. யராள மேற்கோவலூர் நாட்டு
5. அளவிப்பாடி உடைய ஆந்தை பொ
6. ன்னி மகன் மோடையன் தொறு மீட்டு
7. ப் பட்டான் கல்.

# 79. வேட்டுவ ஐயன்

இடம் : திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், கருங்காலிப் பாடிப்பட்டி வேடியப்பன் கோயில்.

காலம் : கி.பி. 10ஆம் நூற்றாண்டு

செய்தி : தென் வேணாட்டு மேலைக் கருங்காலிப்பாடியை சிலகில்கா வேட்டுவையன் நிர்வாகம் செய்தார். அவருடைய அடியான் பன்றயன் புளியன் ஊர் காக்கும் போரில் வீர மரணம் அடைந்தான். அவனுக்கு நடுகல் எடுக்கப்பட்டது.

## கல்வெட்டு

1. தென் வேணாட்டு மேலைக் கரு
2. ங்காலிப்பாடி சிலகில்கா வேட்டுவைய
3. ன் அடியேன் பன்றயன் புளியனேன்
4. ஊரழியப் போகே
5. னென்று பட்டான்.

# 80. வெண்மறுக்கோட்டு வேட்டுவர்

இடம் : திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், தாழையூத்து வேடியப்பன் கோயில்.

காலம் : நந்திவர்மனின் இரண்டாம் ஆட்சியாண்டு; கி.பி. 8ஆம் நூற்றாண்டு

செய்தி : வேணாட்டு வெண்மறுக்கோட்டு வேட்டுவர் தாழையூரில் ஆநிரைகளைக் கவர்ந்தபோது தாழையூரைச் சேர்ந்த வண்ணக்கன் கண்ணயனார் ஆநிரைகளை மீட்டு வீர மரணம் அடைந்தார். அவருக்கு நடுகல் எடுக்கப்பட்டுள்ளது.

## கல்வெட்டு

1. கோவிசைய நந்திபன்ம
2. ரையர்க்கு யாண்டு இரண்டாவ
3. து ஊணமிறையார் வேணாடாள வெண்
4. மறுக்கோட்டு வேட்டுவர் தாழைஊர்
5. தொறுக் கொ
6. ண்ட நான்று தா
7. ழைஊருடைய
8. வண்ணக்கன் கண்ண
9. யனார் தொறு
10. மீட்டு பட்
11. டார்.

# 81. இரும்புளை வேட்டுவர்

இடம் : நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், குட்டலாம் பாறை எனுமிடத்தில் உள்ள பாறை.

காலம் : சேந்தமங்கலம் இராமச்சந்திர நாயக்கர் காலம்; கி.பி. 1645

செய்தி : இராமச்சந்திர நாயக்கர் சொல்ல வாழவந்தி இரும்புளை வேட்டுவர் வடசேரி ஆறங்காடி நயறலியார் குளம் ஒன்றைப் புதியதாக அமைத்தார். இக்குளம் சருவநாயகர் என்னும் சிவன் கோயிலுக்காக அமைக்கப்பட்டிருக்கலாம்.

## *கல்வெட்டு*

1. பார்த்திப வருஷம் தை மாதம் 10ல்
2. ஸ்ரீ மது இராமச்சந்திர நாயக்கரய்ய
3. னவர்கள் காலத்தில் வாழவந்தியில்
4. ஔகுபாறை சறுவநாய.......
5. குளம் காடு கொண்டு ..........
6. கரையில் அதுக்கு
7. இந்தக்குளம் இராமச்சந்திர
8. நாயக்கரய்யனவர்கள்
9. கட்டுவிக்கச் சொல்லுகையில்
10. வாழவந்தியில் இருக்கும் வேட்டுவரில்
11. இரும்புளை வேட்டுவர்
12. வடசேரி ஆறங்காடி நய
13. றலியார் நவமாகக் கட்டு
14. வித்தார்.

# 82. குன்னம் வேட்டுவர்

இடம் : நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், இராச பாளையம் அப்பச்சி கோயில் அருகில் பாறை

காலம் : பிரசோத்பத்தி வருடம்; 16ஆம் நூற்றாண்டு

செய்தி : தந்தை குன்னத்தூர் குன்னம் வேட்டுவர் ஆவுடைக் கவுண்டர் போரில் இறந்ததற்காக மகன் வட்டமலைக்கவுண்டர் எடுத்த நடுகல்.

## கல்வெட்டு

1. பிரசோற்பதி வரு
2. ஷம் ஆவணிமாதம் 5 தேதி
3. குன்னத்தூர் கிறாம
4. த்திலிருக்கும் குன்ன
5. ம் வேட்டுவரில் பெரிய
6. கவுண்டன் மகன்
7. ஆவுடைக் கவுண்ட
8. ன் கருகஞ் சண்டையில்
9. பட்டதுக்கு அவன் மகன் வட்ட
10. மலைக் கவுண்டன் உபையம்

# 83. கரைய வேட்டுவர்

இடம் : நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கொக்கராயன் பேட்டை பிரமீசுரமுடையார் கோயில்.

காலம் : இராசகேசரி; கி.பி. 10ஆம் நூற்றாண்டு

செய்தி : திருவகழிமங்கலம் கரைய வேட்டுவர் காளிப்பிடாரன் ஆன கரைய வேளான் பகைவர் கவர்ந்த ஊர் மாடுகளை மீட்டார். அதற்காக அவருக்கு நிலம் கொடையாக அளிக்கப்பட்டது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோ
2. விராசகேசரி ப
3. ந்மர்க்கு செல்லா
4. நின்ற யாண்டு
5. ஆறாவது திருவ
6. கழி மங்கலத்
7. தில் சபையே
8. ாம் மேற்படி ஊ
9. ர்யிருக்கும் கரை
10. ய வேட்டுவ
11. ந் காளி பிடாரநாந
12. கரைய வேளானுக்கு மாடு
13. மீட்டதுக்கு சிற
14. ப்பு செய்த நிலமா
15. வது வெள்ள
16. ல் மயிலாடி அ
17. ரைக்குத் தெக்கு
18. ம் கரை இட்டேரிக்
19. கும் மேக்கும் சி
20. றுக்கன் நஞ்செ
21. ய் அறிதலுக்கு
22. வடக்கும் ம
23. டைவ காட்டறித
24. லுக்கு கிழக்கு
25. ம் திருவகழி ம
26. ங்கலத்து ச
27. பையோம் க
28. ரைய வேளா
29. னுக்கு நிலம்
30. அட்டிக் குடுத்தோ
31. ம்.

# 84. பாண்டிய வேட்டுவர்

இடம் : நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், பருத்திப் பள்ளி சீகாழிநாதர் கோயில்.

காலம் : வீரராசேந்திர சோழனின் 23ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1230

செய்தி : பருத்திப்பள்ளி ஊராளி பாண்டிய வேட்டுவரில் அதியமான் நடுவில் நங்கன் திருக்கோயிலைப் புதுப்பித்தார்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்க வீர
2. ராசேந்திர தேவற்கு யாண்டு 23 ஆ
3. வது நாடாழ்வார் நாட்டுப் பருத்திப் பள்ளி தேவகோ
4. யில் திருக்கற்றளி பொதுக்கினேன் பருத்திப்
5. பள்ளியூராளி பாண்டிய வேட்டுவரில் அதி
6. யமான் நடுவில் நங்கனேன்.

(பொதுக்குதல் - உள்ள கற்களை மட்டும் பயன்படுத்தித் திருப்பணி செய்தல்

புதுக்குதல் - புதிய கற்களையும் பயன்படுத்தித் திருப்பணி செய்தல்.)

(தகவல் - காரைக்குடி அறிஞர் சா. கணேசன்).

# 85. புல்லை வேட்டுவர்

இடம் : நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், ஏழுர் பிள்ளையார் கோயில்

காலம் : கி.பி. 13ஆம் நூற்றாண்டு

செய்தி : திருப்பணியின் போது புல்லை வேட்டுவர்களில் கூத்தாடுந் தேவன் இருங்கோளனான வலங்கை மீகாமன் தூண் கொடுத்ததும், வளர்ந்த அம்மத திருவநாடாழ்வானான வீரசிங்கன் செய்த திருப்பணிகளும் கூறப்படுகிறது.

## *முதல் தூண் கல்வெட்டு*

1. ஸ்வஸ்திஸ்ரீ வடகரையாற்றூர்
2. புல்லை வேட்டுவன் கூத்தாடுந்
3. தேவன் இருங்கோ
4. ளநான வலங்கை
5. மீகாமந் தம்மம் இ
6. க்கால்,

# 86. இரண்டாம் தூண் கல்வெட்டு

1. பெருந்திரு வாசலும் கட்டிடக் கல்லும் போதிகையும் உத்தரமும் செய்வித்தார்
2. வடகரையாற்றூர் புல்லை வேட்டுவன் வளர்ந்த அம்மத திருவநாடாழ்வானான வீரசிங்கன் தன்மம்.

# 87. புல்லை வேட்டுவர்

இடம் : நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், அரங்கநாதப் பெருமாள் கோயில்.

காலம் : இராசராச தேவனின் 30ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1246

செய்தி : புல்லைவேட்டுவர் நற்காவிரி நாடாழ்வான் தேசி ஆளப் பிறந்தான் மும்முடிச் சோழச் சக்கரவர்த்தி ஆன அரங்கராயர் வேதநாயகப் பெருமாளைப் பிரதிட்டை செய்து அளித்த கொடை கூறப்படுகிறது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ இராசராச தேவற்கு யாண்டு 30வது புல்லை வேட்டு
2. வரில் நற்காவிரி நாடாழ்வான் தேசி ஆளப்பிறந்தான் மும்முடி சோழச் சக்கரவர்த்தி ஆன அரங்கராயரே
3. ந் நான் உகந்தருளிவித்த வேதநாயகப் பெருமாளுக்குப் பவித்திர மாணிக்கத்தில் புதுக்குளத்தில் வடக்....
4. ரம்பில் வழிநடை காணியில் தன்ம சங்காதி கோலால் ¼ இக்காலுக்கு.....

# 88. முளை வேட்டுவர்

இடம் : நாமக்கல் மாவட்டம், வேலகவுண்டம்பாளையம் தனிக்கல்

காலம் : கி.பி. 1653

செய்தி : அல்லாள இளையா நாயக்கர் கபிலமலைக் குழந்தை வேலாயுத சுவாமிக்கு வெங்கரை என்ற ஊரைக் கொடையாகக் கொடுத்த விபரம் கூறப்படுகிறது.

## கல்வெட்டு

1. வெங்கரை விட்டது
2. விசைய
3. வருஷம்
4. அற்பிசை மாதம்
5. இளை
6. யனாயக்
7. கா் குழ
8. ந்தை
9. வேல
10. ற்கு
11. இந்தப் புண்ணிய
12. த்தை விக்கிந
13. ம் பண்ணின
14. வா் காராம் பசுவை
15. கெங்கைக் கரை
16. யிலே கொன்ற
17. பாவத்திலே போகவும்
18. அதிகாரன்

# 89. வேட்டுவர் அந்திஊரன் நடுகல்

இடம் : நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், திருச்செங்கோடு நடுகல்.

காலம் : சுந்தரபாண்டியனின் 5ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1290

செய்தி : வடகரை நாட்டு உலகடத்தில் வேட்டுவரில் அந்தியூரனுக்காக நடுகல் எடுக்கப்பட்டுள்ளது. நடுகல் எடுத்தவர் வடகரை நாட்டு உரகடம் கச்சதி கண்ணையன் என்பவர்

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய
2. தேவர்க்கு யாண்டு 6வது
3. வடகரை நாட்டு உரகடங் கச்சதி
4. கண்ணையன் வேட்டுவரில்
5. அந்தி ஊரன்......

(இந்நடுகல் சேலம் அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது)

# 90. வெங்கை வேட்டுவர்

இடம் : நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம், கைலாசநாதர் கோயில் அன்னபூரணி அம்மன் சன்னதி.

காலம் : சுந்தரபாண்டியன், 13ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1298.

செய்தி : வெங்கை வேட்டுவர் என்ற குறிப்பு மட்டும் உள்ளது.

## கல்வெட்டு

1. சக ஆண்டு 1220 திரிபுவனச் சக்கரவர்த்
2. திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு
3. யாண்டு 13வது வடகரை நாட்டு
4. ....... வெங்கை வேட்டுவர் ........

# 91. வேட்டுவர் உத்தமர் பொத்தன்

இடம் : திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், பூனூத்து ஊருக்குக் கிழக்கே உள்ள கல் செக்கு.

காலம் : கி.பி. 11ஆம் நூற்றாண்டு

செய்தி : துலையூர் நிட்சேரிப் புறக்குடி வேட்டுவன், உத்தமன் பொத்தன், பொத்தன் வீமன், பொத்திநிச்சி ஆகியோர் செய்து வைத்த செக்கு, உரல் பற்றிக் கூறுகிறது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ துலையூரந் நிட்சேரிப் புறகுடி வேட்டுவன்
   உத்தமன் பொத்தன் ............ பொத்தன் வீமனும் பொத்தி
   நிச்சியுமிட்ட செக்கு
2. பொத்தி நிச்சியகண்குறு .....
3. ஸ்வஸ்திஸ்ரீ பொத்தி நிச்சி உரல்.

# 92. வேட்டுவர் சாமி நடுகல்

இடம் : விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், எடுத்தவாய் நத்தம் ஆத்துக்காடு

காலம் : கி.பி. 10ஆம் நூற்றாண்டு

செய்தி : கம்பாடரு மகன் சாமி என்ற வேட்டுவகுல வீரர் ஆநிரை கவரும் போரில் இறந்ததற்காக எடுக்கப்பட்ட நினைவுக்கல் (நடுகல்).

## கல்வெட்டு

1. கடை வெண்
2. மலைக்கோட்
3. டு வேட்டுவரு இரு
4. வாய் தொறுக் கொ
5. ளுட் பட்டான் கம்பநாட்
6. டரு மகன் சாமி கல்

# செப்பேடு பட்டயங்கள்

பழங்காலத்தில் எழுதுவதற்கு உலோகங்களையும் பயன் படுத்தினர். பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் முதலிய பல உலோகங்கள் எழுதப் பயன்பட்டாலும் செம்பின் பயன்பாடே மிகுதியாகும்.

செம்பில் எழுதப்பட்டவைகளைச் செப்பேடு, பட்டயம், தாமிர சாசனம், தாமிரப் பட்டயம், செப்புப் பட்டயம் எனப் பல்வேறு பெயர்களில் அழைப்பர். வடமொழியில் இதனைப் 'பட்டிகா' என்பர். அதற்குப் பொருள் பட்டயம் என்பதாகும். கொங்கு நாட்டுச் சமூகத் தலைவர்கட்கு 'பட்டயம்' அளித்து அவர்கட்கு அதிகாரம் அளித்த காரணத்தால் அவர்கள் 'பட்டயக்காரர்' என்று அழைக்கப்பட்டனர். பின்பு அச்சொல் 'பட்டக்காரர்' எனக் கூறப்பட்டது.

பெருந்துறைச் செப்பேட்டில் ''இந்தப் பட்டயம் எழுதினவன் பெருந்துறைக் காணியாட்சி வெங்குளூறு சித்தகொல்லன் ஆசாரி'' என்று எழுதப்பட்டுள்ளது. காலிங்கராயன் தொடர்பான செப்பேட்டில் ''ஆனைமலைக் காளியண்ணன் கையில் அம்மன் சாதனப் பட்டயம் கொடுத்தது'' என்ற தொடர் காணப்படுகிறது.

எழுத வேண்டிய செய்திகட்கு ஏற்ப செப்பேட்டைத் தயார் செய்து அதைத் தட்டி சமம் ஆக்கிச் சதுரமாகவோ, நீள்சதுரமாகவோ வெட்டி எழுத வேண்டிய செய்தியை ''பளிச்'' என்று தெரியும் பொருளில் முதலில் எழுதுவர். பின் அதன்மீது கூர்மையான இரும்பு உளிகொண்டு வெட்டி எழுத்துக்களைப் பொறிப்பர். எழுத்துக்களைக் கொத்துதல், வெட்டுதல், அடித்தல் என்று கூறுவர்.

சில செப்பேடுகளில் ''இந்தச் செப்பேட்டை எழுதியவன்'' ''இந்தச் செப்பேட்டைக் கொத்தியவன்'' என இருபெயர்களும் கூறப்படுவது உண்டு. ஒருவரே எழுதி அதைக் கொத்துவதும் உண்டு.

"ஈரோடு நாக ஆசாரி மகன் அளகாத்திரி ஆசாரி கயி எழுதி அடிச்சது" என்று ஒரு செப்பேட்டில் காணப்படுகிறது. "இந்தப் பட்டயம் எழுதிக் கொத்தியவன் பெருந்துறைக் காணியாட்சி சித்த கொல்ல ஆசாரி" என்பது மற்றோர் செப்பேட்டு வாசகம்.

செப்பேடோ, கல்வெட்டோ அனைத்துக்குரிய செய்திகளும் முதலில் ஓலையில்தான் எழுதப்பட்டன. பின் கல்லிலும், உரியவர்கள் அனுபவிக்கக் கொடுக்கத் தேவை ஏற்பட்டால் செப்பேட்டிலும் பொறிக்கப்பட்டன. "இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு கல்லிலும், செம்பிலும் பொறித்துக் கொள்ளுக" என்பது ஒரு கல்வெட்டுத் தொடர். செப்பேடுகள் பெரும்பாலும் தனியார் வசம் இருப்பதால் இப்போது கிடைத்துள்ள செப்பேடுகளைக் காட்டிலும், கிடைக்க வேண்டிய செப்பேடுகள் மிகுதியாக இருக்கக் கூடும்.

செப்பேடுகள் வைத்திருப்போருக்கு அவை கூறும் தகவல் என்ன என்பது தெரிவதில்லை. சிலர் அதில் ஏதோ புதையல் இரகசியம் உள்ளது என நம்புகின்றனர். வேறு சிலர் அந்தச் செப்பேட்டைப் பிறரிடம் காட்டினால் கோயில், நிலம், சொத்து இவை போன்று ஏதேனும் ஒன்றில் தங்கள் பரம்பரை உரிமை பறிபோய் விடும் என்று எண்ணு கின்றனர். அதனால் அதைப் பிறரிடம் காட்ட முன்வருவதில்லை.

மற்றும் சிலர் செப்பேடுகளின் வரலாற்று முக்கியத்துவம் என்னவென்று தெரியாமல் அவற்றை ஏதோ உலோகத் தகடு என்று கருதி பழைய பாத்திர வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு விற்று விடுகின்றனர். அவை பாத்திரங்களாக உருமாறி விடுகின்றன. அண்மையில் சில வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செப்பேடுகள் பழைய பாத்திரக் கடைகளிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

கொங்கு நாட்டில் கிராமப்புறங்களில் செம்புத்தகடுகள் கிடைப்பது மிக அரிதாக இருந்தமையால் இலக்கியம், கணக்குகள் எழுதப் பயன்படுத்திய பனை ஓலைகளிலேயே பட்டயங்களை எழுதினர். அவ்வாறான ஓலைப் பட்டயங்கள் கொங்கு நாட்டில் மிகுதியாகும். கல்வெட்டு செப்பேடுகள் போல ஓலைப் பட்டயங் களும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும்.

வேட்டுவர் சமூகம் பற்றிய ஆவணத் தொகுப்பான இந்நூலில் பத்து ஆவணங்கள் செப்பேடுகளில் எழுதப்பட்டவையாகும். நான்கு ஆவணங்கள் 19ஆம் நூற்றாண்டில் தமிழக ஆவணங்களை முதலில் தொகுக்க முற்பட்ட மெக்கன்சி ஆவணங்களில் உள்ளவைகளாகும். அவை நான்கும் தமிழக அரசின் பழஞ்சுவடி நூலகத்தில் உள்ளன.

18 ஆவணங்கள் இத்தலைப்பில் தொகுத்து அளிக்கப்பட்டு உள்ளன. அல்லாள இளையா நாயக்கர் முயற்சியால் திருச்செங்கோடு, கபிலமலை ஆகிய இடங்களில் மடங்கள் ஏற்படுத்தியதை இரு செப்பேடுகள் கூறுகின்றன. அறச்சலூருக் காணியைச் சாந்தப்படை வேட்டுவர்களிடம் இருந்து கரையவேட்டுவர் பெற்ற விபரத்தையும் அங்கு கோயில் திருப்பணி செய்ததையும் ஊசிப்பாளையம் செப்பேடு கூறுகிறது. நல்லூரில் மின்னவேட்டுவர் கோயில் கட்டியதை ஒரு ஓலைப்பட்டயம் தெரிவிக்கிறது.

பேரூரில் வேட்டுவர் மடம் கட்டியதையும், புரவிபாளையம் கோப்பண கவுண்டர் மும்முடிப்பட்டம் பெற்றதையும் பேரூர்ச் செப்பேட்டின் மூலம் அறிகின்றோம். தென்னிலை, ஆத்தூர் செப்பேடுகளின் மூலம் வேட்டுவர் சமூகத்திற்கு உரிமையுடையதாக இருந்த பல ஊர்க்கோயில்கள், நிர்வாகம், காணியாட்சி வேளாளர் கட்கு மாறியதை அறிகின்றோம்.

புரவிபாளையம், பொருளூர், காக்காவாடி பாளையங்களின் தோற்றம், வளர்ச்சி, பரம்பரை பற்றி ஐந்து ஆவணங்கள் கூறுகின்றன. காளகஸ்திமலைப் பகுதி வேட்டுவர் சமூகத்தினர் கொங்கு நாட்டில் குடியேறியதை அஞ்சுசாதி வரலாறு கூறுகிறது. தங்களுக்குப் போரில் வெற்றி தேடித்தந்த நாடார் சமுதாயத்தைச் சேர்ந்த நால்வருக்கு வேட்டுவர் தலைவர் செய்த சிறப்புகளைக் கோசணம் செப்பேடு மூலம் அறிகின்றோம்.

திருச்செங்கோட்டிற்கு அல்லாள இளையா நாயக்கர், அவர் மகன், வேட்டுவர் சமூகத்தினர் செய்த பல திருப்பணிகள் திருச் செங்கோட்டுத் திருப்பணி மாலையில் கூறப்படுகிறது. கொங்கு நாட்டுப் பிறசமூகச் செப்பேடு பட்டயங்களில் குறிப்பாகக் கொங்கு

வேளாளர்களின் பல சமூக ஒப்பந்தங்களிலும் பல்வேறு நிகழ்வு களிலும் வேட்டுவர் சமூகத்தார் சிறப்பாக இடம் பெற்றதைப் பல செப்பேடு பட்டயங்கள் கூறுவது இறுதிப் பகுதியில் விளக்கம் பெற்றுள்ளது.

மூவேந்தர்கள் கொங்கு நாட்டில் ஏற்படுத்திய 36 ஊர்களில் முப்பது ஊர்களுக்கு வேட்டுவ சமூகத்தினர் ஊர், கோட்டை அதிகாரத்திற்கு நியமிக்கப்பட்டதைச் சோழன் பூர்வ பட்டயம் கூறுகிறது.

திங்களூர் தொண்டி நாடகம், கொங்கு மண்டல சதகம், கபில மலைக் கோவை, கோப்பணன் கோவை, காணிப்பாடல்கள் ஆகிய வற்றில் வேட்டுவர் சமூகம் பற்றிய குறிப்புக்கள் வரும் இடங்கள் இறுதித் தலைப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. வேட்டுவர் சமூகப் பிரிவுகள் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன. செப்பேடு பட்டயங்கள் பற்றிய விரிவான விளக்கம் அவற்றின் முன்னுரைகளில் கொடுக்கப் பட்டுள்ளன.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அல்லாள இளையான் செப்பேடு | 129 |
| 2. | ஊசிப்பாளையம் செப்பேடு | 135 |
| 3. | நல்லூர்ப் பட்டயம் | 138 |
| 4. | பேரூர்ச் செப்பேடு | 140 |
| 5. | தென்னிலைச் செப்பேடு - 1 | 144 |
| 6. | தென்னிலைச் செப்பேடு - 2 | 158 |
| 7. | புரவிபாளையம் கோப்பணமன்றாடியார் வமிசாவளி | 164 |
| 8. | கோப்பண மன்றாடியார் திருப்பணி செப்பேடு | 175 |
| 9. | கோப்பண மன்றாடியார் கொடைச் செப்பேடு | 182 |
| 10. | பொருளூர் நல்லபெரியாக் கவுண்டர் வமிசாவளி | 184 |
| 11. | காக்காவாடி வெங்கடாசல நல்லண கவுண்டர் வமிசாவளி | 189 |
| 12. | கபிலமலைச் செப்பேடு | 194 |
| 13. | அஞ்சுசாதி வரலாறு | 203 |
| 14. | ஆத்தூர்ச் செப்பேடு | 209 |
| 15. | கோசணம் செப்பேடு | 221 |
| 16. | திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை | 224 |
| 17. | கொங்கு வரலாற்று ஆவணங்களில் வேட்டுவர் சமூகம் | 227 |
| 18. | சோழன் பூர்வ பட்டயம் | 231 |

19. பிற்சேர்க்கை

(அ) திங்களூர் நொண்டி நாடகம் 235

(ஆ) கொங்கு மண்டல சதகம் 236

(இ) குறவஞ்சி, கோவை இலக்கியங்கள் 236

(ஈ) காணிப்பாடல்கள் 237

(உ) மணலூர் நாட்டினர் 239

(ஊ) சமூகப் பிரிவுகள் 240

(எ) வேட்டுவர் கலிவெண்பா 243

(ஏ) கல்வெட்டுகள் ஒரு பார்வை 251

(ஐ) படங்கள் 253

# 1.அல்லாள இளையான் செப்பேடு

1584ஆம் ஆண்டு இச்செப்பேடு கொடையளிக்கப்பட்டு வெட்டப்பட்டது. பாடலுடன் தொடங்கும் இச்செப்பேடு வேலவர் மெய்க்கீர்த்தியை முதற்கண் விரிவாகக் கூறுகிறது. அடுத்து விசயநகர அரசர் புகழ்ச்சிப் பகுதி உள்ளது. தொடர்ச்சியாக திருச்செங்கோட்டுப் புராணச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

காவலவர், பூவலவர், மாவலவர், வேடர், வேட்டுவர் என்ற ஐந்து பிரிவு வேட்டுவர்கள் கண்ணப்ப நாயனார் வழித் தோன்றியவர்கள். அவர்களுக்குப் பல விருதுப் பெயர்கள் உள்ளன. வேளாண்மையில் ஈடுபட்டு வேட்டுவர்கள் மேழிக் கொடியும் படைத்துக் கொண்டனர்.

24 நாட்டு வேட்டுவப் பெருமக்கள் பலர் பெயர்கள் கூறப்படு கின்றன. ஊராளும் பொறுப்பு அல்லாள இளையானுக்கு இருந்தது. அவருக்கு நாயக்கர் பட்டமும் உண்டு.

வேட்டுவகுலப் பெருமக்கள் காமாட்சித் தம்பிரான் என்பவருக்கு மடம் ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். அதன் செலவுகட்கு யார் யார் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்யப் பட்டது. இப்பணி தொடர்ந்து நடைபெற வேண்டும் என்ற தம் விருப்பத்தையும் செப்பேட்டில் தெரிவித்துள்ளனர். இறுதியில் கொடைகளைக் காப்பது பற்றிய அழகிய அறுசீர் விருத்தப்பாடல் ஒன்று உள்ளது.

## *மூலம்*

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வென்திரு நீரு சிறக்கவே

அருளா லாதிநந்திகேசுபர னனுக்கிறகித்துக் கிறேதா திரேதா துவாபர கலியுக கிறேதா யுகத்துக்கு விறுமா அற்சனை பண்ணுகையில் விறும்மகிரியும் விறும தீர்த்தமும் விறுமீசுரருமானவர், திறேதா யுகத்துக்கு விஷ்டுணு அர்ச்சனை பண்ணுகையில் விஷ்ட்டுணுகிரியும் விஷ்ட்டுணுதீற்தமும் விஷ்ட்டுணுயீசுவரருமானவர், துவாபர யுகத்தில் துற்கை அற்சனை பண்ணுகையில் துற்கைகிரியும் துர்கதீற்தமும் துற்கீசுரருமானவர், கலியுகத்துக்கு நாகம் அற்சனை பண்ணுகையில் னாககிரியும் னாக தீற்த்தமும் னாகீசுபரருமானவர்,

யிப்படி அனேகஞ் சதுர்யுகம் பூசை கொண்டருளிய தேவர் தேவன் தெய்வசிகாமணி தேவதேவோர்த்தமந் தேவதாசார பூமன் பத்தர்ப்பிரியன் பத்தவத்சலன் பாற்பதிவல்லவன் பார்பதிமனோகரன் பார்பதினாயகன் முத்திக்குவித்து முக்கணீசுபர னின்றகோல மழகியநிமலன் நேரமொரு பஞ்சவற்ன்னப் பிரகாசன் திருமுகவோவன் தெண்டாயுத அஷ்த்தன் சம்புத்தீவில்த் திராவிட தேசத்தில் தொண்ட மண்டலத்தில் காஞ்சி மானகரில் திருக்கம்பை யாத்திலே பார்பதா தேவி அற்தபாகம் பெறவேண்டி அரிய தபசு பன்னுகையில் அப்போது காட்சி கொடுத்தருளிய அற்தனாரீசுபரருடைய தம்பிரானார் அவருடைய ஸ்ரீமன் குமாரராகிய விப்பிறப்பிரியந் விசுவமூற்திச் சுவபாலன் சறவனபவன் குக்குடத்துவசன் குங்குமவண்ணன் கெவுரி திருமகன் கணபதிசகோதரன் சுரலோக லட்சாதி லட்சம் தேவர் சிறைமீட்ட தேவர் சேனாபதி யீகரைப் பகட்டரக்கர் பட்டிடப் பதைக்க வீறு கொக்கரித்து மறக்கனீத்து குக்குடத் துவசத்தினன் சக்கிற வட்டமோட்டிரட்டித் தாவிச் சிறகாலடிக்கும் தோகைப் பிறதாப துரங்கன் வள்ளி தெவியானை மனோகரன் சிறுட்டிக்கும் விறுமனை சிரசு திண்டாடக் குடுமியை நெட்டை வாங்குங் குமார கண்டீரவன் துஷ்ட சமணரை வெட்டிக் கழுமிசை வைத்த சுப்பிறமண்ணிய சுவாமியார் திருவுளப் படிக்கி,

சவ்விதிரி மன் மகாமண்டலேசுபறன் மேதினி மீசுர கண்டன் ஒருகுடைக்கீ ளுலகமுழு தாண்டவன் கண்டனாடு கொண்டு கொண்டனாடு கொடாதான் எம்மண்டலமுந் திறைகொண்டருளிய ராசாதிராசன் ராசபறமேசுபரன் ராசமாத்தாண்டன் ராசாக்கள் தம்பிரான் கண்டர்கண்டன் கட்டாரிச் சாளுவன் துட்டர்கண்டன் துட்டர்மோகந் தவிழ்த்தோன் துஷ்ட்டநெட்டூரன் பாஷைக்குத் தப்புவராய கண்டன்

மூவராய கண்டன் ஒட்டிய சுரதானன் துலுக்கர்தள விபாடன் அசுவபதி கசபதி நரபதி நவகோடி நாராயணன் பூறுவ தெஷ்சன பஷ்சிம உத்திர சத்த சமுத்திராதிபதி ராசநாராயணன் ராஜகேசரி ராசபுயங்கன் ராசமனோபயங்கரன் ராசகோலாகலன் ரணமுக சுத்தவீரன் அறிவுக்கு அகத்தியந் பொறுமைக்குத் தன்மன் புகளுக்குக் குமணன் கொடைக்குக் கருணன் சத்தியத்துக்கு அரிச்சந்திரன் மறத்துக்கு வன்னியன் அழகுக்கு மன்மதன் வாழுக்கு அபிமன் பரிக்கு நகுலன் கரிக்கு உதையன் வில்லுக்கு விசையன் மல்லுக்கு வீமன் பதினெட்டுப் பெருமையும் பார சங்கிலியும் படைத்த ராசதேவேந்திரன் அஷ்ட்ட போக துரந்திரன் சேரன் சோழ பாண்டியப் பிறதிஷ்டாசாரியன் சத்த சாகரமும் மொரு குடைக்கீழுலகமுழுதாண்டவன் ஸ்ரீ கட்டாரிச் சாழுவன் உத்துங்கராயர் கட்டாரிராயர் விருப்பாட்சிராயர் நரசிங்கராயர் பிரவிட தேவமகாராயர் தேவமல்லிகாஷ்சுணராயர் சதாசிவதேவ மகாராயர் வீரவசந்தராயர் ராமதேவராயர் ஆனைக்கொந்தி வேங்கிடபதிராயர் சீரங்கராயர் பிரிதிவி ராச்சியபாரம் பண்ணியருளா நின்ற விக்கிறமாறகப் பிறதாப வீறலட்சுமி விசையலட்சுமி வாசரான விசுவனாத னாயக்கர் வீரப்பனாயக்கரய்யனவர்கள் னாழில்,

விசையநகரம் பெநுங்கொண்டை, சந்திரகிரி, திருப்பதி, திருக் காளத்தி, காஞ்சிபுறம், படைவீடு, திருவணாமலை, தேவக்காபுரம், செஞ்சி, வளுதிலன்பட்டுச்சாவடி, தஞ்சாவூர், திருவாரூர், திருவிடை மருதூர், திருக்குடந்தை, திருவையாரு, சீரங்கம், திருச்சிராபழி, திருவானைக்காவல், மதுரைக் கடுக்காடு, ராமேசுவரம், கொங்கு தாராபுரம், மலையாளம், கொச்சி, ஈழ யார்ப்பாணப் பட்டண மற்று முண்டாகிய அன்பத்தாறு தேசம் பதிநெட்டு யுகமாவது முதலாகிய யுகம் அனந்தியனென்கிர யுகம் அந்த யுகத்தில் பரந் தோன்றிச்சு. ரண்டாவது அற்புதனென்னும் யுகத்தில் ஆகாசம் தோன்றிச்சு. மூன்றாவது தீவாரசனென்னும் யுகத்தில் சந்திராதித்தர் தோன்றினர். னாலாவது திராசனென்னும் யுகத்தில் காற்றுத் தோன்றிற்றது. அஞ்சாவது தண்டசனென்னும் யுகத்தில் நெருப்பு தோன்றிற்றது. ஆறாவது வின்னசனென்னும் யுகத்தில் மழை தோன்றிச்சு. ஏளாவது வினாயகனென்னும் யுகத்தில் விளைவு தோன்றித்தது. யெட்டாவது அயபுத னென்னும் யுகத்தில் வித்தை தோன்றிச்சு. ஒன்பதாவது

மையுதனென்னும் யுகத்தில் வேதம் தோன்றித்து. பத்தாவது மண மீரணனெனும் யுகத்தில் தன்மந் தோன்றிச்சு. பதினோராவது மணியாரணன் என்னும் யுகத்தில் சோதிரிசம் தோன்றித்து. பதிமூன்றாவது அலங்கித னென்னும் யுகத்தில் சந்திராதித்தர் பொருந்தினர். பதினாலாவது அரவிந்தனென்னும் யுகத்தில் மற்ச கூற்மம் பொருந்தினர். பதினஞ் சாவது கிறேதா யுகத்தில் தேவாசுரர் பொருந்தினர். பதினாறாவது திறேதா யுகத்தில் இராமர் பொருந்தினர். பதினேழாவது துவாபுர யுகத்தில் தன்மர் திரியோதனர் பொருந்தினர். பதிநெட்டாவது கலியுகத்தில் கலியன் பிறந்த யின்னாள் வரையும்,

னாலு வேதமும் ஆறு சாத்திரமும் பதிநெட்டு புராணமும் யிருபத்தெட்டுத் தேய வியாகமும் முப்பத்திரண்டு அறமும் அறுவத்துனாலு கலைக்கியானமும் உள்சமையமாறு பிறசமையமாறு விழங்கப்படாநின்ற சோம சூரிய வங்கிஷ மானவந் அமுதிராசாச் சூரன் மகன் ஆதினாறாயணந் மகன் விறுமர் விறுமர் மகன் வீறரு மகன் மாரீசந் மகன் காசிபன் மகன் ஆதித்தன் மகன் சினியன் மகன் நயதிரியன் மகந் போசவாகனந் மகன் துந்துமி ராசன் மகன் திறிச்சங்கு மகன் அறிச்சந்திரன் மகன் லோபிதாவிசனன் மகன் நளன் மகன் இருமூச்சியந் மகன் பொன்னுருவி மகன் பரிதாபி மகன் அமிற்தன் மகன் அனந்தராசன் மகன் மத்துக்குரிச்சினன் மகன் சேவின்திருயுரு மகன் ராகு மகன் மீரேசன் மகன் அரன் மகன் திசரதன் மகன் ராமர் மகன் லவனன் மகன் விருது மகன் நீளகோபாலன் மகன் நந்தகோபாலன் மகன் வாசுதேவன் மகன் கிருஷ்ணறாயர் மகன் மன்மதன் தலைமுறை முப்பத்தாறும் புறத்த இன்னாள் வரைக்கும் தேவரிஷி விஷ்ணுரிஷி விறுமரிஷி தோனியே அஷ்டமாசித்தர் நவனாத சித்தர் கலியாண சித்தர் இருக்கப்படாநின்ற போமீசை மாமுனி பாதலோக மாமுனி துருவாசமுனி கண்டலாமாமுனி தவமுனி கோமுனி வனச மாமுனி கவசமாமுனி னூதமாமுனி அகத்திய மாமுனி பிறலவிச மாமுனி,

சகன் சனந்தன் சனக்குமாரீசர் சாத்தி அக்கினி தெரிசினிகள் விசுவாமுத்திர மாமுனி சேமாக்கினி மாமுனி அரவாச மாமுனி பரஞ்சோதி மாமுனி கணணாதர் விறும கணனாதர் வீரகணனாதர் சிவயோக கணனாதர் ஞான கலியாணர் அஷ்ட்டமா சித்தர் கணனாதர்

ஆந்திரமா சித்தர் கலியாணர் அதிசெய ஞானசித்தர் கலியானர் ஆகாசஞான சித்தர் கலியாணர் அம்பிறகசித்தர் கலியாணர் பிலவேச ஞான சித்தர் கலியாணர் அனுமீசர் இடைக்காடர் தவமுனி மழைமுனி வியாக்கிரபாதமுனி பதஞ்சலி மாமுனி இப்படியாக் கொத்த னாற்பத் தென்னாயிரம் இருஷிகளுக்கும் அறுபதினாயிறம் முனிவர்களும் முப்பத்தினாலாயிரம் கணனாதர்களும் னாற்பத்தினாலாயிரம் ஆதி அந்த வயிரவர்களுட ஆயிரங்கெருட காந்துறுவர்களும் முப்பத்தி முக்கோடி தேவர்களும் ஆகாச வருண நந்திவாகன ஒரு கோடி கண்ணுள்ளவர்கள் ளொரு கோடி பேர் ஆயிரங்கண் ணொரு கோடி பேர் ஈசுபரனுக்கு ஒரு னொடிப் பிறமாணம் யிப்படியாக் கொத்த ரிஷபாவாகன வேதசாத்திற புராண ஆகமம் ஆதிவேதனாகி விறை யில்லாத வித்தாகி ஞான சுரூபமாயி ஞான பரனாய சிவப்பிறகாசனாய சிற்சுரூபனாய நீடுள்ள நிற்குணனாய நிராமயமாய நிர்மலனாய துரியரத்தனாய சச்சிதானந்த சுரூபனா யறியாதவனுமா யிதர்க்கு மெட்டாதவ'னுமா யிழிந்த விடத் தனுகாதவனுமாயி மூன்று நடுவிறுதில் வியாதனுமாயி காடிக் குமாரன் கூழி கொட்ட கூகை பாசாசு தொக்கென தாளமொத்த துறிசனக் கூழை கொட்ட பாரியாய் நீடிய கச்சை கட்டயரா வேலெடுத்த யோகத்தீரன் னாககிரி வேலாதசுவாமி திருவிளத்தில்,

காவலவற் பூவலவர் மாவலவர் வேடர் வேட்டுவர் கங்கையைத் தரித்த கடவுளாற்கு எச்சிமிட்டு கண்ணையிடந்து சாத்தி முத்தி பெத்த கண்ணப்பனான பெரியோர் காளஸ்திரி மலைகாவலர் செம்பொற் சிலை கொண்டு வில்வத்திலேறியே சிவறாத்திரி கண்ட பெரியோர் சித்திரபுத்திரர் சீமைக்குடைய பெரியோர் சேவுகத்துக்கும் உடையபேர் கொங்கு தேசத்துக் குடையபேர் கொளவர்கள் கற்றவர்கள்,

கொல்லிகிரிக் குடையவர்கள், கூறிய னாடுதனிலே வாசகங் கூறி வைத்துக் கொண்ட பெரியவர்கள், வங்கக் கடலொலி கைவர வாகைமாலை யுயர்த்தோர் சித்திரமேழிக் கொடிப் படைத்த பெரியோர், வாகிருது சொன்னவறை வாயைக் கிழித்திடும் வெத்தி வாழரசர் மணவாழரெண் பெரியோர் குன்றத்தூர் துருகம் குன்னாடிக் கவுண்டர், மோரூறு பொன்ன வேட்டுவரில் கீழ்கரை பூந்துரைனாட்டில் பாண்டி கோத்திரத்தில் பேரக் கவுண்டன், வேம்பங் கோத்திரத்தில் குமர கவுண்டன், சினாக்கவுண்டர், பரமத்திச் சீமை முளை கோத்திரத்தில்

அல்லாழி யிளையான் னாயக்கர், திருமலை னாயக்கரவர்கள், னாத கவுண்டர், முத்துக்காழி கவுண்டர், தலையநாடு குன்னாடி கோத்திரத்தில் வள்ளல் கவுண்டர், மணனாடு நீலியப்ப கவுண்டர், கெழங்குனாடு திருமலை கவுண்டர், குமாரசாமி கவுண்டர், பின்னுங் கொங்கு மண்டலத்திலுள்ள வாழரச மணவாழரெலாங் கூடி,

திருச்செங்கோட்டில் கலியுக சகாற்பிதம் 4685க்கு மேல் செல்லா நின்ற ஈசுர வருஷம் வைய்யாசி மாதம் 15ஆம் தேதி பூர்ணயும் விசாக நட்செத்திரமும் பெத்த சுபதினத்தில் காமாட்சித் தம்பிரானுக்கு மடதறமம் உண்டுபண்ணிக் குடுத்தது. மடம் னாககிரியின் மேல் அற்தனாரீசுபர சுவாமியார் சன்னதிக்கு மேற்கு, விஷ்டுனு தீற்த்தத்துக்கு தெற்கு, துற்கை அம்மன் சன்னதிக்கு வடக்கு, அமரமணியார் மண்டபத்துக்கு கிழக்கு, யிது நடுவில் மடம் யிதிலிருந்து கொண்டு அற்தனாரீசுபர சுவாமி சன்னதியில் திருவிழக்கும் திருமாலை கட்டிக் கொண்டு அற்தனாரீசுபர வற்தனை பல்லக்கு பிறபுக்கு னாகரறம் பணம் 21, குதிரையேரிய பிறபுக்கு னாகறம் பணம் 5, சேறுவை காறனுக்கு னாகரம் பணம் 5, பண்ணைய குடிக்கி ஏறுக்கு கம்பு வள்ளம் 2, கலியாணத்துக்கு மாப்பிள்ளை வீடு னாகறம் பணம் பெண் வீடு னாகறம் யிந்த மேறைக்கி நடப்பிவச்சி குடுக்குறோமென்று னாங்களனைவருங் கூடி யெழிதி குடுத்த தற்ம சாசனப் பட்டையம். யிந்தப்படிக்கு சந்திராதித்த ருள்ளவறைக்கும் மலையுள்ள காலத்துக்கும் நிலையுள்ள தன்மமாயி கட்டளையிட்டது. யிந்த தற்மம் தேசஞ் சீர்மை நாடு எங்கிலுண்டாகிய வாழரசர் மணவாழருந் தற்ம பரிபாலனம் பண்ணி நடப்பிச்சி கொண்ட பேர்கள் யிந்திராதி போகமும் அனுபவிச்சு சந்திராதித்த ருள்ளவறைக்கும் சாயுச்சிய பதவியில் இருப்பார்கள். யிந்த தற்மத்துக்கு விகாதம் பண்ணின பேர் கெங்கைக்கறையிலே காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போவார்கள்.

நட்டகல் விட்ட சூலம் நீடு கல்வெட் டெல்லை
வட்டமா லயங்கள் தோறு மகதேவர் தான தற்மம்
யிட்டிடை பண்ணி மெத்த யிடஞ்சலே செய்பு வாற்க்கு
குட்டனோய் நரகந் தன்னில் குழிப்பது தின்னந் தானே
செங்கோடர் லட்சிப்பார்.

# உ. ஊசிப்பாளையம் செப்பேடு

ஈரோடு மாவட்டம் அறச்சலூர் ஊசிப்பாளையத்தில் உள்ள அறச்சாலையம்மன் கோயில் முப்பாட்டுக்காரர் வேட்டுவர் சமூக பி. ஆறுமுகக் கவுண்டர் அவர்களிடம் இச்செப்பேடு உள்ளது.

மேல்கரைப் பூந்துறை நாட்டில் ஊசிப்பாளையத்தில் சாந்தப் படை வேட்டுவர் சக்கரைக் கவுண்டர், நல்ல காளியப்ப கவுண்டர் இருவரும் வாழ்ந்து வந்தனர். அவர்கள் வீட்டில் ஒரு வெள்ளைப் பெண் இருந்தாள். அப்பெண்ணை எவரும் திருமணம் செய்து கொள்ளவில்லை.

சோழியனூர் மிளகு வியாபாரியாகிய செட்டியாருடன் பண்ணைக் கிணற்றில் தங்கியிருந்த கரைய வேட்டுவர் காளியப்ப கவுண்டருக்குத் தம் வெள்ளைப் பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்து ஊசிப்பாளையம், அறச்சலூர்க் காணியாட்சியும் தருகின்றனர்.

காளிப்ப கவுண்டர் தன் சொந்த ஊர் சென்று வரும்போது அறச்சலூர் பத்ரகாளியம்மன் திருவிழா நடைபெறுகிறது. மருமகனாகிய தான் இல்லாதபோது திருவிழா நடத்தியது ஏன் என்று கோபித்துக் காளியப்ப கவுண்டர் தன் மாமனாராகிய சாந்தப்படை வேட்டுவரைத் துரத்திவிட்டு அவர் காணியாட்சி முழுவதையும் கைப்பற்றிக் கொள்ளுகிறார்.

அறச்சலூர் ஆலயம் கட்டிக் குடமுழுக்கு விழாச் செய்து தன்னை ஆதரித்த செட்டியாருக்கு இரண்டாவது உரிமை கொடுக்கிறார். (கோயில்கட்குப் பலர் கொடையளித்தனர். அதைக் குறிக்கும் கல்வெட்டுக்களும் கோயிலில் உள்ளன. காளியப்பகவுண்டர் மகன் செய்யான் பல்லவராயன் பெயரும் ஒரு கல்வெட்டில் காணப் படுகிறது.)

# மூலம்

உ

சிவமயம்

கலியுக சகாப்தம் 3992ல் பிரபவ வருஷம் தை மாதம் தாம்பிர சாசனம் மேல்கரைப் பூந்துறை நாடு அர்ச்சநகரம் என்னப்பட்ட ஊசிப் பாளையத்திலிருக்கும் சாந்தப்படை வேட்டுவ சாதி சக்கரைக் கவுண்டந் நல்ல காளியப்ப கவுண்டன் இருவரும் இருக்கயில் மேற் படியார் வீட்டில் ஒரு வெள்ளைப் பிள்ளை இருந்து ஒருவரும் கலியாணம் செய்யாமல் அனேக நாள் சும்மா யிருக்கும்போது ஒரு நாள் சோளியனூரிலிருந்து மொளகு வியாபாரி ஒரு ஆளுடன் பண்ணைக் கிணத்திலிறங்கி இறுக்க அந்த ஆளைச் சாந்தப்படை வேட்டுவன் விசாரித்து கரய வேட்டுவன் காளியப்ப கவுண்டன் யென்று சொல்லத் தெரிந்து தன் வீட்டுப் பெண்ணைக் கலியாணம் செயிது கொண்டால் காணியாச்சி கொடுப்பதாய்ச் சொல்லி கலியாணம் செய்து கொடுத்து சில காலஞ் சென்ற பிறகு தான் தன் ஊருக்குப் போய் வருவதாய் சொல்லிப் போனான்.

வருமுன் பத்ரகாளிக்கு திருவிழா நடத்த என்னையில்லாமல் நடப்பித்தபடியால் அந்த சாந்தப்படை வேட்டுவனை அடித்துத் துரத்தி விட்டு அவன் வீடு வாசல் காணியாச்சி எல்லாம் ஆண்டு கொண்டு யிருக்க இவன் மகன் செய்யான் பல்லவராயன் மாடு மேய்த்துக் கொண்டு யிருக்கும்போது ஒரு சங்கஞ் செடியில் காராம்பசு தினம் பாலைச் சொரிய ஒரு நாள் கண்டு அந்தச் செடியை வெட்டும்போது மண்வெட்டியில் இரத்தம் கண்டது. பின்னும் பரிசோதிக்கக் காயம் பட்டு இரத்தமயமாக ஒரு சுவாமி இருக்கக் கண்டு தகப்பனிடத்தில் சொல்ல அவன் வந்து பார்த்து ஆலயங் கட்டுவித்து கும்பாவிஷேகஞ் செய்ய பெருந்துரை வடிவேல் அய்யனைக் கொண்டு பூசை செய்யும்படி செய்தான்.

செய்யான் பல்லவராயக் கவுண்டன் அம்மனுக்குத் திருவிழா நடத்த தன் சகலனைக் கொண்டு முப்பாடெடுக்க மேற்படி செட்டியார் நான் அம்மன் கோவில் கட்டினேன் வுன் தகப்பனுக்குக் காணியாச்சியும்

பண்ணி வைத்தேன். முதலில் விபூதி கொடுக்க வேணுமென்று சொல்லக் கவுண்டன் முதலில் நான் வாங்கிக் கொண்டு இரண்டாவது வுனக்குக் கொடுக்கும்படி திட்டம் செயிது யிருக்கிறேன். இதற்கு பாதகம் செய்தவனுக்கு காராம் பசுவுக் கொன்ற பாவம் வருமென்று சொன்னான். மேற்படி கோயில் பட்டிவரியில் சிலாசாசனத்தின்படி சில சங்கதிகளைக் காண்பித்துயிருக்கிறேன். யிதற்க்கு றாஜாக்கள் சில மானியம் விட்டு இருக்குறார்கள். யிதற்கு யாதொருவற்கள் ஙிந்தனை செய்தார்களோ அவற்கள் காராம் பசுவைக் கொன்ற பாவம் வரும்.

# 3. நல்லூர்ப் பட்டயம்

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருகில் உள்ள நல்லூர் ஆசிரியர் என்.எம். தங்கவேலு அவர்கள் அளித்த பட்டய நகல்.

மதுரை நாயக்கர் ஆட்சிக் காலத்தில் 1717ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 12ஆம் நாள் அதிகாரி லெட்சும நாயக்கர் அந்தப் பகுதிக்குக் காரியத்துக்குக் கர்த்தராக இருந்தார். அப்போது மின்ன வேட்டுவரில் பொன்ன கவுண்டர் மகன் காளியப்ப கவுண்டர் ஒடுவங்கநட்டு நல்லூரில் கரியகாளியம்மன், கண்ணப்ப நாயனார், கறுப்பணசுவாமி ஆகிய தெய்வங்களைப் பிரதிட்டை செய்தார்.

நாள்தோறும் மூன்றுகால பூசை செய்ய ஏற்பாடும் செய்தனர்.

## மூலம்

அரிஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை.

சுபமஸ்து. ஸ்வஸ்திஸ்ரீமந் சகலகுல சம்பந்நறான ஸ்ரீ அறியறாய விபாடணன் பாஷைக்கு தப்புவராயர் கண்டன் கண்டனாடு கொண்டு கொண்டனாடு குடாதான் தச்சின பச்சிம உத்தர சத்த சமுத்திராதிபதி யாப்பான பட்டணமும் கொங்கும் ஈழமும் திறைகொண்டருளிய ராசாதிராசன் ராசுபரமேசுறன் றாசமாத்தாண்டன் றாயஸ்ரீ மருதைச் சமத்தானம் ஸ்ரீ மகாறாசாவின் மகாமண்டலாதிபதி காரியத்துக்குக் கத்தறான ஸ்ரீலெச்சுமனாயக்கரய்யன் செங்கோல் செலுத்துநாளில்,

கொங்கு ஒடுவங்க நாட்டுக்கு ......... வடபாரிசார னாட்டில் கலியுக ஆதியான நாள் முதல் சென்ன வறுஷம் 4818 சாலிவாகன சாகாற்தம் 1639 இதன்மேற் செல்லாநின்ன ஏவிளம்பி வருஷம் சித்திரை மாதம் 15 தேதி பூறுவ பட்சம் திறியோதசியும் அத்த நட்சத்திறம் சுக்கிறவாறமும் கூடின சுபதினத்தில் அவனிகாத்த அருக ராசாக்கள் வம்முசத்து குறுபரம்பறை சீற்முன் காளத்தி கண்ணப்ப நயினான்

வங்குஷத்தில் பிறந்து வேடன்காணி வேட்டுவன்கொண்டு ஆண்டு அனுபவித்து வருகிற மின்ன வேட்டுவரில் காளியப்ப கவுண்டன் மகன் பொன்ன கவுண்டன் மகன் காளியப்ப கவுண்டன் ஒடுவங்க நாட்டு நல்லூரில் .......... கட்டி நம் இஷ்டதெய்வமான கரியகாளியம் மனையும், கண்ணப்பநாயனாரையும், கறுப்பண சாமியையும் ஏறியருளப் பண்ணி தம் அயிசுவரியத்தைக் கொண்டு கோயிலுஞ் செயிவித்து னித்தம் திரிகால பூதான கரதானமும் விட்டார்....

இத்தன்மம் சந்திறப் பிறவேசம் சூறியப் பிறவேசம் உள்ள வரைக்கும் பூதானமும் கயிங்கரியமும் மின்னவேட்டுவரில் நானென்று வருவார்..... காத்து லட்சிக்கவும், இதுக்கு விகாதம் செயுவான் கெங்கை கரையிலே காறாம்பசுவை கொன்ன தோசத்தில் போகக் கடவன், யிதுக்கு மேன்மேல் ஆலயம் செயிதான் அசுவமேதயாகம் பண்ணின பலன் பெறுவான். இப்படிக்கு மின்னவேட்டுவரில் பொன்ன கவுண்டன் மகன் காளியப்ப கவுண்டன் ருசுவு கயி ஒப்பிதம். கரியகாளி லச்சிக்கவும். கண்ணப்பர், கறுப்பணசாமி லச்சிக்கவும். நாகீசுவரன் லச்சிக்கவும். தவளமலையான் லச்சிக்கவும். உ. சுபமஸ்து உ.

# 4. பேரூர்ச் செப்பேடு

கோயமுத்தூர் அருகில் உள்ள பேரூர் சின்னக்கோயில் குருக்கள் செந்திநாத குருக்கள் அவர்களிடம் இச்செப்பேடு உள்ளது.

1792 ஆம் ஆண்டு திருவாரூரில் சூரியகுல தீரராகிய சோழரும், மதுரையில் சந்திரகுல தீரராகிய கூன் பாண்டியரும், தாராபுரத்தில் அக்கினிகுல தீரராகிய சேரரும் ஆட்சிபுரியும்போது வேட்டுவர் சமூகத்தினர் பேரூரில் கோயில், மடம் கட்டியது பற்றிய செப்பேடு.

வேடன், வேட்டுவன், காவிலுவன், மாவிலுவன், பூவிலுவன் என்ற ஐந்து பிரிவுகள் வேட்டுவச் சமுதாயத்தில் உண்டு. பூவிலுவர் பிரிவைச் சேர்ந்த புரவிபாளையம் முத்துவேல்மணி சந்திர கோப்பண கவுண்டர் அவர்கட்கு மூவேந்தரும் மும்முடிப் பட்டம் சூட்டிப் பல்வேறு சிறப்புக்களும் செய்தனர். ஆட்சி புரிவதற்குச் சீமையையும் நல்கினர்.

கோப்பண கவுண்டர் பல கோயில் திருப்பணிகள் செய்தார். குல குருவும், குலதெய்வமும் நியமனம் செய்து கொடைகளும் அளிக்கப் பட்டன. களந்தை ஆதிபுராணலிங்கேசுவரர் கோயிலும் திருப்பணி செய்யப்பட்டது. (கோப்பண கவுண்டர் கல்வெட்டு பேரூர்க் கோயில் கருவறை வடக்குச் சுவரில் உள்ளது.)

## மூலம்

சுவஸ்த்திஸ்ரீமன் மகாமண்டலீசுவரன் ஆரியதழ விபாடன் ஆரியமோகம் தவுள்த்தான் ஒட்டியர்தழ விபாடன் ஒட்டியமோகந் தவுள்த்தான் ஆறிலொரு கடமைகொண்டு அருள்பெருகி அன்புகூர்ந்து ஆதுரசாலையும் அந்தணர் வேள்வியும் வேதவொலியும் விழாவறா வீதியும் தபோதன மடங்களும் தர்ம சாலையும் யிச்சயில் முப்பத்திரண் டறமும் விழங்கிய மண்டல மதிரை கொண்டருழிய றாசாதிராசன் ராசபரமேசுரன் ராசமாற்த்தாண்டன் ராசமனோபயங்கரன் கண்டனாடு

கொண்டு கொண்டனாடு குடாதான் சொல்லுக்கு அரிச்சந்திரன் அளுக்கு அனங்கன் அறிவுக்கு அகத்தியன் பொருமைக்குத் தற்மன் போருக்கு வீமன் வில்லுக்கு விசையன் பரிக்கு நகுலன் குடைக்குக் கற்னன் சாத்திரத்துக்கு சகாதேவன்.

சுவஸ்திஸ்ரீமன் சகாத்தம் 1714 கலியுக சகாத்தம் 2681ந் மேல் செல்லாநின்ற விரோதிகிருது வருஷம் அற்பிசை மாதம் 10ந் தேதி குருவாரமும் தெசமியும் ரோகிணி நக்ஷத்திரமும் சுகர்மனாம யோகமும் வச்சிர வாகறணமும் பெற்ற சுபதினத்தில் அசுபதி கெசபதி நரபதி தனபதி ஆகிய ராசமானிய ராசஸ்ரீ சோழமண்டல திருவாலூரில் சூரியகுல தீரராகிய விக்கிரம சோழராசன், பாண்டியமண்டலம் மதுரையில் சந்திரகுல தீரராகிய கூந் பாண்டியன் ராசன், சேற மண்டலம் தாராபுரம் அக்கினிகுல தீரராகிய பதுருண சேற ராசராகிய இந்த மூன்று ராசாக்களும் ராச்சிய பரிபாலணம் செய்கின்ற னாளையில் சேர ராசாவுடைய ராச்சியத்தை அம்பார பழ நிமித்தியமாக சோழராசா கட்டியும், சோழ ராசன்னுட ராச்சியத்தை பாண்டிய ராசா கட்டியும், அவரவர் ராச்சியம் அவரவற்கென்று இந்த பாபம் நிபத்தியாகத் தக்கதாக சிவதெரிசனமும் சிவபிறதிட்டையும் செய்த பேர்கள் னாடும் யெங்கள் ஊரும் யெங்கள் பேரும் யெங்கள் குலமும் விழங்கத் தக்கதாக தற்மசாதன பட்டையம்.

தற்மசாசன பட்டையமாவது சம்பந்தா் அப்பற் சுந்தரா் மாணிக்க வாசகா் செல்லாப் பணங்கொண்டு செலுத்தியும் தீட்ஷா திருமுடியும் வாங்கி சீகாழியில் மூவாயிரம் சமணரை அக்கினியிாலே அளியப் பண்ணிவித்தாா். அப்படிக் கொற்ற கனகசபாபதி பெரிய முதலாகிய பண்டிதற் யென்று பட்டம் சூடியும் பத்து பதியமும் பதித்து அப்படிக் கொற்ற திருமுடியும் வாங்கி கனகசபாபதி பெரிய முதலாகிய பண்டிதற் யிடத்தில் னாங்கள் மூன்று பேற் ராசனும் தீட்ஷா உடல் பொருள் ஆவி மூன்றும் கனகசபாபதி பெரிய முதலாகிய பண்டிதற்கென்று யெங்கள் னாட்டிலுள்ள சிவபிறதிட்டையும் சிவ தெரிசனங்களும் வெள்ளியங்கிரி நகரத்தில் சென்று ஆளுடையாா் கோவில் தேனுண்டீசுரசுவாமி சீா்னோத்தாரங்கள் சிவ தெரிசனமும் செய்ய அந்த காணியாளா் காழத்தியீசுபரன் வரப்பிறசாதத்தில் அவருடைய வரத்தினாலே புறந்த

கண்ணப்ப நயினார் கோத்திரத்தில் பூவுலுவநென்றும் வேடன் வேடுவநென்றும் காவலவன் மாவலவன்நென்றும் பூவுலுவராகிய முத்து வேல்மணி சந்திர கோப்பண கவுண்டன் அவ்விடத்தில் கோட்டைகொண்டு யிருந்தவனை மகாறாசசிறி மூன்று பேரும் அளைக்கசெய்து அதிகசந்தோஷமாக அவற்க்கு மும்முடிப் பட்டம் சூடி கிரீடந்தரித்து மும்முடிப்பட்டம் முத்து வேல்மணி சந்திர கோப்பண மன்றாடியென்று பேருங்கொண்டு அவற்க்கு விருது கெசமுகத் தண்டிகை சிங்கமுக தண்டிகை பகல்தீபட்டி பச்சைகுடை வெள்ளைகுடை பூச்சக்கறகுடை உபய சாமரம் ரெணபாசிங்கமும் முத்து துராயும் செங்கோல் முத்திரையும் வெட்ட வாளும் கட்ட கவுறும் வெங்கல பேரிகையும் றணவீரசின்னமும் சந்திர சூரிய வாத்தியமும் நாகேச வாத்தியமும் அநேகம் விருதுகள் கொடுத்து,

சீற்மை சென்னிமலை அத்திமலை கருமலை பாலமலை யிதற்குள்ள சீற்மையும் கொடுத்து ஆறிலொன்று கடமை தவராதபடி குடுத்து கொண்டு யாதொரு ராசனுக்கு பட்டம் சூட வேணும் யென்றால் நீய் முதல்வனாக எளுபத்தேளு பாளையப்பட்டுக்கு முதல்வனாகவும் உங்கள் அஞ்சுசாதி உள்பட்டவற்குப் பட்டக்காறனாக கட்ட கவுறும் கொட்ட கோலும் மகாராசற் மூன்று பேரும் செய்தாற்கள்.

கனகசபாபதி பெரிய முதலாகிய பண்டிதரிடத்தில் தீட்ஷா திருமுடியும் வாங்க செய்து தேனுண்டீசுற சுவாமி காரியங்களுக்கு பூசை பிறதிட்டை செய்து பூமி சாதனமாக அம்பது மா நிலமும் குருக்களுக்கு தாராதத்தம் செய்து மகாராசசிறி குரிஞ்சி நகறத்தில் சென்று சுவாமி பூசை பிறதிட்டையும் செய்து வாலீசுரசாமி யென்று அவருடைய னாமங்களும் கூறி அவடத்தில் குருக்களுக்கு பூமி சாதனமாக ஏழு மா நிலமும் தாரதெத்தம் செய்து பிரவாநெறியென்று யிருக்கப்பட்ட காஞ்சி னதி சூழ்ந்த காட்டுப் பேரூருக்கு மகாறாசசிறி மூன்று பேரும் மும்முடிப் பட்டம் கோப்பண மன்றாடியும் கூட சென்று பட்டியார் தெரிசனாற்தம் கண்டு தலத்துடய மகுத்துவம் கண்டு அரசம் பலவாண பிறதிட்டையும் செய்து பட்டியார் சீறனோத்தாரம் செய்து சிறிவசிய கோத்திரம் திருத்தளியார் சிவபிராமணன் கோவில் சாந்தியும், காசிப கோத்திரம் கனகசபாபதி பெரிய முதலாகிய பண்டிதற்யிடத்தில்

திவிர உச்சவங்களும், சண்மத சைய்வாசாரத்துக்கு வரை கடவாமல் ஆணை ஆக்கிணை கட்ட கயிறும் கொட்ட கோலும் பள்ளி பண்ணை யமும் பக்குவாயிக்கு விசேஷமும் தண்டிகை குதிரை ஆணை ஒத்தை சங்கு ரெட்டை தீபட்டி உபயசாமரம் சுருட்டி சூரியபாண் லவண்டை மல்லாரி வீரகிங்கிணி முரசு வாத்தியம் பூமி சாதனமாக அறவத்திமூணு மா நிலமும் அவடத்திலுள்ள குடிவற்த்தனை அறியத் தக்கதாக

யெங்கள் னாட்டிலும் தேசத்திலும் சிவத்தலம் உள்பட கெணபதி முதல் ஒரு யிடத்தில் எளுந்தாரையும் ஒரு யிடத்தில் பிறந்தாரையும் பிரவாநெறியுட காஞ்சிமகானதி சூள்ந்த காட்டுப் பேரூராகிய தலத்துக்கு பிரதிஷ்டா உச்சவமும் எங்கள் மூன்று ராச உடமை எங்கள் குலம் கோத்திரம் விழங்கத் தக்கதாக னாங்கள் பட்டம் சூடிய மன்றாடி அதிகாரமும் அவற் புத்திரர் பவித்திர பாரம்பறைக்கும் அவற் அஞ்சு தீட்ஷா உச்சவமும் வைத்துக்கொளக் களந்தை நகரம், ஆதிபுறாணீசுர சுவாமி தெரிசினாற்தமும் பிறதிஷ்டா பூசையும் செய்து பூமி சாசனமாக குருக்களுக்கு னாங்கள் மூன்று பேரும் னாங்கள் பட்டம் கூடிய மன்றாடியும் அங்கே உள்ள குடி வற்த்தனை அறியத் தக்கதாக ஆறு தோட்டமும் யிருவள்ள காடும் காஞ்சினதி சூள்ந்த முட்டங் கோடி முப்பத்திரெண்டு அறைக்கும் கனகசபாபதி பெரிய முதல்மையாகிய பண்டிதற் பூசை பிறதிஷ்டா உச்சவம் செய்து கொண்டு வற செம்பிலையும் சிலையிலையும் வெட்டி நாங்கள் மூன்று ராசனும் கனகசபாபதி பெரிய முதல்மையாகிய பண்டிதற்கு எழுதி குடுத்த தற்ம சாசனம்.

யிதற்குச் சாஷி சின்ன மதகில் தீற்த்த தொட்டியில் பாற்க தெரியவரும். யிந்த னாட்டில் முடிதரித்த மன்றாடியும் யாதொரு ராசன் நாட்டுக்கு வந்தால் யவரே சாஷியாக. யிந்த தற்மங்களுக்கு அளிவு செய்த பேற்கள் காசியில் கெங்கைக் கரையில் அசுவத்தி சிசுவத்தி கெசவத்தி கோவத்தி விறுமத்தி செய்த பாபங்களிலே அடைவாற். யாதொருத்தர் வரைகடவாமல் யிந்த தற்மங்களும் பரிபாலனம் செய்த பேற்கள் காசி கெங்கையில் தானம்பண்ணி சிவ தெரிசனம் செய்து தனுக்கோடி தானம் பண்ணி றாம லிங்கத்தை தெரிசனம் செய்து சந்திறாதித்தியள் உள்ள வரையிலும் னாங்கள் மூன்று ராசனும் எழுதிக் குடுத்த தற்ம சாதனம்.

# 5. தென்னிலைச் செப்பேடு – I

கரூர் மாவட்டம் கரூர் வட்டம் தென்னிலைக் கிராமத்தில் உள்ள வேட்டுவ சமூகப் பட்டக்காரர் எம்.ஏ. பகவதிக்கவுண்டர் அவர்களிடம் உள்ள செப்பேடு.

கொங்கு நாட்டின் பூர்வீக மக்கள் வேட்டுவர்குலப் பெரு மக்கள். அவர்கள் ஒக்கிலியர் முதலிய பகைவர்களை வெட்டி முடிக்கின காரணத்துக்காகப் பல ஊர்களைக் காணியாகப் பெற்றனர்.

சேரன், சோழன், பாண்டியன், செட்டி, சிவப்பிராமணன் ஆட்சிக் காலத்தில் கொங்கு வேளாளர்கள் குடியேற்றம் கொங்கு நாட்டில் ஏற்பட்டது.

ஆத்தூர், அஞ்சூர், கார்வழி, கோடந்தூர், காரைப்பரப்பு, தலையநல்லூர், நாகம்பள்ளி போன்ற பல ஊர்களில் வேட்டுவ சமூகத்திற்குரிய ஊர்கள், நிலம் (எல்லை கொல்லை) வேளாளர் பெருமக்களுக்கு உரியதாக மாறுகிறது. ஊராட்சி உரிமை, கோயில் காணி உரிமை இவைகளும் வேளாளருக்கு மாற்றப்படுகின்றன. (இராச முப்பாடு, கோயில் முப்பாடு).

சில ஊர்களுக்கு ஐயர், கணக்கர், தட்டார், பறையர், நாவிதர் யார் என்று நியமனம் ஆகின்றனர். பல நாடுகளில் வேட்டுவர்கள் காணி பெற்ற விவரமும் ஊர்களின் எல்லைகளும் எல்லைகளில் பொறிக்கப் பட்டுள்ள சின்னங்களும் குறிக்கப் பெறுகின்றன.

வேட்டுவக் கவுண்டர்கள், வேளாளக் கவுண்டர்கள் இருவருமே சாட்சிக் கையொப்பமிட்டுள்ளனர். காசித்தட்டான் என்பவர் இச்செப் பேட்டை எழுதியுள்ளார். இதற்குப் பல நகல்கள் எடுக்கப்பட்டு ஆங்காங்கு வைக்கப்பட்டுள்ளதாக இடங்களும் இறுதியில் கூறப்படு கின்றன.

## மூலம்

கலியுக சகார்த்தம் 3108 மேல் சாலியவாகன சகார்த்தம் 3108 மேல் செல்லானின்ற சேரன் சோழன் பாண்டியன் செட்டி சிவப் பிராமணன் காலத்தில் செயவருஷம் பங்கினி மாதம் 25ந் தேதி யித்தாதிபேர்கள் கூடி சேரன் சோழன் பாண்டியன் காலத்தில் செட்டி சிவப்பிராமணர் காலத்தில் யெல்லைகொல்லை தீர்மானம் பண்ணினது. காடு செலுதிக்கு முன்னைவேட்டுவன் ராயபூசாரி கவுண்டன் இந்த நாலுபேர் இறந்துப்போன படியினாலே வடமலைராயருக்கு அண்ட வாணி வேட்டுவனுக்கு ராசமுப்பாடு கோயில்முப்பாடு குடுத்ததுக்கு சாச்சி வெங்கலனாடு சல்லிகாளத்தி கவுண்டன் சாட்சி. நீலியப்ப கவுண்டன் சாட்சி. ஆத்தூர் மாந்தைப்படை வேட்டுவன் வன்னிய கவுண்டன் சாட்சி. காக்காயிவாடி குழந்தவேலப்ப கவுண்டன் சாட்சி. பூவாணி வேட்டுவன் வடமலைராயருக்கு ராசமுப்பாடு கோயில் முப்பாடு கொடுத்ததுக்கு இத்தாதிபேரும் சாட்சி.

குப்பத்து பூவாணி வேட்டுவன் சின்னாக்கவுண்டன் ராசமுப்பாடு கோயில் முப்பாடு யெனக்கு கொடுத்தால் நான் ஊரிலே பணம் எடுத்துக்கட்டுவேன். நாடுஊரு எனக்கு நம்பிக்கை சொன்னால் நான் பணமும் கொடுப்பேன் என்று சொன்னபடியினாலே வக்ஷமதேவராயர் நாளையிலே செயவருஷம் பங்குனிமாதம் 27 தேதியில் பூவாணி வேட்டுவன் சின்னாக்கவுண்டனுக்கு ராசமுப்பாடு கோயில் முப்பாடு குடுத்ததுக்கு சாட்சி வேங்கலனாடு நீலியப்பகவுண்டன் சல்லி காளத்தி கவுண்டன் சாட்சி. ஆத்தூரு மாந்தைப்படை வேட்டுவன் வண்டிக் கவுண்டன் சாட்சி. காக்காயிவாடி குழந்தவேலப்பகவுண்டன் சாட்சி. இத்தினைபேரு அவனுக்கு ஊரு கொடுத்ததுக்கு சாட்சி. சேரன் சோழன் பாண்டியன் செட்டி சிவப்பிராமணர் நாளையிலே ஊரு குடுத்ததுக்கு காக்காயிவாடி தம்பிக்கவுண்டன் ஆத்தூரு மாந்தைப்படை வேட்டுவன் வன்னியக்கவுண்டன் சாட்சி. கிழங்குநாடு கரடிவேட்டுவன் கண்டிக் கவுண்டன் சாட்சி. வெங்கம்பூரு சம்பந்தராயன் புல்லையன் காட்சி. தலையநல்லூரு கூறை காளியப்ப கவுண்டன் காட்சி. அஞ்சூரு பாண்டி வேட்டுவன் நல்லதம்பி கவுண்டன் சாட்சி.

செய வருஷம் வைகாசி மாதம் 28ந் தேதி சேரன், சோழன், பாண்டியன் செட்டி சிவப்பிரோமணர் காலத்தில் ஆத்தூரு சோளியம்மன் கோவிலுக்கு இத்தாதி பேருகளும் கூடி வேளாளர் காடை குலத்துக்கு ராசமுப்பாடு கோயில் முப்பாடு குடுத்ததுக்கு சாட்சி தலைநல்லூரு கூரை காளியப்ப கவுண்டன் சாட்சி. வேங்கலனாடு போத்தி சேசுவராய கவுண்டன் சாட்சி. நீலியப்ப கவுண்டன் சல்லி காளத்தி கவுண்டன் சாட்சி. கிழங்குநாடு கண்டிக் கவுண்டன் சாட்சி. ஊத்துக்கல் பாறையிலே குளிரண்டு, அதுக்கு வடக்குப்புரம் கருங்கல்லிலே குளிமூனு. அதுக்கு கிழக்கு தேட்டுப்பாறையில் குளிரண்டு. அதுக்கு கிழக்கு யெல்லை கொல்லைக்கு வட்டப்பாறையிலே கல்லுசாதனம் போட்டிருக்குது. அது கிழக்கு வெடிச்சாம்பாளியிலே குளிரண்டு. அதுக்கு தெற்கு முக்குப்பாளியிலே குளிரண்டு.

சேரன் சோழன் பாண்டியன் செட்டி சிவப்பிரோமணன் காலத்தில் அஞ்சூரு கவுண்டர்களுக்கு யெல்லை கொல்லை தீர்மானம் பண்ணி தீர்ந்தபடியினாலே புல்லை வெள்ளாளன் மலையாமிரங்கி கவுண்டன் முளைவேட்டுவன் வேலப்பகவுண்டன் மணநாடு கோடந்தூரு குன்னாடி வேட்டுவன் ராசா கவுண்டன் சாட்சி. கூடலூரு மாந்தைப் படை வேட்டுவன் வண்டிய கவுண்டன் சாட்சி. கிழங்கு நாட்டுக்கு கண்டி கவுண்டன் சாட்சி. புன்னம் பூவாணிவேட்டுவன் சேசுவராயன் சாட்சி. வெங்கம்பூருக்கு சம்மந்தராயன் சாட்சி. தூரைகுலம் சாமிநாத கவுண்டர் சாட்சி. கூரை காளியப்ப கவுண்டன் சாட்சி. முத்தூரு மணிய வேட்டுவன் சாட்சி. அஞ்சூரு கட்டுகல்லைக்கு திரவிபிள்ளை, பிராமணன் மலையாமிரங்கி ஐயன், அம்மன்கோவில் பூசைக்கு அண்ணாமலை பண்டாரம், சின்னாண்டி பண்டாரம், நோட்டக்கார வீரமதட்டான், நாவித விராமன், சங்கிடு பரயன், சொக்கன், தங்குலத்து பரயன் மாட்டயான், கருமன், காத்தான் அஞ்சூர் கவுண்டர்களுக்கு எல்லை கொல்லை தீர்மானம் செய்ததுக்கு இத்தினை பேரும் சாட்சி.

சேரன் சோழன் பாண்டியன் செட்டி சிவப்பிரோமணன் காலத்தில் செயவருஷம் வய்யாசி மாதம் 29 தேதி கார்வழிக்கு எல்லை கொல்லை தீர்மானம் செய்தது. ஊமை காளிகோயிலுக்கு மேற்கு குளி இரண்டு. அதுக்குத் தெற்கு குளி ஒன்று, அதுக்குத் தெக்காலே சூலம்

போட்டிருக்குது. அதுக்கும் தெக்காலே பரப்பிலே குளிமூணு. பாப்பான் பரப்பிலே குளிமூணு. அதுக்குக் கிழக்கே குழி ஒண்ணு. அதுக்குக் கிழக்காலே குளிரண்டு. அதுக்குக் கிழக்காலே செம்மடையில் குளி ஒண்ணு. களுதை மடையிலே இதுக்குத் தீர்மானம் பண்ணி கார்வளிக் கவுண்டர்களுக்கு எல்லை கொல்லை விட்டதற்குச் சாட்சி கோடந்தூரு வெம்பவேட்டுவன் உத்தமலிங்கக் கவுண்டன் கீரை வேட்டுவன் லச்சும கவுண்டன் சாட்சி. தென்னிலைக் கிறாம மோக்காளி வேட்டுவன் சின்னாக்கவுண்டன் சாட்சி. துக்காச்சி முன்னை வேட்டுவன் காளியப்ப கவுண்டன் சாட்சி. வேலப்ப கவுண்டன் சாட்சி. இதுக்குக் கட்டுக் கல்லணை சிவபிராமணன் கள்ளப்புரவி ஐயன் கூட்டம் கோமனாண் டிக்குள்ளே சின்னாண்டிப் பண்டாரம் கார்வளிக்கிராமம் தீர்மானம்

விட்டதற்கு இத்தினபேரும் சாட்சி. அதுக்கு மேற்குக் குளிமூணு. அதற்கு மேற்கு குளிரண்டு. அதுக்கு மேக்கு குளிமூணு. இடைக் காட்டுக்கு மேற்கு குளிரண்டு. அதுக்கு வடக்கு குளிரண்டு. அதுக்கு வடக்கு புல்லை கல்லுலே குளிஒண்ணு. குருக்கத்திக்கு மேற்கு குளிரண்டு, அதுக்கு வடக்காலே குளிரண்டு. அதுக்கு வடக்காலே குளிஒண்ணு. விரிதலைக்காட்டுக்கு மேக்கு குளிமூணு. அதுக்கு வடக்கு உப்பிலியன் காவலி போட்டிருக்குது. அதுக்கு வடக்குப்புரம் குளிமூணு. அதுக்கு வடக்கு குளிரண்டு. கோடந்தூரு கவுண்டர்கள் கீரை வேட்டுவன் லச்சும கவுண்டன் வெம்பவேட்டுவன் உத்தம லிங்கக் கவுண்டன் குறாண்டிவேட்டுவன் ராசாக்கவுண்டன வெங்கச்சி வேட்டுவன் கூடையெராக் கவுண்டன் சலிய உலகன் சாட்சி.

சேரன் சோழன் பாண்டியன் செட்டி சிவப்பிராமணன் காலத்தில் கோடந்தூருக் கவுண்டர்களுக்கு எல்லை கொல்லை தீர்மானம் பண்ணித் தீர்ந்த பிரகாரம். இதுக்குச் சாட்சி தென்கரைநாடு வேணுடையாக் கவுண்டன். தலையூர் தம்பண கவுண்டன் சாட்சி. கூடலூர் புண்ணம் பெரியாக் கவுண்டன் சாட்சி. தென்னிலைக் கிறாமம் மோக்காளி வேட்டுவன் கொங்கு மொட்டையன் சின்னக்கவுண்டன் சாட்சி. புல்லை வேட்டுவன் சம்பந்தராயன் சாச்சி. மணநாட்டில் இருக்கும் சிறுத்தலை வேட்டுவன் காசியப்ப கவுண்டன் சாட்சி. கட்டுக் கல்லணை பிராமணன் அழகிரி ஐயன், திருக்கணக்கர் வகையில்

அச்சுதபிள்ளை, தட்டார் வகையில் கணபதி தட்டான், கோமணாண் டிக்குள்ளே காளியாண்டி, பறையருக்குள்ளே நல்லான், பெரியான் இத்தனைபேரும் சாட்சி.

சேரன் சோழன் பாண்டியன் செட்டி சிவப்பிராமணன் காலத்தில் எல்லை கொல்லை தீர்மானம் பண்ணி சம்மதிச்சு காணிவிட்டது. கோடந்தூரு ராசாக்கவுண்டனுக்கு அறுதியாய் முத்துச்செட்டி காணி குடுத்தது. சேரன் சோழன் பாண்டியன் செட்டி சிவப்பிராமணன் காலத்தில் செயவருசம் ஆனிமாதம் 15ஆம் தேதி தலையூருக்கு வடபுரம் கூடலூரு. அதுக்குக் கிழக்கு குளி ஒண்ணு. அதுக்குத் தென்புரம் தலையூருக்கு வடபுரம் கூடலூரு. அதுக்குக் கிழக்கு சூலம் போட்டி ருக்குது. அதுக்குக் கிழக்கு குளிரண்டு. அதுக்குக் கிழக்கு சூலம் குளிமூணு. அதுக்குக் கிழக்கு குளிரண்டு. அதுக்கு கிழக்கு குளி ஒண்ணு. அதுக்குக் கிழக்கு குளிரண்டு. அதுக்குக் கிழக்கு அணைக்குத் தென்புறம் குளி ஒண்ணு. அதுக்குக் கிழக்கு குளிமூணு. அதுக்குக் கிழக்கு அணைக்குத் தென்புறம் குளி ஒண்ணு. அதுக்குக் கிழக்கு குளிமூணு. அதுக்குக் கிழக்கு அணைக்குத் தென்புறம் குளிஒண்ணு. சூலம். தெற்குப்புறம் தலையூருக்கு வடக்குப்புறம் மணல்நாடு, அதுக்கு வடபுறம் குளிஒண்ணு. அதுக்கு வடக்கு குளிரண்டு. அதுக்குக் கிழக்கு மூலையில் குளிரண்டு. அதுக்குக் கிழக்கு குளி ஒண்ணு. தாராபுரத்திற்குக் கிழக்குக் கடையில் கரும்பாறையில் குளிரண்டு. அதுக்கு வடக்கு சந்திரசூரியன் போட்டிருக்குது. அதுக்கு வடக்கு காரைப்பரப்பில் குளிரண்டு. அதுக்கு மேற்கில் நெட்டுக்குளி ஒண்ணு. ஊஞ்சப்பரப்பில் குளிரண்டு. அதுக்கு மேற்கில் முன்னைப் பரப்பில் குளிஒண்ணு. அதுக்கு மேற்கு செம்மடையிலே நீலப் பாறையில் சூலம் போட்டிருக்குது. அதுக்கு மேற்கு குளி ஒண்ணு. அதுக்கு மேற்கு கருங்கல்லிலே குளிரண்டு. அதுக்கு மேற்கு குளி ஒண்ணு. அதுக்கு மேற்கு கருங்கல்லிலே குளிரண்டு. அதுக்கு மேற்கு குளி ஒண்ணு. அதுக்கு மேற்கு குளிரண்டு.

கூடலூருக் கவுண்டர்கள் சிறுத்தலை வேட்டுவன் காசியப்பன் கொங்கு மொட்டையன் நாளையிலே மோக்காளி வேட்டுவன் வெம்ப வேட்டுவன் உத்தமலிங்கக் கவுண்டன், மாந்தைப்படை வேட்டுவன்,

பனைய வேட்டுவன் வேலப்ப கவுண்டன், வெங்கச்சி வேட்டுவன், கூடயெராக் கவுண்டன், இதுக்குக் கட்டுகல்லணை பாப்பாருக்குள்ளே அவிநாசி ஐயன், திருக்கணக்கர் அச்சுதபிள்ளை, கோமணாண்டியில் வயிராண்டி, நோட்டக்காரக் கணபதிதட்டான். சங்கிடும் பறையன் நம்பன், நாவித உலகன், இதுக்குச் சம்மதிச்சுக் கொண்டு சேரன் சோழன் பாண்டியன் செட்டி சிவப்பிராமணன் காலத்தில் ஒக்கிலியரை வெட்டி முடுக்கினபடியினாலே இந்த ஆறு கவுண்டர்களுக்கு எல்லை கொல்லை தீர்மானம் பண்ணித் தந்த பிரகாரம்.

இதுக்கு சாட்சி. உருமைப்படை வேட்டுவன் கிஷ்ண கவுண்டன், தலையூரு தம்பண கவுண்டன், கீரை வேட்டுவன் லச்சும கவுண்டன். புல்லை வேட்டுவன் சம்பந்தராயன் சாட்சி. வேங்கலநாடு மருதக் கவுண்டன் இந்த ஆறு பேர் கவுண்டர்களுக்குக் காணி பூமி எல்லை கொல்லை சம்மதிச்சு விட்டதுக்கு இத்தனைபேரும் சாட்சி. புண்ணம் பெரியாக் கவுண்டர், சிறுத்தலை வேட்டுவன் கால்பங்கு. கொங்கு மொட்டையன் கால்பங்கு. உத்தமலிங்கக் கவுண்டன் கால்பங்கு. மாந்த கவுண்டன் கால்பங்கு. வேலப்பகவுண்டன் கால்பங்கு. கட்டய ராசாக்கவுண்டன் கால்பங்கு. இந்த ஆறுபேர் கவுண்டர்களும் கூடி ஊழியத்திற்கு ஆளில்லை என்று சொல்லி புண்ணம் பெரியண கவுண்டனுக்குக் காணி பூமி எல்லை கொல்லை தங்களுக்கு நடந்த பிரகாரம் நடத்திக் கொண்டார்கள். வேட்டுவன் பொன்னாக் கவுண் டனுக்கு ராசம்மாள் அதவப்பிள்ளையைக் கொண்டதுக்கு புண்ணம் பெரியணகவுண்டன் மகளுக்குக் கால்பங்கு குடுத்தான். புண்ணம் பெரியண கவுண்டன் இந்த ஆறு கவுண்டர்களையும் கேட்டு ராசம்மாள் கவுண்டச்சிக்கு கோயில் முப்பாடு வாங்கிக் குடுத்தான். ராசம்மாள் கவுண்டச்சி மகன் பொன்னாக்கவுண்டன், தில்லையப்ப கவுண்டன் தில்லை அவிநாசி கவுண்டன், ராசாக்கவுண்டன் இந்த நாலு பேருக்கு நாலு கிணறு வெட்டிவிச்சுக் குடுத்தாள். ராசம்மாள் மூத்தகுடி மகனுக்கு கோயில் முப்பாடு வாங்கிக் குடுத்தாள். தில்லையப்ப கவுண்டருக்குக் கோயில் முப்பாடு மதியாக்கூடலூரிலே வாங்கிக் குடுத்தாள்.

இந்தப்படி சம்மதி பண்ணித் தீர்ந்த பிரகாரம். செயவருசம் ஆனி மாதம் இருபதாம் தேதி சேரன் சோழன் பாண்டியன் செட்டி சிவப்

பிராமணன் காலத்தில் காரைப்பரப்புக்கு கிழக்கு குளி ஒண்ணு. அதுக்குக் கிழக்கு புல்லைக் கல்லிலே குளிரண்டு. அதுக்குக் கிழக்காலே நடந்தைக் கிராமம் ஆலாம்பறப்புக்குத் தெக்காலே குளி ஒண்ணு. அதுக்குக் கிழக்காலே குளிரண்டு. அதுக்குக் கிழக்காலே குளி ஒண்ணு. அதுக்குக் கிழக்காலே குளிரண்டு. அதுக்குக் கிழக்காலே நல்லிபாளையத்துக்கு வடக்காலே குளிமூணு. அதுக்குக் கிழக்கால குளிஒண்ணு. கருமபாளையத்துக்குக் கிழக்கு குளி ஒண்ணு. அதுக்குத் தெற்கால் கரைக்குக் கீழ்ப்பிரம் குளிரண்டு. சல்லிப் பட்டிக்குத் தெற்கால் குளிஒண்ணு. அதுக்குத் தெற்கு வட்டப்பாறையில் குளிரண்டு. அதுக்கு மேக்குக் குளிஒண்ணு. அதுக்கு மேக்கு தொக்குப் பட்டிக்கு வடக்கால் குளிரண்டு. அதுக்கு மேக்கால் குளிரண்டு.

வேட்டுவக் காளியப்ப கவுண்டன், வேலப்பகவுண்டன் இந்த ரண்டுபேர் கவுண்டர்களுக்கு நடந்தைக் கிறாமம் காணிபூமி எல்லை கொல்லை தீர்மானம் பண்ணி இதுக்குத் தீர்ந்த பிரகாரம் இதுக்கு கட்டு கல்லணை பாப்பாரில் லிங்கர் வட்டய்யன், கோமணாண்டியில் காளியாண்டி, தட்டார் வகையில் வேலத்தட்டான், திருக்கணக்கரில் அண்ணாபிள்ளை, நாவிதருள் செல்லன், பறையருள் காத்தான், இதுக்குச் சாட்சி வேளாம்பூண்டி நாச்சியப்ப கவுண்டன், முன்னூரு அல்லாளிக் கவுண்டன், முன்னைவேட்டுவன் சாட்சி. சேரன், சோழன் பாண்டியன் செட்டி சிவப்பிராமணர் காலத்தில் ஒக்கிலியரை வெட்டி முடுக்கினபடியினாலே காணிபூமி எல்லை கொல்லை சம்மதி பண்ணித் தீர்ந்த பிரகாரம். இந்த மூணுபேர் கவுண்டர்களும் சாட்சி. செய வருஷம் ஆனி மாதம் 25ஆம் தேதி கள்ளிப்பறப்புக்கு கிழக்குக் குளிமூணு. அதுக்கு மேற்குக் குளிஒண்ணு. அதுக்கு மேற்கு குளிரண்டு. அதுக்கு மேற்கு குளிஒண்ணு. அதுக்கு மேற்கு கயிரு மத்துகோலு கவில் போட்டிருக்குது. அதுக்கு வடக்கு ஆத்தோரம் குளிரண்டு. அதுக்கு வடகரையில் குளிரண்டு. அதுக்கு மேற்கு குளிஒண்ணு. பாலை யணையில் குண்ணாங்கல்லில் கல்சாதனம் போட்டிருக்குது. அதுக்கு மேற்குக் குளிஒண்ணு. அதுக்கு மேற்கு கயிரு மத்துகோலு கவில் போட்டிருந்தது. அதுக்கு வடக்கு ஆத்தோரம் குளிரண்டு. அதுக்கு வட கரையில் குளிரண்டு. அதுக்கு மேற்கு குளிஒண்ணு. பாலையணையில்

குண்ணாங்கல்லில் கல்சாதனம் போட்டிருக்குது. அதுக்கு மேற்குக் குளிஒண்ணு. அதுக்கு மேற்குக் குளிரண்டு. ஆமைக் கல்லுப் பாளியில் குளிஒண்ணு. அதுக்கு மேற்கு தெக்கு அண்டினாப் போல அதுக்கு மேற்கு சொக்கட்டான் கல்லு அடிச்சிருக்குது. அதுக்கு மேற்குக் குளிஒண்ணு. அதுக்கு மேற்கு குளிரண்டு. அதுக்கு மேற்கு குளிஒண்ணு. களுதைமடைக்கு வடக்கு குளிரண்டு. களுதை மடையில் குளிஒண்ணு. அதுக்கு வடக்கு முட்டப்பறப்பில் குளிரண்டு. பில்லாப்பறப்புக்குக் கிழக்கு குளி ஒண்ணு. அதுக்கு வடக்கு குளி ஒண்ணு. செம்மடை வடக்கால் குளிரண்டு. அதுக்கு வடக்கு குளி ஒண்ணு. அதுக்கு வடக்கு குளிரண்டு. அதுக்கு வடக்கு குளிஒண்ணு. அதுக்குத் தெற்கு குளிமூணு.

தென்னிலைக்கிராமம் கவுண்டர்கள், சிறுத்தலை வேட்டுவன் காசியப்பன், கொங்கு மொட்டைய கவுண்டன், உத்தமலிங்கக் கவுண்டன், மின்னை வேட்டுவன் அல்லாளிக் கவுண்டன், திருக்கணக்கு அச்சுத பிள்ளை, பாப்பாரில் அவிநாசி ஐயன், கோமணாண்டியில் வயிராண்டி, தட்டாரில் கணபதித்தட்டான், பறையருக்குள் சொக்கன், காட்டான், இவுகளுக்கு எல்லை கொல்லை தீர்மானம் பண்ணினதுக்கு இத்யாதி பேரும் சாட்சி.

இடப்பிச்சநாடு கிராமத்திற்கு எல்லை கொல்லை மலைக்குத் தெற்கு குளிரண்டு. அதுக்குத் தெற்கு குளிஒண்ணு. ஆரியூரு நத்தத்திற்கு மேற்கால் இடப்பிச்சநாடு, வேங்கலநாடு அதுக்குத் தெக்கு நடுப்பிர குளிஒண்ணு. அதுக்கு தெற்கு குளிமூணு. சின்ன முத்தாம்பாளையத்துக்குக் கிழக்கால் குளிமூணு. இடப்பிச்சநாடு கவுண்டர் முன்னை வேட்டுவன் அல்லாளிக் கவுண்டன், சிறுத்தலை வேட்டுவன் பெருமாள் கவுண்டன், மோக்காளி வேட்டுவன் குட்டைத் தேவணகவுண்டன். இதுக்குக் கட்டு கல்லணை பிராமணன் அவிநாசி லிங்க ஐயன், கோமாணாண்டியில் வயிரன் காளியாண்டி, கணக்கரில் அண்ணாபிள்ளை, தட்டாரில் மருதைத்தட்டான் பறையரில் சொக்கன், மாந்தை வெள்ளாளன் குப்பிச்சிக் கவுண்டன், இவர்களுக்கு எல்லை கொல்லை தீர்மானம் பண்ணினதுக்கு இத்தாதிபேர் கவுண்டர்களும் சாட்சி.

பரமத்தி பரப்படை வேட்டுவனுக்குக் காணி ஆச்சி குடுத்தது. பரப்படை வேட்டுவனுக்கு பறையவர்த்தனை குடுத்தது. மக்கத்துக்கு அஞ்சுபணமும் ஊத்தைக்குக் கால்பணமும் தீர்ந்தபிரகாரம். அம்மை கோவில் ஆண்டி காட்டில் சூலம் போட்டிருக்கும். அதுக்குக் கிழக்குக் குளிஒண்ணு. அதுக்குக் கிழக்கு குளிஒண்ணு. வெள்ளாளரில் மொண்டி காளியப்ப கவுண்டன், தட்டாரில் மருதைத்தட்டான், மொண்டி காளியப்ப கவுண்டனுக்கு படித்தாரு கிழக்கு மூலை.

சேர, சோழ பாண்டியன் செட்டி சிவப்பிராமணர் காலத்தில் செயவருசம் ஆனிமாதம் 25ஆம் தேதி தலையநல்லூர் கவுண்டர் களுக்கு எல்லை கொல்லை தீர்மானம் செய்தது. பூணைக்கடையிலே குளிரண்டு. அதுக்கு வடக்கால் கருங்காளிபாளையத்துக்கு மேற்கு குளிஒண்ணு. அதுக்கு வடக்கால் நிலப்பாளிக் கரும்பாறையில் சூலம் போட்டிருக்குது. அதுக்கு மேற்கு குளிஒண்ணு. அதுக்கு வடக்கு ஆரியப்படிப்புக்காட்டில் குளிரண்டு. அதுக்கு வடக்கால் குன்னாங்கல் காட்டில் குளிஒண்ணு. அதுக்கு மேற்கு குளிஒண்ணு. அதுக்கு மேற்கு வெள்ளைப்பாளிக்கு நேரு வடக்கு நிலப்பாளியில் குளிஒண்ணு. கருந்தேவன் குட்டை மேல்புறம் குளி ரண்டு. காடன்குளி மூணு. வடபுறம் பூந்துறை நாட்டுக்குத் தென்புறம் அரையநாடு,அதுக்கு மேற்கு குளி ஒண்ணு. அதுக்கு மேற்கு அண்ணாமலைபாளையம். நாலு காடெங்ககுளி ஒண்ணு. அதுக்கு மேற்கு வட்டப்பாளியில் குளி மூணு. அதுக்கு மேற்கில் சூலம் போட்டிருக்குது. இந்தச் சூலத்திற்கு தெற்கு மேற்குப்புறம் தலையநல்லூர் நாடு எல்லையில் குளிஒண்ணு. அதற்குத் தெற்குக் குளிரண்டு. அதுக்குத் தெற்கு குளிமூணு. அதுக்குத் தெற்கு குளி ஒண்ணு. அதுக்குத் தெற்கு சூலம் போட்டிருக்குது. முகப்பாளியில் சூலம்ரண்டு சக்கரைப்பாளியில் சூலம்ரண்டு. தலையநல்லூர்க் கிராமம் கவுண்டர்கள் வெம்ப வேட்டுவ உத்தமலிங்கக் கவுண்டன், மாச்சாடி வேட்டுவன் மாரப்ப கவுண்டன், கொல்லிவேட்டுவ கிஷ்ண கவுண்டன், வெலைய வேட்டுவன் அரிச்சந்திரக் கவுண்டனுக்கும் கட்டு கல்லணை பாப்பாரில் பங்கயன், தட்டார்க்குள் பொங்காளித் தட்டான், கோமணாண்டிக்குள் காளியாண்டி, பறையரில் கருமன், காத்தன்.

சேர, சோழ பாண்டியன் செட்டி சிவப்பிராமணர் காலத்தில் ஒக்கிலியரை வெட்டி முடுக்கின படியினாலே தலையநல்லூர்க் கவுண்டர்கள் உத்தமலிங்கக் கவுண்டன், மாச்சாடி வேட்டுவன் மாரப்ப கவுண்டன், கொல்லி வேட்டுவன் கிஷ்ட்ண கவுண்டன், வெலைய வேட்டுவன் சந்திர கவுண்டன், நரிய வேட்டுவன் அரிச்சந்திர கவுண்டன். இந்த அஞ்சு பேர் கவுண்டர்களுக்குக் காணி பூமி எல்லை கொல்லை தீர்மானம் பண்ணித் தீர்ந்த பிரகாரத்துக்கு நாட்டாரு ஊரார் இத்தனைபேரும் சாட்சி. யிந்த அஞ்சுபேர் கவுண்டர்கள் கூடி கூரை காளியப்ப கவுண்டன் கையிலே ஐயாயிரம் பொன் வாங்கிக் கொண்டு காணி பூமி எல்லை கொல்லை தங்களுக்கு நடந்த பிரகாரம் நடத்திக் கொண்டு வருவீராகவும். இத்தனை பேரு நாட்டார் ஊரார் சாட்சி.

செய வருசம் ஆனி மாதம் 27 ஆம் தேதி நஞ்சராயன் காலத்தில் திம்மன் கையில் பாப்பான் நீலான் தன்னுடைய அவசர நிமத்தியமாக வாங்கியது ஐநூறு பொன். யிந்த ஐநூறு பொன்னு பாப்பான் நீலான் கையில் குடுக்கிறதுக்கு சக்கிலியத் திம்மன் நம்பிக்கையில்லாத படியினாலே பில்லைவேட்டுவ சம்பந்தராயக் கவுண்டனும், பாப்பான் நீலான் இந்தக் கவுண்டர்களையெல்லாம் அழைச்சு வச்சுக் கொண்டு சக்கிலித் திம்மனுக்குத் தனங்காட்டை யருதி பண்ணிவச்சு கல்வெட்டிப் போட்டுக் குடுத்ததுக்கு அங்கே சாதனம் காட்டுக்கு மேற்கு மூலையிலே துத்தாரி வடக்கு மூலையிலே புல்லைக்கல்லிலே கருவிக் கூடம் போட்டிருக்குது. தென்கிழக்கு மூலையிலே கிச்சுக்கத்தி தென்மேற்கு மூலைப்பாளியிலே கல்சாதனம் போட்டிருக்குது. இந்தப்படி சம்மதி பண்ணிக் குடுத்ததுக்குச் சாட்சி மொஞ்சனூர் ஆந்தைகுலம் நல்ல தம்பிக் கவுண்டன், கோடந்தூர் பனையவெள்ளாளன் புள்ளாக் கவுண்டன் ஆக இத்தினை பேரும் சாட்சியாகத் தீர்ந்த பிரகாரம் சேரன் சோழன் பாண்டியன் செட்டி சிவப்பிராமணர் காலத்தில் செயவருசம் ஆவணி மாதம் 11ஆம் தேதி தென்னிலைக் கிராமம் கவுண்டர்கள் சிறுத்தலை வெட்டுவன் காசியப்ப கவுண்டன், மோக்காளி வேட்டுவன் கொங்கு மொட்டைய கவுண்டன் வெங்கச்சி வேட்டுவன் அல்லாளிக் கவுண்டன், மாந்தப்படை வேட்டுவன் காசியப்ப கவுண்டன், கீரை வேட்டுவன் பழனிக்கவுண்டன், குழந்தை வேலப்பகவுண்டன்,

பெருங்குடி வெள்ளாளன் திரும கவுண்டனுக்குக் கால்பங்கு, ஆயிரத்து ஐநூறு பொன் இத்தினை பேர் கவுண்டர்கள் கூடி அவர் கையில் வாங்கிக் கொண்டு கால்பங்கு திருமகவுண்டனுக்குக் கொடுத்தார்கள். யிதுக்குக் கோடந்தூரு குன்னாடிவேட்டுவன் சாட்சி கூடலூரு மாந்தப் படை வேட்டுவன் சாட்சி. பனையவேட்டுவன் சாட்சி. பழனிக் கவுண்டன் சாட்சி. நடந்தைக்கிராமம் குழந்தை வேலப்பகவுண்டன் சாட்சி. சல்லிகாளத்தி கவுண்டன் நீலியப்பகவுண்டன், கிழங்குநாடு வடுகவேட்டுவன் கண்டிய கவுண்டன் சாட்சி. சம்பந்தராயக் கவுண்டன் சாட்சி. தலையநாடு சாமிநாதக்கவுண்டன் சாட்சி.

கலியுக சகாப்தம் மூவாயிரத்து நூற்றி எண்பத்துக்கு மேல் சாலியவாகன சகாப்தம் மூவாயிரத்துநூற்றி எண்பதுக்கு மேல் செல்லா நின்ற சேரன் சோழன் பாண்டியன் செட்டி சிவப்பிராமணர் காலத்தில் மின்னாம்பள்ளி வள்ளியம்மன் கோயில் இத்தாதிபேர் கவுண்டர்களும் வெள்ளாளர் கண்ணந்தை குலத்துக்கு ராச முப்பாடு கோயில் முப்பாடு குடுத்ததுக்குப் புன்னம் சேசுவராயன் சல்லி காளத்திக் கவுண்டன், கிழங்கு நாடு கண்டிக் கவுண்டன், மணநாடு புரக்கிலாக் கவுண்டன், தலையநல்லூர் கூரை காளியப்ப கவுண்டர் சாட்சி. ஆத்தூரு மாந்தப் படை வேட்டுவ வண்டிய கவுண்டன் சாட்சி. சம்பந்தராய கவுண்டன் சாட்சி.

மன்மத வருசம் பங்குனி மாதம் சேரன் சோழன் பாண்டியன் செட்டி சிவப்பிராமணர் காலத்தில் கிழங்குநாடு வராக வேட்டுவன் கண்டியக் கவுண்டனுக்கு கிழங்கு நாடு எல்லை கொல்லை விட்டது. கொடுமுடிப் படித்துறையில் பொளிகாட்டினது. கொடுமுடிக்கும் தென்பாதி எல்லை மஞ்சிக்காட்டிலே குளிரண்டு. அதுக்குத் தென்பாதி வெங்கக்கல் மேட்டிலே குளிரண்டு. அதுக்குக் கீழ்பாதி அத்திப்பாளையத்துக்குக் கீழ்பாதி சூலக்கல் அடிச்சிருக்குது. அதுக்கு கீழ்பாதி புங்கம் பள்ளம் ஒடப்பு வாயிலே நெட்டுக் குளிரண்டு. அதுக்குக் கீழ்பாதி பேச்சிக்கல்லில் குளி ஒண்டு. அதுக்குக் கீழ்ப்பாதி சாலியச் செம்மடையில் குளிஒண்ணு. அதுக்குக் கீழ்பாதி வீரனத்தக் காட்டில் பாறையில் குளி ஒண்ணு. அதுக்குக் கீழ்ப்பாதி ஒருவாக் கிணத்துக்குக் கீழ்ப்பாதிப் பாறையில் குளி ஒண்ணு. அதுக்குத் தென்

பாதி துண்டுப் பெருமாபாளையத்துக்கு தோட்டம். தோட்டத்துக்குத் தென்பாதிக்கும் கல்லில் சூரியன் அடிச்சு இருக்குது. அதுக்குத் தென்பாதி ஆத்தூரு நத்தத்துக்கு மேல்புறம் மூக்கறைப் பிள்ளையார். அதுக்குக் கீழ்பாதி நிலப்பாறையில் குளிஒண்ணு. அதுக்குக் கீழ்ப்பாதி சூலக்கல்லில் இருபுரம் சந்திரசூரியன் அடிச்சிருக்குது. அதுக்குக் கீழ்ப்பாதி கொளத்துப்பாளையம். அதுக்குத் தென்பாதி பாறைமேல் குளிஒண்ணு. அதுக்கு கீழ்ப்பாதி பசுபதி ஈசுவரன் கோவிலுக்குப் பாதி ஆலாமரத்துக்காட்டில் சூலக்கல் அடிச்சிருக்குது. சூலக்கல்லுக்குத் தென்பாதி வெங்கலநாடு வடபாதி கிழங்குநாடு. சூலக்கல்லுக்குக் கீழ்ப்பாதி கரூரு வய்த்ததில் குருவப்பநாய்க்கன் வீட்டுக்கு தென்பாதி தட்டையநாடு. வடபாதி கிழங்குநாடு. குருவப்ப நாயக்கன் வீட்டுக்குக் கீழ்ப்பாதி பாறைமேல் குளிரண்டு. அதுக்குக் கீழ்க்கரைக்கு பசுபதி பாளையத்திற்கு கீழ்ப்பாதி பிச்சன் தண்ணிப் பந்தல். புள்ளையார் கோவிலுக்குக் கீழ்ப்பாதி குளிரண்டு. அதுக்கு வடக்குக் கரைக்கு வடபாதி பஞ்சமாதெய்வப் பாறைமேல் குளி ஒண்ணு. அதுக்கு கீழ்ப்பாதி கோயம்பள்ளிக்கு வடபால் கருங்காட்டில் பாறைமேல் குளிரண்டு. தேவிக்குக் கீழ்ப்பாதி அதுக்குக் கீழ்ப்பாதி ஊருக்கு வடபாதி காவேரிக்கு வடபாதி பண்ணைக் கிணறு.

வெள்ளை புள்ளையாருக்கு வடபாதி சூலக்கல் அடிச்சிருக்குது. சூலக்கல்லுக்குக் கீழ்ப்புறம் வாழவந்தி நாடு. அதுக்கு மேல்புறம் கிழங்குநாடு. வடபாதி மூலிவிட்டான் கல்பாறைமேல் குளிரண்டு. அதுக்கு மேற்பாதி ஆரியூருக்கு மேபாதி ஆமைப்பாறையில் சந்திர சூரியன் அடிச்சிருக்குது. அதுக்கு மேபாதி ஓட்டைப்புள்ளையார் கோவில் சூலக்கல் அடிச்சிருக்குது. அதுக்கு மேபாதி சீதேவியம்மன் பாறையில் குளிஐந்து. பாறைக்கு வடபாதி வாழவந்தி நாடு. தென்பாதி கிழங்குநாடு. அதுக்கு மேபாதி இடும்பன்குளம் கீழ்க்கடையில் குளி ஒண்ணு. அதுக்கு மேபாதி பரமுத்தி. பரமுத்திக்கு வடபாதி அரைய நாடு. பரமுத்திக்கி மேபாதி கரும்பாறையில் சூலம் அடிச்சிருக்குது. அதுக்கு மேபாதி வீரணம்பாளையத்து நெல்பாறையில் குளிமூணு. அதுக்கு மேபாதி கபிலமலைக்கு மேற்பாதி குளி ஒண்ணு. அதுக்கு மேற்பாதி எல்லைபுள்ளையார் கிட்ட கல்லிலே தூபக்கால் மணியும்

போட்டிருக்குது. எல்லை புள்ளையாருக்கும் வடபாதி அரையநாடு. தென்பாதி கிழங்குநாடு. அதுக்கு மேபாதி காவேரியில் பாறையில் குளி ஒண்ணு. அதுக்குத் தென்பாதி பிலிக்கல்லில் குளிரண்டு. அதுக்கு மேபாதி காவேரிக்குத் தென்பாதி கொடுமுடிப் படித் துறையில் கீழ்ப்பாதி குளிமூணு. இதுக்கு எல்லை கொல்லை தீர்மானம் செய்தது.

சேரன் சோழன் பாண்டியன் செட்டி சிவப்பிராமணர் காலத்தில் ஒட்டரை வெட்டி முடிக்கினபடியினாலே வராகவேட்டுவன் கண்டிக் கவுண்டனுக்கு எல்லை கொல்லை தீர்மானம் செய்ததுக்குத் தென் கரை வேணாவுடையாக் கவுண்டன், காங்கேய மன்னாடியார், வெங்கல நாடு சல்லிகாளத்திக் கவுண்டன், நீலியப்ப கவுண்டன், ஆத்தூரு மாந்தப்படை வேட்டுவன் வண்டிக் கவுண்டன், சம்பந்த ராயக் கவுண்டன், கூரைகாளியப்ப கவுண்டன், அஞ்சூரு பாண்டி வேட்டுவன் நல்லதம்பிக் கவுண்டன், மணநாடு கோடந்தூரு உத்தம லிங்கக் கவுண்டன், குண்ணாடி வேட்டுவன் ராசாக் கவுண்டன் சாட்சி. கொடையூரு புரக்கிலாக் கவுண்டன் சாட்சி. தென்னிலை மோக்காளி வேட்டுவன் சின்ன கவுண்டன் சாட்சி. கட்டுகல்லணை சிவ பிராமணர்கள் புரவி ஐயன் சாட்சி. கிழங்கு நாட்டுக்குச் சிவபிராமண சுப்பையன், கோமாணாண்டியில் கண்டியாண்டிப் பண்டாரம் சாட்சி. சங்கிடு பறையன், கண்டித்தோட்டி, தங்குலத்து பறையன் முத்தான் இத்தாதி பேரும் எல்லை கொல்லை தீர்மானம் செய்தோம். கிழங்கு நாட்டுக்கு பில்லை வேட்டுவன் எனக்குப் பங்கு உண்டு என்று கேள்க்க நாங்கள் இத்தாதிபேர் நாட்டார் ஊரார் கூடி ஆயிரம் பொன் செலவு பணம் குடுத்தால் நாங்கள் பங்கு குடுக்கிறோம் என்று சொன்னோம். அவனும் குடுக்கிறோமென்று சொன்னான். குடுத்த போது பேருபாதி பிரிச்சுக் குடுக்கறோம் என்றோம். இதுக்கு மேல் கண்ட சாதகம் தென்னிலைக் கோட்டையில் அஞ்பேரு கவுண்டர், அஞ்சு அரமனை அஞ்சுபிள்ளையார் கோயில் மேல்புறத்துத் தலை வாசலில் சிங்காதனப்பாறையில் ஒக்கிலியன் தாலி மூத்தாந்தாலி செப்புப் பட்டயம் மூணு மூத்தாந்தாளியில் சிங்காதனக் கல்லுக்கடியில் வச்சிருக்குது. இதுக்கு மேல் சாதகம் கண்டுயிருக்கும்.

கொடுமுடி மகுடீஸ்வரர் கோவிலில் சாதகம் போட்டிருக்குது. அதுக்கு அடையாளம் வெள்ளக்கல்லில் உப்பிலியன் காவிலி அடிச்சிருக்குது. உண்மை சாதகம் காவேரிக்கு வடகரை கிழங்கு நாட்டு, மணப்பள்ளி ஈசுவரன் கோவில் சாதகம் போட்டிருக்குது. இன்னம் சாதகம் சீதேவியம்மன் கோவிலுக்கு வடபாதி வாழவந்திக்குத் தென்பாதி நாலுகல் நட்டிருக்குது. அதுக்குரண்டு புறம் சாதனக்கல் அடிச்சிருக்குது. நாகம்பள்ளிக் கிராமத்தில் செல்லாண்டியம்மனுக்குக் கோவில் முப்பாடு குடுத்தது. வெள்ளாளகுலப் பூச்சந்தை சாத் தந்தைக்குக் கோவில் முப்பாடு குடுத்ததுக்குச் சாட்சி வெங்கலநாடு சல்லிகாளத்திக் கவுண்டன், நீலியப்பக் கவுண்டன், முத்தூர் மணிய வேட்டுவன் சாட்சி. தென்னிலை மோக்காளி வேட்டுவன் சின்னக் கவுண்டன் சாட்சி. கொடையூரு புரக்கிலாக் கவுண்டன், புன்னம் பூவானி வேட்டுவன் சின்ன கவுண்டன் சாட்சி. சம்பந்தராயன் சாட்சி. துவரைகுலம் சாமிநாத கவுண்டன் சாட்சி. சோழன் பாண்டியன் செட்டி சிவப்பிராமணன் காலத்தில் மன்மத வருசம் சித்திரை மாதம் 26ஆம் தேதி முப்பாடு குடுத்ததுக்கு இத்தாதி பேரும் சாட்சி.

இந்த சிலாசாசனம் எழுதினது காசித்தட்டான். உ. சிவமயம். மண்மங்கலம் கிராமத்தில் காளியம்மன் கோவிலுக்கு வெள்ளாசாரி குலத்துக்கு ராச முப்பாடு, கோயில் முப்பாடு குடுத்ததுக்குச் சாட்சி சல்லி காளத்திக்கவுண்டர், வராக வேட்டுவன் கண்டிக் கவுண்டன் இத்தாதி பேர் சாட்சி. இந்தப் பட்டயம் உப்பிலிய நாயக்கன் வசம் மூணு பட்டயம் நாட்டார் ஒப்பி வச்சிருக்கிறோம்.

# 6. தென்னிலைச் செப்பேடு-2

இப்பட்டயமும் கரூர் மாவட்டம், கரூர் வட்டத் தென்னிலை வேட்டுவப் பட்டக்காரர் எம்.ஏ. பகவதிக் கவுண்டர் அவர்கள் வீட்டில் உள்ளது.

கொங்கு நாட்டின் பூர்வீகக் குடிகள் வேட்டுவர் குலப் பெரு மக்கள், அவர்களுக்கு சொந்தமான ஊர்களையும், கோயில்களையும் கொங்கு வேளாளர்கள் கொங்கு நாட்டில் குடியேறியபோது படிப் படியாகப் பொன்னும், பொருளும் கொடுத்துப் பெற்றனர். அதனையே இப்பட்டயமும் முந்தைய தென்னிலைப் பட்டயமும் விளக்குகிறது.

உக்கிலியரை விரட்டியதால் வேட்டுவர் தாம் பெற்ற தென்னிலைக் காணியில் கால் பங்கு உரிமையை 1000 பொன்னுக்குப் பெருங்குடி வேளாளராகிய கொங்கு வேளாளருக்கு விலைக்கு விற்றனர்.

இதேபோல் நீலியம்மன் கோயில், வேங்கபுரம் அம்மன் கோயில், கண்டியம்மன் கோயில், மங்கலம் காளியம்மன், மின்னாம்பள்ளி வன்னியம்மன் கோயில் ஆகியவற்றின் காணி உரிமைகள் வேட்டுவர் குலத்தாரிடமிருந்து வேளாளருக்கு மாறுகிறது. ஆனால் கோயில் உற்சவங்களும் உற்சவத்தின்போது கோயில் பணியாளர்கட்குக் கொடுக்கின்ற கொடைகளும் எந்தவித மாற்றமும் இல்லாமல் அப்படியே முன்பு நடைபெற்ற முறைபோலவே நடைபெற வேண்டும் என்பதையும் தெளிவாக எழுதிக் கொடுத்துள்ளனர்.

## மூலம்

கலியுக சகார்த்தம் 3689இல் சாலிவாகன சகாப்தம் 360 மேல் செல்லாநின்ற சேரன் சோழன் பாண்டியன் செட்டி சிவப்பிராமணன் காலத்தில் விகாரி வருஷம் பங்குனி மாதம் 15ஆம் தேதி சேரன்

சோழன் பாண்டியன் செட்டி சிவப்பிராமணன் காலத்தில் யுக்கிலியரை வெட்டி முடுக்கினபடியினாலே இந்த அஞ்சு பேரும் கவுண்டர்க்கு காணி பூமி எல்லை கொல்லை சம்மதிச்சு விட்டதுக்குத் தென்னிலைக் கிராமத்திலே மேரு மிராசு பத்திக் கொண்டது.

சிறுத்தலை வேட்டுவன், மாகாளி வேட்டுவன், வெங்கச்சி வேட்டுவன், மாந்தாக் கவுண்டன், குட்டியாக் கவுண்டன் இந்த ஐந்து பேரு கவுண்டர்களுக்குத் தென்னிலைக் கோட்டையிலே அஞ்சு பிள்ளையாரும் அஞ்சு அரண்மனையும் மேரு மிராசு இந்தப் பட்டயத்தில் உள்ளபடிக்கு முந்தினார் பிந்தினார் உள்படப் பட்டயப் படிக்கு விபூதி சந்தனம் பற்றிக் கொள்ளவும், தென்னிலைக் கோட்டையிலே மேல்கண்ட சாதினம் மேற்புறத்துத் தலைவாசலுக்கு அண்டினாற் போலே வடக்கியாலே உக்கிலியன் தாலி முதல் தாலியும் 3 செப்புப் பட்டயம் மூத்தாந்தாழியிலே போட்டுப் புதைச்சு இருக்குது. மேல் சிங்காதனக்கல்லுப் போட்டு மேற்கண்ட சாதினம் போட்டு இருக்குது. இந்த ஐந்து பேர் கவுண்டர்கள் வெள்ளாளச் சாதி திருமலைக் கவுண்டன் பெருங்குடி வெள்ளாளன் கையிலே ஆயிரம் பொன் வாங்கிக் கொண்டு கால் பங்கு கொடுத்து உங்களுக்கு நடந்த பிரகாரம் மேரு மிராசு பத்திக் கொள்ளவும். இதுக்குத் தலையநல்லூர் கூரை காளியப்பகவுண்டர், வெங்கம்பூர் சமந்தராயக் கவுண்டன் சாட்சி, வராக வேட்டுவன் கண்டி கவுண்டன் சாட்சி. போத்தி சேசுவராயக் கவுண்டன் சாட்சி. சல்லி காளத்திக் கவுண்டன் சாட்சி. இந்த ஐந்து பேர் கவுண்டர்களும் பத்திக் கொண்டோம்.

செய வருஷம் பங்குனி மாதம் 13 தேதி தென்னிலைக் கிரா மத்திலே வெங்கச்சி வேட்டுவன் குட்டைக் கவுண்டன் நீலியம்மன் கோயில் முப்பாடு ராச முப்பாடு இதனைப் பெறும் கவுண்டர்களும் கொடுத்தோமிதுக்குச் சாட்சி சிறுத்தலை வேட்டுவன், மாகாளி வேட்டுவன், மாந்தை கவுண்டன், கூரை காளியப்ப கவுண்டன், திருமலைக் கவுண்டன், போத்தி சேசுவராயக் கவுண்டன், சல்லி காளாத்திக் கவுண்டன், ஆத்தூர் வண்டிக் கவுண்டன், கிழங்கு நாடு கண்டிக் கவுண்டன், குப்பத்துப் பசுபதி ஐயன் இத்தனை பேர் சாட்சி. முப்பாட்டுக்காகப் பொன்னு 5, நெல்லு மொடா 3, ஆட்டுக்கிடாய் 1,

சங்கிடு பறையன் மருதன் நெல்லு மொடா 2, பொன்னு 2, ஆட்டுக் கிடாய் இந்தப்படிக்கு நடத்திக் கொள்ளச் சிறுத்தலை வேட்டுவன், மாகாளி வேட்டுவன், மாந்தைக் கவுண்டன், வெங்கச்சி வேட்டுவன், குட்டியாக் கவுண்டன் இந்த ஐந்து பேரு கவுண்டர்களும் வெள்ளாளச் சாதி சின்னாக் கவுண்டனுக்கு ராசம்மாள் அதவப் பிள்ளையைக் கொண்டது. புண்ணம் பெரியண கவுண்டன் இந்த ஐந்து பேர் கவுண்டர்களுக்குக் காப்பங்கு வீதம் ஊழியத்துக்கு ஆளில்லை என்ற புண்ணம் பெரியாக் கவுண்டர் இந்த ஐந்துபேர் கவுண்டர்களையும் கேட்டு ராசம்மாள் கவுண்டச்சிக்கு மகன் பொன்னம்பலக் கவுண்டன், தில்லையப்ப கவுண்டன், தில்லை அவனாசிக் கவுண்டர், ராசாக் கவுண்டன் இந்த நாலுபேர் நாலு கிணறு வெட்டி வைச்சுக் கொடுத்து இராசம்மாள் கவுண்டச்சி மூத்த மகனுக்குக் கோயில் முப்பாடு மதியாக் கூடலூரு வாங்கிக் கொடுத்தாள். இந்தப்படி சம்மதிச்சு தீர்ந்த பிரகாரம்.

குரோதி வருஷம் புரட்டாசி மாதம் 28ஆம் தேதி சேரன், சோழன் பாண்டியன் காலத்திலே முப்பாட்டுக்காரனுக்கு 5 பொன்னு, நெல்லு மொடா 2, ஆட்டுக்கிடா 1, பண்டாரம் சின்னாண்டிக்கு பொன்னு 3, நெல்லு மொடா 2, ஆட்டுக்கிடாய் 1, சங்கிடு பறையன் வேலனுக்குப் பொன்னு 3, நெல்லு மொடா 2, இந்தப்படிக்கு தீர்ந்த பிரகாரமாய் இது சாட்சி தலையநல்லூர் கூரை காளியப்ப கவுண்டன் சாட்சி. போத்தி சேசுவராயக் கவுண்டன் சாட்சி, சல்லி காளாத்திக் கவுண்டன் சாட்சி. நீலியப்ப கவுண்டன் சாட்சி, கிழங்கு நாடு கண்டிக் கவுண்டன் சாட்சி. குப்பத்துப் பசுபதி ஐயன் சாட்சி. மாந்தைப் படை வேட்டுவன் கண்டிய கவுண்டன் சாட்சி. சம்மந்தராயக் கவுண்டன் சாட்சி.

விகாரி வருஷம் பங்குனி மாதம் 15ஆம் தேதி வேங்கபுரம் அம்மன் கோயில் சம்மந்தராயக் கவுண்டன் ராச முப்பாடு கோயில் முப்பாடு கொடுத்தது சாட்சி இந்தக் கவுண்டர்களுக்குச் சாட்சி. காப்புக் கட்டிக்கு அஞ்சு பொன்னு, நெல்லு மொடா 2, ஆட்டுக்கிடாய் 1, பண்டாரம் கருப்பாண்டிக்குப் பொன்னு 4, நெல்லு மொடா 2, ஆட்டுக் கிடாய் 1, சங்கிடு பறையன் மருதன் பொன்னு 2, நெல்லு மொடா 2, ஆட்டுக்கிடாய் 1, இத்தியாதி கவுண்டர்களும் சம்மந்தராயன் கையில் 9 பொன் வாங்கிக் கொண்டு எங்களூர் நடந்த பிரகாரம் நடத்திக் கொள்ளவும்.

செய வருஷம் பங்குனி மாசம் 21ம் தேதி ராச முப்பாடு கோயில் முப்பாடு வராக வேட்டுவன் கண்டிக் கவுண்டன் கண்டியம்மன் கோயில் ராச முப்பாடு கோயில் முப்பாடு கொடுத்தது சாட்சி, போத்தி சேசுவராயக் கவுண்டர் சாட்சி. சல்லி காளாத்திக் கவுண்டர் சாட்சி. சிறுத்தலை வேட்டுவன் சாட்சி. மாகாளி வேட்டுவன் சாட்சி. பெருங்குடி வெள்ளாளன் திருமலைக் கவுண்டர் சாட்சி. கூரை காளியப்ப கவுண்டர் சாட்சி. சம்மந்தராயக் கவுண்டன் சாட்சி. கிழங்கு நாட்டு பசுவையன் சாட்சி. முப்பாட்டுக்காரன் பொன்னு 5, நெல்லு மொடா 3, ஆட்டுக்கிடாய் 1, பண்டாரம் கண்டியாண்டிக்கு பொன்னு 3, நெல்லு மொடா 2, ஆட்டுக்கிடாய் 1, காவல்கார மருதன் பொன்னு 2, நெல்லு மொடா 1, ஆட்டுக்கிடாய் 1, மாரி மூப்பனுக்குப் பொன்னு 1, நெல்லு மொடா 1, ஆட்டுக்கிடாய் 1, பறையனாண்டிக்கு பொன்னு 2, நெல்லு மொடா 1, ஆட்டுக்கிடாய் 1, ஒக்கிலியரை வெட்டி முடுக்கின படியினாலே காணிபூமி இந்தக் கவுண்டர்களுக்கு தீர்ந்த பிரகாரம் கோயிலில் கல்லுச் சாதனம் போட்டு இத்துணை கவுண்டர்களும் கூடி வெள்ளாள குலம் காடை குலத்துக்கு ராச முப்பாடு கோயில் முப்பாடு கொடுத்தது.

சாட்சி தலையநல்லூர் கூரை காளியப்ப கவுண்டர் சாட்சி. திருமலை வேட்டுவன் சாட்சி. போத்தி சேசுவராயக் கவுண்டன் சாட்சி. சல்லி காளாத்திக் கவுண்டன் சாட்சி. வேங்கலநாடு நீலியப்ப கவுண்டன் சாட்சி. கிழங்கு நாடு கண்டிக் கவுண்டன் சாட்சி. குப்பத்து பசுவையன் சாட்சி. ஆத்தூர் மாந்தப்படை வேட்டுவன் வண்டிய கவுண்டன் சாட்சி. வெங்கம்பூர் சம்மந்தராயக் கவுண்டன் சாட்சி. ஒக்கிலியரை வெட்டி முடுக்கின படியினாலே வராக வேட்டுவன் கண்டிக் கவுண்டன் 10 பொன்னு வாங்கிக் கொண்ட படியினாலே முன் நடந்த பிரகாரம் நடத்திக் கொள்ளவும். முப்பாட்டுக்காரன் காடைகுலத்துக்குப் பொன் 5, நெல்லு மொடா 5, ஆட்டுக்கிடாய் 1, பண்டாரம் சோழியாண்டிக்குப் பொன்னு 3, நெல்லு மொடா 5, ஆட்டுக்கிடாய் 1, பண்டாரம் சோழியாண்டிக்குப் பொன்னு 3, நெல்லு மொடா 5, ஆட்டுக்கிடாய் 1, பறையன் மருதனுக்கு பொன்னு 2, நெல்லு மொடா 2, ஆட்டுக்கிடாய் 1, இந்தப் பிரகாரம் நடத்திக் கொள்ளவும்.

செய வருஷம் தை மாதம் 25ஆம் தேதி மங்கலம் காளியம்மன் கோயில் ராச முப்பாடு கோயில் முப்பாடு கொடுத்தது. வெள்ளாள குலம் வெண்டுவன் குலத்துக்கு சாட்சி வெங்கம்பூர் சம்மந்தராய கவுண்டன், போத்தி சேசுவராயக் கவுண்டன், சல்லிக் காளத்தி கவுண்டன், ஆத்தூர் மாந்தைப்படை வேட்டுவன் வண்டிக் கவுண்டன் சாட்சி. சிறுத்தலை வேட்டுவன் சாட்சி. கிழங்குநாடு சுப்பைய கவுண்டன் சாட்சி. கண்டிக் கவுண்டன் சாட்சி. திருமலை கவுண்டன் சாட்சி. வராக வேட்டுவன் வாங்கிக் கொண்டது பொன்னு 150, முப்பாட்டுக்காரனுக்கு பொன்னு 5, நெல்லு மொடா 2, ஆட்டுக்கிடாய் 1, பண்டாரம் காளியாண்டிக்குப் பொன்னு 3, நெல்லுமொடா 2, ஆட்டுக்கிடாய் 1, பறையன் கருப்பனுக்கு பொன்னு 2, நெல்லு மொடா 2, ஆட்டுக்கிடாய் 1, ஒக்கிலியரை வெட்டி முடுக்கினபடியினாலே முன் நடந்த பிரகாரம் நடந்து கொள்ளவும்.

விகாரி வருஷம் பங்குனி மாதம் 15ஆம் தேதி மின்னாம்புளி வன்னியம்மன் கோயில் இத்துணை பேர் கவுண்டர்களும் கூடி வெள்ளாளன் கண்ணந்தை குலத்துக்கு இராச முப்பாடு கோயில் முப்பாடு கொடுத்ததற்குச் சாட்சி கிழங்குநாடு கண்டிக்கவுண்டன், ஆத்தூர் மாந்தைப்படை வேட்டுவன் வண்டிக் கவுண்டன் சம்மந்த ராயக் கவுண்டன்.

செய வருஷம் பங்குனி மாதம் 14ம் தேதி சேரன் சோழன் பாண்டியன் செட்டி சிவப்பிராமணன் காலத்திலே எல்லை கொல்லை தீர்மானித்து வராக வேட்டுவன் கண்டிக் கவுண்டன் வாங்கிக் கொண்டது பொன்னு 50, முப்பாட்டுக்காரன் பொன்னு 5, நெல்லு மொடா 3, ஆட்டுக்கிடாய் 1, பண்டாரம் கருப்பாண்டிக்குப் பொன்னு 2, நெல்லு மொடா 1, ஆட்டுக்கிடாய் 1, காவல் மருதன் பொன்னு 2, ஆட்டுக்கிடாய் 1, நெல்லு மொடா 2, பறையன் மருதன் பொன்னு 2, நெல்லு மொடா 2, ஆட்டுக்கிடாய் 1 முன் நடந்த பிரகாரம் நடத்திக் கொள்ளவும். ஒக்கிலியரை வெட்டி முடுக்கினபடியினாலே வன்னியம்மன் கோயிலிலே கல்லுச் சாசனம் போட்டிருக்குது. பெரிய வீட்டுத் தவசம் வள்ளம் 2, சின்ன வீட்டுக்கு வள்ளம் 1 இந்தப் பிரகாரம் இத்துணை கவுண்டர்களும் வெள்ளாள குலங்களும் பூசிக்கிற பண்டாரமும்

பறையனும் இந்தப் பிரகாரம் நடந்து கொள்ளவும். கல்லா நாயக்கன் வசம் மூன்று செப்புப் பட்டயம் ஒப்புவிச்சு இருக்கிறோம். எந்த நாட்டிலே எந்த ஊரும் அந்த நாட்டுப் பட்டயம் கொண்டு போகவும்.

வேங்கலநாடு போத்தி சேசுவராயன் சாட்சி. காளத்திக் கவுண்டன் சாட்சி. கூரை காளியப்ப கவுண்டன் சாட்சி. கண்ணந்தை கூட்டம் அம்மையப்ப கவுண்டன் சாட்சி.

வெண்டுவன் கூட்டம் காளியப்ப கவுண்டன் சாட்சி. திருமலை கவுண்டன் சாட்சி. வெங்கச்சி வேட்டுவன் சாட்சி. சிறுத்தலை வேட்டுவன் சாட்சி. மாகாளி வேட்டுவன் சாட்சி எழுதினது காசித்தட்டான்.

# 7. புரவிபாளையம் கோப்பண மன்றாடியார் வம்சாவளி

புள்ளாச்சி தாலுகாவுக்கு சேந்த பொறவிபாளையத்துலே யிருக்கும் இம்முடிப்பட்டத்து கோப்பண மன்றாடி யெண்ணப்பட்ட பாளையகாறனுடைய வமுசாவளி முதலான கைபீது யென்ன வென்றால்

பூற்வத்தில் சேர ராசா பூந்துறைப் பட்டணம் வாசத்தறாயி றாச்சியாதிபத்தியம் பண்ணிக் கொண்டு வருகுர நாளையில் அக்காலத்து தொண்டமண்டலத்துக்கு காத்தப்பனாடு உடுவூறுலே யிறுக்கப்பட்ட வேட சாதியில் னூத்தி அரவதுநாயிரம் வீட்டுக் காறர்களில் னாகன் யென்ங்குர வேடன், அவன் பெண்சாதி தத்தை இவற்களுக்கு புத்திர சந்தானம் இல்லாமல் ஸ்ரீ காளஅஸ்தீசுவரரை னோக்கி தபசு செயிது கொண்டுயிருந்தபடியினாலே யீசுவரர் அனுகிறகத்துநாலே புள்ளை உண்டாயி வேடசாதியாரனைவரும் அந்தப் புள்ளைக்கு திண்ணனென்று பேற வச்சுயிருந்தாற்கள்.

அந்த திண்ண நென்குர வேடன் ஸ்ரீ காளஅஸ்தீசுவறருடைய பாதங்களுக்கு, தான் வேட்டையாடுகுர மது மாமிசங்கள்னாலே பூசை நெயிவேத்தியங்கள் பண்ணிக் கொண்டு வந்த பக்தியினாலே யீசுவர பக்தனாயி நடந்து கொண்டு வந்தபடியினாலே யீசுவர வரபிறசாதத் துலே கண்ணப்பனாயினாற் பென்ங்குர பேற வரப்பட்டது.

கண்ணப்ப நாயினாற் யென்ங்குர சிவ பக்தனாக நடத்தையளை யெல்லாம் சேரமான் பெருமாள் கேள்விப்பட்டு உடுப்பூருலே யிருக்குப்பட்ட வேடசாதி னூத்தி அருவது நாயிரம் பேறையும் அளைச்சு கொண்டு தம்முடைய சேர தேசமான கொங்கு தேசத்தில் சிறிது பேரை தினபிரதியும் னூத்தி அரவது கற்பூவு யெடுத்து வருகுர

பூந்தோட்டம் காக்குறபடிக்கு சிருது பேரை வூருகளுக்கு காவல் காத்துக் கொண்டு வரும்படி யாக்கி, சிருது பேரை கள்ளனாயிருக்குர வாளை ஆக்கினை பண்ணிவிக்கும் படியாக்கி, யிப்படிக்கு அந்த வேடசாதி அனவறுக்கும் வூளியங்கள் கட்டுப்பண்ணி கொங்கு தேசத்தில் நெலைநாட்டு பண்ணிநாறகள். யிப்படிக்கு சேறமாம் பெருமாள் கொங்கு தேசத்திலே நெலைநாட்டு பண்ணப்பட்ட வேட சாதி அனவறுக்கும் மெயிகாவல் காத்து வரப்பட்டவற்களுக்கு காவலவ ரென்றும் பூந்தோட்டம் காக்கப்பட்டவற்களுக்கு பூவலவரென்றும், கள்ளரை ஆக்கினை பண்ணப்பட்டவர்களுக்கு வேட்டுவன் என்றும், யிப்படிக்கு பேற உண்டானவர்களாயி அவரவற்களுக்கு யிட்ட வூளியத்து நாட்டுக்காறகளாஇ யிருந்தாறகள்.

யிப்படிக்கு காணியாட்சிக்காரணர்களாயி இருக்கப்பட்ட பூவலவ சாதியிலுள்ள அனவற்களும் சேரமான் பெறுமாள் கட்டு பண்ணின ஊளியம் பண்ணிக்கொண்டு வருகுரனாளையில் பூவலவ சாதியில் ஒருவன் யீசுவர பகுத்தனாயி தன்னுடைய சோதற்மம் நடத்தையள் நாலே ஈசுபரனை குரிச்சு புத்திர சந்தானத்துக்காக தவசு பண்ணிக் கொண்டுயிருந்தான். ஈசுவரர் அனுக்கிரகத்துநாலே சொப்பனத்துலே புத்திர சந்தானம் உண்டாகுரதென்றும்; வாரக்க நாட்டுலே கப்பளாங் கரை யென்குர யிடத்தில் சான்னித்தியமாக யிருப்போமென்றும், வுன் புள்ளைக்கு கொப்பண னென்குர பேற வெளங்கப் பண்ணிக் கொண்டு வரச் சொல்லியும் சொப்பனமாயி புள்ளை புரந்தது. அந்த ஒடனே கப்பளாங்கரையில் கோப்பணமாறயென்குர தேவாலயம் பண்ணி யிஷ்ட்ட தெயிவமாக கோரிக்கொண்டு வந்தாறகள்.

சொப்பன அனுக்கிரகத்துநாலே உண்டான கோப்பண ரென் குரவன், அதிசூர பாக்கிரம சாலியாயி யிருந்து சேர ராசா கடாட்சம் சம்பாதிக்சுக் கொண்டு காவலவன், வேட்டுவன், பூவலவன் யிவற் களுக்கெல்லாம் மொதமைக் காரணாக பிரச்சித்திப் பட்டவனாக யிருந்தான்.

யிப்படிக்கி தெயிவ கடாட்சத்துனாலே உண்டாகிய கோப்பண னென்ங்குர பேற பிரசித்திப்பட்டவனாயி யிருக்கும் நாளையில் அக்காலத்து சேர றாச்சியம் பாண்டிய றாசா கைக் கொண்டு கொங்கு

தேசத்துக்கும் றாச்சிய பிறபுத்துவாதிகாரியாகி பாண்டிய றாசா ஆண்டு கொண்டு வருகுர நாளையில் கோப்பணன் யென்குரவன் வமுசத்தில் குல தெயிவமான கோப்பணமாற் பேறாலே கோப்பணனென் குரவன் பாண்டிய றாசா அவற்கள் பேட்டிக்கு போயி, தன்னுடைய சாதி வரலாறு முதலாகிய ஸ்ரீ காளஅஸ்தீசுவறருடைய வரபிரசாதத்துனாலே கண்ணப்ப நயினாற் பென்குர பேற் வுண்டான்...... டைய வரலாரும், கொங்கு சீற்மையிலே காணியாளற்களாக காவலவன், வேட்டுவன், பூவலவன் யிவற்களுக்கெல்லாம் முதமைக்காரனாக யிருந்து வருகுர தன்னுடைய வமுசத்தாருடைய சேதி.... யெல்லாம் அரியப் பண்ணிக் கொண்டான். அக்காலத்துக்கு சந்திரகுல பாண்டிய றாசா அவற்கள் சந்தோஷப்பட்டு சேர றாசா நடப்பிவிச்ச முதமைக்கார அதிகாரத்துக்கு அதிகமாக நடப்பிவிக்குரோ மென்று சொல்லி கலியுகம் 1714 கொங்கு நாட்டுலே நீ மன்சப்தாரனாக யிறுமென்று கட்டளையிட்டு பட்டமும் கட்டி அம்பலவாணற் கடாட்சயத்துலே வெளங்கி உண்டாகப்பட்ட மன்றாடியாறுடைய பேற் மன்றாடியென்று பேறும் குடுத்து முடியும் சூட்டி பட்டாபிஷேகம் பண்ணினபடியினாலே தெயிவானுக்கிரகத்து ணாலே வுண்டாகிய குல தெயிவமான கோப்பணனென்குர பேறும் சேர றாசா றாச்சியாதி காரத்துக்கு பிற்காலம் பாண்டிய றாசா முடியும் சூட்டி பட்டாபிஷேகம் பண்ணினபடியினாலே இம்முடிப்பட்டம் யென்றும், பாண்டியறாசா அவற்கள் நாலே கிதாபு உண்டாகிய மன்றாடி யென்றும் யிம்முடிப்பட்டம் கோப்பண மன்றாடி யென்குர பேற் வறப்பட்டவற்களாயி பிறசித்திப்பட்டு கொங்கு நாட்டுகளிலே சென்னிமலைக்கு மேற்கு, கறும்புளைக்கு கிளக்கு, ஆனைமலைக்கு வடக்கு, பாலமலைக்கு தெற்கு யிந்த நாற்பாங்கு யெல்லை சதிரத்துக்கு வுள்பட்ட சீற்மைக்கு துரைத்தனம் செயிது கொண்டு வெள்ளயன்கிறி நகரம், குருஞ்சி நகரம் யிந்த ரெண்டு பட்டணங்களிலேயும் யிருந்து கொண்டு வமுச பரம்பரையாயி பட்டம் ஆண்டு கொண்டு வந்தாற்கள்.

யிப்படிக்கு குருஞ்சி நகரம், வெள்ளியங்கிரி நகரத்திலே யிருந்து பட்டம் ஆண்டு கொண்டு வருகுர நாளையில் பாண்டிய சமஸ்தானம் யெடுபட்டு துலுக்காணியமாயி யிருந்து மேல் சீற்மை கன்னடியள் வந்து துலுக்காள் பேரில் சண்டை பண்ணுகுர சமயத்தில், பாண்டிய

றாசா அவற்களுக்கு ரொம்பவும் குமுக்காயி யிருந்து துலுக்காள் பேறில் சண்டை பண்ணி துரத்தி விட்டு, மேல் சீற்மை லிங்கதாரிகளிலே குமுண றாசா யென்ங்குரவற் பாண்டிய றாசா அவற்களுக்கு பட்டம் கட்டிப் போட்டு போனாற்கள்.

பாண்டிய றாசா அவற்களும் வெள்ளியன்கிரி, குருஞ்சி நகரம் பட்டணத்துக்கு சேந்த சீற்மையை ஆளப்பட்ட கோப்பண மன்றாடியாற் யிடத்தில் ரொம்பவும் சந்தோஷப்பட்டு சிம்ஹல்லாடம், பல்லாக்கு, வுபய சாமரம், சுறுட்டி, சூரியபான், வெள்ளக்கொடை, பச்சக்கொடை, பூச்சக்கிரவாள கொடை, பஞ்சவற்ண கொடை, மீனக் கொடி, அனுமடால், கெறுடடால், மகரடால், வசவசங்கரடால், வெட்டுப் பாவாடை, ஆனைமேல் பேறிகை, ஒட்டகைமேல் நகாறு, குதிரைமேல் டங்கா, வெங்கல துடும்பு, தாரை, பூரிகை சின்னம், மல்லாரி, யெக்காளம், சிக்குமேளம், சாமதுரோஹ வெண்டயம், வீர கண்டாமணி, தரகனிகளம், ரணபாஷிக்கம், முத்துதுராயி, ஒண்டி, ரேக்கு, முத்தொண்டி, பச்சொண்டி, குதிரைக்கு மொக சல்லி, பக்க சல்லி, அண்டசல்லி, தாலதண்டை யிது முதலான ஆயுதங்களுடனே சகலபிறுதுகளும் பூற்வத்தில்வுள்ள பிறுதுகள் யெல்லாம் குடுத்து, மன்சப்தாரறாயிறுமென்று கட்டு செயிதபடியினாலே வமுச பரம்பரை யாயி இம்முடிபட்டமும் கோப்பண மன்றாடியாற் யென்குர பேற் பிரசித்திப் பட்டவற்களாகி வமுச பரம்பரையாயி வெள்ளியன்கிரி நகரத்தில் வாசமாயி யிருந்து கொண்டு சீமை ஆண்டு அனுபவிச்சுக் கொண்டு அந்தந்தக் காலத்துக்கு றாச்சியம் பிறபுத்துவம் பண்ணப் பட்ட றாசாக்கள் மனோ தற்மமாயி பாளையப்பட்டு ஆண்டு அனுபவிச்சுக் கொண்டு வந்தாற்கள்.

வெள்ளியன்கிறி பட்டணத்தில் சீற்மை ஆளப்பட்ட பாளைய காறர் இம்முடிப்பட்டம் கோப்பண மன்றாடியாற் யென்குர பட்டப்பேற் பிறசித்திப்பட்டவர்களாயி ஆண்டு வறுகுர னாளையில், பாண்டிய சமுஸ்தானம் யெடுபட்டு ராய சமுஸ்தானத்துக்கு தட்சண பிரதேச மெல்லாம் சேந்து மதுரை சமுஸ்தானத்துக்கு இராச்சியம் நாகம னாயக்கற் பிள்ளை விசுவனாத நாயக்கரை மதுரை ராச சமுஸ் தானாதிபதியென்று பட்டாபிஷேகம் செய்து நாயக்கரவற்கள்

ராச்சியாதிகாரத்தில் கணுவாயி கீள்ப்பட்ட பிறதேசமெல்லாம் மதுரை சமஸ்தானத்தில் சேந்து யிந்த மன்சப்தாற் பாளையகாற்களை யெல்லாம் தரிவிச்சு கட்டளையிட்டபடிக்கு பாளையகாற் பாளையப் பட்டு ஆண்டு கொண்டு வறுகுர நாளையில் அக்காலத்தில் நாயக்கறவற்கள் காரியத்துக்கு கற்த்தறாகிய அளகாத்திரினாயக்கற் யென்ங்குரவற் கலியுகம் 4347க்கு செயவருஷம் சித்திரை மாதத்தில் காட்டு பேரூறுக்கு வந்து பட்டீசுவரசுவாமி தரிசனம் பண்ணிக் கொண்டு யிறுக்குர சமயத்தில், ராத்திரி சொப்பனத்தில் சுவாமியும் அம்மனுமாக வந்து கனகசபை அம்மன் கோவில் ஆயிரக்கால் மண்டபம் உண்டு பண்ண வேணுமென்று சொப்பனமானபடியினாலே அளகாத்திரி னாயக்கற் வெள்ளியன்கிரி நகரத்தில் பாளையப்பட்டு செலுத்திக் கொண்டு யிருக்கப்பட்ட இம்முடிபட்டம் முத்துவேல்மணி சந்திர கோப்பண மன்றாடியாரை தரிவிச்சு தமக்கு சொப்பனமான துகளை சொன்னபடியினாலே அந்த சமயத்தில் யெங்கள் பெரியோற்கள் இம்முடி பட்டம் முத்து வேல்மணி சந்திர கோப்பண மன்றாடியாற் காட்டு பேரூற் பட்டீசுவரசுவாமி சன்னதிக்கு கனகசபை, அம்மன் கோவில மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், சீறனோதாரணம் பண்ணிவிச்சாற்கள். கனகசபை முதலாகிய ஆயிரக்கால் மண்டபம் உண்டு பண்ணினபடியினாலே அளகாத்திரி னாயக்கற் அவற்கள் யெங்கள் பெரியோற்கள் பேரிலே மிகவும் சந்தோஷப்பட்டு மதுரைக்கு அளச்சுக் கொண்டு போனார்கள்.

மதுரைக்கு போயி இருக்கும் னாளையில் சிருது நாளைக்கு பிற்காலம் கலியுகம் 4500க்கு மேல் பெரியோற்கள் இம்முடிப் பட்டம் முத்துவேல்மணி சந்திர கோப்பண மன்றாடியார் யிடத்தில் உண்டான குணாதிசயம்களை யெல்லாம் மதுரை சுமுஸ்தானாதிபதியான னாயக் கரவற்கள் சன்னியதானத்துக்கு அளகாத்திரி நாயக்கர் அரிக்கை பண்ணின படியினாலே மெத்தவும் சந்தோஷப்பட்டுக் கொண்டு பூற்வத்து கோப்பண மன்றாடியாறுடைய சீற்மை செலுத்திக் கொண்டு வரப்பட்ட சங்கதிகளை அரிஞ்சி கொண்டு கொங்கு சீற்மையில் மலைச்சறிவிலே யிறுக்கப்பட்ட துஷ்ட்டற்களை யெல்லாம் நிக்கிறகம் செய்ய சொல்லி கட்டுச் செயிது வெட்ட வாளும், கட்டக் கயிரும், சதுரங்க பலமும் குடுத்து சகல வெகுமதிகளும் செயிதாற்கள்.

மதுரை சமுஸ்தானத்துலே வெட்ட வாளும் கட்டக் கயிறும் விருது வாங்கிக் கொண்டு சீமைக்கு வந்து, துஷ்ட்டரை அய்யாயிரம் பேரை நிக்கிரகம் செயிது, யெரணூத்தி முப்பத்தி அஞ்சு யானையும் கைக்கணக்கையும் கொண்டு போயி மதுரையில் விசயரங்க கிர்ஷ்ட்டண முத்து வீரப்ப னாயக்கற் அவற்கள் சன்னியதானத்தில் ஆணைகளும் குடுத்து, மலைச்சருவுலே துஷ்டர்களை நிக்கிரகம் பண்ணின சேதிகள் விண்ணப்பம் செயிது கொண்டயிடத்தில், ஆனை மேல் பட்டணப் பெறவேசம் செயிவிச்சு பச்ச பல்லாக்கும், பகல் தீபட்டி, உபய சாமரம், ரண பாஷிக்கம், முத்துதுராயி, செங்கோல் முத்திரையும், வெங்கல பேரிகையும், வீர சின்னமும், சந்திர சூரிய வாத்தியமும், நாகசரவாத்தியம் முதலாகிய சகலவிறுதுகளும் குடுத்து, கொங்கு னாட்டில் பூற்வத்திலுள்ள வெள்ளியன்கிரி, குறுஞ்சி நகரம் சீற்மையில் வனங்கள், நதிகள், மலைகள் தேவாலயம், பிறம்மணா லயம் முதலாகிய யெப்பேற்பட்டதும் நீரே சுத்த மான்சப்தரராயி அனுபவிச்சுக் கொண்டு வறுஷம் 1க்கு மதுரை சமுஸ்தானம் அஸ்தாந்திரத்துக்கு திருவாலூற் சக்கிறம் 83000 நெல்லு சலகை 50700 சலகை நிகுதி பண்ணி சீற்மை அனுபவிச்சுக் கொண்டு வரச் சொல்லி கட்டளையிட்டாற்கள்.

மதுரை சமஸ்தானத்தில் னாயக்கரவற்கள் கட்டளை யிட்ட படிக்கு காஞ்சி னதிசூள்ந்த வெள்ளியன்கிரி நகரத்துலே யிறுந்து கொண்டு சீற்மையில் தேவதாயம், பிறம்மதாயம் நடப்பிவிச்சுக் கொண்டு தேறு, திருவிளா கட்டளையேவி மதுரை அஸ்தாந்திரத் துக்கு நிகுதிபடிக்கு செலுத்திவிச்சுக் கொண்டு மான்சப்தரராயி பிற புத்துவம் பண்ணிக் கொண்டு பிறசித்தி புருஷராயி இருந்தாற்கள்.

சேர றாசா னாளையிலே கொங்கு நாடுகளிலே வூளியம் னிகுதி செயிது அந்த வூளியத்து பேற்களாலே பூவலசாதியென்று பேறபட்ட சாதியில் கோப்பணனென்ங்குரவன் உண்டாயி கோப்பணமாரை குல தெயிவமாக பிறாற்த்திச்சுக் கொண்டு குலதெயிவ பிறசனத்துனாலே இம்முடிபட்டம் கோப்பண மன்றாடியென்குர பேற உண்டானவர் களாயி சீற்மை யாண்டு செலுத்திக் கொண்டு, துஷ்டனுக்கு மிறை னாக அரமனைக்கு குமாரவர்க்கமாக நடந்து கொண்டு, இம்முடி

பட்டம் கோப்பண மன்றாடி யென்குர பேற் பூமியிலே விளங்கிக் கொண்டு வரப்பட்ட வமுச பரம்பரைகளும் பட்டம் ஆண்டு வரப் பட்டவற்களுடைய செவுரிய அவுதாரிய காம்பீரியங்களுடைய வரிசைகள் யிதின் கீள் யெளுதி வறுகுரது.

காம்பீரியங்களுடைய பூர்வத்தில் குறுஞ்சி நகரத்தில் சீமை ஆண்டு கொண்டு வரப்பட்ட இம்முடி பட்டம் கோப்பண மன்றாடியார் அவர்கள், வருஷம் பிறிதியும் பளனியாண்டவற் திருவிளா தரிசினம் பண்ணிக்கொண்டு வந்த சமயத்தில் மேற்படி வய்யாபுரி னாட்டுப் பாளையகாரன் விசயகிரி சின்னோபனாயக்கற் விறுந்து பண்ணுகிர சமயத்தில் விரோதமாயி பளனி விட்டு ஆண்டவற் தரிசனம் பண்ணாமல் வந்தோமோ யென்று மனசுலே வெகு சிந்தை அடஞ்சவனாயி வந்து கொண்டுயிறுக்குர சமயத்தில், ராத்திரி சொப்பனத்துலே பளனி யாண்டவர் வந்து ஒன்னுடைய சீமைக்குப் போன ஒடனே ஒன்னுடைய சீற்மையிலே ''பொன்மலை'' மேல் நம்முடைய பாதம் வச்சுயிருக்கு றோம். நீயி வறுஷ பிரதியும் அவ்விடத்துலே தானே வுச்சவம் நடப்பிவிச்சு கொண்டு தரிசனம் பண்ணிக்கொண்டு வரவே அப் பணை மேல் பொன்மலை மேல் பாதங்கள் யிறுந்து அநேக மேரைக்கு ஆலயம் உண்டுபண்ணி உச்சவாதிகள் நடப்பிவிச்சு கொண்டு வந்தாறகள்.

1. சந்திர கோப்பண மன்றாடியாற் பட்டம் ஆண்ட வருஷம்
2. யிவற்குமாரன் முத்துக் குமார கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
3. யிவற்குமாரன் சுப்பராய கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
4. யிவற்குமாரன் பெரிய கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
5. யிவற்குமாரன் சந்திர கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
6. யிவற்குமாரன் கந்த கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்

7. யிவற்குமாரன் கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
8. யிவற்குமாரன் முத்துவேல்மணி கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
9. யிவற்குமாரன் சுப்பறாய கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
10. யிவற்குமாரன் பெரிய கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
11. யிவற்குமாரன் சந்திர கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
12. யிவற்குமாரன் கந்த கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
13. யிவற்குமாரன் முத்துவேல் குமார கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
14. யிவற்குமாரன் குமார கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
15. யிவற்குமாரன் சுப்பறாய கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
16. யிவற்குமாரன் பெரிய கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
17. யிவற்குமாரன் முத்துக்குமார கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
18. யிவற்குமாரன் சந்திர கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
19. யிவற்குமாரன் கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
20. யிவற்குமாரன் பெரிய கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
21. யிவற்குமாரன் கந்த கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
22. யிவற்குமாரன் பெரிய கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
23. யிவற்குமாரன் முத்துவேல்மணிக் குமார கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்
24. யிவற்குமாரன் சுப்பறாய கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்

25. யிவற்குமாரன் சந்திர கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்

26. யிவற்குமாரன் முத்துக்குமார கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்

27. யிவற்குமாரன் பெரிய கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்

28. யிவற்குமாரன் புலிகுத்தி கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்

29. யிவற்குமாரன் கோப்பண மன்றாடியார் பட்டம் ஆண்ட வருஷம்

வெகுகாலமானபடியினாலே பட்டங்களுடைய வரிசைகள் இம்முடி பட்டம் சந்திர கோப்பண மன்றாடியாற் நாள் முதல் பட்டங்களுடைய வறிசைகளும் அவாளவாளுட சறியைகளும் தெரியப் பட்டுள்ளது. சிறுது சாதனங்களாலேயும், பெரியவாள் சொல்ல கேள்வியினாலேயும் அரியப்பட்டு அந்தந்த காலத்து யுத்த சன்னாகங்களிலே அவாளவாளுடைய சவுரிய காம்பீரியங்கள் யிதின் கீளே யெழுதி வறுகுரது.

யெங்கள் பெரியோர்கள் வமுச பரம்பரையாயி, இம்முடி பட்டம் கோப்பண மன்றாடியார் யென்குர பேற் பெறசுத்திப் பட்டவர்களாயி இறுந்து, மலையாளத்து ராசாக்களுக்கு ஆதீனத்துக்குப் பட்டம் கட்ட வேணுமென்றால் தாம் போயிப் பட்டம் கட்டி வச்சு வருதுரது. மலையாளத்துலேயும் யிஷ்துலைகள் வருமானங்கள் உண்டு. அதுகளையும் அனுபவிச்சுக் கொண்டு அந்தந்த காலத்தில் ராச்சியாதிபதிகள் கட்டு செயிதபடிக்கு, கானல்களிலே துஷ்டர், வனமிறுகங்கள் உபத்திரவங்கள் யில்லாமல் காத்து பரிபாலனம் பண்ணிக் கொண்டு, அரமனையாற் கட்டளையிட்ட நிகுதிக்கு உள்பட்டு நடந்து கொண்டு கிணத்துக்கடவு முதலான யிடங்களிலே கோட்டை போட்டு, பொன்மலை வேலாயுத சுவாமி முதலாகிய தேவாலயங்களுக்கு தை உச்சவங்கள் முதலானதுகளும் நடப்பிவிச்சுக் கொண்டு கிணத்துக் கடவு கோட்டையிலே தாணையம் போட்டுக் கொண்டு அனேகம் யானை, குதிரை சேனைகளுடனே, பெரியவாள் சம்பாதிக்கப்பட்ட பிறுதுகள், ஆயதங்கள், வெளங்கப்பணிக் கொண்டவர்களாயி கிணத்துக்கடவு வாசஸ்தறாயி இறுந்தார்கள்.

மயிசூறு சமுஸ்தானம் கற்த்தாக்கள் நாளையிலே அரமனையார் கட்டு செயிதபடிக்கு, கணுவாயிக்கு கீள்ப்பட்ட கெடிகள் யெல்லாம் சமுஸ்தானத்துக்கு சேந்துயிறுக்கும் காலத்தில் அரமனையார் கட்டு செயிதபடிக்கு மலையாளத்து ராசாக்கள் முதலாகிய சில்லரை பாளைய காரர்களை யெல்லாரையும் யுத்தம் பண்ணி செயிச்சு, மட்டடக்கிப் போட்டு மயிசூறு கற்த்தாக்கள் யிடத்தில் சகல வெகுமதிகளும் கைக் கொண்டு, சமுஸ்தானத்து குமார வர்க்கமாயி இறுமென்று கட்டளை யிட்டபடிக்கு, மலைச்சரிவு கானல்களிலே மாற்கங்களுக்கு பாதி காவல் காக்கும்படியாகவும் உத்திரவு செயிதபடியினாலே, மலைச் சரிவு கானலுகளிலே அரமனையாற் யிட்ட கட்டளைபடிக்கு புரவி பாளையம் என்க்குர ஊரு உண்டு பண்ணிக் கொண்டு, கானல் களிலேயும், மார்க்கங்களிலேயும், சில்லரை கள்ளர் உபத்திரவம் யில்லாமல் பண்ணிக் கொண்டு பாதிகாவலிலே வரப்பட்ட மிராசியும் அனுபவிச்சுக் கொண்டு கோயமுத்தூற் கோட்டை வாசல் வரைக்கும் பாதிகாவல் காத்துக் கொண்டு, பிறவிபாளையத்துக்குச் சேந்த கிறாமங்களுக்கு அரமனையாற் கட்டளையிட்ட நிகுதிப் படிக்கி நடந்து கொண்டு, கானல்களிலேயும், மாற்கங்களிலேயும் சுங்கம், மகமை முதலாகிய மிறாசியும் அனுபவிச்சுக் கொண்டு பாளைப்பட்டு ஆண்டு அனுபவிச்சுக் கொண்டு வந்தாற்கள்.

மயிசூறு சமுஸ்தானத்து கற்தாக்கள் நாள் முதல் நபாபு அயிதரல்லிகான், டிப்பு சுலுதான் நாள்வரைக்கும் டிப்பு சுலுதான் அங்காமி முதலானதுகளுக்கும், சில்லரை பாளையகாறர் அரமனை உபத்திரவங்கள் யிப்படிப்பட்ட சில்லரைகள் வந்து கொண்டு யிறுக்குர சமயத்தில், நாங்கள் சில்லரைகளை விட்டு மலையாள ராசாக்கள் ஆதரவுலே யிறுந்து கொண்டு அரமனையாறுக்கு முந்தின வூளியங்களுக்கு முன் நின்று வூளியங்கள் செயிது கொண்டு, கானல் மாற்கங்களிலே சுங்கம், மகமை முதலானது அனுபவிச்சுக் கொண்டு மாற்கங்களிலே போட்ட துரும்பு முதலாகிய தினுசுகள் போட்ட யிடத்திலே யிறுக்கும்படியாக, காயிதாபடிக்கி நடப்பிவிச்சுக் கொண்டு பிரவிபாளையத்தில் வாசமாயிறுக்குரது.

மகாராசராச ஸ்ரீ கும்பிணி துரைகள் துரைத்தனமாயி, யென் பெரிய தோப்பனாற் இம்முடி பட்டம் கோப்பண மன்றாடியாற் காலம்

செண்ணுபோன பின்பு, னான் தத்து புத்திரனாக பட்டமுங் கட்டிக் கொண்டு இம்முடி பட்டம் சகமண்டலாதிபதி கோப்பண மன்றாடி யென்குர பேற் வெளங்கி கொண்டவனாயி, யென் தோப்பனாற் பெறிய கோப்பண மன்றாடியாற் கும்பிணி சறுக்காறுக்கு ஆசறாக யிறுந்து ரஷ்து, முஸ்திதிகள் முதலானதுகளுக்கு ஸ்ரீரங்கபட்டணம் கெடி போடுகுர சமயத்தில், குமுக்கு செயிது கொண்டு கும்பினியாற் கட்டளையிட்ட சனங்களும் வச்சு சவுகரியும் செயிவிச்சு மகா ராச ஸ்ரீ கும்பிணி துரைகள் கடாஷ்சயத்துக்குப் பாத்திரனாக யிறுந்து நடந்து கொண்டு, கும்பிணி துரைகள் கடாஷ்சயத்துநாலே யெனக்கு கட்டளை செயிதபடிக்கு பிறவி பாளையத்துக்குச் சேர்ந்த கிறாமமும் பட்டிகளுக்கும் வறுஷம் பிறிதி கணக்கு முதலான பேரீசுக்கு பத்தில் மூணு யெனக்கு சாரி செயிது யிறுக்குரபடியினாலே, சாதுலவாறு சிப்பந்தி தவிர பத்தில் யேளு அரமனைக்கு செலுத்திவிச்சுக் கொண்டு கானல்களிலே பாதிகாவலும் காத்து வுத்திரவாதம் பண்ணிக் கொண்டு யிறுக்குரேன்.

மகா ராச ராச ஸ்ரீ கும்பிணி துரையவர்கள், அவாளவாள் மான மரியாதி அரிஞ்சி கடாஷ்டம் செய்து பரிபாலனம் பண்ணப்பட்ட தற்மம், பிறபுக்கள்நாலே ஷே யதுலே பூர்வத்தில் யென்னாதீனத்து சீற்மைக்கு சேரப்பட்ட குலதெய்வமாகிய கப்பளாங்கரை கோப்பண மாரையும், பொன்மலை வேலாயுத சுவாமி முதலாகிய தேவாலயங் களுக்கு யென்சக்திக்கு தக்கினதாயி பணிவிடை செயிது நடப்பிவிச்சுக் கொண்டு, பூற்வம் முதலாக யென் ஆதீனத்துலே யிறுக்கப்பட்ட சனங்களுடைய வமுசஸ்தாள் முதலாகிய னூத்தி அன்பது சனத்துக்கு அகமனியாயி காலஷ்சேபம் நடப்பிவிச்சுக் கொண்டு, இம்முடி பட்டம் கோப்பண மன்றாடி யென்குர பேற்வுள்ளவனாயி ஆசறுலே காத்துயிருக்குறேன்.

இம்முடிப் பட்டம் செகமண்டலாதிபதி
கோப்பண மன்றாடி ருசு.

# 8. கோப்பண மன்றாடியார் திருப்பணிச் செப்பேடு

மூவேந்தராலும் சிறப்பிக்கப்பட்ட கனகசபை பெரிய முதலி பண்டிதர் பெருமை முதற்கண் கூறப்படுகிறது. அவர் பேரூர் உட்படப் பல கோயில்களில் தெய்வப் படிமங்களைப் பிரதிட்டை செய்தார்.

மதுரை விசயரங்க சொக்கலிங்க நாயக்கர் பிரதிநிதி அழகாத்திரி நாயக்கர் வேண்டுகோள்படி புரவிபாளையம் வேட்டுவ சமூகப் பாளையக்காரர் இம்முடிப் பட்டம் முத்துவேல்மணி சந்திரகோப்பண மன்றாடியார் பேரூர், கிணத்துக்கடவு போன்ற பல ஊர்களில் கோயில் திருப்பணிகள் செய்தார்.

சந்திர கோப்பண மன்றாடியாரை மதுரை மன்னன் அழைத்துப் பல்வேறு சிறப்புக்கள் அளித்தான். குருக்கள் சமூகத்தில் கோப்பண மன்றாடியார் உடல், பொருள், ஆவியைத் தத்தம் செய்து செப்பேடு எழுதிக் கொடுத்தார். பல விளைநிலங்களையும் குருக்களுக்குக் கொடையாக அளித்தார்.

## மூலம்

ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலீசுவரன் ஆரிய தள விபாடன் ஒட்டிய மோகந் தவிர்த்தான். ஆரிய மோகந் தவிர்த்தான் ஒட்டிய தள விபாடன் ஆறிலொன்று கடமை கொண்டு அருள் பெருகி அன்பு கூர்ந்து ஆதுலர் சாலையும் அந்தணர் வேள்வியும் வேத ஒலியும் விழாவறா வீதியும் தபோதனர் மடங்களும் தர்ம சாலையும் யிச்சையில் முப்பத்துரண்டு அறமும் திறக்கொண்டருளிய,

ராசாதிராசன் ராசபரமேசுவரன் ராசமார்த்தாண்டன் ராச கெம்பீரன் ராசமனோ பயங்கரன் ராசகுலதீரன் கடல் கலங்கினும்

காவேரி வத்திலும் மலையலுங்கினும் மனங்கலங்காத கண்டன் கண்டனாடு கொண்டு கொண்டனாடு கொடாதான் சொல்லுக்கு அரிச்சந்திரன் அளகுக்கு அனங்கன் அறிவுக்கு அகத்தியன் பொறுமைக்கு தர்மர் போருக்கு வீமன் வில்லுக்கு விசையன் பரிக்கு நகுலன் சாத்திரத்துக்குச் சகாதேவன் அசுவபதி கெசபதி நரபதி தனபதியாகிய மகாராச ஸ்ரீ சூரியகுல தீரனான விக்கிரம சோழன் திருவாரூரிலும் சந்திரகுல தீரன் மதுரையிலும் அக்கினிகுல தீரன் தாராபுரத்திலும் சேரமான் பெருமாள் முதலிய ராசாக்கள் ராச்சிய பரிபாலனம் செய்கின்ற நாளையில் சோழராசா விக்கிரமன் கனகசபை பெரிய முதலி பண்டிதர்க்கு எழுதிக் குடுத்த விபரம் என்னவென்றால்

கலியுக சகாப்தம் 1714க்கு மேல் செல்லா நின்ற விரோதிகிருது வருஷம் ஐப்பசி மாதம் 14ம் தேதி குருவாரமும் தசமியும் அசுபதி நட்சத்திரமும் ஆயுஷ்நாம யோகமும் தைதுலாகரணமும் பெற்ற சுப தினத்தில் கனகசபை பெரிய முதலி பண்டிதர்க்கு விக்கிரம சோழன் எழுதிக் குடுத்த சாசனம் என்னவென்றால் அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் இவர்கள் மூன்று பேரும் தில்லைக்கு வந்து கனகசபை பெரிய முதலி பண்டிதரிடத்திலே வந்து உபதேசம் பெற்றுக் கொண்டார்கள். செல்லாப் பணம் செலுத்திய பிள்ளையும் சீகாழியிலே வைத்தார் என்றும் அப்படிக்கொத்த கனகசபை பெரியோர்களிடத்தில் சேரமான் பெருமாள் பாண்டியராசா சோழராசா யிவர்கள் முதலான ராசாக்களும் அந்தக் கனகசபை பெரிய முதலியாகிய பண்டிதர் கிட்ட தீட்சை திருமுடி வாங்கிக் குடுத்து உடல் பொருள் ஆவி மூன்றும் கனகசபை பெரிய முதன்மை பண்டிதருக்கு தாராபூர்வமாக எழுதிக் குடுத்த சாசனம் என்னவென்றால்,

நம்முடைய நாட்டிலுள்ள சிவஸ்தலங்களை பூர்வ பிரதிஷ்டையும் உத்தர பிரதிஷ்டையும் உற்சவங்களும் தீட்சை திருமுடியும் முதலியார் வேளாளர் பிள்ளைமார் யிவர்களுக்குத் தீட்சையும் கணபதி துர்க்கை கோயில் பிரதிஷ்ட்டை உற்சவங்கள் சாந்தி சம்புரோட்சனை யிது முதலாகியதெல்லாம் நடப்பிவிச்சுக் கொண்டு வாருங்களென்று சண்மதம் சைவாச்சாரத்துக்கு உட்பட்ட பேரையும் தண்டினை கண்டினை ஆணை ஆக்கினை எப்பேர்ப்பட்டதும் நீங்களே விசாரியுங்கள்

என்றும் அனேகம் விருதுகள் கொடுத்து ஆனையின் மேல் பட்டணப் பிரவேசமும் செய்விச்சு பச்சப் பல்லாக்கும் பகல் தீவட்டியும் உபய சாமரமும் ரணபாஷிக்கம் வெங்கலப் பேரிகையும் ரணவீர சின்னமும் சந்திர சூரிய வாத்தியமும் நாற்கெச வாத்தியமும் யிது முதலாகிய சகலமும் குடுத்து தலங்கள் தோறும் பிரதிஷ்டை உற்சவங்களும் நடத்திக் கொண்டு சேர மகாராசாவும் யிந்தக் கனக சபை பெரிய முதலியாகிய பண்டிதரும் பேரூராகிய பட்டியார் கோயில் பிரதிஷ் டையும் செய்து இருக்கிற காலத்திலே பெரிய பூவலராகிய கவுண்டர் குடிபயலாள் ராச்சியத்திலே இவர்கள் கூட இருப்பார்கள். அப்படி இருக்குறபோது மதுரையிலிருந்து விசயரங்க சொக்கலிங்க நாயக்கர் திருவாரூர் மதுரை தாராபுரம் யிந்த ராச்சியங்களைக் கட்டிக் கொண்டார். அவர் காரியத்துக்குக் கர்த்தராகிய அழகாத்திரி நாயக்கன் திருமலை நாயக்கன் இவர்களை அழைக்கச் செய்து ராச்சியத்துக்கு விசாரிப்புக்கு வந்தார். அழகாத்திரி நாயக்கன் பேரூருக்கு வந்து சுவாமியைத் தண்டம்பண்ணிக் கொண்டு யிருக்கிறபோது அப்ப அம்பலவாணர் சுவாமி அவர் சொப்பனத்தில் சாதிச்சார்.

சொப்பனம் என்னவென்றால் நமக்கும் உன்னுடைய அம்மாளுக்கும் யிருப்புக்கு இடமில்லையே, நீ நமக்குத் தலம் உண்டாக்கி வைத்தால் உனக்குச் சாயுட்சய பதவியும் நம்முடைய கிட்ட வச்சுக் கொள்ளு கிறோம் என்று சொப்பனம் சாதிச்சார். அப்ப ராச்சியத்திலுள்ள பணம் உள்ளது மூன்று வருஷம் எடுத்து ஆயிரக்கால் மண்டபமும் அம்பல வாணர் சபையும் உண்டாக்கி வைத்து அதற்குப் பிரதிஷ்டையும் செய்வ வேணுமென்று யோசித்து யிருக்கிற காலத்திலே.

பூவலராகிய பூமி பாலகராகிய யிம்முடிப் பட்டம் கோப்பண மன்றாடியார் அவர் வெள்ளியங்கிரி நகரம் குறிஞ்சி நகரம் என்று சொல்லப்பட்ட நகரத்திலே கோட்டை கொத்தளம் ராச்சிய பரிபாலனம் செயிது கொண்டு இருக்கிறார். அவர் சீர்மை ஆனைமலை சென்னிமலை ஓதிமலை குருந்தமலை மருதமலை மந்திரகிரிமலை பொன்னூதிமலை சிவமலை யிந்த சீர்மையில் உள்ள சிவதலம் விட்டுணுதலம் குமாரர் தலம் அமணீசுவர சுவாமி தலம் சுவாமி காரியம் பிராமண காரியம் மேற்கு கரும்பிள்ளைக்குக் கிளக்கு யிதிலுள்ள

தேவதாயம் விருமதாயம் வரை கடவாமல் நடத்திக் கொண்டு யிந்த சீர்மையிலுள்ள பணம் சுவாமி பணம் மகமை பணம் யிந்த திரவியங் களும் தானே அனுபவிச்சு சுவாமி காரியம் நடப்பிவிச்சுக் கொண்டு வருங்காலத்திலே யிந்த அழகாத்திரி நாயக்கன் யிந்த இம்முடிப் பட்டம் முத்து வேல்மணி சந்திர கோப்பண மன்றாடியாரையம் அழைக்கச் செய்து பேரூரிலே பட்டீசுவர சுவாமியும் அம்பலவாணர் சுவாமியும் பச்சை மரகதவல்லி அம்மனையும் பிரதிஷ்டை நடப்பிக்க வேணுமென்று அழகாத்திரி நாயக்கன்.

இம்முடிப் பட்டம் கோப்பண மன்றாடியார் யிவர்கள் ஆயிரம் பேர் குருக்கள் வருத்தி ஆயிரம் யாகசாலையும் கட்டியிருந்த காணியான இம்முடிப்பட்டம் கோப்பண மன்றாடியாரும் முகூர்த்தம் செய்விச்சு யிந்தக் கனகசபை பெரிய முதன்மையாகிய பண்டிதர் கிட்ட முகூர்த்தத் தேங்காயும் குடுத்து ஆடையாபரணமும் குதிரை பல்லாக்குகளும் ஆனையின் பேரிலே பட்டணப் பிரவேசமும் செயிவிச்சு குருக் களுக்குச் சகல விருதுகளும் குடுத்து யிந்தக் கனகசபை பெரிய முதன்மையாகிய பண்டிதர் கிட்ட யிந்த அழகாத்திரி நாயக்கன் கோப்பண மன்றாடியார் தீட்சை திருமுடியும் உடல் பொருள் ஆவி மூன்றும் உமக்கே அடிமையாக இருக்கிற காலத்தில்

யிவர்கள் மூன்று பேரும் மதுரைக்குப் போயி விசயரங்க சொக்கலிங்க நாயக்கரை சமூகத்திலே கண்டு அவர் இவர்களைப் பார்த்த அதிக சந்தோஷமாக இம்முடிப்பட்டம் முத்து வேல்மணி சந்திர கோப்பண மன்றாடியாருக்கு உத்திரமும் கட்டுச் செய்து சதுரங்க சேனை பலங்களும் கூட்டி அனுப்பினயிடத்தில் புத்தி உத்திர பிரகாரத்துக்கு மலைச்சாரலில் உள்ள பாளையப்பட்டு முதலான பேரையும் ஒட்டமிட்டடக்கிவைத்து இருபத்தேழு பாளையப்பட்டு உள்ள பேரையும் கைசேத்தி தாஷ்டிகமாய் எதுத்து நின்ற தரியலரையும் குத்திக் குலையிடத்தக்கதாயும் மருவலரை வணங்கத் தக்கதாகவும் ஆராயிரத்து எழுநூறு பேரையும் சங்கரித்து கப்பம் செலுத்திக் கொண்டு இருநூற்று முப்பத்தஞ்சு ஆனையும் கைக் காணிக்கையாக மதுரைக்குப் போயி மகாராசா யவர்கள் சன்னிதானத்திலே விண்ணப்பம் செய்து கொண்ட யிடத்தில் மெத்தவும் சந்தோஷித்து

இப்படிக் கொத்த வீர சூரனாகிய முத்துவேல்மணி சந்திர கோப்பண மன்றாடியாருக்கு அநேக உடுகரையும் கட்டுச் செய்து ஆனையின் பேரில் பட்டணப் பிரவேசம் செய்து பச்சப்பல்லாக்கும் பகல் தீவட்டியும் உபய சாமரமும் ரண பாஷிக்கமும் முத்து துராயும் செங்கோல் முத்திரையும் வெட்டவாளும் கட்டக் கயிறும் வாத்தியமும் நரகெச வாத்தியமும் இது முதலாகியதெல்லாம் கட்டுச் செய்வித்து அய்யாயிரம் பெலங்களுக்கு சம்பள உத்தாரமும் குடுத்து யிது நால்ப் பங்கு எல்லைக்குட்பட்ட காஞ்சி நதி தீரத்து வெள்ளியங்கிரி நகரத் திலிருந்து கொண்டு நஞ்சை புஞ்சை மாவடை மரவடை அணை வாய்க்கால் முதலியதெல்லாம் தேவதாயம் விருமதாயம் ஊளிய மானியம் தேரு திருனாள் கட்டளை மதுரை அஸ்த்தாந்திரத்துக்கு தினக் குத்தகையாக வருஷம் ஒன்றுக்கு சுத்த திருவால் சக்கரம் 83 ஆயிரம் பொன் வருஷம் ஒன்றுக்கு வயல்களிலே நெல் சலகை 50700 சலகைக்கும் தாரணை மேரைக்கு கிரயம் சகிதமாகக் கொடுக்கத் தக்கதாகக் கட்டுச் செய்து யிந்தச் சீர்மையிலுள்ள சுங்கம் மகமை சகிதமாகக் கொடுக்கத் தக்கதாகக் கட்டுச் செய்து யிந்தச் சீர்மை யிலுள்ள சுங்கம் மகமை சகிதமாக அனுபவிச்சுக் கொண்டு செங்கோல் வரை வழுவாமல் சுவாமி காரியம் முக்கியமாக நடந்து கொள்ளச் சொல்லி உடுகரை வெகுமதியும் கொடுத்து உப்பராப் பாளையப் பட்டுப் பேரையும் கைசேத்தி

யிவர்களுக்குப் பெரிய முதன்மையாகிய பெரிய வீட்டுக் காரணாக நடந்து கொள்ளச் சொல்லி மகராசா அவர்கள் அப்பணை யானபடியினாலே அதுவே மேரைக்கு தலத்தில் வந்து சுகமேயிருந்து கொண்டு அப்படி யிருக்கிற நாளையிலே குருக்களுக்கு மானியம் வெள்ளியங்கிரி நகரத்திலே 50 மா நிலமும் குறிஞ்சி நகரத்தில் 7 மா நிலமும் பேரூரிலே 13 மா நிலமும் திறக் கொண்டு அருளியிருக்கிற காலத்திலே பெரிய களந்தை நகரத்தில் மூன்று மிடாக் காடும் ஆறு தோட்டமும் யிப்படி யிருக்கிற காலத்திலே

வருஷம் பிரதியும் வைய்யாபுரிக்கு தைத் திருவிழாவுக்கு பழனியாண்டவர் தரிசனமாகப் போயிருந்த இடத்தில் விசயகிரி வேல சின்னோப நாயக்கன் எங்களுக்கு விருந்து உண்ணச் செய்து வினவின

படியினாலே கோபித்துக் கண் சிவந்து கொக்கரித்து ஆர்ப்பரித்து ஆண்டவர் திருவுளப் புத்தியினாலே எல்லை தாட்டி கிணத்துக் கடவுக்கு வந்த மூன்று நாள் ஆறு பொழுது அன்னம் ஆகாரம் இல்லாமல் இருந்தபடியினாலே ஆண்டவர் கிருபா கடாட்சம் வந்து களிகூர்ந்து திருவுளம் பற்றின விபரம் ஆகையால் இவ்விடத்திலுள்ள மலையில் குரா மரத்தடியில் பாத தாமரையும் பதித்து நிலைகொண்டு இருந்தபடியால் பொன்மலையாண்டவர் என்றும் நிலையாக இருப்ப தாக ஆனபடியினாலே கோயில் கட்டிச் சுவாமி தண்டாயுதபாணியும் உண்டாக்கி

இந்த சுவாமி பிரதிஷ்டை னாட்டாமை அழகிய கவுண்டனை அழைக்கச் செய்து யிந்த கனகசபை பெரிய முதலி பண்டிதரை அழைக்கச் செய்து இந்தச் சுவாமி காரியம் அஷ்டபந்தனம் பிரதிட்டையும் செயிவிச்சு அவர்கள் இடத்தில் உபதேசம் செயிவிச்சுக் கொண்டு யிந்தக் குரு புத்திரனாகிய பூமி பாலகர் இம்முடிப் பட்டம் கோப்பண மன்றாடியார் புத்திர மித்திர களத்திராதிகள் உள்ள வரைக்கும் உடல் பொருள்ஆவி மூன்றும் குருவுக்கே தாரா தத்தமாக தெத்தம் செய்து மானியம்.

குருக்கப்பாளையத்திலே யிருநூற்றி யிருவத்திநாலு வள்ளக் காடும் யிதுக்குச் சிலாசாசனமும் மதுக்கரை ஓபளியில் தொண்ணூற்றி ஆறு வள்ளக் காடும் சிவியாருக்குக் குடுத்து அதுக்கு சிலாசாசனமும் யிந்தப் பிரகாரத்துக்கு நடந்து அதுவே மேரைக்கு செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொண்டு யிந்த தர்மம் சாசனம் எப்பவென்றால்

கலியுக சகாப்தம் 4367க்கு மேல் செல்லா நின்ற ஆனந்த வருஷம் தை மாதம் 20 தேதி திரயோதசியும் வெள்ளிக்கிழமையும் சோதி நட்சத்திரமும் பெற்ற சுபதினத்தில் யெழுதின சாதனம், யென்ன வென்றால் யெங்களுக்கு உள்ள சாமிதிக வெங்கிட்ட கிஷ்ட ணய்யன் கணக்கு தானப்பமுதலி அழகிய கவுண்டன் ராயகவுண்டன் பாரபத்தியம் கோபால அய்யன் சேனபோகம் அப்பய்யன் கணக்கு முத்து வேல்பிள்ளை சின்னத்தம்பிக் கவுண்டன் கெங்காதரம்பிள்ளை பெரிய குமரசாமிக் கவுண்டன் பழனிக் கவுண்டன் குப்பாண்டாக் கவுண்டன் பேரூரு சிதம்பரம் பிள்ளை சங்கரலிங்க கவுண்டன்

பின்னும் நாட்டிலுள்ள பேர் சம்மதமாக ஒத்தைக்கால் மண்டபத்தில் புற்றிடங் கொண்டீசருக்கு மானியம் 20 வள்ளக் காடும்.

அவிடத்திலே சுவாமி காரியத்துக்கு முக்கால் பணம் மகமையும் கனகசபை பெரிய முதலி பண்டிதருக்கு கால்பணம் மகமையும் பொன் மலையாண்டவருக்கு முப்பது நாள் முறையும் நீங்களே அனுபவிச்சுக் கொண்டு சிவஸ்தலம் கணபதி துர்க்கை ஒரு இடத்தில் யியெழு தோறும் ஒரு இடத்தில் பிறந்தாலும் நீங்களே அனுபவிச்சுக் கொண்டு வரவும். உமக்கு நாங்கள் அடிமையானதுனாலே சந்திர சூரியர் உள்ளவரக்கும் ஆகாசம் பூமி உள்ளவரைக்கும் யிந்த தர்மத்தை அனுபவிச்சுக் கொண்டு வரவும்.

யிந்த தர்மத்தை பரிபாலனம் செய்த பேர்கள் அடுமை அயிசுவரிய சம்பன்னராகி தேவ தத்துவத்தையடைந்து சாயுட்சய பதவியடை வார்கள். யிந்த தர்மத்தை யாதொருத்தன் விகாதம் செய்த பேர்களுக்கு காசி சேத்திரத்தில் கெங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற பாவங்களிலே போவான். யின்னம் தெண்டகாரண்யத்திலே யிருந்து பிறந்து கொந்தூவராயி அனேக நரகத்தை அனுபவிப்பார். யின்னம் சதி ஆருண்ணதி பிசாசாயிருந்து அனேக நரகத்தை அனுபவிப்பார்கள். யிந்த தர்மங்களை வரை கடவாமல் நடத்திக் கொண்டு வந்த பேர்களுக்கு பொன்மலை வேலாயுத சுவாமியார் அவர்கள் வேண்டிய பாக்கியத்தையும் புத்திர மித்திர களத்திராதிகளும் கொடுத்து ரட்சிப்பார்கள்.

# 9. கோப்பண மன்றாடியார் கொடைச் செப்பேடு

புரவிபாளையம் வேட்டுவர் சமூகப் பாளையக்காரராகிய இம்முடி கோப்பண மன்றாடியார் ராமச்சந்திர பட்டர் என்பவருக்குக் கொடுத்த கொடையை இச்செப்பேடு கூறுகிறது.

மயிலம்பட்டிக் கிராமத்தில் வாமநீலிப் பிள்ளையார் காடு, சின்ன வெங்கக்கல் காடு, பெரிய வெங்கக்கல்காடு, பூனைக்காடு, ஊசிப் புரக்காடு, பள்ளக்காடு ஆகிய இடங்களில் மொத்தம் 30 வள்ளக் காடு கொடையாகக் கொடுக்கப்பட்டது. (120 ஏக்கர்)

இம்முடிக் கோப்பண மன்றாடியார் விசயநகர அரசர்களின் பிரதிநிதி (காரியத்துக்குக் கர்த்தர்) என்று கூறப்படுகிறார். கொடை அளிக்கப்பட்ட ஆண்டு கி.பி. 1400 என்று கூறப்பட்டுள்ளது.

## மூலம்

ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் ஆரிய தள விபாடன் ஆரியர் மோகம் தவிர்த்தான் ஒட்டிய தளவிபாடன் ஒட்டிய மோகம் தவிர்த்தான் துலுக்கர் தள விபாடன் துலுக்கர் மோகம் தவிர்த்தான் ஆறிலொன்று கடமை கொண்டு அருள் பெருகி அன்பு கூர்ந்து ஆதுலர் சாலையும் அந்தணர் வேள்வியும் வேத ஒலியும் விழாவறா வீதியும் தபோதனர் மடங்களும் இச்சையில் முப்பத்துரண்டு அறமும் விளங்கிய எம்மண்டலமும் திறைகொண்டருளிய ராசாதிராசன் ராச பரமேசுவரன் ராசமார்த்தாண்டன் ராசகெம்பீரன் ராசமனோபயங்கரன் ராசகுலதிலகன் கடல் கலங்கினும் காவேரி வத்திலும் மலை குலுங்கிலும் மனம் கலங்காத கண்டன் கண்டனாடு கொண்டு கொண்டநாடு கொடாதான்.

மண்டலீகர் கண்டன் பொறுமைக்குத் தருமர் கொடைக்குக் கர்னன் மல்லுக்கு வீமன் வில்லுக்கு விசையன் பரிக்கு நகுலன் சாஸ்த்திரத்துக்குச் சகாதேவன் அறிவுக்கு அகத்தியன் அழகுக்கு அனங்கன் சொல்லுக்கு அரிச்சந்திரன் பாஷைக்குத் தப்புவராத கண்டன் அசுபதி கெசபதி நரபதி தனபதி ரத்தின சிம்மாசன ரூடராகிய ஆனைகொந்தி மகாராய பிரபுடதேவ மகாராய மல்லிகார்ச்சுனராய விருப்பாட்சிராய பிரபுட தேவராய இப்படி யிவர்கள் காரியத்துக்குக் கர்த்தராகிய இம்முடிப் பட்டத்து கோப்பண மன்றாடியாரவர்கள்.

ராமச்சந்திர பட்டருக்கு சகிரன்யோதக தான சாசனமானது கலியு சகாப்தம் 4501க்கு மேல் செல்லா நின்ற ஆனந்த வருடம் புரட்டாசி மாதம்15 தேதி சுக்கிரவாரம் விசயதசமியும் உத்தர நட்சத்திரமும் சுபநாம யோகமும் பாலவாகரணமும் பெற்ற சுபதினத்தில் ராமச் சந்திரப் பட்டருக்கு சகிரன்யோதக தானமாகக் குடுத்த பூமிக்கு விபரம்.

மயிலம்பட்டிக் கிராமத்தில் புன்சையில் மயிலம்பட்டியிலிருந்து பனையம்பட்டிக்குப் போர இட்டேரிக்கு வடக்கு சித்தூரிலேயிருந்து குமிலுக்குப் போல இட்டேரிக்கு மேற்கு எல்லைப் பள்ளத்துக்குத் தெற்கு வாமனக் கல்லுக்கும் கிளக்கு யிந்த நாற்பாங்கு எல்லைக்கு உட்பட்ட பூமிக்கு புஞ்சை வாமநீலிப் பிள்ளையார் காடு வள்ளம் 6 இதன் கிளக்கு சின்ன வெங்கக்கல் காடு வள்ளம் 3 இதின் கிளக்கு பெரிய வெங்கக்கல் காடு வள்ளம் 6 யிதின் தெற்கு பூனைக்காடு வள்ளம் 8 யிதின் மேற்கு ஊசிபுர காடு வள்ளம் 3 யிதின் மேற்கு பள்ளக்காடு வள்ளம் 4 ஆக வள்ளம் 30 இந்த முப்பது வள்ளக்காடும் ராமச்சந்திர பட்டர் புத்திர பவுத்திர பாரம்பரியமாயி சூரிய சந்திரர் உள்ள வரைக்கும் அனுபவித்துக் கொள்ளுவாராகவும்,

இந்த தர்மத்தைப் பரிபாலனம் செய்தவர்கள் காசி ராமேசு வரத்தில் தர்மத்தைப் பரிபாலனம் செய்தவர்கள், காசி ராமேசுவரத்தில் கோதானம் பூதானம் அன்னதானம் சுவர்ண தானம் கன்னிகாதானம் அனேக புண்ணியங்களைச் செய்த பலனைப் பெறுவாராகவும், யிந்த தர்மத்துக்கு யாதாமொருத்தன் விகாதம் செய்த பேர்கள் கெங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற தோசத்திலே போவாராகவும் இப்படிக்குத் தர்ம சாசனப் பட்டயம் எழுதினது தலத்துக் கணக்கு கந்தசாமி கையெழுத்து.

# 10. பொருளூர் நல்ல பெரியாக் கவுண்டர் பட்டக்காரர் வமிசாவளி

## *தாராபுரம் தாலுக்கா பொருளூர் பட்டக்காரருடைய கைபீது*

தாறாபுரம் தாலுகாவுக்கு சேற்ந்த பொருளூறுலே யிருக்கிற மேல் கரை தலைய நாட்டு நல்ல பெறியாக் கவுண்டன் யெண்ணப்பட்ட பட்டக்காரறுடைய வம்சாவளி முதலான கைபீது யென்னவென்றால்

பூற்வத்தில் பாண்டியறாசா நாளையில் இந்த சீமையில் செட்டி, சிவபிறாமணாள் காணியாளற்காளாஇ யிருந்தார்கள். அக்காலத்தில் ஒட்டிய நெண்ணப்பட்டவன் மேற்படி செட்டி சிவபிறாமணாளை கஸ்டப்படுத்தினபடியினாலே அந்த அங்காமிக்கு பொறுக்கமாட்டாமல் கஷ்டப்பட்டு உத்திரதேசத்துக்கு போனாற்கள்.

அக்காலத்தில் உத்திரதேசமான காளஹஸ்தி பிறதேசத்தில் ஸ்ரீகாளஅஸ்தீஸ்வரனுடைய அனுகிறகஹத்துநாலே கண்ணப்பனுடையர் யெங்குற சிவபக்தனுடைய வம்சத்தில். வேட்டுவ சாதியென்று முத்துறாசாக்கள் யென்று, பேற் பிறசித்தி பட்டவர்களாஇ றாட்சியாதிகாரம் பண்ணிக் கொண்டு வரும் நாளையில்.மேற்படி பிறதேசத்தில் காறியகற்தனாகிய சக்கிறபாணி றாசரிடத்தில் வந்து செட்டி சிவபிறாமணர்கள் பட்ட சிறமங்கள் யெல்லாம் சொல்லிக் கொண்டு ஒட்டியனை அடக்கி போட்டு யெங்களைக் குடிநிலைக்கு பண்ண வேணுமென்று சொல்லிக் கொண்டாற்கள்.

அதற்கு சக்கிறபாணி றாசா சொன்னது; ஒங்கள் தேசாதிபதியான பாண்டியறாசா அவற்கள் யிடத்தில் சொல்லி கேளுங்கோள் யென்றும், ஒட்டியன் அவாளுடைய மனுஷநானபடியினாலே அவாள் அடக்கி ஒங்களை குடிநிலைக்க பண்ணுவாற்கள் யென்றும், அப்படிக்கு அவாள் மனுஷ்யராலே ஆகாமல் போனால், பாண்டியறாசா

யெங்களுக்கு யெளுதி அனுப்பிவிச்சால் நாங்கள் யெங்கள் மனுஷாளெ அனுப்பிவிச்சு ஜெயம் பண்ணிவிச்சு குடுக்குரோமென்று சொன்னாற்கள்.

செட்டி சிவபிறாமணாள் மறுபடி பாண்டிய றாசா அவர்கள் யிடத்தில் வந்து சேற்ந்து ஒட்டியனை சம்ஹாரம் பண்ணுகுறதற்கு காளஹஸ்தி பிறதேசத்து முத்து றாசாக்களை தறுவிக்க வேணுமென்று சொல்லி கொண்டபடியினாலே, பாண்டிய றாஜா அவர்கள் அந்த ஒட்டியனை சம்ஹாரம் பண்ணப்பட்டவருக்கு அந்த சீமையை குடுப்பிவிக்குரோமென்று காளஹஸ்தி பிறதேசத்துக்கு சக்கிறபாணி றாசா அவற்களுக்கு யெழுதி அனுப்பிவிச்சாற்கள்.

அந்த சமயத்தில் சக்கிறபாணி றாசா அவர்கள், முத்து றாசாக்கள் கூட்டத்தில் யெளுவது தண்டிகைக்காறர்களை தெற்கு பிறதேசத் துக்குப் போகும்படியாக நேமுகம் செயிதாற்கள்.

காளஹஸ்தி பிறதேசம் விட்டு யெளுவது தண்டிகைகாறர்களும் பிறப்பட்டு, தெற்கு னோக்கி பாண்டிய றாசா அவற்கள் பேட்டி பண்ணி கொண்டு, ஜயபேறி வாங்கி கொண்டு ஒட்டியனெ யுத்தம் பண்ணி ஜயம் பண்ணின படியினாலே யெளுவது தண்டிகைக் காறர்களுக்கும் அவாளவாளுக்கு அத்து பிறிச்சு கிறாமங்களை விட்டாற்கள்.

அவற்களிலே யெங்கள் பெறியோற்கள் வம்சத்துலே துறைத் தனத்தில் சுந்தரறபாண்டிய வள்ளல் யெங்குறவற் தலைய னாட்டு பாளையகாற் பட்டக்காரர் யென்று பேற் பிறசித்தி பட்டவற்களாஇ பிறபுத்துவம் பண்ணி வறுகுற நாளையில், தலைய னாடு சீற்மை கிறாமங்களிலே பிறிவு பண்ணி பாண்டிய றாசா அவற்கள் சமக்ஷத்துலே மேல்கரை தலைய நாட்டு கிறாமங்களுக்கு யெங்கள் பெறியோற்கள் பெறியாக் கவுண்டர் யெண்ணப் பட்டவற்களுக்கு சகல வெகுமதிகளும் குடுத்து, மேல்கரை தலைய னாட்டுப் பட்டக் காரர் யென்று பட்டமும் கட்டி, வள்ளல் பெறியாக் கவுண்டற் யென்று பேறும் குடுத்தாற்கள்.

அந்தநாள் முதல் மேல்கரை தலைய நாட்டு பட்டக்காரர் யென்று பட்டம் ஆண்டு வறுகுறவாளுக்கு, வள்ளல் பெறியாக்

கவுண்டற் யென்றும், நல்ல பெறியாக்கவுண்டர் யென்றும், யெங்கள் வம்ச பரம்பரையாற் பட்டப் பேறாயி நாமதேயம் வைச்சு கொண்டு வந்தாறகள்.

அந்தநாள் முதல் மேல்கரை தலையனாடு யென்று பட்டம் ஆண்டுவந்த வறிசைகளும் அவாளவாளுடைய சறிதைகளும் தெறியவில்லை.

சாலிவாகன சகாப்தம் 1301 முதல் பட்டம்களுடைய வறிசை களும் அவாளுடைய காலத்துலே நடக்கப்பட்ட வறலாறும் இதின் கீளே யெளுதி வறுகுறபடி இதில் தெறிய வறுகுறது.

சாலிவாகன சகாபுதம் 1301க்கு சித்தாறத்தி வருஷம் முதல் பட்டங்காளண்டவற்

1. நல்ல சிறுவு பெறியாக் கவுண்டற் பட்டம் ஆண்ட வருஷம் 22
2. யிவற் குமாரன் நல்ல பெரியாக் கவுண்டற் பட்டம் ஆண்ட வருஷம் 36
3. யிவற் குமாரன் வள்ளல் பெரியாக் கவுண்டற் பட்டம் ஆண்ட வருஷம் 42
4. யிவற் குமாரன் நல்ல பெரியாக் கவுண்டற் பட்டம் ஆண்ட வருஷம் 15
5. யிவற் குமாரன் வள்ளல் பெறியாக் கவுண்டற் பட்டம் ஆண்ட வருஷம் 8
6. யிவற் குமாரன் நல்ல பெரியாக் கவுண்டற் பட்டம் ஆண்ட வருஷம் 19
7. யிவற் குமாரன் வள்ளல் பெறியாக் கவுண்டற் பட்டம் ஆண்ட வருஷம் 26
8. யிவற் குமாரன் நல்ல பெரியாக் கவுண்டற் பட்டம் ஆண்ட வருஷம் 52
9. யிவற் குமாரன் வள்ளல் பெறியாக் கவுண்டற் பட்டம் ஆண்ட வருஷம் 44

10. யிவற் குமாரன் நல்ல பெரியாக் கவுண்டற் பட்டம்
ஆண்ட வருஷம் 25

11. யிவற் குமாரன் வள்ளல் பெறியாக் கவுண்டற் பட்டம்
ஆண்ட வருஷம் 22

12. யிவற் குமாரன் நல்ல பெரியாக் கவுண்டற் பட்டம்
ஆண்ட வருஷம் 29

13. யிவற் குமாரன் வள்ளல் பெறியாக் கவுண்டற் பட்டம்
ஆண்ட வருஷம் 46

13 386

மேல் யெழுதப்பட்ட தலைமுரைகளில் அவாளவாளுடைய நாளில் நடந்து வந்த சறிதைகளும் அதனுடைய வயணங்களும் யெழுதப்பட்டது.

ரெண்டான் தலைமுறைக்காற பட்டக்காரர் நல்லபெறியாக் கவுண்டற் மறுளபட்டியிலே கோட்டையும்போட்டு, சிறிது சனத்தையும் சேத்திக் கொண்டு, அக்காலத்து றாச்யாதிபதியான துரைகள் வுத்திரவு படிக்கு நடந்து கொண்டு பட்டம் ஆண்டு யிறுந்தார்கள்.

அஞ்சான் தலைமுறைக்காற பட்டக்காறர் வள்ளல் பெரியாக் கவுண்டற் நாளையில் கிளாங்குண்டல் கிராமத்தில் கோட்டையும் போட்டு, சிறிது சனத்தையும் கட்டி கொண்டு, அக்காலத்து றாச்யாதி பதிகளுடைய தயவு சம்பாதிச்சு கொண்டு பட்டம் ஆண்டு கொண்டு யிறுந்தார்கள்.

சாலிவாகன சகாப்தம் 1687க்கு விய வருஷம், தை மாதம் 13 தேதி, சுக்குறவாரம், நாள் 20, தோப்பநாற் தெயிவகதியானதின் பிறகு, யெனக்கு அக்காலத்துக்கு மயிசூறு சமுஸ்தானத்துக்கு துரையளான அயிதறலிகான் சாயபு அவர்கள் துரையவர்கள் நாளையில், இந்த சீற்மை அதிகாரத்துக்கு வந்த பீமறாயற் அவர்கள் உத்தறவு படிக்கு நாடனைவறும் கூடி பட்டமும் கட்டி நல்ல பெரியாக் கவுண்டற் யென்று பேறும் வெளங்கப் பண்ணிநாற்கள்.

அந்த நாள் முதல் அறமனையார் யிட்ட கட்டளை படிக்கு நடந்து கொண்டு வந்தேன்.

மஹா ராஜ ராஜஸ்ரீ கும்பிணி சறுக்காறு ஆனநாள் முதல் நாளது வரைக்கும் துரைகள் தயவுக்கு பாத்திரனாயி இப்படி துரை கிறாமத்தில் குடித்தினம் பண்ணிக்கொண்டு துரைகள் தயவுக்குப் பாத்திறநாயி மெத்த யேளையாயி ஆசறுலே காத்துக் கொண்டு யிறுக்குரேன்.

**நல்ல பெரியாக்கவுண்டன் ருசு.**

# 11. காக்காவாடி வேங்கடாசல நல்லண்ண கவுண்டர் வமிசாவளி

வெங்கல னாட்டுப் பட்டக்காரரான காக்காவாடி பட்டக்காரர் வேங்கடாசல நல்லண கவுண்டன் கயிபீது புக்கு.

தாராபுரம் துக்குடிக்குச் சேர்ந்த அரவக்குறிச்சி தாலுக்கா மவுசே காக்காவாடி கிராமத்திலேயிருக்கும் வேங்கடாசல நல்லண்ண கவுண்டன் என்னப்பட்ட பட்டக்காரனுடைய வம்சாவளி மொதலான கைபீயது என்னவென்றால்,

பூர்வத்தில் குறுகுல வம்சமான க்ஷத்திரிய சாதியில் ஸ்ரீ காள ஹஸ்திபுரத்தில் வாஸஸ்த்தனான ஈசுவர கடாட்சத்தினாலே பூஜை பண்ணிச் சுவாமியினுடைய அனுக்கிரகம் பெற்ற கண்ணப்ப நாயனார் என்கிறவருடைய வேட்டுவச் சாதியில் காளஹஸ்திபுரத்துக்கு ராஜாவான நாகராசர் என்னப்பட்ட வமிச பரம்பறற்களிலே முத்து ராஜாக்கள் கூட்டம் என்று பேர் பிறசுத்தி பட்டவர்களாய் இருக்கும் நாளையில், அக்காலத்தில் கொங்கு தேசமான சேரன் றாச்சியத்தில் சிவ பிராமனாள், செட்டியள் காணியாட்சிகாரறாய் இருக்கிற நாளையில் அக்காலத்தில் ராச்யாதிபதிகளான சேற, சோள, பாண்டியர் மூன்று ராசாக்களிடத்திலேயு மிருக்கப்பட்ட காறியஸ்தாள் மூணுபேரும் சீமைகளிளே குடிகளை மிகவும் அங்காமி பண்ணிக் கொண்டு இருக்கும் நாளையில் அங்காமிக்கு பொறுக்கமாட்டாமல் குடிகளான சில பிறாமணாள் செட்டியள் போயி பாண்டிய ராசா அவர்களிடத்தில் மனுவு சொல்லிக் கொண்டு அவாளை மூன்று பேரையும் செயிக்கிறதுக்காக யெளுவது தண்டிகைக் காறர்களிலே முத்துராசா கூட்டத்தில் பெரியலூறுலே குடியிருக்கும் நல்லண்ணன் யென்னப் பட்டவனை அளப்பிச்சு அங்காமி நிவற்த்தி பண்ண சொன்ன

படியினாலே அவன் போய் மூன்று பேரையும் செயிச்சபடியினாலே பாண்டியராசா பட்டமுங் குடுத்து பட்டப்பேர் விளங்கும்படியாக கிதாப்பு விறுதுகள் முதலானதுகள் யிதின்கீள் யெளுதி வறுகுறது.

பாண்டிய தேசாதிபதியான சவுந்திரபாண்டிய ராசா அவர்கள் நாளையில் ஒட்டியனை செயிச்சபடியினாலே தேசிகாறன் காளஹஸ்தி காரன் யிருவருக்கும் பட்டமுங் குடுத்து பல்லக்கு, வுபயசாமரம், சுறுட்டி, வெட்டுப்பாவாடை, ட...... கார டால், சாமதொரோக வெண்டயம் இது முதலான விறுதுகளும் குடுத்து வெங்கலநாடு யென்னப்பட்ட நாட்டுக்கு கிறாமங்களை விட்டு பாளையகாறதனமாய் நேமுகம் பண்ணியிருந்தார்கள்.

அக்காலத்தில் பாளைய பிறுபுத்துவகாரனான தேசிகாறன் காளஹஸ்தி ராசனுடைய சகோதரனான நீலியப்பக்காரன் நல்லண்ணக் காரன் இறுவரும் பாண்டியராசா அவர்கள் கடாட்சத்துனாலே பட்டமுங் கட்டிக் கொண்டு வெங்கல நாட்டு ஆம்பறாவதி தென்கரை பட்டக் காரரென்று பேர் பிரசித்தி பெற்றவர்களாயி இருந்தாார்கள்.

பாண்டியறாசா அவர்களுக்கும், சேரராசா அவர்களுக்கும் யுத்தப்பட்டு அக்காலத்தில் பாண்டியராசா அவர்கள் தம்முடைய லாகாவில் இருக்கப்பட்ட பாளையக்காரரை வரச் சொல்லி உத்திரவு செய்துயிருக்கும் வேளையில் அந்தச் சமயத்தில் வெங்கலநாட்டு ஜனங்களை வெட்டிக்கு வெறகு வெட்டிக் கொண்டு வறச் சொல்லி உத்திரவு செயிது யிருக்கும் வேளையில் அது வேலை செயிகுர தில்லை யென்று பிறிதிவாதத்துக்காக காலை வெட்டி வேக பண்ணினார்கள். அதுநாலே யிந்த நாட்டுக்கு வெங்கால னாடென்று பேர் கொடுத்தார்கள்.

இப்படிக்கு பட்டம் ஆண்டு வருங்காலத்தில் வெகுநாளான படியினாலே தலைமுரைகள் இத்தனையென்று தெரியவில்லை.

சாலிவாகன சகாபுதம் 1383க்கு சித்திரபானு வருஷம் முதல் பட்டங்களுடைய வரிசைகளும் அவாளவாளுடைய நடத்தையளும் இதன் கீழே யெழுதி வருகிறது.

1. முதல் தலைமுறை செட்டி நல்லண்ண கவுண்டன் பட்டம் ஆண்ட வருஷம் 32
2. யிவற் குமாரன் நல்லண்ண கவுண்டன் பட்டம் ஆண்ட வருஷம் 28
3. யிவர் குமாரன் நல்லண்ண கவுண்டன் பட்டம் ஆண்ட வருஷம் 26
4. யிவர் குமாரன் செட்டி நல்லண்ண கவுண்டன் பட்டம் ஆண்ட வருஷம் 23
5. யிவர் குமாரன் பசுபதி நல்லண்ண கவுண்டன் பட்டம் ஆண்ட வருஷம் 21
6. யிவர் குமாரன் வெங்கிடாசல நல்லண்ண கவுண்டன் பட்டம் ஆண்ட வருஷம் 34
7. யிவர் குமாரன் பெரிய நல்லண்ண கவுண்டன் பட்டம் ஆண்ட வருஷம் 23
8. யிவர் குமாரன் பசுபதி நல்லண்ண கவுண்டன் பட்டம் ஆண்ட வருஷம் 29
9. யிவர் குமாரன் பெரிய நல்லண்ண கவுண்டன் பட்டம் ஆண்ட வருஷம் 28
10. யிவர் குமாரன் செட்டி நல்லண்ண கவுண்டன் பட்டம் ஆண்ட வருஷம் --
11. யிவர் குமாரன் பசுபதி நல்லண்ண கவுண்டன் பட்டம் ஆண்ட வருஷம் 17
12. யிவர் குமாரன் பசுபதி நல்லண்ண கவுண்டன் பட்டம் ஆண்ட வருஷம் 33

12 300?

சாலிவாகன சகாபுதம் 1709க்கு பிலவங்க வருஷம் வரைக்கும் பட்டம் ஆண்ட 12க்கு ஆண்ட வருஷம் 326. முதல் தலைமுறை பட்டக்காரனான செட்டி நல்லண்ண கவுண்டன் நாளையில் தன்னுடைய சகோதராள் தேசிகாரன் யிடத்தில் பிறிவு பண்ணி கொண்டு பட்டக்காறனென்று பேற பிரசுத்தி பட்டவராய் காக்காவாடி கோட்டை முதலானதுகள் உண்டு பண்ணி கொண்டு சிறிது

சனங்களுடனே சறுகாறுக்கு யென்றும் வூளியம் செயிது கொண்டு கிராமமும் அனுபவிச்சுக் கொண்டுயிருந்தார்கள்.

அதின் பிற்காலம் ஒன்பதாம் தலைமுறைகாரரான பெரிய நல்லண்ண கவுண்டன் நாளையில், அக்காலத்தில் ராச்சியாதிபதி யான மதுரை சமுஸ்தானத்துக்கு கர்த்தராகிய நாயக்கரவர்கள் கூட்டத்து துரைத்தனத்தில் பாளையப்பட்டுகாரர்களில் ராமகிரி சாமயனாயக்கர் மலைமுளிங்கி முந்தேனாயக்கர் யிறுவது சீமைகளிலே சில்லரை பண்ணி அங்காமி பண்ணி கொண்டுயிருக்கும் நாளையில் அற மனையாற் உத்திரவுபடிக்கு அவாளை செயிச்சு அங்காமியை நிறுத்தின படியினாலே நாயக்கரவர்கள் மிகவும் சந்தோஷப்பட்டு வெகுமதி பண்ணி முத்து துறாயி பிறுது கொடுத்தார்கள்.

பணிரெண்டான் தலைமுரைகாறனான பட்டக்காரன் யென் தோப்பனாறான பசுபதி நல்லண்ணகவுண்டன் நாளையில் அக்காலத்தில் மயிசூறு சமுஸ்தானத்துக்கு கர்த்தாக்களுடைய காரியத்துக்கு கர்த்தரான தளவாஇ நஞ்சறாசயற் நாளையில் திரிச்சினாப்பள்ளியாற் பேரிலே பாளையம் எடுத்து போறபோது சிறிது சனங்களுடனே கூட வறச் சொல்லி உத்திரவு செய்தபடியினாலே கூட போய் இருக்கும் சமயத்தில் திருச்சினாப்பள்ளிக்குச் சேர்ந்த சமயபுரத்தில் திருச்சினாப்பள்ளி யாருக்கு ரஸ்துகள் சேந்துயிருந்தபடியினாலே அப்போ மைசூர் கர்த்தாக்களிடத்தில் ஒபளிகாரனான அயிதரல்லிகானையும் பசுபதி நல்லண்ணகவுண்டனையும் இருவரையும் தருவிச்சு அந்த ரஸ்துகளெ யெல்லாம் பிடுங்கிக் கொண்டுவரச் சொல்லி உத்திரவு பண்ணினார்கள்.

சமயபுரத்திலே யிருந்த திருச்சினாப்பள்ளியார் ரஸ்துகளுக்கு காத்துயிருந்த சனங்களை அடிச்சு துறத்திவிட்டு அந்த சறுதாரனையும் வெட்டி ரஸ்துகளை எல்லாம் பிடுங்கிக் கொண்டு தளவாய் நஞ்சய றாசயற் அவர்கள் இடத்தில் கொண்டு வந்து வச்சபடியினாலே பதக்கங்களையும் பதக்கம், முத்து, ஒட்டி முதலான வெகுமதிகள் பண்ணினார்கள்.

சாலிவாகன சகாபுதம் 1710க்கு யென் தோப்பனாறான பசுபதி நல்லண்ண கவுண்டர் தெய்வகதி அடைஞ்சார். அன்னேறத்தில் கீலக

வருஷம் ஆனி 15 புதன்கிழமை நாள் அக்காலத்தில் டிப்புசுல்தான் துரைத்தனத்தில் அறன்மனையாற் கட்டளையிட்டபடிக்கு நாடனை வரும் கூடி பட்டங்கட்டி வேங்கிடாசல நல்லண்ண கவுண்டன் எண்ணப்பட்ட பேர் விளங்க பண்ணினார்கள்.

முன்னாலே பூர்வத்தில் எங்கள் வமிசத்திலே யெங்களுக்கு பட்டவர்த்தியாஇ வெங்கால நாட்டு கிராமங்களிலே புஞ்சை தோட்டம் வுள்பட பெரியலூரு நஞ்சையிற் காணி 30. இது சருவ மானியமாகி நடந்து வந்து டிப்பு சுல்தான் நாளையில் சப்தி பண்ணிக் கொண்டார்கள்.

மகா ராஜ ராஜஸ்ரீ கும்பினியார் அவர்கள் தயவுக்குப் பாத்திரனாயி காக்காவாடி குடியிருப்புக் காரனாயி குடித்தனம் பண்ணிக் கொண்டு காத்துயிருக்கிறேன்.

வேங்கடாசல நல்லண்ண கவுண்டன் ருசுவு.

# 12. கபிலமலைச் செப்பேடு

கபிலக்குறிச்சியில் ஒரு வீட்டிலிருந்து நாமக்கல் தாசில்தார் மூலம் பெற்று மைய அரசு தொல்பொருள் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் இச்செப்பேட்டைப் படி எடுத்துள்ளனர்.

கபிலமலையில் உள்ள திருவள்ளுவர்குலப் பெருமாள் தம்பு ராஜனுக்குக் கபிலமலை, திருச்செங்கோடு, பழனி மடங்களை எழுதித் தந்து பல கொடைகளை விட்டதை இச்செப்பேடு கூறுகிறது.

கபிலமலையில் மலைக்கோயில், உச்சிப்பிள்ளையார் கோயில், பால்வாவி கட்டப்பட்ட விவரமும், தைப்பூச விழா விவரமும், விழாவின்போது திருமஞ்சன நீரினை அந்தணர் கொண்டு வர ஏற்பாடு செய்ததும், நடைக்கு 1/8 ரூபாய் கொடுத்த விவரமும், கபில மலைக் கோயிலுக்கும் திருமடத்திற்கும் வரி நிர்ணயம் செய்த விவரங்களும் விரிவாகக் கூறப்படுகின்றன.

வேட்டுவர் சமூகத்தைச் சேர்ந்த அல்லாள இளையா நாயக்கர் திப்புவின் காலத்தில் செய்த பல கொடைகள் விரிவாகக் கூறப் பட்டுள்ளன. வரி கொடுக்காவிட்டால் தண்ணிக்கிணற்று மறியல், தலைவாசல் மறியல், வீடு மறியல் என்பது இச்செப்பேட்டில் அறியப் படும் புதிய செய்தியாகும்.

1604 ஆம் ஆண்டு இச்செப்பேடு எழுதப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. திப்பு சுல்தானும் கூறப்படுகிறார். இச்செப்பேடு முற்றுப் பெறாமல் உள்ளது.

## மூலம்

ஹரி ஓம் நன்றாக.

வைய நீடுக மாமழை மன்னுக
மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக

சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே.

மகாமண்டலீசுறன் அரியதள விபாடன் பாஷைக்கு தப்புவறாயர் கண்டன் மூவறாய கண்டனாடு கொண்டு கொண்ட நாடு குடாத பெருமாள் எம்மண்டலமும் திறை கொண்டருளிய றாசாதிறாசன் றாசபரமேசுவரன் றாசமாத்தாண்டன் புங்கவன் றாசகேசரி வங்களர் சிங்களர் மறாட ரொட்டியர் சோனகர் சீனகர் பரிசாரர் குச்சரர் அரிமலை யாளர் மஷ்தகொடாரி பூலோகம் புறந்த னாளில் அசுபதி கெசபதி நரபதி நவகோடி நாறாயணன் உத்திர தெஷ்சன பூறுவ பச்சிம சமுத்திறாதிபதி சேறன் சோழன் பாண்டியன் வல்லாள றாய பயங்கறன் யீள முதலாய லங்காபுறியும் வாழால் வழிதிறந்த பெருமாள் மதியாத மன்னர் மகுடஞ்சிதைத்து பதி சூறை கொள்ளும் பறசுறாமன் அஷ்டதிக்கு மனோகர பயங்கரன் மொகங்கண்டு முறிபட்டோடுவார் கண்டன் நறலோக கண்டன் நாகசக்கிறவறுத்தி நறலோக சூரியன் துர்க்கதழ விபாடன் கெசத்தழ விபாடன் துலுக்கற்மோகந் தவிர்த்த ஒட்டியதள விபாடன் ஒட்டிய மோகந்தவிர்த்தான் கெசதள விபாடன் கெசபட்டறாயன் வேண்டியருளிய,

நரசிங்கறாயர், வசந்தறாயர், விருப்பாச்சிறாயர், பிறவிடதேவ றாயர், மகாதேவறாயர், ஆனகுந்திறாயர், சீறங்கறாயர், கரிமேலு தையன் பரிமேல் நகுலன் வில்லில் விசையன் சொல்லில் தறுமன் சாத்திரத்துக்குச் சகாதேவன் தோளுக்கு வீமன் பொறுமைக்குப் பூமா தேவி அறிவுக்கு அகஷ்தியன் தவசுக்கு வசிட்டன் ஒளிக்குச் சந்திரன் பிறுமா விட்டுணு ருத்திறன் விளங்கும் பூறுவபூறுவமென்று சொல்லப் படாநின்ற பூதலம் யீறேளு லோகமும், அதல விதல சுதல நிராதல தராதல மகாதல பாதாள பூலோகமென்று கீளேழுலோகமும், மேலேழு லோகமும், பூலோகம் புவலோகம் செனலோகம் தவலோகம் சத்தியலோகம் காலோகம் சிவலோகமென்று சொல்லப்படாநின்ற பதினாலு லோகமும். யிறுனூத்தி யிறுபத்தினாலு புவனமும், ஆயிறத்தித் தொன்னூற்று ஒன்பது நியமப்படை வீடும் சக்கிரவாழ கிரியும் சமுத்திரமு தீவும் பூமியைத் தாங்கப்படாநின்ற அஷ்ட கெசங்களும் ஆயிரமிதழ்பூண்ட புண்டரிகம் வாம்.... முற்தனம்

அஞ்சனப் பொடியும் கெந்தம் சாறூப சுப்பிறதீபம் அஷ்டகெசங்களும் அஷ்டதிக்குப் பாலகறும் அஷ்ட நாகமும் வேறு முதலாய அறியப் படாநின்ற பதிநெட்டு யுகமாவது.

முதலாக ஆனந்தநெம்பது அறையில் தோன்றியது. இரண்டாவது அற்ப்புதனென்னு முகத்தில் ஆகாச நச்செத்திறம் தோன்றியது. மூன்றாவது தயாறதனென்னும் முகத்தில் சந்திற சூரியன் தோன்றியது. னாலாவது தறாமுகத்தில் காற்று தோன்றியது. அஞ்சாவது தண்டகனெனு முகத்தில் நெறுப்பு தோன்றியது. ஆறாவது விண்ணவரென்னு முகத்தில் மலை தோன்றியது. ஏளாவது வினாயனெனு முகத்தில் .......... தோன்றியது. எட்டாவது மையகனெனு முகத்தில் மநு தோன்றியது. ஒன்பதாவது மையூகனெனு முகத்தில் வேதம் தோன்றியது. பத்தாவது மகாவிதன், பதினோராவது விசுவாசனெனு முகத்தில் சந்திராதத்தன், பனிரெண்டாவது மணியநெனு முகத்தில் சோதிறிஷம், பதிமூன்றாவது ஆங்கிற தண்டகன் விமான், பதினாலாவது அரவிந்தன் யுகத்தில் தற்மம், பதினஞ்சாவது கிரேதா யுகத்தில் தேவாசூறன், பதினாறாவது திரேதா யுகத்தில் மொறசு றாவணந் பதினேழாவது துவாபுற யுகத்தில் தற்மபுத்திரந் திரியோதனன், 18வது கலியுகத்தில் கலியந் னாலா வகையிலும் வாலு வேதம் ஆறு சாஸ்திரம் பதினெண் புராணமும் அறுபத்தெட்டு தெய்வாசாரம் முப்பத்திரெண்டு அறமும் அறுபத்து னாலு கலக்யானமும் அகச்சமயம் ஆறு பஞ்ச பூதங்களும் அஞ்சு மண்டலமும் மூன்று அறதநம் சாலோக சாறூப சாயிச்சியமெநு நாலு பதமும் தேவரிஷி பிரமரிஷி விஷ்ணுரிஷி முனியேசுபரன் பரமலோக மாமுனி துற்வாசமாமுனி கமண்டக மாமுனி கசமாமுனி நாரதமகாமுனி விட்டிண மாமுனி கவுதமமுனி கவுணியமாமுனி திவ்வியமாமுனி அகஸ்தியமாமுனி பிறசாமாமுனி அறவாசமாமுனி பிறஞ்சோதிமாமுனி யுக..... இப்படி நாற்பத்தெண்ணாயிரம் ரிஷியும் அறுபத்தாறாயிர முனியேஷ்பரரும் யிறுபத்தி நாலாயிரத் தொன்பது கோடி ருத்திரரும் ஆயிரம் கெறுடகாந்தருவரும் முப்பத்தி முக்கோடி தேவர்களும் முகம்முள்ளவர் கோடி பேறுகள் கோடிபெருங் கோளுக்கு சமாநமாகிய சதிர்கோடி யிப்படியாகொத்த பதிநாறு கோடி பேறும் பிறந்திருக்கிற பொளுது.

செற்றூர் கொடி நெநம் அப்படி யெழுந்திருக்கப்படாநின்ற யிஷ்பரன் வேத சாஸ்திர புறாணங்களும் ஆதிதேவனாகிய விரையில் லாத வித்தாகிய ஞானரூபமாகிய நிர்குணனாய் நிக்கிறகாசநாய் நிர்ஞான நிறாதனனாய் நிர்தயனாய் நிர்மலமாய் துரியசிதனாய் சச்சிதாநந்தனாய் அணுவுக்கணுவாய் அறுளுக்கு யெற்படாதவனுமாய் அளித்தவிடத்தில் அமுறதந் தரித்தவருமாகிய அணுவுக்கணுவாய் நடுவில் வித்தில்லாதவருமாய் ஆகம சாஸ்திர புறாணத்தாலே பிறுமா விட்டுணுவாலே காண்டற்கரிய எறும்புகடை ஆனைதலை என்பத்து நாங்கு உயிர்க்கும் கோடி செந்துகளில் சறுவாயறுமறைகள் செய்கிற மந்திரங்களுக்குத் தக்க மரங்களுண்டாக்கிவிக்கவும் கற்த்தாவா யெழுந்தருளிய கயிலாச மாயேந்திரவாதி பாகமும் மும்மூறத்தி பார்வதி யிறுதரானாகிய அகிலாண்டகோடி விறமாண்டநாயக நேரமொரு பஞ்சவர்ணப் பிரகாச பத்திப்பிறியாத கோலமாகிய மகாதேவர் புத்திரனாகிய சரவணபவ சண்முகப் பிறதாபன் குமரி திருமகன் கெணபதி சகோதரன் குக்குடதுவசன் தேவதேவன் தெய்வலோக நாயகன் தேவகண்ட கோகனகச் சிறம்குட்டி குடிமையை நெட்டைப் போக்கி கோல விறுமபதம் கொடுத்த குமாற கண்ட சூரன் பக்கரைப் பகட்டிய படைக்களத்தில் கொக்கரித்த குக்குடக்கொடிக் குமாரன் கூளி கொட்டப் பசாசுகள் கொக்கரித் தாள மொத்த துவசன் சூரசம்மாறத் துக்கு நீடிய கச்சை கட்டிப் பாறவேலெடுத்து சேவுகன்.

தென்பளணிமலைப் பன்றிமலை காவலன் ஆறிலங்கு வய்யாபுரி நாடன் உத்தண்ட குமாறன் உத்தண்ட தெவியானை மிண்டன் சிறுவித குமாற சூரன் சூரனைக் காய்ந்த சூரகாலாந்தகன் தெவியானை மனோகரன் வள்ளிமணவாளந் மயில்வாகனற் குங்கும வண்ணந் பன்னிரு புயத்தோன் கடல் சூர வேல்தனை விடுத்தோன் யெண்ணா யிரம் சமணரைக் கழுவில் லேற்றிவைத்தோன் ஆண்பனையை பெண் பனையாக்கி வைத்தவன் அடல்சூரரை நீருள் அடித்தவன் சண்டப் பிறசண்டன் வண்டற்கொரு மிண்டன் சிவசமய பரிபாலகன் ஏடெழுதி வைத்தவன் எதிரிலை யேற விட்டவன் திருமயிலூறு சிவனேச செட்டியார் மகட்குத் திருமணஞ் செயிது வைத்தவன் ஆறிலொன்று கடமைகொண்டு பிறிதிவிராச்சியம் பண்ணாநின்ற காலத்திலே.

கலியுக சகாற்த்தம் 4705க்கு மேல்ச் செல்லாநின்ற காலையுத்தி வருசம் கொங்கு மண்டலத்துச் சேர்ந்த குன்றத்தூர் வட்டத்தில் கீழ்கரை அரைய னாட்டுத் தராதிபதியான கவிலமலையில் குமரகுருபரன் குக்குடத் துவசன் தேவசேனாபதி செந்திகந்தன் செட்டி திருமால் முருகன் யேறு வறுதி சுவற வேல்விட்டவன் சமண குலைகாரன் சமந்த னாயகன் சூரசங்கார சுப்பிரமண்ணியன் அன்னக்கொடியு வானோர் பறங்குன்றும் திருவேறகமும் திருத்தணிக்குன்றும் சீறழை வாயும் திருச்செந்தூறும் மற்றுமுண்டான குன்றுதோறாடிய குளந்த வேலாயுதர் எளுந்தருளியிருக்கிற கபிலமலையில் குளுந்த நிளலும் கவுந்த மாரிசியும் அடையும் வடபாரிசத்தில் காசிப கோத்திரத்தில் உத்த பரிபாலகர் தெய்வீகமான பால்வாவியும் கட்டுவித்து சுனையும் காணாத சுனை நாகம் தபசு பண்ணினதும் பசுவு மோச்சம் பண்ணினது யிப்படி தேவதன்மையாயிறுக்கப்பட்ட குளந்த வேலாயுதருடைய கிறுபா கடாச்சத்தினாலே கபிலை மலையில் தைய்ப்பூசம் திருவிழாவில் பெருமாள்தம்புரான் அறுமுக கடவுளுக்கு முதலப் பூறாதனம் கவிலமலையும் முதல் புறாதனம் குளந்தை வேலாயுத சாமிக்கு பூசை நடத்தி வந்தது.

ஆயிரமாலை குளந்தை வேலு பண்டாரம் பிறமாதி வருசம் வய்யாசி மாதம் 10 தேதி யிதுற் கிராமம் மேற்படி மலைக்கோவில்க் கட்டினது விபறம். கலியுகம் பிறந்த வருசம் காலே.... திறி செல்லா நின்ற காலத்திலே பெருமாள் தம்புறான் 100000 விராகன் செலவு செய்து திருப்பணி வேலை கட்டி வைத்து நூறு கொத்தர்களை விட்டு தெய்வமான பால்வாவியும் வெட்டிவயித்து உச்சிப்பிள்ளையார் கோவில் கட்டி வெச்சது காவேரி கறையில் விபூதி விட்டது ரெண்டு செப்புக்குடம் உண்டு பண்ணி பூசைக்கி பிறாமணப்பிள்ளை அழைப்பி வைத்து பூசை பண்ணும்படி செயிது தீற்த்தம் பிறசாதத்துக்கு விட்டகாடு செய்ப்பூமி விபறம். உள் சோதித் துத்தாறிக்காரன் காடு, தெய்வமான பால்வாவி வெட்டிவித்து அகபோ..... ளைகாடு விட்டது. யிந்தப் படிக்கு பெருமாள் தம்புறானுக்கு டிபு சுல்தான் னாழையிலே பறமுத்தி அள்ளாழ யிளையா நாயக்கர் மானிபம் செயிது வயித்தார்கள். பெருமாள் தம்புறான் குளந்த வேலாயுத சாமிக்கி திருமஞ்சன கொடம்

செலம் யெடுக்கிறது. பிறாமணப் பிள்ளை அளைப்பிவிச்சி அள்ளாழ யிளையா நாயனாறுக்கு தெரியப்பண்ணி பிறாமணப்பிள்ளை வசம் திருமஞ்சனம் கொடம் கொண்டுவரும்படி பண்ணி வைச்சாறகள்.

யிதுக்கு தைப்பூசத்துக்கு சுவாமி ரத உச்சிதமாகிறபோது பெறுமாள் தம்புறானுக்கு நடையொன்றுக்கு அரைக்கால் ரூபாயி வீதம் சேந்தது. யிவற்களுக்கு குடுக்கும்படி மூவேளுயிறபத்தொறு தலைமுறையில் வைத்தாற்கள். பூமியாகாசம் சந்திற சூரியன் உள்ள வரையில் நடத்திவரும்படி செய்து யிந்த தற்மம் யாராவது அபகடம் செய்த பேற்கள் மகாவிஷ்ட்ணுவுட ராமபானத்துக்கு ராவணேஷ்பரன் பட்டபடியாவார்கள். சுப்பிறமன்னியற் சூலாயுதத்துக்கு சூறாதிகள் பட்டபடி ஆவார்கள். தறுமறுடனே யெதுத்த திறியோதனந் பட்டபடி யாவாற்கள் யென்று பட்டம் பெறுத்த அள்ளாழ யிழைய நாயக்கற முன்ம்பாக பத்தும்பறியம் யெழுதி வயித்தார்கள். தீற்த்த தெரிசினை பிறசாதமுங் கொடுத்து மலையில் கெறட கம்பத்தில் முன்பாக யிறுந்து கொண்டு திருநீறு குடுக்கும்படி செய்து வய்த்தார்கள். சகலரையும் றச்சிக்கும் பெரிய யாக சாலைக்கி செயமடம் கட்டிவச்சு அவறவற் நடத்தும்படியாய் தைய் பூசம் திருவிளாவில் மணிமண்டபத்தில் அள்ளாழ யிளைய னாயக்கற் முன்பாக ஆனந்தனாத சந்தான கொங்கு சமுந்தமூற்த்தி சிஷ்யனாகிய வள்ளுவரில் பெருமாள் தம்புறானுக்கு மலையில் மடவாலையமுண்டுபண்ணி குடுத்தபடியினாலே.

நீதிக்கிலாபமாகிய விருது பெற்ற பெரியோர் சங்கத்தை வெண்ணவர் வெள்ளானை மேலேறி அந்தி முற்சறிந்த பெரியோ றாகிய அண்டரண்ட பகிரண்ட முப்புரமெரிக்கையில் காலகாலனை கபாலறுத்திரணை கயிதொளுத பெரியோராகிய காவேரி வளநாடு மிகவாள வேதநாறதனைக் கண்டு உபதேசம் செய்த பெரியோர்... தொல்காசு வப்புடன் ராசசேரி கண்ட பெரியோர்கள்... கல்ச்சாஷணம் கொண்ட பெரியோர் கச்சிதனில் மெச்சவே காவி புணர்ந்த தெரியோர் பாடிஅறு மாம்பரைக் கனகமுடிச் சோழனை கனகவிதங்கொண்ட பெரியோர் வங்காழ தேசம் யிறுந்து வாதவாறன காஞ்சி விறுதா சலத்தில் யிறுந்து வந்தவர் பறமுத்திக் கோட்டை அள்ளாழ யிழய நாயநார் அதிகாரத்துக்கு வந்தப்போது ஆனைக்கு குதிரைக்கு கடுப்பு

யெடுத்து கொண்டு யிருக்கிறபோது அந்த கடுப்பு நிறுத்திறதுக்கு மறுந்துனால் தீறாமல் பெருமாள் தம்புறானை அளைப்பிவய்த்து யிந்த ஆணை குதிரை உபத்ரியம் நிறுத்திவைக்க வேணுமென்று குதிரை பிடிக்கப்பட்ட சாம்பான் கறுதுவே யென்று பெறுமாள் தம்புறானார் அருமை சாதினம் எளுதி குடுத்துவந்து கேள்க்க அப்பெருமாள் தம்புறான் சுப்பிறமணிய சுவாமியாறிடத்தில் வந்து வாக்குவறம் வாங்கி விபூதிபோட ஆனை குதிரை கால்நடை யுள்ளதெல்லாம் தாம் பெத்த மேனி போலே யெழுந்திரிச்சுது.

அதற்காக முப்பதிமுக்கோடி தேவர்கள் அரிய கிம்புறு கின்னர வித்ய வித்யாதறர் அரிய அப்பர் சுந்தறர் மாணிக்கவாசகற் அரிய பதிநெட்டு விறுது உள்ளவர் ஆயிர சி...... வெள்ளைகுடை விஞ்சாமற வெங்கலப் பெறணி யிறவது பொன் காறு சிச காவி புனந்த வெள்ள குதிரை துத்தி யிறுவதுபொன் மொளுகு கூடாரம் யிந்த சூரியபானும் விறுது உள்ளவற் நாலு மூலைக்கும் நாலுயூறுக்கு தடி பூவுதிரப் பிஞ்சி தீர்க்காயுதிர பழமுதில் பென்று முற்சந்த பெரியோர் சீரங்கறாயர் திறுப்பதி மேவாராயிநின்ற பெரியோர்கு மேகரே பூந்துறைநாடு, காங்கய நாடு, பொங்கலூற் நாடு, வாறக்கனாடு, வய்யாபுரிநாடு, மனநாடு, தலையநாடு, தட்டயநாடு, பூவானிநாடு, அறயநாடு, வொடுவங்கநாடு, கிழங்குநாடு, நல்லுறுக்கநாடு, வடகரெநாடு, வாழவந்திநாடு, செக்கவபாறநாடு, றாசிபுறம்நாடு, குறுப்பநாடு, கொங்கநாடு, கீல்கரெ பூந்துறை நாடு.... சேலம்நாடு, பாப்பினி நாடு, வேளுவநாடு, வழுவரி நாடு, கீழ்கரே அறயநாடுதனில் யுள்ள யிறுபது நாலுநாடே முப்பத்திரண்டு ஊறு கபிலகுரிச்சி கிறாம பெருமாள் தம்புறானுக்கு தாரையேந்தி விட்டதுயென்று அரியுமிடத்து,

சிலவுக்கு வருசம் ரெண்டு விறாகன் குடுப்பது கவலமலை மடம் திருச்செங்கோடு மடம் பெறுமாள் தம்புறான் பெரியூறு பத்து பொன் சின்ன ஹூறு அஞ்சிபொன் கம்பு யெட்டு வள்ளம், கொட்டமுத்து வள்ள றண்டு, மாப்பிள்ளை வீட்டு மூனு பணம், பெண் வீட்டு றண்டு பணம், அரிசி வள்ளம் ஒன்று, அதுவுள்ள சாமாநம் குடுக்கவும். மேல் மிறாசு குருவு வெத்திலை நடத்தவும், அதின்வோற் முறபிவெத்திலை சுப்பிரமணியசுவாமி சொல்படிக்கி யுண்டான பட்டயம் யிவாரவரி

குடுக்கப்பட்டது. கொங்க சாம்பான், செம்பு சாம்பான், ஆனைமுக சாம்பான், குதிரெமுக சாம்பான், புலிமுக சாம்பான், தெலுங்க சாம்பான், நம் சாம்பான், யிந்தபடிக்கி வறமானம் குடுக்காமல் போனால் தன்னி கிணறு மறியல் தலவாசல் மரியல் வீடு மரியல் யிந்தபடிக்கி சாதறா செயிது வச்சது வேறம்.... மூணு வள்ள அரிசியு பருப்பு தகுந்த சமரம் குடுக்கவும். பட்டயம் நாளக்கி குதிரைக்கி கொல்லு யெறுது பில்லு சீக்கிரம் அள்ளாள யிளயா நாயக்க அரிவார். அயிறமலை பண்டாரம் அரிவார், குழந்தவேல் பண்டாரம் அரிவார், பள்ளயிடும் பண்டார அரிவார், கபிலைமலையிலே யநூர் பெறும் என் தம்புறனார் யெழுதி குடுத்த திறுவாசகம்.

பறமுத்தி அள்ளாழ யிளயா நாயக்கன் யெளுதி குடுத்தான். கபிலமலை ஆண்டவர் துணை. கயிலாசபதி துணை. அறுணாசல யீசுபரர் துணை. சந்திற சூரியர் றுள்ளவரைக்கு யிந்த தற்ம நடத்தி வறவும். யிந்த தற்மத்துக்கு அகிதம் செய்தால் காறாம்பசுவு கொன்ன தோஷத்தில் போவர். காசியில் பட்டயம் பொய்யென்று சொல்லப் பட்ட பேற்கள் பாவத்தில் போவர். யிந்த பட்டயம் காதினால் கேட்ட பேற்கள் கீள் கோத்திரம் வளந்து யிறுப்பார். குருபாதம் துணை.

நாடு-மலநாடு, மனனாடு, யிடைப்பளி நாடு, நல்லுறுக்காநாடு, தலையநாடு, தட்டயநாடு, ஆறுநாடு, பன்னீர் கிளங்குநாடு, வெங்கல நாடு, மேல்கரை அரையநாடு, கீள்நாடு, பூந்துரை நாடு, பூவாணி நாடு, பரித்திபுளிநாடு, சேலநாடு, றாசிபுறநாடு, வாளவந்தி நாடு, அரயநாடு, மேகரை பூந்துரை நாடு,தென்கரை நாடு, காங்கய நாடு, வடகரநாடு, வாரக்கநாடு, காஞ்சி ஒடுவங்கநாடு, குறுப்பநாடு, மின்ன சுத்தி ஆறுநாடு, சோளவந்தா நாடு, சேர்காவடிக்காநாடு, அண்டநாடு, வய்யாபுரிநாடு 32 கிறாமத்து வரமுரயான கூடி கபிலுகுரிச்சி கிறாமம் தாரை விட்டது. சற்காறவன் பெருமாள் தம்புறானுக்கு மடத்து சிலவு வருஷத்தில் விராகன் 2 பெரிய ஹறுக்கு பணம் 10, சின்ன ஹறுக்கு பணம் 5, 8 வள்ள கம்பு, 3 வள்ள அரிசி, முத்து வள்ள 2, பட்டயம் கண்ட நாளில் குரிதக்கி கொள், எறுதுக்கு பில்லு, கலியாணத்து வற்தனை மாப்பிள்ளை வற்தனை பணம் 3, பொன் வீட்டுக்கு பணம்

2, அதுகுள் மிராசான 8 வள்ள அரிசி, குறுவெத்திலை, மடத்து வெத்திலை, பண்டாரி வெத்திலை மடத்து பண்டாரத்துக்கு குடுக்குரது.

திரிச்செங்கோடு மடம், கவலைமலை மடம், பளனி மடம் யிது மூனும் கவிலைமலையிலிருக்கும் திருவள்ளுவருக்கு யெளுதிக் குடத்தாற்கள். கொங்க சாம்பான், சோளிய சாம்பான், கட்டி காற சாம்பான், வடக்கத்தி சாம்பான், கிளக்கத்தி சாம்பான், புலிமுக சாம்பான், ஆறுனூறு பெரிய யேரிவரயில் கொங்கன் காணி தன்னிதுரை மரியல், தலைவாசல் மரியல் வீடு மரியல்.

# 13. அஞ்சு சாதி வரலாறு

இந்த ஆவணத்தில் சேரநாடு, தோன்றிய வரலாறும், மன்னன் சேரமான் பெருமாள் வரலாறும் முதலில் கூறப்படுகிறது.

தொண்டை மண்டலத்தில் காளகத்தி மலைப்பகுதியில் வேட்டுவர் சமூகத்தவர் உடுப்பூரில் வாழ்ந்த வரலாறும், நாகன் - தத்தை தம்பதியினருக்குத் திண்ணன் பிறந்ததும் வேட்டைக்குச் சென்ற திண்ணனுக்கு மிருகங்கள் கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

சிவபெருமானே வேடன் வடிவில் வந்து மலையில் வேட்டை மிருகங்கள் கிடைக்கும் இடத்திற்குத் திண்ணனை அழைத்துக் கொண்டு சென்றதால் வேட்டை மிருகங்கள் அகப்பட்டன. காளகத்தி யீசர் திண்ணனிடம் நீ தின்று பார்த்து ருசியான கரியை எனக்குப் படைப்பாயாக என்று கூறியதாக அரிய செய்தியும் உள்ளது. பின் திண்ணன் காளகத்தி ஈசருக்குக் கண் அப்பி கண்ணப்பர் ஆன செய்தி கூறப்படுகிறது.

இதைக் கேள்விப்பட்ட சேரமான் பெருமாள் தொண்டை மண்டலம் உடுப்பூர் சென்று பதினாயிரம் வேட்டுவ சமூகத்தினரைக் கொங்கில் குடியேற்றிய செய்தியும் சேரமான் பெருமாளை வென்று சோழர்களும், பாண்டியர்களும் கொங்கு நாட்டில் ஆட்சி செய்த விபரமும் கூறப்படுகிறது.

மகாமேருவில் பாண்டியர், சோழர் தங்களுடைய மீன், புலிச் சின்னம் பொறித்த அரிய செய்தியும் இந்த ஆவணத்தில் உள்ளது சிறப்புக்குரியதாகும்.

### மூலம்

தாராபுரம் துக்குடி, புள்ளாச்சி தாலூக்கா, பொரவிபாளையம் கோப்பண மன்றாடியாரிடத்தில் இருக்கும் அஞ்சு சாதி வரலாறு புஸ்தகத்துக்கு நகல். கொங்கு மண்டலம் பூர்வ வரலாறு.

யெமதக்கினி பகவான் யென்குர இரிஷியின் பெண்சாதி ரேணுகாதேவி என்பவள் புத்திரரில்லாமல் தவஞ் செய்து கொண்டு இருக்குற காலத்திலே மகாவீர ரிஷி வந்து பரசுராமரென்று மளு ஆயுதத்துடனே பிள்ளையாக வந்து சகல சாஸ்திரங்களும் கற்று பிரபலனாகி பரசுராமன் இருக்கிற காலத்திலே இருள் விளக்கச் சக்கர வர்த்தியருள் ஆதித்தன் வங்கிசத்தில் உதித்த கார்த்திகை வீரன் என்பான் வந்து உள்ள ராசாக்களை வெட்டி ரெத்தம் எல்லாம் ஒரு குண்டத்திலே விட்டு முளுகி எழுந்தான். பரசுராமன் இதுகண்டு பயந்து உண்டான கார்த்திகை வீரனை சயித்துப் பரசுராமனுக்கு (ராசாக்கள்) அடிமை புகுந்தார்கள். அடிமை புகுந்த அரச மக்கள் அக்கினி குண்டத்துக்குக் காவலாக இருந்தார்கள். அந்த அக்கினி குண்டததுக்குக் காவலுமிட்டு வறாக வனத்திலே பரசுராமன் சிறிது காலம் யெழுந்தருளியிருந்து வைகுண்டத்துக்கு யெழுந்தருளி யிருக்கிற தருவாயிலே அக்கினிச் சாலை காத்து இருந்த அரச மக்களை அக்கினி வீஷ்மர் என்று பேரிட்டான்.

அப்போது அடியேங்களுக்கு இருக்கிறதற்குத் தேசம் வேணு மென்று கேட்டுப் பரசுராமன் ஓமத் திரவியங் கொண்டு வந்து அதை யெடுத்துத் தெற்கு நோக்கி எறிந்தார். அப்போது ஆயிரத்து நூறு காதம் கடல் வாங்கிப்போய்விட்டது. அந்தப் பூமி உங்களுக்குரிய தேசம் என்று கற்பித்து அக்கினி காரியம் வழுவாமல் செய்து பிராமணரையும் குருவையும் தெயிவத்தையும் பேணுங்கள். பெண் கொலை வேண்டாம் என்றும் கற்பித்து வைகுண்டமேறப் பரசுராமன் எளுந்தருளியிருந்த கற்பனைப்படிக்கு இராச்சியம் செய்து சேரமண்டலம் என்று பேரானது.

இதற்குச் சிறப்புப் பேர் பரசுராமன் பெருமாளுக்குக் கொங்கர் என்று பேர் நடந்து வந்தது. அந்த முன்னிலையிலேயே கொங்கு மண்டலம் என்றும் பேர் நடந்தது. இப்படிப்பட்ட கொங்கு மண்டலத் துக்குப் பெருமை வரலாறு.

பவானி, நொய்யல், காவேரி, ஆண் பொருந்தல், ஆளியாறு, திருமணி முத்தாறு, தொப்பையாறு ஏழு ஆறாகும்.

கருவூர், வெஞ்சைமாக்கூடல், கொடுமுடி, திருநண்ணா, திருமுருகன் பூண்டி, அவிநாசி, பேரூர் ஆகத் திருப்பாட்டுப் பெற்ற

திருப்பதிகள் ஏழு. ஏழு நதியும் ஏழு படைவீடும் உண்டான படியினாலே கொங்கு மண்டலம் எழுகரை நாடு என்று சொல்லப்பட்டது. கொங்கு மண்டலத்து தாராபுரத்துக்குப் பேர் பூராந்தபுரம், தில்லை, புகலி, வஞ்சி, இராசை என்ற அஞ்சு பேர் இந்த தாராபுரம் சூழ்ந்த இருபத்தினாலு காட்டுக்குப் பேர்.

நரயனூர் நாடு, கரைவளி நாடு, வய்காவூர் நாடு, அண்டநாடு, தென்பொங்கலூர்க்கால் நாடு, பொங்கலூர் நாடு, காங்கய நாடு, தென்கரை நாடு, வாயறைக்காநாடு, நல்லூர்க்கா நாடு, காவடிக்கா நாடு, தலைய நாடு, மணலூர் நாடு, வேங்கல நாடு, இடைப்பூசல் நாடு, பூந்துறை நாடு, வஞ்சி நாடு, காஞ்சிக்கோயில் நாடு முதலியன 24.

கோட்டை சூழ்ந்த வடபாரிச ஆறு நாடு, ஒடுவங்க நாடு, குருப்பை நாடு, நல்லூர் படை நாடு, வடகரைப் பேரூர் நாடு, வடகரை வீரசோழபுர நாடு ஆகக் கோட்டை சூழ்ந்த நாடு 6.

குன்றத்தூர் துர்க்கத்துக்குச் செல்லும் நாடு பன்னிரண்டாவது பூவாணிய நாடு, சேழநாடு, ஏளூர் நாடு, பக்க நாடு, பருத்திப்பள்ளி நாடு, முகவனூர் நாடு, வாழவந்தி நாடு, விமலை நாடு, இராசிபுர நாடு, வடகரை நாடு, கீழ்க்கரைப் பூந்துறை நாடு, கீழ்க்கரை அரைய நாடு, குன்றத்தூர் சாவடிக்குச் சேர்ந்த நாடு 12; ஆகக் கொங்கு மண்டலம் 42 நாடுகள்.

இந்த நாட்டில் மிகுந்த நாடு பூந்துறை நாடு, பூந்துறைப் பட்டணம் செய்து கொண்டு சேரமான் பெருமாள் இருந்து இராச்சியம் செய்து கொண்டு இருந்தார்.

இப்பால் தொண்ட மண்டலத்து கொத்தப்ப நாட்டு உடுப்பூரிலே வேடர் நாற்பதினாயிரம் பேர் ஒக்க இருந்து வேட்டையாடி திருக்காள கஸ்தியில் பொன்முகரி சுவர்ணமுகரி ஆறு சூழ்ந்த மலையிலும் மிருக வேட்டையாடி இருப்பார்கள்.

இந்தப்புல வேடரில் நாகன் என்ற ஒரு வேடன் அவன் பெண் சாதி தத்தை என்பாள். பிள்ளையில்லாமல் காளகஸ்தி அப்பரை நோக்கித் தவம் செய்வாள். தவஞ் செய்தபடியினாலே ஆண் பிள்ளை பிறந்து இந்தப் பிள்ளைக்கு வேடரெல்லாரும் கூடி திண்ணன் என்று பேரிட்டனர்.

இவனுக்குப் பதினாறு வயது ஆன காலத்திலே வேடர்கள் எல்லாருங்கூடி வேட்டைப் பயிற்சிக்குத் திண்ணனையும் கூடக் கூட்டிக் கொண்டு காளகஸ்தீசுவரர் மலைக்கு வந்து வில் வேட்டையாடி இவர் எய்த அம்புக்கு மிருகமும் அகப்படாமல் அஸ்தமாய் விட்டது. வேடரெல்லாம் உடுப்பூரிலே பாளையம் வந்து இருந்தார்கள்.

அவ்வளவில் திண்ணனுக்கு கண்ணுக்கு ஒரு வேடனாய் விருமங்கொண்டு காளகஸ்தியப்பர் நடுகானிலே தோன்றினார். வேட்டையாட வாடா என்று மலை மேலே அழைத்துப் போய் மிருகம் படுகிற கரையிலே இருந்து மிருகத்தை எய்து கொண்டு அந்த மாங்கிசங்களை வேவித்து சுட்டு நீ தின்னு பார்த்து உன்னுடைய நாவுக்கு இரசமாயிருந்த மாங்கிசமெல்லாம் நமக்குக் கொண்டு வா என்று காளகஸ்தியீசர் கட்டளையிட்ட படியே வேட்டையாடி தண்ணீர் (வாயில்) அடக்கிக் கொண்டு கையிலே வளைக்கிற சப்தாதிகளையும் உருவிக் கொண்டு காளகஸ்தியீசர் திருமேனியில் திருப்பள்ளித் தாமத்தைக் கையிலேதொடைத்துப் போட்டு வாயில் சலத்தைத் திருமுடியில் உமிழ்ந்து திருப்பள்ளித் தாமத்தையும் திருமுடியிலே வைத்துச் சுட்ட இறைச்சியைத் திருமுன்னே வைப்பான். வைத்தால் அவன் கண்களுக்கு மாங்கிசம் பொசுச்சிருக்கும்படி தோன்றி மாங்கிச மெல்லாம் ஆகாசவசமாய் போய்விடும்.

அப்படி ஒரு நாள் இருநாள் மூன்றாம் நாள் ஒரு கண்ணில் காளகத்தீசுரன் கண்ணில் நோக்காடு போலே காட்டி கண்ணு ஒழுகிடப் போச்சுது. இனி என் கண்ணுக்கு உன் கண்ணை அப்பென்று திண்ண னுக்குச் சொல்ல திண்ணனும் தன் கண்ணைப் பிடுங்கி வைத்து விட மற்றொரு கண்ணும் நீர் விழா நின்றது. அது கண்டு திண்ணன் மற்ற கண்ணையும் பிடுங்கி வைத்தான். வைத்த உடனே தம்பிரானுடைய திருமேனி சேர்ந்தார். அதன் பின்பு திண்ணன் என்கிற பேர் போய் கண்ணப்பர் என்று பேரானது.

இந்தக் கண்ணப்பன் செய்த அடிமைத்திறம் சேரமான் பெருமாள் கண்டு பரிவாரத்துடனே வந்து திருக்காளகத்தி அப்பரையும் நமஸ்கரித்து இந்தப் புலி வேடர் இருக்கிற கொத்தப்ப நாட்டு உடுப்பூருக்கும் போய் இந்தப் புலி வேடரிருக்கும் பதினாலாயிரம்

பேரையும் கூட்டிக் கொண்டு கொங்கு மண்டலத்திலே வந்து இவர்களுக்குச் சேரமான் பெருமான் கற்பித்த ஊதியமாவது,

நிற்றம் கட்டளை நூற்றறுபது கலம் பூவெடுக்கிற பூந்தோட்டம் காக்கும்படிக்கு சில பேரை வைத்தார். ஓர் வனப்பாடி காவல் காத்துக் கள்ளரானவர்களை ஆக்கிணை செய்யும்படியாகச் சிலபேரை வைத்தார். பூந்தோட்டம் பார்த்தவர் பூவிலுவனென்று பேரானார். மெய் காவல் காத்தவர் காவிலுவரென்று பேரானார். பாடிகாவல் சுற்றிக் கள்ளரைப் பிடித்து வெட்டினவர் வேட்டுவரென்று பேரானார்.

கொத்தப்ப நாட்டு உடுப்பூரிலிருந்து சேரமான் பெருமாள் கொண்டு வந்து கொங்கு மண்டலத்திலே வைத்து ஒக்கல் பூந்துவர வேட்டுவரென்று சொல்லப்பட்ட சாதியுண்டானவர்கள். இப்படி யறியும் இவ்வண்ணமிருக்கிற நாளிலே சகாத்தம் 700 வருசம் மேல் செல்லா நின்ற காலத்திலே வீரராசேந்திர சோழ தேவர் தேவி என்னயினார் வரடி கற்பினியானவள் அம்பலங்காய் கேட்டு வருந்த காரியப் பேரையும் மூன்று வருசம் சக்கரமாக வீணே வைத்துக் கொண்டு இருந்து அம்பலங்காய் கொடாமல் சேரமான் பெருமாள் தள்ளிப் போட்டார்.

ஆகையினாலே வீரராசேந்திர சோழன் படையெடுத்து சேரமான் பெருமாளையும் முடுக்கி கொங்கு மண்டலத்திலே வீரசேகர வளநாடு என்று ஊரைப்பிரித்து நாடுங்கட்டி வைத்து வீரசோழீசுவரமுடையா ரென்று சிவலிங்கப் பிரதிட்டை செய்து கோயில்களுங் கட்டி வைத்து இப்படிக் கட்டளையிட்டு தஞ்சாவூர்ப் பட்டணத்தை விட்டு இவ்வூரைப் படைவீடாகக் கொண்டு இருந்து ராச்சியம் செய்து கொண்டிருந்தான்.

சோழர்களான வீரசோழன், விக்கிரம சோழன், குலோத்துங்க சோழன், இராசேந்திர சோழன், உத்தம சோழன், கரிகால சோழன் ராச்சியம் ஆண்டு காலஞ் சென்ற பின்பு,

பாண்டியர் வந்து கொங்கு மண்டலம் ஆண்டார்கள். வீரபாண்டியன், சுந்தரபாண்டியன், திரிபுவனச் சக்கரவர்த்தி, கோனேரின்மை கொண்டான் இவர்கள் இராச்சியபாரம் ஆண்டதின் பின்பு மூன்று

முடிக்கும் முனிய பெருமான் என்கிற பாண்டியன் கொங்கு மண்டலம் ஆண்டபடியினாலே கொங்குப் பெருமாள் என்னும் பேரானான். இந்தக் கொங்கு பெருமாள் காலத்தில் கொங்கு மண்டலத்திலே காவுலவர், பூவுலவர், வேட்டுவர் இருந்தார்கள்.

(பின் இந்த ஆவணத்தில் பாலவேளாளர், செந்தலை வேளாளர் குடியேற்றம் கூறப்படுகிறது. சேர சோழர் பாண்டியர் ஆட்சியும், பாண்டியர் மகாமேருவிலே மீன் சின்னம் பொறித்ததும், சோழன் புலிச் சின்னம் பொறித்ததும் கூறப்படுகிறது. பிள்ளை, முதலியார், கணக் கெழுதக் கணக்கன் ஆகியோர் வந்த செய்தியும் கூறப்படுகிறது. இந்த ஆவணம் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள தமிழக அரசின் பழஞ்சுவடி நூலகத்தில் உள்ளது. எண்.எம். 69; டி3133; ஆர். 7991)

# 14. ஆத்தூர்ச் செப்பேடு

கரூர் அருகேயுள்ள ஆத்தூர்ச் சோழியம்மன் கோயிலில் இச் செப்பேடு உள்ளது. கரூர் பவர் டெக்ஸ் சுப்பிரமணியம் மூலம் இச்செப்பேடு கிடைத்தது. தென்னிலைச் செப்பேட்டோடு ஒத்த செப்பேடு. சில வேறுபாடுகள் உள்ளன.

ஒக்கிலியரை வெட்டி விரட்டிய காரணத்தினால் அண்டவாணி வேட்டுவர், பூலுவ வேட்டுவர் போன்றவர்கட்குக் காணி பூமி கொடுத்தது கூறப்படுகிறது.

வேட்டுவப் பெருமக்கள் காணியுரிமையில் இருந்த ஆத்தூர், அஞ்சூர், கோடந்தூர், அரையநாடு (தலையநல்லூர்), நடந்தை, மின்னப்பள்ளி, கண்டியம்மன் கோயில் ஆகிய ஊர்களும், கோயில் களும் வேளாளர்கட்கு அளிக்கப்பட்ட விபரம் கூறப்பட்டுள்ளது. இச்செப்பேட்டைக் காசித் தட்டான் என்பவர் எழுதியுள்ளார்.

## மூலம்

1. கலியுக சகாத்தம் 3980-ன் மேல் சாலியவாகன சகாத்தம் 3980 மே
2. ல் செல்லானின்ற சேரன் சோழன் பாண்டியன் செட்டி பிராமணன் காலத்தில் செய வருஷம் பங்கு
3. னி மாதம் 25 தீ இத்தாதி பேர் கவுண்டர்களுக்கு சோழன் பாண்டியன் செட்டி பிராமணர் றாய பூச
4. ல் யெல்லை கொல்லை நிர்மானம் பண்ணினது. காடு னாலுதிக்கு முன்னை வேட்டுவன் றாய பூச
5. ாரிக் கவுண்டன் யிந்த னாலுபேர் யிறந்துப்போன படியாலே வடமலை றாயன்க்கு அண்டவாணி

6. வேட்டுவன்கு றாசமுப்பாடு கோயில் முப்பாடு குடுத்ததுக்கு சாட்சி வெங்கலனாடு நீலியப்பகவுண்டன்

7. காளத்திக் கவுண்டன் ஆத்தூர் மாந்தப்படை வேட்டுவன் கண்டிக் கவுண்டன் குளந்த வேலப்ப கவுண்ட

8. ன் சாட்சி, பூவாணி வேட்டுவன் வடமலைராயருக்கு றாசமுப்பாடு கோயில் முப்பாடு குடுத்ததற்கு யித்தி

9. னைபேர் சாட்சி, குப்பத்துக்குப் பூவானி வேட்டுவன் சின்னாக் கவுண்டன் றாசமுப்பாடு கோயில் மு

10. ப்பாடு யெனக்குக் குடுத்தால் ஊரிலே பணம்யெடுத்து கட்டுவேன் னாடு ஊரு யெனக்கு நம்பி

11. க்கை சொன்னால், னான் பணம் குடுப்பேன், பணம் யெடுத்துக் கட்டுவேன் யென்ற சொன்னப

12. டியினால் லச்சுமதேவர்னாளையில் செய வருஷம் பங்குனி மாதம் 27 தேதியில் பூவானி வேட்டுவன் சின்னா

13. க் கவுண்டனுக்கு றாசமுப்பாடு கோயில் முப்பாடு குடுத்ததுக்குச் சாட்சி வெங்கலனாடு நீலியப்ப கவுண்டன்

14. காளத்திக் கவுண்டன் ஆத்தூர் மாந்தப்படை வேட்டுவன் வண்டிக் கவுண்டன் சாட்சி

15. காக்காயிவாடி குளந்தவேலப்பகவுண்டன் சாட்சி இத்தினை பேரும் அவன்க்கு ஊரு குடுத்ததுக்கு

16. சாட்சி சேரன் சோழன் பாண்டியன் செட்டி பிராமணன் காலத்தில் ஊர் குடுத்ததுக்கு காக்காயிவாடி

17. குட்டிக்கவுண்டன் ஆத்தூர் மாந்தப்படை வேட்டுவன் கிளங்கு நாடு கறடி வேட்டுவன் வெங்கம்பூரு

18. சமந்தறாயன் தலைநல்லூர் கூரை காளியப்ப கவுண்டன் அஞ்சூர் பாண்டிவேட்டுவன் நல்லதம்பி கவுண்

19. டன் காளத்திகவுண்டன் வெங்கலனாடு நீலியப்பகவுண்டன் வண்டியகவுண்டன் சாட்சி செய வருஷம் வய்யாசி

20. மாதம் 29 தேதி சேரன் சோழன் பாண்டியன் செட்டி பிராமணன் காலத்தில் ஆத்தூர் சோழியம்மன்

21. கோவிலுக்கு யித்தாதி பேர் கவுண்டர் கூடி வெள்ளாளர் காடை குலத்துக்கு ராசமுப்பாடு கோயில்

22. முப்பாடு குடுத்ததுக்கு சாட்சி தலைநல்லூர் கூரை காளியப்ப கவுண்டன் பொத்தி சேசுவராயக் கவுண்டன்

23. குப்பம் பசுவய்யன் மணைாடு புரக்கிலாக் கவுண்டன் சமந்தறாயன் சாட்சி ஊத்துக்கல் பாறையில்

24. குளி 1 அதுக்கு வடக்கு யேணிப்பாளியில் குளி 2 அதுக்கு வடக்கு றட்டைக் கரட்டுக்கு மேற்கு குளி 2

25. அதுக்கு கிளக்கு எல்லைக்கும் வட்டப்பாறையில் கல்லு சாதனம் போட்டிருக்குது. அதுக்கு கிளக்கு வெடிச்சாம்

26. பாளியில் குளி 2 அதுக்குக் கீழ் பாச்சாம்பாளியில் குளி 2 அதுக்குத் தெற்கு மூக்குப்பாளியில் குளி 2

27. சேரன் சோழன் பாண்டியன் செட்டி பிராமணன் காலத்தில் அஞ்சூர் கவுண்டர்களுக்கு யெல்லை

28. கொல்லை தீர்மானம் பண்ணி தீர்ந்தபடியினாலே புல்லை வெள்ளாளன் மலையாமிரங்கிக் கவுண்டன்

29. வேம்பாண்டா கவுண்டன் இதுக்குச் சாட்சி உத்தமலிங்கக் கவுண்டன் வேலப்ப கவுண்டன் ராசாக்

39. கவுண்டன் வண்டிய கவுண்டன் காழத்திக் கவுண்டன் புரக்கிலாக் கவுண்டன் கண்டிய கவுண்டன் புன்னம்

31. சேசுவறாயன் சமந்தராயன் துரைகளிலே சாமிநாதகவுண்டன் கூரை காளியப்பகவுண்டன் முத்தூர் மணிய

32. வேட்டுவன் சாட்சி அஞ்சூர் கட்டுகல்லைக்கு கள்ளபிறவி பிராமணன் மலையாமிரங்கியப்பன் பூச

33. கரில் அண்ணாமலைப் பண்டாரம் சின்னாண்டி தட்டாரில விரமதட்டான் நாவித விரமன் சங்கிடு பறய

34. ரில் சொக்கன் தங்குலத்துப் பறையன் மாட்டையான் கருமன்
காத்தான் அஞ்சூர் கவுண்டர்களுக்கு யெல்லை

35. கொல்லை தீர்மானம் னிச்சயித்ததுக்கு யித்தினை பேரும் சாட்சி
சேரன் சோழன் பாண்டியன் செட்டி

36. பிராமணன் காலத்தில் விசைய வருஷம் வய்யாசி மாதம் 18 தேதி
கார்வழிக்கு எல்லை கொல்லை தீ

37. ர்மானம் செய்தது ஊமை காளிகோயிலுக்கு மேற்கு குளி 2
அதுக்குக் கிழக்கு குளி 3 அதுக்கு கிழக்கு

38. குளி 1 அதுக்குக் கிழக்கு குளி 2 அதுக்குக் கிழக்கு செம்மடை
யிலே குளி 1 களுதைமடை குளி 1 அதுக்கு வடக்

39. கால்குளி 1 இதுக்குத் தீர்மானம் பண்ணி கார்வழி கவுண்டர்
களுக்கு எல்லை கொல்லை விட்டதுக்கு சாட்சி உத்தமலி

40. ங்க கவுண்டன் சின்னாக்கவுண்டன் காளியப்பகவுண்டன்
செல்லப்பகவுண்டன் சாட்சி யிதுக்கு கட்டு

41. கல்லணை பிராமணன் கள்ளபுரவி அய்யன் கோமணாண்டி
களுக்குள்ளே சின்னாண்டி பண்டாரம் அதுக்கு.

42. மேற்கு குளி 3 யிடைக்காட்டுக்கு மேற்கு குளி 2 அதுக்கு வடக்கே
குளி 2 அதுக்கு வடக்கு புல்லை கல்லுலே

43. குளி 1 குருக்கத்திக்கு மேற்கு குளி 2 அதுக்கு வடக்கு குளி 1
விரிதலைக் கறட்டுக்கு மேற்கு குளி 3 அதுக்கு வட

44. க்கு உப்பிலியன் காவிலி போட்டு யிருக்குது அதுக்கு வடக்குப்
புறம் குளி 3 அதுக்கு வடக்கு குளி 2 கோ

45. டந்தூர் கவுண்டர்கள் லட்சுமகவுண்டன் உத்தமலிங்கக் கவுண்டன்
ராசாக்கவுண்டன் கூடையறாக் கவுண்டன்

46. சாலிய உலகன் சேரன் சோழன் பாண்டியன் செட்டி பிராமணன்
காலத்தில் கோடந்தூர் கவுண்டர்கள்

47. க்கு பெல்லை கொல்லை தீர்மானம்பண்ணித் தீர்ந்த பிரகாரம்
யிதற்கு சாட்சி வேணுடையாக்கவுண்டன்

48. தம்பணகவுண்டன் புன்னம் பெரியாக்கவுண்டன் சின்னாக் கவுண்டன் சமந்தராயன் சாட்சி காசிய

49. ப்பன் சாட்சி கட்டு கல்லணை பிராமணன் அழகிரி அய்யன் அச்சுதபிள்ளை கணபதி தட்டான் காளி

50. யாண்டி பறையன் நல்லான் பெரியான் இத்தினைபேர் சாடசி ஆக சேரன் சோழன் பாண்டியன்

51. செட்டி பிராமணன் காலத்தில் யெல்லை கொல்லை தீர்மானம் பண்ணி சம்மதிச்சு காணி விட்டதுக்கு

52. கோடந்தூர் ராசாக்கவுண்டனுக்கு அறுதியாய் முத்துசெட்டி காணி குடுத்ததுக்கு சேரன் சோழன் பாண்டிய

53. சேட்டி பிராமணன் காலத்தில் விகாரி வருஷம் பங்குனி மாதம் 15ஆம் தேதி தலையூருக்கு வடபுரம் கூடலூர்

54. புதூர்க்குக் கிழக்கு குளி 1 புதூர்க்குத் தென்புறம் தலையூர்க்கு வடபுரம் கூடலூர் அதுக்கு கிழக்கு சூலம் போட்டிருக்கு

55. து அதுக்குக் கிழக்கு குளி 2 அதுக்குக் கிழக்கு சூலம் குளி 2 அதுக்குக் கிழக்கு அதற்குத் தென்புரம் குளி 1 சூலம்

56. தெற்குப்புறம் தலையூர் வடபுரம் மணல்நாடு அதற்கு வடபுரம் குளி 1 அதற்கு கீழ்மூலையில் குளி 2 தா

57. ராபுரத்திற்கு கரும்பாறையில் குளி அதுக்குக் கிழக்கு அதுக்கு வடக்கு குளி 2 அதற்கு வடக்கு சந்திர

58. சூரியன் போட்டிருக்குது அதுக்கு வடக்கு கானாப்பரப்பில் குளி 2 அதற்கு வடக்கு நெட்டரை குளி 1 அ

59. தற்கு மேற்கு ஊஞ்சபுரத்தில் குளி 2 அதற்கு மேற்கு முன்னைப் பரப்பில் குளி 1 அதுக்கு மேற்கு செ

60. ம்மடையில் நீலப்பாறையில சூலம் போட்டிருக்குது அதற்கு மேற்கு கருங்கல்லில் குளி

61. 2 அதுக்குக் கிளக்கு குளி 2 கூடலூர்க் கவுண்டர்கள் சிறுத்தலை வேட்டுவன் காசியப்பன் கொங்கு மொ

62. ட்டயன் உத்தமலிங்க கவுண்டன் மாந்தை கவுண்டன் வேலப்ப கவுண்டன்

63. நெட்ட ராசாக்கவுண்டன் இந்த ஆறுபேர் கவுண்டர்கள் கூடி வெள்ளாளன் பெருங்குடியாநிடத்தில்

64. செயவருஷம் பங்குனி மாதம் 27 தேதி அரையநாடு சேரன் சோழன் பாண்டியன் காலத்தில் எல்லை கொ

65. ல்லை தீர்மானம் செய்து குடுத்தபேர் கவுண்டர்கள் கூடி அரைய நாடு வெள்ளாளகுலம் வெ

66. லைய கூட்டம் காளியப்பகவுண்டன் கூறை காளியப்ப கவுண்டன் இந்தப்படி பேர் யிடத்தில்

67. முளை வேட்டுவன் காசியப்பகவுண்டன் 5000 வாங்கிக் கொண்டதுக்கு சாட்சி வெங்கம்பூர்

68. சமந்தராய கவுண்டன் சாட்சி பொத்தி சேசுவராயக் கவுண்டன் சாட்சி மணநாடு புரக்கிலாக் கவுண்

69. டன் சாட்சி தலையநல்லூர் பொங்காளியம்மன் கோயில்க்கு விலைய கூட்டம் காளியப்ப

70. கவுண்டனுக்கும் கூறை காளியப்ப கவுண்டனுக்கும் ராசமுப்பாடு கோயில் முப்பாடு குடுத்ததுக்கு

71. யித்தாதிபேர் கவுண்டர்கள் சாட்சி மின்னப்பரப்பில் குளி 2 ஆயப் பரப்பில் குளி 1 அதுக்கு

72. மேற்கு யெல்லை சூலம் போட்டு இருக்குது பூந்துறை யெல்லைக் கூறை காளியப்ப

73. கவுண்டன் சாட்சி இந்த ஆறுபேர் கவுண்டர்கள் காணிபூமி எல்லை கொல்லை சம்ம

74. திச்சுவிட்டதுக்கு இத்தனைபேர் சாட்சி பெரியண்ண கவுண்டனுக்கு சிறுத்தலை வேட்டுவன் கால்

75. பங்கு கொங்கு மொட்டையன் கால்பங்கு உத்தமலிங்கக் கவுண்டன் கால்பங்கு மாந்தைகவுண்டன்

76. கால்பங்கு வேலப்பகவுண்டன் கால்பங்கு குட்டியாக் கவுண்டன் கால்பங்கு யிந்த ஆறு

77. பேர் கவுண்டர்கள் கூடி ஊளியத்துக்கு ஆளு யில்லையென்று சொல்லி பெரியண கவுண்டன்

78. சனத்துக்குக் கால்பங்காக காணிபூமி யெல்லை கொல்லை தங்களுக்கு நடந்த பிரகாரம்

79. நடத்திக் கொண்டார்கள் பொன்னாக் கவுண்டனுக்கு ராசம்மாள் அதவப்பிள்ளையை

80. கொண்டதுக்கு பெரியண கவுண்டன் மகளுக்கு கால்பங்கு கொடுத்தான்

81. புன்னம் பெரியணகவுண்டன் இந்த ஆறுபேர் கவுண்டர்களையும் கேட்டு ராசம்மாள் கவுண்ட

82. ச்சிக்கு கோயில் முப்பாடு வாங்கிக் கொடுத்தான். ராசம்மாள் கவுண்டச்சி மகன் பொன்னாக்கவுண்

83. டன் தில்லையவனாசி கவுண்டன் ராசாக்கவுண்டன் தில்லையப்ப கவுண்டன் யிந்த நாலுபேர் நாலு கிணறு

84. வெட்டிக் குடுத்தான். ராசம்மாள் மூத்தகுடி மகனுக்கு கோயில் முப்பாடு வாங்கிக் குடுத்தாள் தில்லை

85. யப்பகவுண்டனுக்குக் கோயில் முப்பாடு மதியாகூடலூர் வாங்கிக் குடுத்தாள். இந்தப்படி சம்மதிப

86. ண்ணி தீர்ந்த பிரகாரம் குரோதி வருஷம் புரட்டாசி மாசம் 28 தேதி சேரன் சோழன் பாண்டியன் காலத்தில்

87. நடந்தை கிராமம் காரைப்பரப்புக்குக் கிழக்கு குளி 1 அதுக்குக் கிழக்கு புல்லை கல்லிலே குளி 2 அதுக்கு

88. கிழக்கு ஆயப்பரப்பிற்குத் தெற்கால் குளி 1 அதுக்குக் கிழக்கால் நல்லிபாளையத்திற்கு வடக்கால் குளி 3 அது

89. க்குத் தெற்கால் கரைக்குக் கிழக்கு கருமண்பாளையத்துக் கிழக்கு குளி 1 சல்லிப்பட்டிக்குத் தெற்கால் குளி 1

90. அதுக்குத் தெற்கால் வட்டப்பாறையில் குளி 2 அதுக்கு மேற்கு கொக்குப்பட்டிக்கு வடக்கில் குளி 2 அதுக்கு மேற்கு

91. குளி 2 வேட்டுவன் காளியப்ப கவுண்டன் வேலப்பகவுண்டன் இந்த ரண்டுபேர் கவுண்டர்களும் நட

92. ந்தை கிராமம் காணிபூமி எல்லை கொல்லை தீர்மானம் பண்ணித் தீர்ந்த பிரகாரம் யிதுக்கு கட்டு கல்லணை பார்ப்

93. பான் லிங்கய்யன் காளியாண்டி வேலத்தட்டான் அன்னாபிள்ளை நாவித செல்லன் பறையன் காத்தான் யிதுக்குச்

94. சாட்சி வேளம்பூண்டி நாச்சியப்ப கவுண்டன் அல்லாளிக் வுண்டன் சாட்சி சேரன் சோழன் பாண்டியன் காலத்

95. தில் ஒக்கிலியரை வெட்டி முடிக்கின படியால் காணிபூமி எல்லை கொல்லை சம்மதிபண்ணி இந்தமூ

96. ன்றுபேர் கவுண்டர்கள் சாட்சி பிலவங்க வருஷம் சித்திரை மாதம் 15 தேதி சேரன் சோழன் பாண்டியன் காலத்தில் க

97. ள்ளிப்பரப்புக்குக் கிழக்கு குளி 3 அதுக்கு மேற்கு குளி 1 அதுக்கு மேற்கு தயிர் மத்துக்கோல் கல்லில்

98. போட்டிருக்குது, அதுக்கு வடக்கு ஆத்தோரம் குளி 2 அதுக்கு வடகரையில் குளி 2 பாலையணையில் குண்

99. ணாங்கரையில் சாதனம் போட்டிருக்குது, அதுக்கு மேற்கு குளி 2 ஆமைக்கல்லுப் பாழியில் குளி 1

100. அதுக்கு மேற்கு சொக்கட்டான் கல்லு அடிச்சு இருக்குது. அதுக்கு மேற்கு குளி 2 களுதை மடைக்கு வடக்கு

101. குளி 2 களுதை மடையில் குளி 1 அதுக்கு வடக்கு முட்டிப் பரப்பில் குளி 2 செம்மடைக்கு

102. குளி 2 அதுக்குத் தெற்கால் குளி 3 பில்லாப் பரப்பில் குளி 1 வடக்கால் தென்னிலை கிராம கவுண்டர்கள்

103. காசியப்பன் கொங்கு மொட்டையன் கவுண்டய கவுண்டன் உத்தமலிங்கக் கவுண்டன் அல்லாளிக்க

104. வுண்டன் அச்சுதபிள்ளை அவனாசியப்பன் வயிறாண்டி கணபதித் தட்டான் பறையன் சொக்கன் யிடைப்பிச்

105. ச நாட்டு கிராமத்துக்கு மலைக்குத் தெற்கு குளி 2 அதுக்குத் தெற்கு ஆரியூர் நத்தத்தில் மேற்கால் இடைப்பி

106. ச்சநாடு வேங்கலநாடு அதுக்குத் தெற்கு நடுப்புரம் குளி 1 அதுக்குத் தெற்கு குளி 3 சின்னமுத்தன்பா

107. ளையத்துக்குக் கிழக்கால் குளி 3 இடைப்பிச்ச நாடு கிராமம் கவுண்டர்கள் அல்லாளிக் கவுண்டன் பெருமாள்

108. கவுண்டன் குட்டை தேவணகவுண்டன் யிதுக்குக் கட்டு கல்லணை பார்ப்பான் அவனாசி யய்யன் பறையன் சொக்கன்

109. மருதைத்தட்டான் காளியாண்டி வயிரன் அண்ணாபிள்ளை மாந்தை வெள்ளாளன் குப்பிச்சிக்கவுண்டன் மாந்தப்

110. படை வேட்டுவனுக்கு காணியாட்சி பறையன் வர்த்தனை மக்கத்துக்கு ஒரு பணம் வித்தைக்கு ஒரு பணம் தீ

111. ர்ந்த பிரகாரம் அம்மன் கோயில்க்கு கல்செக்கு அதுக்கு வடக்கு இட்டாலிக்குள்ளே கல் செக்குக்கு ஓரமே

112. மேற்கால் அம்மைகோயில் ஆண்டிகாட்டில் சூலம் போட்டு இருக்குது அதுக்குக் கிளக்குக் குளி 1 விகாரி

113. வருசம் பங்குனி மாதம் 15 தீ சேரன் சோழன் பாண்டியன் செட்டி பிராமணன் காலத்தில் மின்னப்பளி

114. வராக வேட்டுவன் கண்டி கவுண்டன் 100 பொன்னு வாங்கிக் கொண்டதுக்கு சாட்சி சேசுவராயன் சா

115. ட்சி காளத்திக் கவுண்டன் சின்ன கவுண்டன் கண்டி கவுண்டன் புரக்கிலாக் கவுண்டன் சுப்பய்யன் சமந்த

116. றாயன் சாட்சி செய வருஷம் பங்குனி மாதம் 24 தேதி சேரன் சோழன் பாண்டியன் காலத்தில் யெல்லை

117. கொல்லை தீர்மானம் கிளங்கு நாட்டு வராக வேட்டுவன் கண்டிய கவுண்டனுக்கு குடுத்ததற்கு கொடுமுடி

118. படித்துறைக்குப் பொளிகாட்டினது. தென்பாதியெல்லை மஞ்சிக் கரட்டில் குளி 2 அதுக்குக் கிளக்கு வெங்க

119. மேட்டில் குளி 2 புங்கம்பள்ளம் நெட்டு குளி 2 அதுக்குக் கிளக்கு சாலியச் செம்மடை குளி 2 அதுக்குக் கீள்

120. அதுக்குக் கீழ்பாதி பேச்சிக்கல்லில் குளி 1 உரவாய்க்கிணறு குளி 3 அதுக்குத் தெக்கு துண்டுப் பெருமா பா

121. ளையத்துக்கு தென்புறம் பாறையில் சந்திரன் சூரியன் போட்டிருக்குது ஆத்தூர் நத்தத்தில் மூக்கரைப் பி

122. ள்ளையார்க்கு கீழ்புறம் பாறையில் குளி 2 அதுக்குத் தென்புரம் பசுபதியார் கோயிலுக்குக் புரக்கல் சூலம் அது

123. கீழ்புறம் குருவப்ப நாயக்கன் வீட்டுக்குக் கீழ்புறம் குளி 2 தட்டய நாட்டுக்கு வடபுறம் பிச்சன் தண்ணிப் பந்தல்.

124. பாறையில் குளி 2 பஞ்சமாதேவி வடபுரம் பிள்ளையார் கோயில் பாறையில் குளி 1 அதுக்கு வடபுரம் குப்பி

125. ச்சி பாளையத்தில் குளி 1 அதற்கு வடபுறம் எல்லைப்பிள்ளையார் கோயில் குளி 2 முளி வட்டக்கல்லில் கு

126. ளி 2 ஆமைப்பாறையில் சந்திர சூரியன் போட்டிருக்குது சீதேவி யம்மன் கோயில் குளி 5 அதற்கு

127. மேல்புரம் யிடும்பன் குளத்தில் குளி 1 அதற்கு மேல்புரம் பரமத்தி உப்புக் கிணற்றுக்கு வடக்கு அரைய

128. நாடு தென்புரம் கிழங்கு நாடு அதற்கு மேல் பாரையில் சூலம் அதற்கு மேல்புரம் வீரணம்பாளையம் நெல்

129. பாரையில் குளி 3 அதுக்கு மேல்புரம் கபிலமலை கீழ்பால் கிணத்துக்கு மேல்புரம் பாறையில் குளி 2 அதுக்கு மேல்பு

130. ரம் எல்லைப்பிள்ளையார் கோயில் தூபக்கால் மணி போட்டி ருக்குது அதுக்குத் தென்புரம் புலிக்கல்

131. பாளையத்தில் குளி 2 கொடுமுடி படித்துறையில் குளி 3 வராக வேட்டுவன் கண்டிக்கவுண்டன் கண்டி

132. யம்மன் கோவில் ராசமுப்பாடு கோயில் முப்பாடு குடுத்ததுக்குச் சாட்சி நீலியப்ப கவுண்டன் காளத்திக் கவுண்டன்

133. புரக்கிலாக்கவுண்டன் சமந்தராயன் வண்டிய கவுண்டன் கூரை காளியப்ப கவுண்டன் யிவர்கள் சாட்சி

134. சுப்பய்யன் சாட்சி மருதாண்டி பரையன் கண்டி சொக்கன் யித்திணைபேர் கவுண்டர்கள் சாட்சி ஏ

135. ளுகுடி புல்லை வேட்டுவன் யென் பங்கு உண்டுமென்று வந்தான். 3000 பொன் குடுத்

136. தால் உனக்குப் பேர்பாதி குடுப்பேன். இதுக்கு மேல் கண்டியம்மன் கோயில் காளியம்மன் கோயில்

137. வெண்டுவன் கூட்டத்துக்கு ராசமுப்பாடு கோயில் முப்பாடு குடுத்ததுக்கு நீலியப்ப கவுண்டன் காள

138. த்திக் கவுண்டன் கண்டியகவுண்டன் கூரை காளியப்பகவுண்டன் காளியாண்டி பரையன் முத்தான் யித்

139. தனைபேர் சாட்சி இதுக்கு மேல்கண்ட சாதனம் தென்னிலை அஞ்சு புள்ளையார்

140. அஞ்சு அறமனையும் மேல்தலை வாசலில் சிங்காதனக் கல்லில் ஒக்கிலியன் தாலி

141. முக்கால் தாலியும் செப்புப் பட்டயம் அதற்கு மேல் கல் சாதனம் போட்டு இருக்குது கொடுமுடி மகு

142. டியீசுபரன் கோயிலில் சாதனம் போட்டு இருக்குது. புன்னம் கோட்டை வாசலில்

143. போட்டிருக்குது கல்லாநாயக்கன் வசத்தில் செப்புப் பட்டயம் குடுத்து யிதற்கு

144. ள் போடக் கடவது என்று அடிப்பிச்சு யிருக்கிறது, இந்தப் பட்டயம் எழுதினது

145. காசி தட்டான் கிளங்கு நாடு சுப்பயன் சாட்சி முப்பாட்டுக் காரனுக்குப் பொன்னு

146. 6 நெல் மிடா 4 கிடாய் 1 பூசிக்கர கண்டி பரையனுக்கு நெல் மிடா 3 பொன் 3 கிடாய் 1 காவ

147. ல் கருமனுக்கு பொன் 2 நெல் மிடா 1 மூப்பனுக்கு பொன் 1 நெல் மிடா 1 கிடா

148. ய் 1 சங்கிடு பறையன் கண்டிக்கு பொன் 3 நெல் மிடா 2 கிடாய் 1 ஒக்கிலியரை வெட்டி மு

149. டிக்கினபடியினால் காணிபூமி இத்தாதி கவுண்டர்களுக்கும் தீர்ந்த பிரகாரம் கோவில் எல்லைக்கல்

150. சாதனம் போட்டிருக்குது ஆத்தூர் சோளியம்மன் கோவிலுக்கு இத்தாதி பேர் கவுண்டர்

151. குள் கூடி வெள்ளக்கல் காடைகுல முத்துவீர கவுண்டன் விலையங் கூட்டம் கருப்பு

152. கவுண்டன் இவர்களுக்கு வராக வேட்டுவ கண்டிக் கவுண்டன் பொன் 100 வாங்கி கொண்டது

153. க்கு ராசமுப்பாடு கோயில் முப்பாடு குடுத்ததுக்குச் சாட்சி தலைய நல்லூர் கூரை காளிய

154. ப்பக்கவுண்டன் சாட்சி வெங்கலநாடு பொத்தி சேசுவராயன் சாட்சி சல்லி காளத்தி கவு

155. ண்டன் சாட்சி நீலியப்ப கவுண்டன் சாட்சி. கிழங்கு நாடு கண்டிக் கவுண்டன் சாட்சி

156. குப்பம் பசுவய்யன் சாட்சி

# 15. கோசணம் செப்பேடு

கோபிசெட்டிபாளையம் வட்டம், கோசணம் அருகேயுள்ள செல்லிபாளையம் பெருமாள் நாடார் என்பவரிடம் இச்செப்பேடு உள்ளது. இதைப் பெற்றுப் பதிப்புக்கு அளித்தவர் சமூகவியல் ஆய்வாளர் நெல்லை நெடுமாறன் அவர்கள் ஆவார்.

விசயநகர மன்னர் சீரங்கராயர் ஆட்சிக் காலத்தில் கி.பி. 1603இல் கோசணம் கோட்டையில் குருகுலத்து வம்சச் சிற்றரசர்கள் பூலுவ வேட்டுவர் மகாகாளியண்ண கவுண்டர் நாட்டு நிர்வாகம் செய்து வந்தார். அவருக்கு உதவியாக மணிய வேட்டுவர் மகன் ராக்கியாக் கவுண்டர், புன்ன வேட்டுவர் பச்சையாக் கவுண்டர் ஆகியோர் இருந்தனர்.

கோசணம் கோட்டை மீது அன்னியர் படை எடுத்தனர். மேற் கண்ட மூன்று பேருக்கும் ஆதரவாக தாளி சடையமூப்பன், பொன்னி சின்னான், மசைக்குட்டை ராக்கி, மணியராக்கி ஆகியோர் கோட்டை மேற்குக் கொத்தளத்தில் போர் செய்து வெற்றி பெற்றனர். அதனால் வேட்டுவத் தலைவர்கள் நாடார் சமூகத்தவர்கட்குச் சிறப்புச் செய்து பச்சைநாயகியம்மன் கோயிலில் சில உரிமைகளையும் அளித்தனர். நாடார் சமூகத்தினருக்கு வெள்ளைக்குடை, வெண்சாமரம் சிறப்புக் கூறப்படுகிறது.

இச்செப்பேட்டிற்கு ரங்கப்ப சேருவைகாரன், வேளராசி திருமலைக் கவுண்டர் ஆகியோர் சாட்சிக் கையொப்பம் இட்டுள்ளனர்.

## மூலம்

1. சுபஸ்ரீமன் மகாமண்டலீசுரன் கட்டாரி சாளுவன் அரியராய
விபாடன் பா
2. சைக்குத் தப்புவராய கண்டன் மேதினி மீசுரகண்டன் கண்டநாடு
கொண்டு கொண்டநாடு குடா

3. தான் எம்மண்டலமும் ஈழமண்டலமுங் கொண்ட தசரதராமன் மதியாத மன்னர் ம

4. குடம்பிடுங்கி பதிசூறையாடும் பரசுராமன் போரிட்ட மன்னர் பதியைப் பிடுங்கி

5. மார்தட்டும் வெட்டுங்குடிப் பிரதாபன் ராசாதிராச ராசபரமேசுவரன்

6. ராசமார்த்தாண்டன் ராசகெம்பீரன் ராசகோலாகலன் அசுவபதி கெசபதியான நவகோ

7. டி நாராயணன் கெசதள விபாடன் கெசவேட்டை கண்டருளிய நரசிங்கராயர் ஆனைகுந்திராயர்

8. ராமதேவராயர் அச்சுதராயர் கிருஷ்ணராயர் சீரங்கராயர்க்குச் செல்லாநின்ற கலியுக சகாத்தம் 4715

9. சாலிவாகன சகாத்தம் 1535 மேல் பிரபவ வருஷம் மாசி 9 தேதி சத்தியமங்கலத்துக்குச் சேர்ந்த குறுப்புநாடு

10. கோசணத்தில் கோட்டையிலே குருகுலத்தரசரான பூவுல வேட்டுவன் மகா காளியண்ண

11. கவுண்டன் துரைத்தனத்தில மணிய வேட்டுவன் மகன் ராக்கியாக் கவுண்டன் புன்ன வேட்டுவன்

12. பச்சையாக் கவுண்டன் இந்த மூன்று பேருக்கு சகாயமாய் வெள்ளைக்குடை வெண்சாமரமுடைய தாளிச்ச

13. டையமூப்பன் பொன்னிசின்னான் மசைக்குட்டைராக்கி மணியராக்கி இந்த நாலு பேரும் கோசணத்துக் கோட்டை

14. மேற்குக் கொத்தளத்திலே நின்று எதிராளியை செயித்தபடி யினாலே இவர்களை மெச்சிக் குடுத்த வெகுமானம் பச்சை

15. ப்பட்டு தங்கச் சரப்பணியும் கோசணத்தில் காணியும் முந்தின பாக்கு வெத்திலையும்

16. குண்ட முறைப்பாடு எடுத்துக் கொண்டு பொங்கலுங் கிடாயும் குடுத்து மனை ரண்டு கூறு புஞ்சை நாலு வள்ளக்காடு யில

17. ந்தைக் குட்டைக்காடு சடைச்சிகாடுங் குடுத்து பச்சைநாயகி யம்மன் சன்னதியில் சகலமான பலபட்டடையும்

18. கூடிச் சம்மதிச்சு எழுதிக்குடுத்த சாசனப்பட்டயம், பூமி ஆகாசம் உள்ளவரை நடத்திவிக்கத் தக்கதாகவும்

19. இதுக்கு யாதாமொருத்தர் ரண்டு நினைத்தால் மகாபாதகத்திலே போகக் கடவது காசியிலே காராம் பசுவைக்

20. கொன்ற தோஷத்திலே போவார்கள். இதுக்குச் சாட்சி ரங்கப்ப சேருவைகாரன் வேளராசி திருமலை கவுண்டன்

21. இந்த சாசனப் பட்டயம் பாஞ்சாளரில் குப்பதட்டான் யென் கையெழுத்து உ பச்சை நாயகியம்மன் துணை.

(கோசணம் காணியாளராக முன்னை வேட்டுவரும் இருந்துள்ளனர். கி.பி. 1597ஆம் ஆண்டு கோசணம் முன்னை வேட்டுவர் பெருமாள், பருவாச்சி அய்யருக்குக் கொடுத்த கொடை கல்வெட்டுப் பகுதியில் உள்ளது.)

# 16. திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை

கொங்கு ஏழு சிவத் தலங்களில் திருச்செங்கோடு ஒன்று. செங்கோட்டு வேலவரும், உமையொரு பாகனாக அர்த்தநாரீசுவரரும் அங்கு எழுந்தருளியுள்ளனர்.

அத்தலத்திற்கு ஆறை இளையா நாயக்கர், அவர் மகன் குமார திருமலை, அவர்கள் வழிவந்த மோழைபாளையம் வேட்டுவப் பெரு மக்கள் ஆகியோர் செய்த திருப்பணிகள் பற்றிய எட்டுப் பாடல்கள் உள்ளன. அவை வேட்டுவகுலப் பெருமக்கள் திருப்பணியாதலின் இங்கு தரப்படுகிறது.

## *பாடல்கள்*

1. தேமேவும் அரவகிரி நாகீசர் சந்நிதி
   சிறந்தகற் பக்கிரகமும்
   திகழர்த்த மண்டப மகாமண்ட பத்திறொடு
   தென்கோ புரத்தடிகளும்

   பூமேவு நந்தவன வாவிமண் டபபூசை
   புகழுமஞ் சாந்திருவிழா
   பூசைபடி பதினேழு பயறுகறி அமுதமும்
   பூலமா ளிகைகந்தமும்

   மாமேவு மாசிவை யாசிசிவ ராத்திரி
   மகாநவமி தீபாவளி
   மார்கழி யுடன்கார்த் திகைதீப பொரிசோம
   வாரமும் பரிவட்டமும்

கோமேவு மாலைவடை காவேரி மஞ்சனம்
குலவத் தியானஒலியும்
கொற்றமிகும் ஆறைஅல் லாளன்இளை யான்அருள்
குமாரதிரு மலைஉபயமே. - 262

2. சீர்மேவு கலியுக சகாத்தமா யிரமிசை
சிறக்கும்ஐஞ் நூற்றறுபதின்
செல்லுமைந் தானதா ரணவருடம் அற்பிசைத்
திங்களிரு பத்தைந்தினில்

கூர்மேவு வேலுடைய மகிசூரு நஞ்சயன்
கோதையந் தலமதனையே
கொள்ளைகொண் டேகினது கண்டுதய வாகியே
கொள்ளைபறி போனவகையில்

பார்மேவ வேதனது புண்ணியம் எனச்சிறிது
பாலித்து நன்மைஉதவிப்
பட்சமுட னேசம்பு ரோட்சனம் நடத்தினன்
படிமீது புகழ்பெற்றனன்

தார்மேவு வாகைபுனை கண்ணப்பர் சேகரன்
தருமமே கனிநெஞ்சினன்
தருமருவு திருமலைஅல் லாளன்இளை யான்மரபு
தருமம் தழைத்தோங்கவே. - 263

3. அத்தர்திருச் செங்கோட்டு அரனடிக்கே அன்புசெய்யும்
எத்தலமெண் ஆறை இளையான்கேள் - இத்தலத்தே
வந்துகொள்ளை கொண்டான் மகிசூரான் நீஅதனைத்
தந்துகொள்ளை கொண்டாய் தவம். - 264

4. அண்டர்தொழும் காளத்தி அப்பருக்குக் கண்கொடுத்தான்
அதிர்ந்துவீழும்
மண்டபமும் தாங்கியநல் சிவகோசன் தனக்குமுத்தி
வருவித்தாயே

கொண்டல்நிகர் ஆனகொடை அல்லாள திருமலையா
ஈகையோனே
தண்டமிழ்சேர் இளையானே துட்டர்கண்டா நறுவாகைத்
தாமத்தோனே.

5. மூவருக்கும் அகத்தியமா முனிவருக்கும் அரசிருந்த
முன்னையோர்க்கும்
தேவருக்கும் திரும்பாத காவிரியைக் கொங்கேற்றித்
திறைகொண்டாயே
பூவிருக்கும் உரமாயன் கடலடைத்தான் அவன்வேடம்
புனைந்தவாறோ
யாவருக்கும் இளையானே அல்லாள திருமலையா
ஈகையோனே. - 265

6. ஏவிளம்பி வச்சரத்தே ஏரகநா கீசருக்கு
மாவிளம்பக் கோயிலுமா மண்டபமும் - பூவிளம்பக்
கண்டான் அல்லாளன் கருணைஇளை யான்ஆறைத்
தண்டாவு வாகையுறத் தான். - 267

7. சந்தியா தீபம் சதுரங்கம் தாம்பூலம்
நந்தியா தீபம் நடத்தினான் - புந்தியால்
எப்போதும் ஆறை இளையான் திருமலையான்
தப்பாமல் சீர்கொள்ளத் தான். - 268

8. **ஆறை இளையான் வழிவந்த மோழைகவுண்டம்பாளையம் வேட்டுவர்கள் திருப்பணி :**

பேறுறு கோதைநன் னாகேசன் தூபி
பெருமையொடன்று
ஆறை இளையான் அமைத்தனன் அம்மர
பாளர்களில்
தேறிடு மோழை நகரார் அரும்பொருள்
தேடிச்சுதைக்
கூறு பணியும் பிரதிட்டை யும்செய்து
கொடுத்தனரே. - 389

# 17. கொங்கு வரலாற்று ஆவணங்களில் வேட்டுவர் சமூகம்

கொங்கு நாட்டில் செப்பேடுகளிலும், ஓலைகளிலும் எழுதப் பட்ட பல்வேறு ஆவணங்கள் கிடைத்துள்ளன. அவைகளில் பலவற்றில் வேட்டுவர் சமூகத்தினர் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

## *1. கொங்கு காணியான பட்டயம்*

வேளாளர்கள் சோழ நாட்டிலிருந்து குடியேறிக் கொங்கு நாட்டில் காணி பெற்ற விபரம் இப்பட்டயத்தில் கூறப்படுகிறது. 124 குலங்கள் பிரிக்கப்பட்டு அவர்களுக்குரிய காணிகள் வகுக்கப்பட்டதை இந்த ஆவணம் கூறுகிறது. இதற்குரியஆவணம் எழுதப்பட்ட போது மூவேந்தர்களும் கையெழுத்திட்டதாகக் கூறும் இந்த ஒப்பந்தத்திற்குச் சாட்சிக் கையெழுத்திட்ட சிலருள் 'பூவிலுவரில் அரியிபிராட்டி வில்லவராயக் கவுண்டர்' என்பவரும் ஒருவர்.

## *2. பெருந்துறைச் செப்பேடு*

பெருந்துறை வெள்ளை வேட்டுவர், சிவப்பிராமணர், கொங்கச் செட்டி ஆகியோருக்குச் சொந்தமாக இருந்தது. கீழ்க்கரைப் பூந்துறை நாட்டுப் படைவீடு என்ற ஊரைச் சேர்ந்த கொங்கு வேளாளரில் மேதி குலத்தார், மேற்கண்ட மூவரிடமிருந்தும் 500 நாகரம் பொன்னுக்குப் பெருந்துறையை விலைக்கு வாங்கினர். வெள்ளை வேட்டுவர்கள் காகம் பகுதிக்குக் குடியேறினர். பின்னர் பெருந்துறையின் பாதி உரிமையை நசியனூர்க் கண்ணகுல செங்கோடன் நல்லதம்பிக் கவுண்டர் என்பவர் மேதிகுலம் பழனிக்கவுண்டரிடமிருந்து விலைக்குப் பெற்று தன் மருமகன் பூந்துறைக் காடைகுலத் தம்பி நல்லய்ய கவுண்டருக்கு அளித்தார்.

### 3. காரையூர்ச் செப்பேடு

நத்தக்காரையூர் என வழங்கும் காரையூரின் உரிமையுடைய காணியாளர்கள் காசவேட்டுவர், கொங்கு வேளாளர் மணிய குலத்தார், கொங்குச் செட்டியார் ஆகியோர் ஆவர். விசயநகர ஆட்சியாளர் நஞ்சராசன் இந்த மூன்று காணியாளர்களின் உரிமையைப் பயிர குல அழகன் சர்க்கரைக்கு வழங்கினார். அதற்குச் செப்பேடும் எழுதித் தந்தார். இதில் கையெழுத்திட்ட பெருமக்கள் விசயமங்கலம் வேட்டுவர் விசயக்கவுண்டர், கார்வளி வெள்ளை வேட்டுவர் முத்தரைக் கவுண்டர், கீரனூர் குடுமி வேட்டுவர் செம்பராயக் கவுண்டர் ஆகியோர் ஆவர்.

### 4. நீலம்பூர்ச் செப்பேடு

வேணாடுடையார் கொங்கு வேளாளர் ஈஞ்ச குலத்தார்க்கு நீலம்பூர்க் காணி அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது. அப்பகுதியில் முன்பு அதிகாரம் செலுத்தியவர் காவுலுவர் விசயகாளிராயக் கவுண்டர் என்பவர்.

### 5. திருவாச்சிச் செப்பேடு

மேல்கரைப் பூந்துறைநாட்டுத் திருவாச்சி பூவாணி வேட்டுவர், கொங்கச் செட்டியார்களில் வேலாயுதம் செட்டியார் ஆகியோருக்கு உரிமையுடையதாக இருந்தது. திருவாச்சிக்காணியை மேற்கண்ட இருவரிடமிருந்தும் கொங்கு வேளாளர்கள் பரஞ்சேர்வழி ஓதாள குல குள்ளகாளியப்ப கவுண்டரும், வெள்ளகோயில் ஆந்தை குலம் சென்னிமலைக் கவுண்டரும் 1500 பொன் கொடுத்து வாங்கியதை இச்செப்பேடு கூறுகிறது.

### 6. வெள்ளோடு காணிப்பட்டயம்

வெள்ளோடு கிராமத்தில் வடமுகம் வெள்ளோடு வெள்ளை வேட்டுவருக்கும், தென்முகம் வெள்ளோடு வெள்ளைப் பெரிச்சி மூப்பன் ஆகியோருக்கும் உரிமையாக இருந்தது. வல்லிபுரம் சாத்தந்தைகுல முத்துக்கவுண்டர் இருவர் உரிமைகளையும் பெற்றார்.

### 7. கன்னிவாடிக் கண்ணகுலப் பட்டயம்

தலையநாடு கன்னிவாடியிலிருந்து கொங்கு வேளாளர் கண்ண குலத்தார் வெளியேறிப் பல ஊர்களை ஏற்படுத்தியதையும், பல ஊர்களில் காணி பெற்றதையும் இப்பட்டயம் விரிவாகக் கூறுகிறது. இப்பட்டயத்தில் கண்ணகுலத்தார் வேட்டுவர் சமூகத்தைச் சேர்ந்த வில் வேட்டுவர், விளக்கு வேட்டுவர், கரும்பிளி வேட்டுவர், குண்ணாடி வேட்டவர், மாச்சாடி வேட்டுவர், ஐநூத்தாம் செட்டியார்கள் ஆகியவர்களைத் தங்கள் 'பாதிப் பங்காளிகள்' என்று குறிக்கின்றனர். முக்கிய பல ஆலோசனைகளை அவர்களிடம் கேட்டுள்ளனர்.

### 8. பூந்துறை நாட்டார் மேலோலை

காங்கய நாட்டுக் காரையூருக்கும், மேல்கரைப் பூந்துறை நாட்டு அறச்சலூருக்கும் எல்லைத் தகராறு ஏற்பட்டுப் பெரும் சண்டை நடந்தது. மதுரை நாயக்கர் அரசின் அலுவலர்கள் நேரில் வந்து எல்லையை அளந்து ஒரு பட்டயம் எழுதினர். இப்பட்டயத்தில் மேல் கரைப் பூந்துறை நாட்டின் சார்பாகக் கையெழுத்திட்ட பெருமக்களில் ''வேட்டுவர் பட்டாலிக் கவுண்டர்'' என்பவர் ஒருவர்.

### 9. மொடவாண்டிகள் பட்டயம்

பூந்துறை கொங்கு வேளாளர் காடைகுல வாரணவாசிக் கவுண்டர் முடவர் பாதுகாப்பு நிலையம் ஒன்றை சத்திமங்கலம் (இன்றைய கஸ்பாபேட்டை) என்ற ஊரில் ஏற்படுத்தினார். அதற்கு வேட்டுவர்கள் வீட்டுக்கு எட்டுப் பணமும், பட்டிக்கு ஒரு பணமும் தந்தனர். இப்பட்டயத்தில் வேட்டுவர்கள் ''கொங்கு வேட்டுவர்'' என்று குறிக்கப்பட்டுள்ளனர்.

### 10. முத்தூர்ப் பட்டயம்

விசயநகருக்கு வரி கொடுப்பதில் ஏற்பட்ட சிக்கலால் முத்தூரைச் சேர்ந்த 15 பேர் சிவசமுத்திரத்தில் சிறை வைக்கப்படு கின்றனர். கொங்கு, வேளாளர், செட்டியார்கள், கணக்கர்கள், உப்பிலியர்கள், வேட்டுவர்கள் ஆகியோர் கைதாகினர். 'காவுள

வேந்தரில் கருமத சரவண கவுண்டர் மகன் சோழியப்பன், காச்சலில் அர்த்தநாரிக் கவுண்டர் மகன் குமரசாமி, கள்ளிப்பிள்ளரில் வேலப்ப கவுண்டன் மகன் வேம்பகவுண்டர், வெங்கச்சி வேட்டுவரில் கண்டிய தேவன் மகன் பெரிய சோழியப்பன்' ஆகியோர் கைதான வேட்டுவப் பெரு மக்கள் ஆவர்.

## *11. தீர்த்தகிரிச் சர்க்கரை பட்டயம்*

கொங்கு நாட்டு விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை ஆயுதங்கள் தயாரிக்கவும், வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் சிவன் மலைச் சரிவில் இருந்த தன் காடு முழுதையும் அளித்தவர் பட்டாலி காவுலவ வேட்டுவர் அனுமந்தக் கவுண்டர் என்பவர் ஆவார்.

(தீரன் சின்னமலையின் தந்தை இரத்தினச் சர்க்கரைக்கு நிலம் அளித்தவர் குமாரவலசு வேட்டுவர் குமாரசின்னய கவுண்டர் என்பவர்)

# 18. சோழன் பூர்வ பட்டயம்

***பட்டயம்***

கொங்கு நாட்டில் 'காடு கொன்று நாடாக்கிக் குளம்தொட்டு வளம் பெருக்கிக் கோயிலொடு மக்கள்' குடியமர்ந்த நிகழ்ச்சிகளைச் சற்று உயர்வு நவிற்சியுடன் கூறும் மிகச் சிறந்த வரலாற்று ஆவணம் 'சோழன் பூர்வ பட்டயம்'.

கி.பி. 18ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த ஸ்காட்லாந்து நாட்டின் லூவி தீவைச் சேர்ந்த லெப்டினன்ட் கர்னல் காலின் மக்கென்சி (Liuet Colonal Colin mackenzie C.B.; 1753-1821) ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் சென்னைப் பிரிவில் 1782 முதல் நில அளவை அலுவலராகப் பணிபுரிந்தார். பணியின் பொருட்டுக் கிருஷ்ணா நதி முதல் கன்னியா குமரி வரை பயணம் செய்த மக்கென்சி பல உதவியாளர்களைத் தம் சொந்தப் பொறுப்பில் நியமித்து தென்னிந்திய மொழிகளில் உள்ள கல்வெட்டு, செப்பேடு, பட்டயம், பாளையக்காரர் வரலாறு, ஊர் பற்றிய செய்திகள் ஆகியவற்றைத் தொகுத்தார். இந்திய நாட்டு வரலாற்று ஆவணங்களைத் தொகுக்க முயன்ற முதல் ஐரோப்பியர் இவரேயாவார்.

1818ல் இந்தியாவின் தலைமை சர்வேயராகப் பதவி உயர்வு பெற்றுக் கல்கத்தா சென்றபோது தம் ஆவணத் தொகுப்புக்களையும் உடன் எடுத்துச் சென்றார். அனைத்துக்கும் பட்டியல் தொகுத்து வெளியிட விரும்பினார். அவர் விருப்பம் நிறைவேறாமலேயே 1821ல் காலமானார். அந்த ஆவணங்கள் அனைத்தையும் கவர்னர் ஜெனரல் ஹேஸ்டிங்ஸ் பிரபு 10000 பவுண்ட் கொடுத்து மக்கென்சி மனைவி யிடமிருந்து பெற்று 1828ல் சென்னைக்கு அனுப்பினார். இந்த ஆவணங்கள் ஓலைச் சுவடியாகவும், காகிதச் சுவடிகளாகவும் உள்ளன.

வங்காளத்து ஏசியாட்டிக் சொசைட்டியார், சென்னை மாகாண அரசு முயற்சியால் எச்.எச். வில்சன், ரெவரன்ட் வில்லியம் டெய்லர் ஆகியோர் அவற்றிற்குப் பட்டியல் தயார் செய்தனர். சிலவற்றைப் பெயர்த்தும் எழுதினர். சி.பி. பிரவுன், டாக்டர். டி.வி. மகாலிங்கம் போன்றோர் அதன் சுருக்கத்தை வெளியிட்டுள்ளனர். அவற்றுள் ஒன்று 'சோழன் பூர்வ பட்டயம்' (எண் டி 2891). இப்பட்டயத்தை இந்த ஆவணங்கள் பாதுகாக்கப்படும் தமிழக அரசின் கீழ்த்திசை மொழி களின் நூலக வெளியீடாக 1950ஆம் ஆண்டு கோவை கிழார் சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் வெளியிட்டார்கள்.

சோழன் பூர்வ பட்டயம் பற்றிச் சில ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. அவற்றுள் முக்கியமானது புதுதில்லி சவகர்லால் நேரு பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கி. நாச்சி முத்து அவர்களின் ''சோழன் பூர்வ பட்டயம் கூறும் கொங்கு நாட்டு ஊர்கள்'' என்ற நூலாகும்.

மக்கென்சியின் ஆவணங்களில் உள்ள கல்வெட்டுகளையும், சில செப்பேடுகளையும் அறிஞர் தி.நா. சுப்பிரமணியம் அவர்கள் ''தென்னிந்தியக் கோயில் சாசனங்கள்'' என்ற பெயரில் மூன்று தொகுதிகளாக வெளியிட்டார். மூன்றாம் தொகுதி இரண்டு பாகங்கள் அடங்கியது. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்கள் மக்கென்சியின் வாழ்க்கை, அவர் ஆவணங்கள் பற்றி ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள சென்னைப் பல்கலைக்கழக நூலக வளாகத்தில் அமைந்துள்ள தமிழக அரசின் கீழ்த்திசை நூலகக் காப்பாட்சியர் முனைவர் சவுந்தரபாண்டியன் அவர்கள் மக்கென்சியின் ஆவணங்கள் பற்றிய நூல்கள் சிலவற்றை வெளியிட்டுள்ளார். ஆர்வமுடைய ஆய்வாளர்கட்கு மக்கென்சியின் ஆவணங்களில் இன்னும் பற்பல ஆய்வுக் களங்க்ள் உள்ளன.

### *பட்டய விபரம்*

திருவாரூரில் கரிகால சோழன் நீதியுடன் ஆட்சி செய்து வந்தார். ஒருநாள் கரிகால சோழன் மகன் தெருவில் தேரோட்டிச் சென்ற போது

பசுவின் இளங்கன்று ஒன்று தேர்ச்சக்கரத்தில் சிக்கி இறந்தது. நீதி வழுவாத சோழன் தன் மகன் மீது தேரோட்டி மகனைக் கொன்றான். இதனால் கரிகால சோழனுக்குப் பைத்தியம் (விருமத்தி) பிடித்து விடுகிறது. காஞ்சிபுரம் காமாட்சி குறத்தி வடிவில் வந்து கொங்கு நாட்டில் தல யாத்திரை செய்து கோயில் கட்டி ஊர் அமைத்து மக்களைக் குடியேற்றினால் பைத்தியம் தெளியும் என்று குறி சொல்லி விபூதி பூசவே ஓரளவு பைத்தியம் தெளிந்தது.

கரிகாலன் சமயமுதலி, சடையப்ப வள்ளல், கஸ்தூரி ரங்கப்ப செட்டி ஆகியவர்களை அழைத்துக் கொண்டு கொங்குநாடு வந்து காமாட்சியம்மன் கூறிய பணிகளைத் தொடங்கினான். 36 பெரிய ஊர்களில் கோயில் கட்டி நகரம் ஏற்படுத்தி பதினெண்குடி மக்களைக் குடியமர்த்துகின்றனர். கோயில் பணிகட்குச் செங்குந்தர்களும், உழவுக்கு வேளாளர்களும், வியாபாரத்திற்குச் செட்டிகளும், கணக்கர் களும் பல தொழில்கட்கு அந்தந்தச் சமூகத்தினர் நியமிக்கப்படுகின் றனர். 36 ஊர்களில் 30 ஊர்களுக்கு கோட்டை ஊர் அதிகாரத்திற்கு வேட்டுவ சமூகத்தார் நியமிக்கப்பட்டதைச் சோழன் பூர்வ பட்டயம் கூறுகிறது. இப்பணியைச் சேரமான் பெருமாள், கரிகால சோழன், மீனாட்சி சுந்தரபாண்டியன் ஆகியோர் செய்ததாகப் பட்டயம் கூறுகிறது.

| எண் | ஊர் | நியமித்த அரசர் | நியமிக்கப் பட்ட பிரிவு | பெயர் |
|---|---|---|---|---|
| 1. | பழனி | சேரர் | வேடர் | சின்னப்ப மண்ணாடி |
| 2. | ஆய்க்குடி | பாண்டியர் | வேடர் | பழனி சின்னப்ப மண்ணாடி மைத்துனர் கொண்டப்ப மண்ணாடி |
| 3. | பூம்பறை | சேரர் | வேடர் | குண்ணுவரில் நாகப்ப மண்ணாடி |
| 4. | ஆனைமலை | சேரர் | பூலுவர் | அள்ளப்ப மண்ணாடி |
| 5. | தென்சேரி | சோழர் | பூலுவர் | பல்லவ மண்ணாடி |
| 6. | சென்னிமலை | சோழர் | வேட்டுவர் | அமர மண்ணாடி |
| 7. | வெள்ளியம்பதி | சோழர் | வேட்டுவர் | மலையணி மண்ணாடி |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | சத்திமங்கலம் | சேரர் | வேடர் | சின்னப்ப மண்ணாடி |
| 9. | திங்களூர் | சேரர் | வேட்டுவர் | பெரியண்ண மண்ணாடி |
| 10. | விசயமங்கலம் | சோழர் | பூலுவர் | குமாரவேல் மண்ணாடி |
| 11. | கீரனூர் | சேரர் | பூலுவர் | கண்டி மண்ணாடி |
| 12. | கோனாபுரி | சோழர் | பூலுவர் | மொண்ணை மண்ணாடி |
| 13. | நடுவச்சேரி | சேரர் | பூலுவர் | செந்தேவியன் மண்ணாடி |
| 14. | பல்லடம் | சேரர் | பூலுவர் | பணிக்க மண்ணாடி |
| 15. | தணக்கன்பதி | சோழர் | வேடர் | சத்தியமங்கலம் சின்னப்ப மண்ணாடி வகை தாணையத்து மண்ணாடி |
| 16. | குள்ளந்துறை | சோழர் | வேடர் | தாணையத்து மண்ணாடி வகை கங்கு நதி மண்ணாடி |
| 17. | வண்டிக் கோட்டை | சோழர் | வேட்டுவர் | அன்னூர் வில்ல மண்ணாடி |
| 18. | வெள்ளாதி | சோழர் | வேட்டுவர் | வில்ல மண்ணாடி வகை கொண்டப்ப மண்ணாடி |
| 19. | கவையம் புத்தூர் | சோழர் | பூலுவர் | சின்னப்ப மண்ணாடி |
| 20. | சாமளாபுரம் | சோழர் | காவலர் | வஞ்சி மண்ணாடி |
| 21. | சிங்கநல்லூர் | சோழர் | காவலர் | வஞ்சி மண்ணாடி |
| 22. | வெள்ளலூர் | சோழர் | காவலர் | சோழியண்ண மண்ணாடி |
| 23. | சூலூர் | சோழர் | பூலுவர் | சூர மண்ணாடி |
| 24. | இருகூர் | சோழர் | பூலுவர் | கரும மண்ணாடி |
| 25. | இடிகரை | சோழர் | பூலுவர் | கவையம்புத்தூர் சின்னப்ப மண்ணாடி |
| 26. | துடியலூர் | சோழர் | பூலுவர் | கவையம்புத்தூர் சின்னப்ப மண்ணாடி |
| 27. | பேரூர் | சோழர் | பூலுவர் | குமார கோப்பண மண்ணாடி |
| 28. | அவினாசி திருமுருகன் பூண்டி | சேரர், சோழர் | பூலுவர் | துடிசை மண்ணாடி மகன் நாகதேவ மண்ணாடி |
| 29. | சேவூர் | சோழர் | பூலுவர் | செம்பிய மண்ணாடி |
| 30. | முட்டம் | சோழர் | பூலுவர் | பேரூர் குமாரகோப்பண மண்ணாடி வகை நாகப்ப மண்ணாடி |

மன்றாடி என்ற சொல்லின் திரிபு மண்ணாடி

# 19. பிற்சேர்க்கை

## (அ) திங்களூர் நொண்டி நாடகம்

இந்நூல் திங்களூர் அருள்மலை முருகன் மீது அவினாசிப் புலவர் என்பவரால் பாடப்பட்டது. இந்நூல் பாடியதற்காகவும், பாடி நடித்ததற் காகவும் திங்களூர் அப்பிச்சிமார் மடம் வேட்டுவர் சமூகத் தலைவர் ஆண்டமுத்துக் கவுண்டர் அவர்கள் பொன் பரிசு கொடுத்துப் பாராட்டி உள்ளார். அதை ஆசிரியரே தம் நொண்டி நூலில் குறிப்பிட்டுள்ளார். கண்ணப்பர் தொடர்பும், சிவராத்திரி உண்டுபண்ணின நிகழ்ச்சியும் சுட்டிக் கூறப்பட்டுள்ளது.

''பாருலகில் ஆசுகவி நொண்டி - தன்னைப்
படித்து நடிக்கத் தியாகம்
கொடுத்தாரைச் சொல்லுகிறேன்
மாரையன் மடப்பதியில் சென்று - அப்பிச்சி
மாரையனைப் போற்றியே வித்
தாரமாகப் படித்தேன்

கொற்றவன் குருகுல வசீரன் - நல்ல
கோகனகம் போலே உற்ற
வாகைமாலை மார்பன்
பக்தியுள்ள சிவபூசை வேடன் - நல்ல
பார்த்திபர்கள் மெய்க்கச் சிவ
ராத்திரியுண்டு பண்ணினோன்

தின்றுருசி யானகரி தன்னைச் - சிவனே
தின்னப்பா எனக்கொடுத்த
கண்ணப்ப வங்கிஷத்தான்
அன்றுலகில் புகழ்பெற்ற தூயன் - என்னை
ஆண்டமுத்து ராயனவன்
வேண்டியபொன் கொடுத்தான்''

## (ஆ) கொங்கு மண்டல சதகம்

விசயமங்கலம் கார்மேகக் கவிஞர் இயற்றிய கொங்கு மண்டல சதகத்தில் புரவிபாளையம் கோப்பண மன்றாடியார், அல்லாளன் இளையான், செய்யான் பல்லவராயர் முதலிய வேட்டுவர் சமூகத் தலைவர்கள் புகழ்ந்து பாடப் பெற்றுள்ளனர்.

### *புரவிபாளையம் பாளையக்காரர் கோப்பண மன்றாடியார்*

''தென்பாண்டி நாட்டினில் சிங்களர் தீமை செயச்செழியன்
முன்போ யகற்ற வலியற்ற காலத்தில் மொய்ம்பொடவர்
பின்போடத் தானை கொடும்ஓட்டு வீரன் பெருங்களந்தை
மன்பூ வலன்எனும் கோப்பண னும்கொங்கு மண்டலமே'' (59)

### *அல்லாளன் இளையான்*

''வடமுக நின்றும் வருகா விரியின் வளத்தை என்றும்
திடமுறு கொங்கிலும் பாசன மாகச் செலப்பிரித்த
அடல்கொள் அல்லாளன் இளையான் பெருக்கம் அமைந்துவளர்
வடகரை யாற்றூர் திகழ்வது வும்கொங்கு மண்டலமே'' (79)

### *செய்யான் பல்லவராயன்*

''தொல்லுல கத்தினில் துட்டரை வெட்டித் துணித்ததனால்
சொல்லிய போசள வீர புசபலன் துகளருசீர்
பல்லவ ராயன் எனப்பட்டம் ஈயப் படைசெலுத்த
வல்லவன் வேட்டுவச் செய்யானும் வாழ்கொங்கு மண்டலமே''

## (இ) குறவஞ்சி, கோவை இலக்கியங்கள்

### *கோப்பண மன்றாடியார் குறவஞ்சி*

''பம்பிடச் சிங்களர் தென்னர் களிக்கப் பனும்களந்தை
கம்பக் கரிக்கோப் பணன்வரை யீர்வேள் கலாபத்திலே
செம்பொற் குடத்தைப் பவளத்தை முகத்தைத் தெரியவிட்டு
அம்பைப் புதைத்துவைத் தீர்இந்த எண்ணம் அறிந்திலனே''

### *கபிலமலை வருக்கக் கோவை*

''மல்லார் புயத்தன் வடகரை ஆறையில் வாளரசன்
அல்லாளன் சொல்திரு மலையிளை யானா அகன்றனையாள்
கல்லார மார்பர் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
வில்லார் நுதலும் விறல்வேந்து மாளிகை மேவினரே''

## *(ஈ) காணிப்பாடல்கள்*

கொங்கு நாட்டுக்குரிய பல ஊர்க் காணிப்பாடல்களில் வேட்டுவர் குலப் பெருமக்கள் காணிபற்றிக் குறிப்புக்கள் வருகின்றன.

காங்கய நாட்டில் பட்டாலி, வெள்ளகோயில், முத்தூர் முதலிய ஊர் காணிப்பாடல்களில் வேட்டுவர் குலப் பெருமக்கள் காணி குறிக்கப் பெறுகிறது.

### *பட்டாலி*

''தரணிபுகழ் பட்டாலி அதனில்வரு குருகுலனை
தங்குபுகழ் சேர் கண்ணனை''

### *வெள்ளகோயில்*

''மருவுலவு வெள்ளகல் அதனில்வரு குருகுலனை
வரிசைதிகழ் வில்லியை பிரபுடிக மாடையை
மதுரமொழி ஓதாளனை
வலிமையது சேர்கின்ற அதிகவண் ணக்கனை
மகராசர் யோகமதுவும்
மாறாத தனஞ்செயனை''

### *முத்தூர்*

''முத்தன் மணியன் முதற்சேரன் வெள்ளம்பர்
மெத்தபொரு ளந்தையுடன் மேலான - சித்திபெறும்
காவலியர் நன்முதலிக் காமருடன் ஏழ்முதன்மை
தாவுபுகழ் முத்தூர்த் தலம்''

தென்கரை நாட்டில் தூரம்பாடி, பிரமியம், கொற்றனூர், ஊதியூர் முதலிய ஊர்க்காணிப் பாடல்களில் வேட்டுவர்குலப் பெருமக்கள் காணி கூறப்படுகிறது.

### *தூரம்பாடி*

''தூரைவேட் டுவர்ஆந்தை சொல்லுநிலை அந்துவன்
வீரையுள மயிலன் மெய்ச்செட்டி - நீரைநுதல்
தீட்டும் முதல்ஐந்து செழித்த தென்கரை
நாட்டிலுயர் தூரை நகர்''

### *பிரமியம்*

''வலஞ்சுழிநா தர்பதத்தை வந்திக்கும் சிந்தை
நலம்பெருகும் காவுலவன் காண - குலங்களையும்
தான்பெருகும் செட்டியுமாய்த் தங்குபுகழ் தொட்டியனாம்
ஆன்பொருனை சூழ்பிரமி யம்''

### *கொற்றனூர்*

''ஞாயம் நிலைபெருக்கும் நற்கா வலன்குழையன்
நேயப் பெரியகுலன் நீள்ஆந்தை - ஆயன்
திருவருள் கொற்றைக்கு சேரன்செம் பூதன்
பெருகுசெட்டி யும்காணிப் பேர்''

''காவல் குழாயன் கதித்த பெரியகுலன்
ஆவல்சேர் ஆந்தை அதிசேரர் - மேவவரு
செம்பூத்தர் தன்னுடனே செட்டியரு மாகஇவண்
இம்புற்ற ஏழ்முதன்மை யே''

### *ஊதியூர்*

''காவலோர் மெச்சுகின்ற காவலவன் செங்குவளை
பூவுலவு திண்புயசெம் பூத்தகுலன் - மேவலவன்
மோதிநகர் ஆனை முகத்தோன் வளர்செம்பொன்
ஊதிநகர் ஆதியர்என் றோது''

## (உ) மணலூர் நாட்டினர்

### *மணலூர் நாட்டு 18 பங்காளிகள்*

கொங்கு 24 நாடுகளில் மணநாடு என்பதும் ஒன்று. அது மணல் நாடு, மணலூர் நாடு எனவும் அழைக்கப்படும்.

மணலூர் நாட்டு எல்லைகளை விரிவாகக் கூறும் மக்கென்சி ஆவணம் ஒன்று உண்டு. தமிழக அரசின் பழஞ்சுவடி நூலகத்தில் உள்ளது. (எண் டி.3139) மணலூர் நாடு, தென்னிலை, கூடலூர், கோடந்தூர், நடந்தை, சின்னதாராபுரம், ராஜபுரம், சூடாமணி, இலவனூர் ஆகிய எட்டு ஊர்களையுடையது.

இவைகளைத் தொகுத்து,

"தென்னிலை கூடலூர் சேர்கோடந் தூர்நடந்தை
சின்னத்தா ராபுரமும் சேர்ந்துமிக - உன்னிதங்கள்
சூழ்ராஜ மாபுரமும் சூடா மணிஇலவை
வாழ்மணலூர் நாடாய் வழுத்து"

என்ற வெண்பா கூறுகிறது.

இந்த நாட்டில் வேட்டுவர் சமூகத்தில் உள்ள 18 பேருக்காக எல்லை வகுத்தது மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அவர்கள்,

1. சிறுத்தலை வேட்டுவர்
2. மோக்காளி வேட்டுவர்
3. சாந்தப்படை வேட்டுவர்
4. வைய வேட்டுவர்
5. முன்னை வேட்டுவர்
6. வெங்கச்சி வேட்டுவர்
7. மாந்த வேட்டுவர்
8. புல்லை வேட்டுவர்
9. சதிப்பு வேட்டுவர்
10. குண்ணாடி வேட்டுவர்
11. வெந்தை வேட்டுவர்
12. புன்னகுடி வேட்டுவர்
13. பறப்படை வேட்டுவர்
14. சோள வேட்டுவர்
15. முளை வேட்டுவர்
16. சாலியன் வேட்டுவர்

என்போர் ஆவர்.

(இருபெயர்கள் ஆவணத்தில் விடப்பட்டுள்ளன.)

## (ஊ) சமூகப் பிரிவுகள்

பேராசிரியர் இராசசேகரத் தங்கமணி (கரூர்) அவர்கள் பல ஆண்டுகளாக வேட்டுவர் சமுதாயம் பற்றி ஆய்வு செய்தும், எழுதியும் வருபவர். கீழ்க்காணும் தொகுப்பு அவருடைய 'கொங்குச் சமுதாயம் - வேட்டுவர்' என்னும் நூலில் அளிக்கப்பட்டுள்ளது.

1) அந்தி வேட்டுவர்
2) அரிச்சந்திர வேட்டுவர்
3) அந்துவ வேட்டுவர்
4) அக்கினி வேட்டுவர்
5) அல்லாள வேட்டுவர்
6) அன்னல் மீள வேட்டுவர்
7) அமர வேட்டுவர்
8) ஆலிலை வேட்டுவர்
9) ஆப்ப வேட்டுவர்
10) ஆமை வேட்டுவர்
11) இரும்புளை வேட்டுவர்
12) இலங்க வேட்டுவர்
13) இந்திர வேட்டுவர்
14) ஈங்கூர் வேட்டுவர்
15) உரிமைப்படை வேட்டுவர்
16) உயர வேட்டுவர்
17) உளிய வேட்டுவர்
18) உருமுக வேட்டுவர்
19) உம்பி வேட்டுவர்
20) உதிர வேட்டுவர்
21) உறுமு வேட்டுவர்
22) உத்திர வேட்டுவர்
23) உயிர் வேட்டுவர்
24) உண்ணாடி வேட்டுவர்
25) ஊராளி வேட்டுவர்
26) கஞ்சி வேட்டுவர்
27) கரடி வேட்டுவர்
28) கரைய வேட்டுவர்
29) கரட்டு வேட்டுவர்
30) கதிரிகளனை வேட்டுவர்
31) கதுகாலி வேட்டுவர்
32) கற்பூர வேட்டுவர்
33) கடம்புலி வேட்டுவர்
34) கரிப்படை வேட்டுவர்
35) கதிப்ப வேட்டுவர்
36) களங்க வேட்டுவர்
37) கவுண்டி வேட்டுவர்
38) கரும்புனித வேட்டுவர்
39) கருவண்ட வேட்டுவர்
40) கன்னி வேட்டுவர்
41) காடை வேட்டுவர்
42) காச வேட்டுவர்
43) காரி வேட்டுவர்
44) காட்டு வேட்டுவர்
45) காக்காவாடி வேட்டுவர்
46) காரை வேட்டுவர்
47) காழய வேட்டுவர்
48) கிழங்க வேட்டுவர்
49) கீரை வேட்டுவர்
50) காரிய வேட்டுவர்
51) குடுமி வேட்டுவர்
52) கீரந்தை வேட்டுவர்
53) குன்னாடி வேட்டுவர்
54) குறுங்காடை வேட்டுவர்
55) குளுவ வேட்டுவர்
56) குருக்கல் வேட்டுவர்

57) குறுண்டி வேட்டுவர்
58) குறும்ப வேட்டுவர்
59) கூச்சந்தை வேட்டுவர்
60) கூரம்ப வேட்டுவர்
61) கொல்லி வேட்டுவர்
62) கொட்டாப்புலி வேட்டுவர்
63) கொடுமுடி வேட்டுவர்
64) கொடும்ப வேட்டுவர்
65) கொடும்புலி வேட்டுவர்
66) கொன்றை வேட்டுவர்
67) கோமுக வேட்டுவர்
68) கோதண்ட வேட்டுவர்
69) கோமாளி வேட்டுவர்
70) கௌதாரி வேட்டுவர்
71) சரக்கு வேட்டுவர்
72) சலங்கை வேட்டுவர்
73) சர்க்கரை வேட்டுவர்
74) சாக்களி வேட்டுவர்
75) சாதி வேட்டுவர்
76) சாந்தப்படை வேட்டுவர்
77) சிலை வேட்டுவர்
78) சிறுத்தலை வேட்டுவர்
79) சுல்லி வேட்டுவர்
80) சுறண்டை வேட்டுவர்
81) சுண்டை வேட்டுவர்
82) செம்ப வேட்டுவர்
83) செங்கண்ண வேட்டுவர்
84) சேர வேட்டுவர்
85) சேதாரி வேட்டுவர்
86) சொர்ண வேட்டுவர்
87) சொட்டை வேட்டுவர்
88) சித்ச வேட்டுவர்
89) சித்த வேட்டுவர்
90) தழும்ப வேட்டுவர்
91) தாலி வேட்டுவர்
92) திட்ட வேட்டுவர்
93) தூங்க வேட்டுவர்
94) தூரை வேட்டுவர்
95) தூண்டி வேட்டுவர்
96) தும்பை வேட்டுவர்
97) துர்க்கை வேட்டுவர்
98) தென்னிலை வேட்டுவர்
99) தொரட்டி வேட்டுவர்
100) தொய்யல் வேட்டுவர்
101) தேரை வேட்டுவர்
102) நங்க வேட்டுவர்
103) நச்சுழி வேட்டுவர்
104) நஞ்சை வேட்டுவர்
105) நரிய வேட்டுவர்
106) நரம்ப வேட்டுவர்
107) நக்க வேட்டுவர்
108) நட்சத்திர வேட்டுவர்
109) நார வேட்டுவர்
110) நாத வேட்டுவர்
111) நுளம்ப வேட்டுவர்
112) நுதர வேட்டுவர்
113) பதரை வேட்டுவர்
114) பனைய வேட்டுவர்
115) பட்டாலி வேட்டுவர்
116) பசப்பி வேட்டுவர்
117) பரிப்படை வேட்டுவர்
118) பண்ண வேட்டுவர்
119) பன்னாடை வேட்டுவர்
120) பறைப்படை வேட்டுவர்
121) பரட்டை வேட்டுவர்
122) பள்ள வேட்டுவர்

123) பம்பை வேட்டுவர்
124) பருத்தி வேட்டுவர்
125) பலகை வேட்டுவர்
126) பறவை வேட்டுவர்
127) பரப்பள வேட்டுவர்
128) பத்திர வேட்டுவர்
129) பாண்டிய வேட்டுவர்
130) பாசறை வேட்டுவர்
131) பால வேட்டுவர்
132) பிரம்ப வேட்டுவர்
133) பீச்ச வேட்டுவர்
134) புன்னாடி வேட்டுவர்
135) புதர வேட்டுவர்
136) புட்ப வேட்டுவர்
137) புன்ன வேட்டுவர்
138) புலி வேட்டுவர்
139) பூச்சந்தை வேட்டுவர்
140) பூவாணிய வேட்டுவர்
141) புல்லை வேட்டுவர்
142) பூலுவ வேட்டுவர்
143) பூழை வேட்டுவர்
144) பேரிஞ்சை வேட்டுவர்
145) பெயர வேட்டுவர்
146) பெருமாள் வேட்டுவர்
147) பொன்ன வேட்டுவர்
148) பௌத்ர வேட்டுவர்
149) மணிய வேட்டுவர்
150) மலைய வேட்டுவர்
151) மந்திர வேட்டுவர்
152) மயில் வேட்டுவர்
153) மாடந்தை வேட்டுவர்
154) மாச்சாடி வேட்டுவர்
155) மாந்தப்படை வேட்டுவர்
156) மான வேட்டுவர்
157) முரட்டு வேட்டுவர்
158) முகிழ வேட்டுவர்
159) மும்முடி வேட்டுவர்
160) முழக்க வேட்டுவர்
161) முளை வேட்டுவர்
162) முன்னை வேட்டுவர்
163) மூல வேட்டுவர்
164) மொயர வேட்டுவர்
165) மோளை வேட்டுவர்
166) மின்ன வேட்டுவர்
167) மோக்காளி வேட்டுவர்
168) மினுக்க வேட்டுவர்
169) மீள வேட்டுவர்
170) வராக வேட்டுவர்
171) ராசி வேட்டுவர்
172) வடுக வேட்டுவர்
173) வன்னி வேட்டுவர்
174) வாகை வேட்டுவர்
175) விசயமங்கல வேட்டுவர்
176) விளக்கு வேட்டுவர்
177) வில்லி வேட்டுவர்
178) வெங்கச்சி வேட்டுவர்
179) வீர வேட்டுவர்
180) வெள்ளை வேட்டுவர்
181) விறகு வேட்டுவர்
182) வினைய வேட்டுவர்
183) வெற்ப வேட்டுவர்
184) வேல் வேட்டுவர்
185) வேந்தை வேட்டுவர்
186) வேதாரி வேட்டுவர்
187) ஜெயவேந்த வேட்டுவர்
188) வெங்காஞ்சி வேட்டுவர்
189) வெலைய வேட்டுவர்

## (எ) வேட்டுவர் கலிவெண்பா

வேட்டுவர் சமுதாயக் குலங்களை அதன் பெருமைகளுடன் தொகுத்துக் கூறும் இந்த "வேட்டுவர் கலிவெண்பா" கரூர் ஓவியர் திரு. பரணன் அவர்கள் ஒரு குப்பைத் தொட்டியில் இருந்து மீட்டுக் கொண்டு வந்து கொடுத்தது. இத்துடன் கிடைத்த சிறு ஓலைத் துண்டில் "அப்பிச்சி மாரயன் குறவஞ்சி" என்று எழுதப்பட்டுள்ளது. முதல் பாடல் திங்களூரை வருணிக்கிறது. அந்த அரிய இலக்கியம் கிடைக்கப் பெறவில்லை. பாடலின் பின் இக்கலிவெண்பாவில் கூறப் பட்ட குலங்கள் அகரவரிசையில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

### கலிவெண்பா

திருக்கச்சனுட திருக்குலங்கள் ஏதோ என்றால்
பெருக்கமுடன் கேளும்அவர் பிரபலத்தை - உருக்கமுடன்

மாவலன் தன்குலமும் வல்லதிரு வேடர்துரை
காவலன் தன்குலமும் காசினியில் - மாவலனாம்

மலையரையன் அக்கினியோன் மாமலையர் வேட்டுவனாம்
புலிமுகவேட் டுவராயன் புட்பகுலன் - சிலதுரைகள்

அந்திகுலன் அம்பகுலன் அனாதிஅதி முக்குலத்தோன்
அந்துவவேட் டுவராயன் அமரகுலன் - சுந்தரஞ்சேர்

கொந்துலவும் சாக்கைகுலன் கூறும் கடம்பகுலன்
பைந்தமிழ்சேர் அமரா பதிகுலத்தோன் - விந்தைசெறி

சந்திரகுல வேட்டுவனும் தவணர்குல வேட்டுவனும்
இந்திரகுல தேவேந்திரன் எனுங்குலத்தோன் - சிந்துரம்சேர்

குறுமுனிவன் தன்குலமும் குயில்குலன் அகத்தியனும்
அறுமுகவேட் டுவராயன் அகோரகுலன் - சருவர்புகழ்

அருணைகுலன் அரிகுலத்தோன் அந்திரவா னந்தகுலன்
கருணைகுலன் கணபதிநற் கரியகுலன் - இரணகுலன்

வடமலைவேட் டுவராயன் மகாமுனி வேட்டுவனும்
குடதிசையில் மந்திர குலதிலதன் - நடனமிடும்

பேருலவுங் கீர்த்திகொண்ட பிரபலவான் காளாச்சிகுலன்
வாருலவும் சுண்டைகுலன் மகாவீரன் - சீருலவும்

முன்னைகுலன் முசுட்டைகுலன் முளைகுலன் மோக்காளி
புன்னைகுலன் மாச்சாடி மும்முடிகுலன் - அன்னைகுலன்

கொம்மடிமேல் சாந்தைகுலன் தன்மகுலன் நரியகுலன்
இம்மடி வில்லிகுலம் வல்லகுலம் - மும்முடிவேள்

முடக்காளி வேட்டுவனும் மூவுலகும் கீர்த்திபெற்ற
முடக்கடிவேட் டுவராயன் மூத்தகுலன் - தடக்கையஞ்சூழ்

கட்டாரி வேட்டுவனும் கரடிகுலன் கட்டிகுலன்
பட்டாலி வேட்டுவனாம் பங்கயத்தோன் - மட்டாரும்

காட்டுவெகு லேந்திரதுரை காசினியில் உடும்பைகுலன்
நாட்டுவர் குலேந்திரன்எனும் நற்பாலன் - தீட்டுபுகழ்

கிழங்கைகுலன் கீரந்தை கீழ்முகவேட் டுவராயன்
தளபதிகூச் சந்திகுலன் சமரர்குலன் - நளினமுள்ள

கோமாளி வேட்டுவனும் கொடும்பரிவேட் டுவராயன்
பூமாரிக் கரையகுலன் புல்லைகுலன் - கோமாரிகுலன்

குண்ணாடி கூகைகுலன் கொல்லிகுலன் கொன்னைகுலன்
புன்னாடி காவலவர் பூலுவகுலத்தோன் - மண்ணாளும்

கவுதாரி வேதாரி காடைகுலன் செங்கண்ணும்
அவுதானன் கொடுமுடியோன் நவகுலத்தோன் - பவம்அகற்றும்

இணையில்லா வேட்டுவரும் ராசகெம் பீரதுரை
கணைதொடுக்கும் வல்லவன் காளகத்திகுலன் - மணியகுலன்

சத்திகுலன் சாடிகுலன் சாந்தப்படை சக்கைகுலன்
பத்திகுலன் சத்திரியகுலன் பனையகுலன் - புத்தியுள்ள

கமலா லயகுலத்தோன் கருங்கண்ணும் கீழ்ச்சாத்தை
குமரர் எனும்குலத்தோன் குடுமிகுலன் - சமரில்வரும்

கச்சிகுலன் கொச்சிகுலன் கரும்பூளை செம்பூளை
நச்சுழிவேட் டுவராயன் நம்பகுலன் - மெச்சிவரும்

இலங்கைகுலன் விதரிகுலன் எரிமுகனும் சிறுபூளை
நலம்புகழும் கெம்பீர ராயகுலன் - குலங்களிலே

குக்கவேட் டுவராயன் குருகுலவேட் டுவகுலத்தோன்
துர்க்கைகுலன் துக்காச்சி வேட்டுவனும் - மிக்கபுகழ்

பரிப்படையோன் கடும்பரியான் படைத்தலைவேட் டுவராயன்
கரிப்படையோன் தன்குலத்தில் காசிபனும் - செருக்களத்தில்

தோராத வேட்டுவனும் தூரைகுலன் தேரைகுலன்
பாராளும் பாண்டியகுலன் பதரகுலன் - சீரான

உரிமைப்படை வேட்டுவனும் உயர்குடி வேட்டுவனும்
பெருமைபெறும் பானுகுலன் பொன்னைகுலன் - பருவமுடன்

பார்வதிதன் குலத்தில்வரும் பகவதிதன் மூளைகுலன்
சீர்பெறும்தண் ணம்பகுலன் தென்குலத்தோன் - பார்புகழும்

பள்ளகுலன் பறையகுலன் பறட்டைகுலன் புளியகுலன்
கள்ளகுலம் பூவாணி வெங்கச்சிகுலம் - வெள்ளைகுலன்

வேந்தகுலம் வேங்கைகுலம் வீரன்சிறுத் தலைகுலத்தோன்
சாந்தணியும் பீச்சைகுலன் சதாசிவத்தோன் - காந்திபெறும்

பரிமளசம் பந்தகுலம் பற்பகுலன் கற்பகுலன்
இரணகுலன் நாரணனும் இமையகுலன் - கருணைபெறும்

செம்பகுலன் வாசகுலன் தீர்க்கமுள்ள தூவைகுலன்
கெம்பீர ஆவைகுலன் தும்பைகுலம் - சம்பிரமிகு

உத்தரகுலன் வேம்பகுலன் உண்மைபெறும் விளக்கைகுலம்
பத்திரம்சேர் மயிலகுலன் பரமகுலன் - வெற்றிபெறும்

தற்காக்கும் விளியகுலன் சமையகுலன் உமையகுலன்
விற்காமன் எனும்வீர சங்கிலிகுலத்தோன் - நற்காமன்

வில்வகுலம் நான்முகனும் வீரியவான் சர்ப்பகுலன்
செல்வன்எனும் தனஞ்செய சேவகத்தோன் - கல்வியெனும்

அம்பிகா பதிகுலத்தோன் அரிச்சந்திர வேட்டுவனும்
கும்பமுனி சாம்பவி கோதண்டகுலம் - சம்பிரமிகு

தொய்யகுலன் காரைகுலன் சுப்பிரமண் ணியகுலத்தோன்
துய்யபுகழ் காந்திகுலன் சுந்தரகுலம் - வய்யகத்தில்

பெருந்தலைவேட் டுவராயன் பேருலகும் கீர்த்திபெற்ற
கரும்புளிய வேட்டுவனும் கருங்காலி - துரந்தரனாம்

சுறட்சைகுலன் கட்டைகுலம் தொக்ககுலம் உத்தகுலம்
முறட்டைகுலன் காஞ்சிகுலன் முல்லைகுலன் - பரட்டைகுலம்

பண்ணைகுலன் வஞ்சிகுலன் பண்பான காடைகுலன்
கண்ணகுல வேட்டுவனாம் கரியகுலன் - பண்ணரிய

சிவக்காடை வேட்டுவனும் சீரும்வீ ராந்திகுலம்
தவத்தால் அரியசிவ தவங்கள்பெற்றோன் - நவக்காலம்

சிறந்தபுள் ளந்தைகுலன் சிறியவகை பெரியவகை
அறம்தழைக்கும் பூபாலர் அநேகமுண்டாம் - நிறைந்தபணி

பூணாரம் பூணுகின்ற பிரமகுலன் கோபாலர்
சோணாசல குருவாம் சுக்கிரவர் - கோணாத

அங்கிகுலன் திங்கள்குலன் அச்சுதனாம் பண்ணைகுலன்
இங்கிதவேள் சூரியகுலன் ராசதுரை - எங்கும்அருள்

பெற்றிடும் குபேரகுலன் பிரபுடிகன் சர்க்காரன்
கற்றகவி வாணர்புகழ் கவிராசன் - சற்றும்

புரைக்கவடில் லாததுரை பூவுலகில் பலகைகுலன்
அரனருளால் சிறைமீட்ட அய்வர்குலம் - தெரிதமிழால்

உரைத்தேன் அவர்பெருமை உத்தமனே நித்தமவர்
தரிப்பாரே பூஷணமும் தனவர்க்கை - கரியபோர்வை

போற்றும் தயாபரனைப் பூசிப்பார் நேசமுடன்
மாற்றும் கலியகற்றும் மகராசர் - நாற்றிசையும்

தனஞ்செயனும் சுக்கிரகுலன் யிதில்வீர உக்கிரகுலன்
தனம்பெரிய விக்கிரமசர்க் காரன்குலன் - தனஞ்செறிந்த

திருக்கச்ச யானதுரை தீரன்ஜவர் தன்குலத்தை
தருக்கயன்மால் தேடரிய சதாசிவனார் - பெருக்கமான

இத்தனைபேர் என்றுசொல்ல எவராலும் முடியாது
சத்தி பத்ரகாளி சிவன்தாள் சரணம்.

- சிவமயம் -

## வேட்டுவர் குலங்கள்

1) அகத்திய குலம்
2) அகோர குலம்
3) அக்கினி குலம்
4) அங்கி குலம்
5) அச்சுத குலம்
6) அதிமுக குலம்
7) அந்தி குலம்
8) அந்துவ குலம்
9) அமர குலம்
10) அமராவதி குலம்
11) அம்ப குலம்
12) அம்பிகாபதி குலம்
13) அரி குலம்
14) அரிச்சந்திர குலம்
15) அருணை குலம்
16) அவுதான குலம்
17) அனாதி குலம்
18) அன்னை குலம்
19) ஆறுமுக குலம்
20) ஆவை குலம்
21) ஆனந்த குலம் ·
22) இரண குலம்
23) இராசகெம்பீர குலம்
24) இலங்கை குலம்
25) உக்கிர குலம்
26) உத்த குலம்
27) உத்திர குலம்
28) உடும்பை குலம்
29) உமைய குலம்
30) உயர்குடி குலம்
31) உரிமைப்படை குலம்
32) எரிமுக குலம்
33) கச்சி குலம்
34) கடம்ப குலம்
35) கடும்பரி குலம்
36) கட்டாரி குலம்
37) கட்டி குலம்
38) கட்டை குலம்
39) கணபதி குலம்
40) கண்ண குலம்
41) கமலாலய குலம்
42) கரடி குலம்
43) கரிப்படை குலம்
44) கரிய குலம்
45) கருங்காலி குலம்
46) கருணை குலம்
47) கடும்பிளி குலம்
48) கரும்பூளை குலம்
49) கருங்கண்ண குலம்
50) கரைய குலம்
51) கவுதாரி குலம்
52) கள்ளை குலம்
53) கற்ப குலம்
54) காசிப குலம்
55) காஞ்சி குலம்
56) காடை குலம்

57) காட்டுக் குலம்
58) காந்தி குலம்
59) காரை குலம்
60) காவலர் குலம்
61) காளத்தி குலம்
62) காளாச்சி குலம்
63) கிழங்கை குலம்
64) கீரந்தை குலம்
65) கீழ்ச்சாத்தை குலம்
66) கீழ்முக குலம்
67) குக்க குலம்
68) குடதிசை குலம்
69) குடுமி குலம்
70) குண்ணாடி குலம்
71) குபேர குலம்
72) குமரர் குலம்
73) கும்பமுனி குலம்
74) குயில் குலம்
75) குருகுல குலம்
76) குறுமுனி குலம்
77) கூகை குலம்
78) கூச்சந்தி குலம்
79) கொச்சி குலம்
80) கொடுமுடி குலம்
81) கொடும்பரி குலம்
82) கொம்மடி குலம்
83) கொல்லி குலம்
84) கொன்னை குலம்
85) கோதண்ட குலம்
86) கோபாலர் குலம்
87) கோமாரி குலம்
88) கோமாளி குலம்
89) சக்கை குலம்
90) சதாசிவ குலம்
91) சத்தி குலம்
92) சத்திரிய குலம்
93) சந்திர குலம்
94) சமரர் குலம்
95) சமைய குலம்
96) சம்மந்த குலம்
97) சர்ப்ப குலம்
98) சாக்கை குலம்
99) சாந்தப்படை குலம்
100) சாம்பவி குலம்
101) சிவக்காடை குலம்
102) சிறிய வகை குலம்
103) சிறுத்தலை குலம்
104) சுக்கிர குலம்
105) சுந்தர குலம்
106) சுண்டை குலம்
107) சுப்பிரமணிய குலம்
108) சுறட்டை குலம்
109) செங்கண்ண குலம்
110) செம்ப குலம்
111) செம்பூளை குலம்
112) சோணாசல குலம்
113) தவணர் குலம்
114) தண்ணம்பர் குலம்
115) தளபதி குலம்
116) தனஞ்செய குலம்

117) தன்ம குலம்
118) திங்கள் குலம்
119) துக்காச்சி குலம்
120) தும்பை குலம்
121) துர்க்கை குலம்
122) தென்முக குலம்
123) தேரை குலம்
124) தேவேந்திர குலம்
125) தூரை குலம்
126) தூவை குலம்
127) தொக்க குலம்
128) தொய்ய குலம்
129) தோறாத குலம்
130) நச்சுழி குலம்
131) நம்ப குலம்
132) நரிய குலம்
133) நவ குலம்
134) நாட்டுவர் குலம்
135) நாரண குலம்
136) நான்முக குலம்
137) பகவதி குலம்
138) பங்கய குலம்
139) படைத்தலை குலம்
140) பட்டாலி குலம்
141) பண்ணை குலம்
142) பதர குலம்
143) பத்திர குலம்
144) பரட்டை குலம்
145) பரம குலம்
146) பரிப்படை குலம்
147) பரிமள குலம்
148) பலகை குலம்
149) பள்ள குலம்
150) பறைய குலம்
151) பற்ப குலம்
152) பனைய குல்ம்
153) பாண்டிய குலம்
154) பானு குலம்
155) பீச்சை குலம்
156) பிரம குலம்
157) புட்ப குலம்
158) புண்ணாடி குலம்
159) புலிமுக குலம்
160) புல்லை குலம்
161) புளிய குலம்
162) புள்ளந்தை குலம்
163) புன்னை குலம்
164) பூமாரி குலம்
165) பூலுவ குலம்
166) பூவாணி குலம்
167) பெரியவகை குலம்
168) பெருந்தலை குலம்
169) பொன்னை குலம்
170) மகாமுனி குலம்
171) மகாவீரன் குலம்
172) மணிய குலம்
173) மந்திர குலம்
174) மயில குலம்
175) மலைய குலம்
176) மாச்சாடி குலம்

177) மாடந்தை குலம்
178) மாமலை குலம்
179) மாவலன் குலம்
180) முசுட்டை குலம்
181) முடக்காளி குலம்
182) முடக்கடி குலம்
183) மும்முடி குலம்
184) முல்லை குலம்
185) முறட்டை குலம்
186) முன்னை குலம்
187) முத்த குலம்
188) முளை குலம்
189) மேல் சாந்தை குலம்
190) மோக்காளி குலம்
191) வஞ்சி குலம்
192) வடமலை குலம்
193) வல்லி குலம்
194) வாக குலம்
195) விக்கிரம குலம்
196) விதரி குலம்
197) வில்லி குலம்
198) வில்வ குலம்
199) விளக்கை குலம்
200) விளிய குலம்
201) வீரசங்கிலி குலம்
202) வீரன் குலம்
203) வீறாந்தை குலம்
204) வீரிய குலம்
205) வெங்கச்சி குலம்
206) வெள்ளை குலம்
207) வேங்கை குலம்
208) வேடர் குலம்
209) வேதாரி குலம்
210) வேந்த குலம்
211) வேம்ப குலம்

***குறிப்பு :***

இங்கு தொகுத்தளிக்கப்பட்டுள்ள சமுதாயப் பிரிவுகள் இல்லாமல், இந்நூலில் உள்ள ஆவணங்கள் மூலம் அண்ட வேட்டுவர், அண்ட வாணி வேட்டுவர், குன்ன வேட்டுவர், கொடுகத்தாளி வேட்டுவர், பாத வேட்டுவர், மாகாளி வேட்டுவர், வில் வேட்டுவர் ஆகிய குலப் பெயர்கள் தெரிய வந்துள்ளன.

காவலர் (காவிலுவர்), பூலுவர் (பூவிலுவர்), வேட்டுவர் சமுதாயப் பிரிவில் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது. அவர்களில் காவலர் பிரிவில் கள்ளிப்பிள்ளர், காச்சர், கீழைக்கரையர், மேலைக்கரையர், குறும்பிள்ளர், புன்னகர், புன்னாடியர், முட்டை, வளவர், வெண்கொற்றர் என்ற உட்பிரிவுகளும், பூலுவர் பிரிவில் உத்திரர், குடதியர், செய்யர், பெரும்பற்றார், மயிலர், முட்டை, வெள்ளை என்ற உட்பிரிவுகளும் வழங்கி வந்ததை இந்நூலின் ஆவணத் தொகுப்பு மூலம் அறிகின்றோம்.

# (ஏ) கல்வெட்டுகள் ஒரு பார்வை

## மாவட்ட வாரியாக

| | | |
|---|---|---|
| ஈரோடு | - | 46 |
| கோவை, திருப்பூர் | - | 15 |
| நாமக்கல் | - | 10 |
| கரூர் | - | 8 |
| சேலம் | - | 6 |
| திருவண்ணாமலை | - | 3 |
| திண்டுக்கல் | - | 2 |
| தருமபுரி | - | 1 |
| விழுப்புரம் | - | 1 |

## அரசு வாரியாக

| | | |
|---|---|---|
| சோழர் | - | 49 |
| பாண்டியர் | - | 14 |
| விசயநகரம் | - | 3 |
| போசளர் | - | 2 |
| நாயக்கர் | - | 2 |
| சேரர் | - | 1 |
| பல்லவர் | - | 1 |

அரசு பெயர் இல்லாதவை - 20

## கால வாரியாக

| | | | |
|---|---|---|---|
| நூற்றாண்டு | 8 | - | 2 |
| ,, | 10 | - | 4 |
| ,, | 11 | - | 5 |
| ,, | 12 | - | 5 |
| ,, | 13 | - | 61 |
| ,, | 14 | - | 2 |

| | |
|---|---|
| ,, | 15 - 1 |
| ,, | 16 - 4 |
| ,, | 17 - 4 |
| ,, | 18 - 1 |
| ,, | 19 - 2 |
| ,, | 20 - 1 |

## செய்தி வாரியாக

| | | |
|---|---|---|
| கோயிலில் விளக்கேற்றல் | - | 30 |
| கோயில் திருப்பணி | - | 26 |
| நடுகற்கள் | - | 10 |
| நிலக்கொடை | - | 9 |
| நீர்நிலை ஏற்படுத்துதல் | - | 5 |
| காணி பெற்றது | - | 2 |
| விழா, பூசை | - | 3 |
| அந்தணருக்குக் கொடை | - | 1 |
| முனிவர்க்குச் சமாதியிடல் | - | 1 |
| செக்கு, உரல் கொடை | - | 1 |
| பெயர்க்குறிப்பு மட்டும் | - | 4 |


# (ஐ) படங்கள்





கருங்காலிப்பாடிப்பட்டி நடுகல்



கருங்காலிப்பாடிப்பட்டி நடுகல்








முளை வேட்டுவர் திருமலை அல்லாள இளையா நாயக்கர்
(நன்செய் இடையாறு)




பட்டாலி, இராயவலசு பிடாரி



பட்டாலி, இராயவலசு, பிடாரி கோயில் (புதிய திருப்பணி)



பட்டாலி பால்வெண்ணீசுவரர் கோயில்



பழமங்கலம் நடுகற்கோயில்



துக்காச்சி நடுகல் கோயில்



பவித்திரம் நடுகல்
(கரூர் மாவட்டம்)



மாமரத்துப்பட்டி தலைப்பலி நடுகல்
(கரூர் மாவட்டம்)



பசுபதிபாளையம் நடுகல்
(கரூர் மாவட்டம்)




ஈங்கூர், காவலன் குறும்பிள்ளரில் போத்தன் செய்யான் ஆன
குலோத்துங்கப் பல்லவரையன் எழுந்தருள்வித்த அய்யனார்.
(கி.பி. 1203)




கொடிவேரி, வடகரை நாட்டுக் குளவாற்றூர் ஊராளி செம்ப
வேட்டுவர் தொண்டயன் பிள்ளான் ஆன சயங்கொண்ட
சோழக் கொங்காள்வான் கல்வெட்டு
(கி.பி. 1154)




சிவகிரி கவுண்டம்பாளையம்,
கிழங்க வேட்டுவரில் கிழங்கன் பெரிய கிழங்கன் நடுகல்.



திருச்செங்கோடு, வடகரை நாட்டு உலகடம் வேட்டுவர்
அந்தியூரன் நடுகல். (கி.பி. 1290)



''அப்பிச்சி மாரயன் பேரில் குறவஞ்சி நாடகம்''



கிழங்க நாட்டு வேட்டமங்கலத்துத் தென்சேரிப் பூலுவ வேட்டுவரில்
சிலம்பன் கருஞ்சிறு பிள்ளை கல்வெட்டு (கி.பி. 1287)



கிழங்க நாட்டு வேட்டமங்கலத்து நடுவற்சேரிக் கரடி வேட்டுவரில்
செய்ய பிள்ளை கல்வெட்டு (கி.பி. 1287)

17 AUG 2011



